

சிவ மஞ்சரி

சிவமஞ்சரி 3 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

உ
சிவமயம்

சிவமஞ்சரி

- மூன்றாம் தொகுதி -

(பக்கங்கள் - 321 முதல் 480 வரை)

ஆசிரியர்
"சிவமஞ்சரி செம்மல்"
பூசை. ச. அருணவசந்தன்



1998

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.

நூலின் விவரம்

நூலின் பெயர்	- **சிவமஞ்சரி**
	- மூன்றாம் தொகுதி - (3)
நூலின் ஆசிரியர்	- **பூசை. ச. அருணவசந்தன்**
பதிப்பு ஆண்டு	- 1998
பதிப்பு எண்	- முதற்பதிப்பு
உரிமை	- ஆசிரியருக்கு
பதிப்பாளர் ஆசிரியர்	- பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	- 29, பீமண்ண முதலி கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
பக்கங்கள்	- 8+160 ஆக 168 பக்கங்கள்
நூல் அளவு	- கிரௌன் 1/4 - 24 c.m. x 18.2 c.m.
அச்சிட்டுள்ள பரப்பளவு	- 21.5 c.m. x 15.2 c.m.
பயன்படுத்தப்பட்ட அச்சுத்தாள்	- சேக்ஷசாயி டபுள்கிரௌன் 11.6 Kg.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	- TMVL 10.5 Pt.
மின் அச்சுக் கோர்வை	- தனம், லேசர் பிரிண்டர்ஸ், சென்னை - 41.
மறுதோன்றி அச்சகம்	- பி.எம்.வி. ஆப்செட், சைதாப்பேட்டை, சென்னை - 15.
நூலின் பொருள்	- சிவபெருமானைப்பற்றி - புராணங்கள் - வடமொழி - தமிழ் வேதங்கள் - தலவரலாறுகள் - ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் - தனித்தனி தலைப்புகளில்.
விலை	- ரூபாய் 50/-
நூலகக் குறியீட்டு எண்	-

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



முகவுரை ...

செம்பொருட் சோதியாகிய சிவபெருமானின் திருவருளினால் சிவமஞ்சரியின் இந்த மூன்றாவது தொகுதி மலர்ந்து தங்களின் திருக் கரங்களில் தவழ்கின்றது. இவ்வேளையில் இந்தத் தொகுதியை உருவாக்கத் துணை நின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்குகின்றேன்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று, நேரில் அழைத்துக் குருவருளையும் திருவருளையும் வழங்கி அருளிய **திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் குருமகா சந்நிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச பண்டார சந்நிதி** சுவாமிகள் அவர்களின் திருவருளைப் போற்றி வணங்குகின்றேன்.

இப்பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் உதவி செய்து, வழிகாட்டி வருபவர் எனது வணக்கத்திற்குரிய '**குருநாதர் குருஜி R. துரைராஜன்** (எ) **பத்மநாபன்** அவர்கள் ஆவார்'. அவர் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வரும் நிறைதவச் செல்வர் சிறந்த சிவபூஜாதுரந்தரர். இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஆலயங்களைத் தரிசிக்க நான் மேற்கொண்ட தலயாத்திரைகளுக்கான அத்தனை செலவுகளை ஏற்றுக் கொண்டதுடன், பலரைக் கொண்டும் நமக்குப் பலவாறு உதவி செய்து வருகின்றார்கள். அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

அவரையொட்டி அவருடைய அன்பர், நுங்கம்பாக்கம், **LVJ பில்டர்ஸ்** உரிமையாளரும் சிவனிடம் நீங்கா அன்பு நிறைந்தவரும், சிறந்த சிவபக்தருமான சிவஸ்ரீ **M.V. ஜெய்சங்கர்** அவர்கள் தொடர்ந்து நமக்கு உதவி வருகின்றார்கள், சிவமஞ்சரியின் மலிவு விலைப் பதிப்பிற்காக விளம்பரங்கள்பெற ஏற்பாடு செய்ததுடன், தானும் அடிக்கடி நன்கொடையளித்து உதவி வருகின்றார்கள். அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் தொகுதியைத் தொடங்கிய போது நிறையப் பணத்தேவை ஏற்பட்டது. அதற்கு உதவியாகப் பலர் நன்கொடைகள் தந்தனர். இவ்வகையில் முதலாவதாக பன்னிரண்டாம் தொகுதியான **"ஆதித்யேசுவரருக்கு"** சென்னை, **Dr. V.P.R. வரதராஜன்** B.Sc., M.B.B.S., அவர்கள் நன்கொடையளித்தார்கள். இவருடைய குடும்பம் தேசபக்தி மிகுந்த குடும்பமாகும். இவருடைய பாட்டன் திரு. நைனார் நாடார் சிறந்த காந்தி பக்தர்.

இவர் பெயரால் மயிலாப்பூரில் ஒரு தெருஉள்ளது. இவருடைய தந்தை டாக்டர், ராமபாண்டிய ராஜன் அவர்கள் மருந்துவராகப் பணியாற்றியவர். திரு முறைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டு பலபணி களைச் செய்தவர். டாக்டர் திரு. வரதராசன் அவர்களும் தம் தந்தையார் பெயரால் அமைந்த மருத் துவமனையின் மூலம் தம்மைச் சுற்றியுள்ள எளிய மக்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த சேவைகளைச் செய்து வருகின் றார்கள்.

பதிமூன்றாம் மலரான **"சோமாஸ்கந்தர்"** எனும் நூலுக்கு நன்கொடை அளித்தவர்கள் எனது அன்பிற்கினிய சகோதரியும் அவருடைய கணவரும் ஆகிய திருமதி. **வீ. அனந்தலட்சுமி,** திரு. **வ. வீரராகவன்** தம்பதியராவர். இவர்கள் எனது எழுத்துப் பணிகளுக்குத் தமது இல்லத் தில் இடமளித்து ஆதரிப்பதுடன் பலவகையான உதவிகளையும் தொடர்ந்து செய்து வருகின்றனர். இத்தம்பதியர் நல்ல சிவபக்தர்கள். திருமுறைத் தலங்களைச் சென்று தரிசிப்பதில் ஆர்வமுடைய வர்களாவர். இவர்களே மேலே சொன்ன டாக்டர் வரதராசன் அவர்களையும் அறிமுகப்படுத்தி உதவிபெற்றுத் தந்தார்கள் என்பதை நன்றியுடன் ஈண்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதினோராம் மலரான ஸ்ரீருத்திரருக்கு நன் கொடை அளித்தவர் சென்னை **சிவஸ்ரீ என்.ஆர். வெங்டேசன்** அவர்களாவர். இவர் (சென்ட்ரல் இன்ஸ்டிரக்ஷனல் மீடியா இன்ஸ்டிடியூட்டில்) உதவி இயக்குநராகப் பணியாற்றுகின்றார். சிறந்த சிவபக்தர் பல ஆன்மிகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள பண்பாளர். இவர், அமெரிக்க நாட்டில் வசித்துவரும் தமது திருமக ளார் **திருமதி. இந்துமதி விஜய்கோபால்** அவர் கள் பெயரால் பதினைந்தாம் மலரான தியாகராஜ ருக்கு நன்கொடையளித்தார்கள். தொடர்ந்து நமது பதிப்புப் பணிகளில் உதவி வருகின்றார்கள். இவர் களுக்கு எமது நன்றியைப் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

தியாகராஜர் நூலுக்கு விவரம் திரட்டத் திருவாரூருக்குச் சென்றபோது நமது அன்பர் சென்னை, குரோம்பேட்டையில் வசித்துவரும் மஞ்சக்கொல்லையைச் சேர்ந்த திருமிகு. கயிலைப் புனிதர். **டாக்டர். அ. மாணிக்கம்** M.B.B.S., M.S. அவர்கள் பெருவணிகரும், தியாகராஜ சுவாமி கோயில் அறங்காவலருமான **திரு. R.M.P.R. சிங்காரவேலு முதலியார்** அவர்களிடம் ரூபாய் ஓராயிரம் நன்கொடையாகப் பெற்றுத் தந்தார்கள். அவர்களுக்கு எமது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதினான்காம் மலரான சைவ சமய சாத்தி ரங்கள் என்ற நூலைப் பலமுறை படித்துத் திருத் திப் பலவகையான ஆலோசனைகளைப் பெற வேண்டியதாயிற்று. இப்பணியில் திருவாவடுதுறை ஆதீன சரஸ்வதி மகாலய சுவடிப்புல நெறியாளர். சித்தாந்த ரத்தினம் காஞ்சி **சிவ. சதாசிவதேசிகர்** அவர்கள் நன்கு உதவி புரிந்தார்கள். இந்நூலுக்கு. திருமுறைச்செல்வர். சிவத்திரு. **M. பெருமாள்** முதலியார் அவர்கள் தாம் உதவியதுடன் சைதாப்பேட்டை, சிவ நெறிச்செல்வர் சிவத்திரு. **மா.ச.வேதாசலம்** அவர்களிடமும் அமைந்தகரை ஹரிநாராயணா பௌண்டேசன் உரிமையாளர் திருமிகு. **N. வரதராசன்** அவர்களிடமும் உதவி பெற்றுத் தந்தார்கள். இவர்கள் யாவருக்கும் நன்றி.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங் களைத் திரட்ட உதவியாக இருந்தது டாக்டர். **உ.வே.சாமிநாதையர்** நூலகமாகும். அந்நூலகக் காப்பாளர் வித்துவான் திரு. **பாலசாரநாதன்,** நூலகர் சிவஸ்ரீ **K. பாஸ்கர்,** உடனாளர் திரு. **எஸ். சாய்ராமன்,** எழுத்தர், திரு. **K. நடராஜன்,** பணியா ளர்கள் புவனேசுவரி, பொன்னுவேல், M. மணி, ராமஜெயம், திருமதி. கன்னிகாமணி ஆகியோ ருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த வேளையில் சிவமஞ்சரி யின் ஆரம்ப காலம் முதல் துணைசெய்து வரும் குருஜி காயத்ரி அருள்மாமணி **ஸ்ரீ வீரமணி சுவாமிகள்,** சென்னை நங்கநல்லூர், மணவழகர் மாலை மாதஇதழ் ஆசிரியரும், மேனாள் தமிழ் நாடு மின்சார செயற் பொறியாளருமான கோவூர் **திரு. K.P. துரை** B.E., அவர்கள் திருவாளர்கள் நங்கைநல்லூர் திரு. **R. சாய்ராம், A.சுந்தரராமன்,** **"அப்பாவு"** மாத இதழ் ஆசிரியர் திருவான்மியூர் பாம்பனடிமை குகஸ்ரீ **வே.நா. சௌந்தரராஜன் - பிரகதா தம்பதியர்,** திருவல்லிக்கேணி.

27-2

கயிலைப் புனிதர் திரு. **D. ஷண்முகம்** (மேனாள் சார்பதிவளர் பதிவுத்துறை) பேராசிரியர். திரு. **ராதா கிருஷ்ணன்** (அண்ணாமலை கலைக்கழகம்) தவத் திரு. பர்வதமலை சித்தர், **ஸ்ரீலஸ்ரீ ஜோதி சாமிகள்** தேனாம்பேட்டை கட்டுமானப் பொறியாளர் திரு. **V. ஜெயராமன்** மேற்கு மாம்பலம் திரு. **P.M. ராஜகணபதி** ஆகியோராவர், இவர்கள் யாவருக்கும் எமது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக நமது எழுத்துப் பணிகளுக்கு நல்லாதவு தந்து ஊக்கப்படுத்தி வரும் கலைமகள், மஞ்சரி, அதிபர் **திரு. R. நாராயணசாமி** அவர்கள், எமது குரு நாதரும் மஞ்சரி ஆசிரியருமான திரு. **லெமன் (எ)** லெட்சுமணன், கலைமகள் ஆசிரியர் திரு. **கீழாம்பூர் சங்கர சுப்பிமணியன்** அவர்கள் ஆகியோருக்கு எமது நன்றி.

நமது பதிப்புப்பணிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கி செம்மைப்படுத்தி வருபவர் சென்னை அடையாறு கற்பகம் கார்டன் ஸ்பீகல் பிரிண்டர்ஸ் உரிமையாளர் **குமார் (எ) என். பாலசுப்பிரமணியம்** அவர் களாவார். இவர் நமக்கு, சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றார்.

இந்நூலினை பலருக்கும் அறிமுகப்படுத்தி நல்லாதரவினைத் தேடித்தந்து வரும் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர் முகப்பயிற்சி மைய இயக்குனர் சிவஸ்ரீ **கு.வைத்யநாதன் ஈசான தேசிகர்** அவர்களுக்கும் அன்பர்கள் புதுவை சைவ சித்தாந்த ரத்தினர் **திரு. ம. சேகர்,** பரமக்குடி திரு & திருமதி. **ஹரிவாசுதேவ தம்பதியினர்** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி **வசந்தா** எனது அனைத்து சிவப்பணிகளுக்கும் உதவியாக இல்லப்பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருக்கின்றாள் அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நமக்கு மின்னச்சு செய்து தரும், தனம் லேசர்பிரிண்டர்ஸ், உரிமையாளர் **திரு. செ. சிகாமணி,** மின்தட்டச்சரும் எனது சகோதரர்களுமான திரு. **வீ. வெங்கடேசன், திரு. ச. சேகர்** ஆகியோருக்கும் மறுதோன்றி அச்சகத்தினர் **திரு. ந.முருகநாதன்** (ஸ்ரீவேணி கிராபிக்ஸ் திருவான்மியூர்), **திரு. A. பாஸ்கர், திரு. K. வாசுதேவன்** (பி.எம்.வி. ஆப்செட் சைதாப்பேட்டை) ஆகியோருக்கும் நிழற்பிரதியாளர் சத்யாபிராசஸ் திரு. **ராதாகிருஷ்ணன்** துர்கா பைண்டிங் திரு. **சரவணன்** ஆகிய யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இவர்கள் யாவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாகிய அண்ணாமலை எம்மண்ணல் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வை அளித்தருளி அருள்பாலிக்க வேண்டுமென்று அவருடைய பொன்னார்த் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றேன்.

தீபாவளித் திருநாள், 1998

இங்ஙனம்
சிவப்பணியில் மீளா அடிமை.

பூசை. ச. அருணவசந்தன் (எ)
பூசை. ச. ஆட்சிலிங்கம்

"மேன்மைகள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவமஞ்சரி	: சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் நூல் : சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்

இதுவரையும்... இனியும்...

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி கார்டன் தெரு, ஆழ்பார்வேட்டை, சென்னை - 600 018.

பேரன்புடைய சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகின்றது. இதனைச் சிறந்த புகைப்படங்கள் வரைபடங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு 60 தலைப்புகளில் வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். இவ்வகையில் இப்பொழுது கீழ்க்காணும் 21 தலைப்புகளில் நூல்கள் வெளியாகி உள்ளன. இன்னும் 39 தலைப்புகளில் வெளியாக உள்ளன. (தடித்த எழுத்தில் உள்ள 5 நூல்கள் இம்மூன்றாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன). இதுவரை வெளியானவை.

1. சிவமே செம்பொருள்
2. மச்சேந்திரர்
3. திருவாவடுதுறை ஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8. ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10. மகாசிவராத்திரி
11. **ஸ்ரீருத்திரர்**
12. **ஆதித்யேசுவரர்**
13. **சோமாஸ்கந்தர்**
14. **சைவ சமய சாத்திரங்கள்**
15. **ஸ்ரீதியாகராஜர்**
16. சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19. அகத்தீசுவரர்
20. அதி(க) தியாகராஜர்
21. கேதார கௌரீசுவரர்

என்பனவாகும். இனி வெளியாக உள்ளவை :

22. அம்பிகாபதீஸ்வரர்
23. அரம்பேசுவரர்
24. ஸ்ரீகாளீச்சுவரர்
25. திருமணக்கோலநாதர்
26. பிரம்மபுரீசுவரர்
27. தமிழ்மறை அறிமுகம்
28. வேதஆகம புராணீசுவரர்
29. திருமாலீசுவரர்
30. மூவராய்நின்ற முதல்வன்
31. வீரட்டகாசர்
32. காலசம்ஹாரார்
33. மன்மதேசுவரர்
34. திரிபுராந்தகர்
35. வீரபத்திரர்
36. தீபமங்களேசுவரர்
37. தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40. தீர்த்தீசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்பரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலய திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்ததாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜலிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயபரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்.


இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள், தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்புநோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி சிவமஞ்சரி வலம் வருகிறது.



இந்நூலின் உள்ளே . . .







போற்றி! போற்றி!!

அண்ணாமலையெம் அண்ணா போற்றி!
கண்ணாரமுதக் கடலே போற்றி!!

குவளைக்கண்ணி கூறன் காண்க!
அவளும் தானே உடனே காண்க!!

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி!
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி!!

காவாய் கனகத் திரளே போற்றி!
கயிலை மலையானே போற்றி! போற்றி!!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!



ஸ்ரீருத்திரர்

(உருத்திரர்கள் அறிமுகம்)

இந்திய சமயங்களில் பதினொன்று என்றதும் நமக்கு உடனே நினைவுக்கு வருவது ஏகாதச ருத்திர வழிபாடேயாகும். எனவே சிவமஞ்சரியின் இந்தப் பதினோராவது மலர் "ஸ்ரீருத்திரர்" எனும் தலைப்பில் மலர்கிறது.

இந்திய சமயங்களில் நீண்ட நெடுங் காலமாகப் போற்றப்பட்டு வரும் வழிபாடுகளில் சிறப்பான ஒன்று உருத்திர வழிபாடாகும்.

வேதங்களும், இராமாயணம், மகாபாரதம், முதலிய காவியங்களும் சிவபெருமானை உருத்திரர் என்ற சொல்லால் குறிக்கின்றன. உருத்திரக் கூட்டத்திற்கு அவர் தலைவராக இருப்பதால் மகா உருத்திரர் என்றும், ஸ்ரீருத்திரர் என்றும் குறிக்கப்படுகின்றார். உருத்திரர் என்ற சொல் சிவபெருமானுக்கே உரியது என்றாலும் அது பலருக்கும், பலகுழுக்களுக்கும் பெயராக இருந்து வந்துள்ளதையும் அறியமுடிகிறது.

சைவ சிந்தாந்தத்தின்படி பரசிவத்திலிருந்து தோன்றிய பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரர், சதாசிவர் எனும் ஐவரில் ஒருவராக உருத்திரன் குறிக்கப்படுகின்றார். இவர்கள் ஐவரும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலைப் புரிந்து வருகின்றனர் என்பர்.

மேலும் சைவதந்திரங்கள் இந்த உலகம் காலாக்னி உருத்திரரிடமிருந்து தோன்றி இறுதியில் அவரிடமே ஒடுங்குமென்றும் கூறுகின்றன.

சிவபுராணங்கள் உலகைப் படைப்பிற்கு உதவி யாக இருக்கும் பொருட்டு பிரமனின் நெற்றியில் இருந்து சிவபெருமான் உருத்திரர்களைப் படைத்ததாகக் கூறுகின்றன. இவ்வாறு தோன்றிய உருத்திரர்கள் பதினோரு பேர்கள் என்று அவை கூறும். சாக்ததந்திரங்கள் உருத்திரர்களை உயர் நிலைக் கடவுளராகக் கொள்ளாமல் மகாசக்தியின் காவல் தேவதைகளாகவே குறிப்பிடுகின்றன. இவ்வகையில் லலிதாதேவியின் ஸ்ரீசிந்தாமணிக் கிரகத்தைக் காவல் புரியும் எண்ணிலாத உருத்திரர்கள் குறிக்கப்படுகின்றனர்.

வேதத்தில் எண்ணிலாத உருத்திரர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. உருத்திரர் களைப் போற்றும் இப்பகுதிகள் "ருத்ரீயம்" என்று அழைக்கப்படுகின்றன.

இதுவரை சொல்லப்பட்டவை தெய்வ நிலையில் உள்ள உருத்திரர்களைப் பற்றியதாகும்.

மேலும் மானிடர்கள் தங்கள் தவத்தின் வலிமையால் சிறப்படைந்து உருத்திரகணத்தவர்கள் என்று அழைக்கப்பெற்றனர். இவர்களிடையே பலவேறு குழுக்கள் இருந்ததால் இந்த நெறியாளர்கள் ''உருத்திரப்பல்கணத்தார்'' என்று குறிக்கப் பெற்றனர். இவர்கள் இந்தியாவெங்கும் பரவி நிறைந்து சைவம் வளர்த்தனர்.

இவ்வகையில் சிவபெருமானுக்கும், அவருடைய ஏவல் கணத்திற்கும், சிவநெறியாளர் களில் ஒருபகுதியினருக்கும், உருத்திரர்கள் என்ற பெயர் வழங்கியதை அறியமுடிகிறது.

இனி பலவேறு அடிப்படையில் அமைந்த உருத்திரர்கள், உருத்திர கணங்கள் பற்றிய பல வேறு செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

உருத்திரர் - சொல்விளக்கம்

உருத்திரர் என்பது தமிழ்ப்பெயரா? அல்லது வடமொழிப்பெயரா? என்ற கேள்வி நெடுங் காலமாகவே நிலவி வருகின்றது. இந்த இரண்டு மொழியாளர்களும் தத்தம் மரபிற்கேற்ப அச்சொல்லுக்குத் தெளிவான விளக்கங்களை அளித்துள்ளனர். இனி அவற்றைக் காணலாம்.

தமிழில் "உரு" என்பதற்கு மேலான என்றும், "திரம்" என்பதற்கு வழி அல்லது நெறி நிற்றல் என்றும், பொருள் சொல்லப்பட்டுள்ளது. உருத்திரர் என்பதற்கு மேலான வழியில் செல்பவர் என்பதே பொருளாகும். தமது தவயோக சாதனைகளால் மேலான வழியில் செல்ல முயல்பவர்களே உருத்திரர்கள் எனப் பட்டனர். இவர்கள் மேற்கொண்ட தவத்தின் ஆற்றலால் இவர்களுக்கு மூன்றாவது கண் நெற்றியில் தோன்றும் என்று நம்பினர். எனவே அந்தக்கண் அவர்களுடைய கூட்டப் பெயரால் உருத்திரக்கண் அல்லது உருத்திராட்சம் எனப்பட்டது என்பர்.

இந்தக்கூட்டத்தினர் சிவபெருமானைத் தங்கள் வழிபடுகடவுளாகக் கொண்டிருந்ததால் சிவ பெருமானை மகா உருத்திரர் என அழைத்தனர். இவ்வகைச் சாதனையாளருக்கு மூன்றாவது கண்ணான உருத்திரக்கண் திறத்தல் என்பது மிகப்பெரும் பேறாகக் கருதப்பட்டதால் சாதனையில் வெற்றி பெற்ற அவர்கள் உருத்திரங்கண்ணர்கள் என்று சிறப்புடன் அழைக்கப்பட்டனர் என்பர். இந்தக் கண் சிவக்கண் தெய்வ விழி, நுதல்விழி என்று பலவாறாக அழைக்கப்பெற்றது.

உருத்திர கணங்களைச் சேர்ந்தவர்களுக்கு தவஆற்றலால் இந்த நுதல்விழி உண்டாகும் என்பதைப் பல புராணங்கள் கூறுவதால் அறியலாம்.

தமிழகத்திற்குத் தெற்கே இருந்து, கடலால் கொள்ளப்பட்டு மறைந்து போன லெமூரியா என்னும் கண்டத்தில் இருந்த பலருக்கு இத்தகைய நெற்றிக்கண் இருந்திருக்கலாமென்று ஆராய்ச்சி யாளர் கூறுகின்றனர். எனவே இவர்களே உருத்திரர் கள் என்றழைக்கப் பட்டிருக்கலாம் என்பர்.

உருத்திரர்களின் கூட்டத்தில் அவர்களுடைய தவயோக சாதனை, சிவப்பணி சார்தல் முதலிய அடிப்படையில் பலவேறு குழுக்கள் தோன்றின. இந்தக் குழுக்களுக்குக் கணங்கள் என்பது பெயராகும். எனவே இவர்களை மொத்தமாகக் குறிக்கும் போது உருத்திரப் பல்கணத்தார் என்று குறிக்கும் வழக்கம் இருந்தது என்பதை அறியலாம்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை பலவேறு உருத்திரகணங்கள் சிறப்புடன் விளங்கி வந்ததை அறியமுடிகிறது. காலப்போக்கில் இவர்களுடைய தவமும், ஒழுக்கமும் குன்றியதால் வரலாற்றிலிருந்து இவர்கள் மறைந்து விட்டனர் என்பர்.

இனி வடமொழிகாட்டும் உருத்திரனைக் காணலாம்.

வடமொழியின்படி ருத்திரன் என்பதற்கு ரோதனம் செய்பவன் அல்லது அழச் செய்பவன் என்பது பொருள். யாரை அழச் செய்பவன் என்றால் தீயவர்களை அழச் செய்பவன் என்பது விடையாகும். எனவே நல்லவர்களைக் காத்து தீயவர்களை அழச் செய்வதால் சிவபெருமான் ருத்திரன் என்று அழைக்கப்பெற்றான் என்பர். எண்ணிலாத அசுரர் களை அழித்து அழச்செய்ததால் சிவபெருமான் மகாருத்ரர் எனப்பெற்றார். பாரதம், இராமாயணம் முதலான நூல்கள் உருத்திரசிவனைச் சிறப்பாகப் போற்றுகின்றன.

❑ உருத்திரன் என்பதற்கு துன்பத்தை ஓட்டுபவன் என்று பொருள் கூறுவர். இதனை கந்தபுராணம்

இன்னலங் கடலுள் பட்டோர் யாரையும் எடுக்கும் நீரால்
உன்னரும் பரமமூர்த்தி உருத்திரன் என்னும் பெயர் பெற்றான்.

என்று கூறுகின்றது. இதன் பொருள் - துன்பமாகிய கடலுள் வீழ்ந்துள்ள யாவரையும் தன் அருளால் கரையேற்றிக்காப்பாற்றும் பரமமூர்த்தியாகிய சிவபெருமான் உருத்திரன் என்று பெயர் பெற்றான் என்பதாகும்.

உருத்திரன் என்ற சொல் அழிக்கும் பொருள் களில் வரும்போது அக்கினியைக் குறிக்கிறதென்பர். வேதத்தில் உருத்திரன் என்ற சொல், அக்கினி, இந்திரன் முதலியவர்களையும் குறிக்கப்பயன் படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.


ஏகாதச ருத்திரர்கள்

பொதுவாக உருத்திர வழிபாடு என்றதுமே நமக்கு ஏகாதச உருத்திரர்களே நினைவுக்கு வருகின்றனர். தொன்மைக்காலம் முதல் ஏகாதச ருத்திர வழிபாடு தனிச்சிறப்புடன் இருந்து வருகின்றது. பாரதம் அனுசாசன பர்வம் ஏகாதச ருத்திரர்களைச் சிறப்புடன் பேசுகிறது.

ஒரு சமயம் பிரம்மன் தன் படைப்புத் தொழிலைச் செய்யமுடியாமல் சோர்ந்து வீழ்ந்து இறந்தபோது, அவன் உயிர் சிவனருளால் பதினோரு கூறுகளாகி எழுந்ததென்றும், அவைகளே ஏகாதச ருத்திரர்கள் என்றும் மச்சபுராணம் கூறுகின்றது.

சில நூல்கள் இதனை வேறுவிதமாகவும் கூறுகின்றன. பிரமன் படைப்புத் தொழிலைச் செய்ய முடியாது சோர்ந்து சிவபெருமானை வேண்ட அவர் அவனுடைய நெற்றியில் இருந்து பதினோரு உருத்திரர்களைத் தனது அம்சமாக உற்பத்தி செய்தார். அவர்களைக்கண்டு அவன் மயங்கி வீழ்ந்தான். பின்னர், அவர்கள் தாமே படைப்புத் தொழிலை மேற்கொண்டு ஒவ்வொருவரும் ஒரு கோடி உருத்திரர்களைப் படைத்தனர். சோர்வு நீங்கி எழுந்த பிரமன் அந்தப் பதினோரு கோடி உருத்திரர் களையும் கண்டு அஞ்சி மீண்டும் சிவபெருமானை நோக்கி அழுது தம்மைக் காக்குமாறு வேண்டினார். சிவபெருமான் அவர்களை அழைத்து புதிய உலகத்தை உருவாக்கி அதில் சென்று தங்கும் படியாகவும் படைப்புத் தொழிலைத் தொடர வேண்டாம் என்றும் ஆணையிட்டார். அதன்படியே அவர்கள் தனக்கென உருத்திரலோகத்தை உண்டு பண்ணிக் கொண்டு அதில் தங்கினர் என்பர்.

பிரமன் படைப்புத் தொழிலை முன்போலவே இயற்றினான். பதினோருகோடிப்பேரான உருத்திர கணங்கள் பல தலங்களில் சிவவழிபாடு செய்தனர். அவர்களால் தொழப்பெற்ற இறைவன் உருத்திர கோடீசுவரர் என்று பெயர் பெற்றார்.



★ ஏகாதச ருத்திரர் - காஞ்சீபுரம் கயிலாசநாதர் கோயில்.
படம் உதவி - தமிழ்நாடு தொல்பொருள்துறை சென்னை.

உருத்திரர்கள் தமது உலகம் தவிர வீரர்களின் கோபத்திலும். அவர்களின் ஆயுதங்களிலும் போர்க்களங்களிலும் தங்குகின்றனர் என்ற எண்ணம் பரவி நிலை பெற்றிருந்தது.

போர்களில் பற்றுக்கொண்டு எண்ணிலாத போர்களை நிகழ்த்திய பல்லவ மன்னர்கள் போர்த் தெய்வங்களான கொற்றவையையும், உருத்திரர் களையும் சிறப்புடன் வழிபட்டனர். காஞ்சீபுரத்தில் பல்லவப்பேரரசர் இராஜசிம்மனால் அமைக்கப்பெற்ற கயிலாசநாதர் கோயிலில் மூன்று இடங்களில் ஏகாதசருத்திரர்களுக்குத் திருவுருவம் அமைக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

பொதுவாக ஏகாதச ருத்திரர்களுக்கு உருவம் அமைக்கும் வழக்கமில்லை. அவர்களைப் பதினோறு சிவலிங்கங்களாகவே அமைத்து வழிபடுகின்றனர்.

ஆனால் கயிலாசநாதர் ஆலய சிற்பத் தொகுதியில் பதினோரு உருத்திரர்களும் மானுட வடிவில் காட்டப்பட்டுள்ளனர். இரண்டு கைகளுடன் திகழும் இவர்கள் நீண்ட ஆசனத்தில் வரிசையாக அமர்ந்துள்ளனர். இவர்களுக்குப் பின்னணியில் பதினோரு சிவலிங்கங்கள் காட்டப்பட்டுள்ளன.

காஞ்சீபுரத்தில் உருத்திர வழிபாடு சிறப்புடன் விளங்கிய காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதால் உருத்திரர்களுக்குப் பிறமூர்த்திகளான பிரமன், திருமால், துர்க்கைக்கு அமைத்திருப்பது போலவே தனித்துணை ஆலயமாக தெற்கு நோக்கிய வகையில் (ஏகாதச ருத்திரர்களுக்குத் தனிச்சந்நிதி) அமைக்கப் பட்டுள்ளது என்பர்.

ஏகாதச ருத்திரர்களின் பெயர்களைப் புராணங்கள் பல வகையாகக் குறிக்கின்றன. மேலே சொல்லப்பட்டபடி பிரம்மனின் உடல் கூறிலிருந்து தோன்றிய உருத்திரர்களின் பெயர்கள் முறையே,

1. மகாதேவன்,	2. அரன்,	3. உருத்திரன்
4. சங்கரன்	5. நீலலோகிதன்	6. ஈசானன்
7. விஜயன்	8. வீமதேவன்	9. பவோற்பவன்
10. கபாலி	11. சௌமியன்	என்பதாகும்.

மதுரை, சிதம்பரம், காளத்தி, இராமேசுவரம், திருவாரூர் முதலிய தலங்களில் ஒரே வரிசையில் அமைந்த பதினோரு லிங்கங்களைக் காண்கிறோம். இவை ஏகாதச ருத்திர லிங்கங்கள் என்றழைக்கப் படுகின்றன.

ஒரே லிங்கத்தில் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு லிங்கம் இருப்பது போன்று ஒரே லிங்கத்தில் பதினோரு லிங்கங்களைக் கொண்ட ஏகாதச ருத்திர லிங்கங்களும் இருந்ததென்று கூறுவர்.

பொதுவாக லிங்கங்களை அமைக்கும் போது அது எந்ததேவரால் வழிபடப்பட்டதோ அவர்களு டைய தலைமை ஆயுதத்தை அதன் முகப்பகுதியில் அமைப்பது மரபு. எடுத்துக்காட்டாக பிரமன் வழிபட்ட லிங்கத்தில் தாமரை மலரும், விஷ்ணு வழிபட்டதில் சக்கரமும், வருணன் வழிபட்டதில் பாசமும் அமைக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். இவ்வகையில் ஏகாதச உருத்திரர்கள் வழிபட்ட லிங்கங்களில் முறையே

1. தோமரம், 2. கொடி, 3. வாள் 4. வஜ்ராயுதம், 5. அம்பு, 6. அங்குசம் 7. மணி, 8. தாமரை, 9. தண்டு 10. வில் 11. மழு.

ஆகிய ஆயுதங்கள் இருக்கக் காண்கிறோம்.

பாகவதம் காட்டும் ஏகாதச உருத்திரர் தோற்றம்.

சிவபெருமானிடம் இருந்து உருத்திரர்கள் தோன்றி உலகத்தைக் காத்து வருவதைப் பலவேறு புராணங்களால் அறியமுடிகிறது. இவ்வகையில் ஸ்ரீமத்பாகவதத்தில் கூறப்பட்டுள்ள உருத்திரர்களின் தோற்றம் பற்றிய கதையை இனிக் காணலாம்:-

பிரமன் ஒரு சமயம் படைப்புத் தொழிலைத் தொடங்கியபோது முதலில் ஐந்து குணங்களைப் படைத்தார். இவை மிகவும் தீமை பயப்பதாய் அமைந்து விட்டன. பின்னர் அவர் கடும்தவம் செய்து ஸனகர், ஸனந்தனர், ஸனந்குமாரர், ஸநாதனர் என்ற நால்வரைப் படைத்தார். அவர்களிடம் தொடர்ந்து உலக உற்பத்தியைச் செய்யுமாறு ஆணையிட்டார். அவர்களோ, அதற்கு உடன்படாது மேல்நிலையில் நாட்டம் கொண்டு சிவபெருமானை நோக்கித் தவம் செய்யச் சென்று விட்டனர்.

இதனால் பிரமனுக்கு கடும் சீற்றம் உண்டாயிற்று. அது அவருடைய புருவ மத்தியில் இருந்து சிவப்பும், நீலமும் கலந்து ஒரு குமாரனாக

வெளிப்பட்டது. அது அழுது கொண்டே வெளிப் பட்டதாலும், பிறந்த பின்பு பிரமனை அழச் செய்ததாலும் அவருக்கு "உருத்திரர்" என்பது பெயராயிற்று. அவர் பிரம்மனை நோக்கி நான் இருக்க வேண்டிய இடங்களைக் கூறும் என்றார். உடனே பிரமன் அவரைப் பலமுறைப் பணிந்து, உயிர்களின் 1. இதயம் 2. புலன்கள் 3. உயிர் 4. வெளி 5. காற்று 6. தீ 7. நீர், 8. பூமி 9. சந்திரன் 10. சூரியன் 11. தவம் ஆகிய இடங்களில் எழுந்தருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு 11 பெண்களைப் படைத்து அவருக்கு மனைவியாகத் தந்தருளினார்.

ருத்திரர் படைப்புத்தொழிலில் ஈடுபட்டு பதினோரு மனைவியர் மூலம் பிள்ளைகளைப் பெற்றார். அந்தப் பிள்ளைகளும் தந்தையாரைப் போலவே அதிக கோபம் உடையவர்களாக இருந்தனர். இதனால் கலங்கிய பிரமன். அவரையும் அவர்களுடைய குமாரர்களையும் படைப்புத் தொழிலை விடுத்து தவம் செய்யுமாறு வேண்டினான். அதன் படியே அவர்களும் கானகம் சென்று சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் மேற் கொண்டனர். அவர்கள் வாழுமிடம் உருத்திரலோகம் என்றழைக்கப்படுகின்றது.

மேலும் 1. அஜர் 2. ஏகபாதர் 3. அஹிபுத்னர் 4. விருபாட்சர் 5. ரைவதர் 6. ஹரர் 7. பகுரூபர் 8. திரியம்பகர் 9. அசுரேசர் 10. சாவித்ரர் 11. சயந்தர் ஆகிய பதினோரு பேர்களை ஏகாதச ருத்திரர் என்பர். இவர்களுடைய மனத்திலிருந்து உதித்தவர்கள் எண்பத்து நான்கு கோடி உருத்திரர்கள் ஆவர். இவர்கள் தனக்கென ஓர் உருத்திர லோகத்தைப் படைத்துக் கொண்டு அதில் வசித்துக் கொண்டு வருகின்றனர் என்பர்.

திருவாரூர் ஏகாதச ருத்ரேசம்

திருவாரூர் தியாகேசர் ஆலயத்தில் இரண்டாம் உட்கோபுரத்தினையொட்டிய வாயிலின் உட்புறம் மேடைமீது பதினோரு லிங்கங்கள் நிலைப்படுத்தப் பட்டுள்ளன. இவை வடிவாலும், அளவாலும் பலவகைப்படுகின்றன. இவை பதினோரு சிறு ஆலயங்களில் நிலைப்படுத்தப் பட்டிருந்தன என்றும் பின்னாளில் இங்கு கொண்டு வரப்பட்டு மேடைமீது வரிசையாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறுவர், திருவாரூர்ப் புராணம் இந்த லிங்கங்களைச் சிறப்புடன் போற்றுவதைக் காண்கிறோம்.

❑ காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதரை ஏகாதச ருத்திரர்கள் வழிபாடு செய்தார்கள் என்பதை அப்பர்சுவாமிகள் "ஓதுவித்தாய்" எனத்தொடங்கும் ஏகம்பப் பதிகத்தில்

"விரைகொண் மலரவன் வசுக்கள் "ஏகாதசர்கள்" வேறுடைய
இரைக்கும் அமிர்தக்கரிய வொண்ணா எங்கள் ஏகம்பனே" என்று குறித்துள்ளார்.

உத்திரகோசமங்கை ஏகாதசருத்திர லிங்கங்கள்

பாண்டியநாட்டில் அமைந்த திருவாசகத் தலமான உத்தரகோச மங்கையில் அமைந்துள்ள நடராஜர் சந்நிதியில் பதினோரு சிவலிங்கங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் ஆவுடை யார் கருங்கல்லாலும் மேலுள்ள பாணப்பகுதி பெல்ஜியம் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறப்பான வெள்ளைக் கல்லாலும் செய்யப் பட்டுள்ளது இதன் தனிச்சிறப்பாகும். சிவபெருமான் இங்கு இலந்தை மரத்தின்அடியில் எழுந்தருளி இருந்து உருத்திரர்களுக்கு சிவாகமங்களை உபதேசித்தார் என்பர்.

உருத்திர கீதை

ஸ்ரீவராகபுராணத்தின் மத்தியில் உள்ள இந்த கீதை இருபது அத்தியாயங்களைக் கொண்டதாகும். இதில் உருத்திரர் உலகில் உள்ள ஏழுதீவுகளையும் அதில் உள்ள நதிகள், மலைகள் ஆகியவற்றை விவரமாக விளக்குகின்றார். தானே விஷ்ணுவாக இருப்பதைக் கூறுவதுடன் அகஸ்தியருக்கு தனது உடலில் பிரமனையும், இதயத்தில் திருமாலையும் கொண்டு விசுவரூபத்தைக் காட்டியருளினார் என்று இதில் குறிக்கப்பட்டுள்ளது.

சதருத்திரர்கள்

''சதம்'' என்பதற்கு நூறு என்ற ஒரு பொருளும், எண்ணிலாதது என்ற மற்றொரு பொருளும் கூறப்பட்டுள்ளன. இவ்வகையில் வானிலும், பாதாளத்திலும், எட்டு திக்கிலும் பத்துப் பத்து பேராக விளங்கும் நூறு உருத்திரர்கள் ''சதருத்திரர்கள்'' என்றழைக்கப்படுகின்றனர். இவர்களுடைய சேனைகளான உருத்திர கணங்கள் எண்ணிலாது பரந்திருக்கின்றனர்.

வேதங்களில் சதருத்திரர்கள் சிறப்பாகப் பேசப்படுகின்றனர். சுக்கில, கிருஷ்ண யஜுர் வேதங்களிலும் பல வகையான உருத்திரர்கள் கூறப்பட்டுள்ளனர்.

வேதங்களின் கூற்றின்படி உருத்திரர்கள் மண்ணிலும் விண்ணிலும் பாதாளத்திலும் சஞ்சரிக்கின்றனர். கோபத்தால் ஜ்வலிக்கும் வலிய உடலையும், அம்புகளால் நிறையப்பெற்ற அம்பராத் தூளியையும், கடிய வில்லையும் கொண்டுள்ளனர். மானை அன்பிற்குரியதாகக் கொண்டவர்கள் இவர்கள் கடல்மீதும் பயணம் செய்கின்றனர்.

நீண்ட சடைமுடிகளையும் கருமை, நீலம் வெண்மை படர்ந்த கழுத்தினையும் கொண்டுள்ளனர். எண்ணிலாத ஆயுதங்களை ஏந்தியுள்ளனர். மருத்துக்கள் இவர்களுடைய மக்களாவர். இவர்களைப் பற்றிய முழுவிவரங்கள் கிடைக்கவில்லை. இனி பத்து திசைகளிலும் பத்து பத்துபேராக வாழும் சதருத்திரர்களின் பெயர்களைக் காணலாம்.

இவர்கள் சிவமூர்த்தியின் அருளால் தோன்றியவர்களாவர். எண்ணிலாத ஆயுதங்களை ஏந்திப் பகைவரை அழித்துப் பக்தர்களைக் காக்கின்றனர் என்பர். இவர்கள்

இந்திர (கிழக்கு) திசை :-	1. கபாலீசன் 2. அசன் 3. புத்தன் 4. வச்சிரதேகன் 5. பிரமத்தனன் 6. விபூதி 7. இவ்வியன் 8. சாத்தா 9. பினாகி 10. திரிசோதியன்
அக்னி (தென்கிழக்கு) திசை:-	1. உருத்திரன் 2. உதாசனன் 3. பிங்கலன் 4. சாதகன் 5. அயன் 6. சுவலன் 7. தகனன் 8. வெப்புரு 9. பிரமாந்தகன் 10. க்ஷயாந்தகன்.
யம (தெற்கு) திசை :-	1. யாமியன் 2. மிருத்யு 3. அரன் 4. தாதா 5. விதாதா 6. கத்துரு 7. காலன் 8. தன்மன் 9. சங்யோத்தா 10. வியோகிருதன்
நிருதி (தென் மேற்கு) திசை:-	1. நிருதி 2. மாரணன் 3. அரந்தா 4. குரூரதிருஷ்டி 5. பயாந்தகன் 6. ஊர்த்துவ காயன் 7. விரூபாட்சன் 8. தூமிரு 9. உலோகிதன் 10. தெங்கிருட்டினன்.
வருண (மேற்கு) திசை :-	1. பலன் 2. அதிபலன் 3. மகாபலன் 4. பாசத்தன் 5. சுவேதா 6. செயபத்திரன் 7. தீர்க்கவாகு 8. செலாந்தகன் 9. வடவாமுகன் 10. தீமான்.
வாயு (வட மேற்கு) திசை :-	1. சீக்கீரன் 2. லகு 3. வாயுதேவன் 4. தீக்ஷணன் 5. சூக்குமன் 6. க்ஷயாந்தகன் 7. பஞ்சாந்தகன் 8. பஞ்சசிகன் 9. கபஸ்தி 10. மேகவாகனன்
குபேர (வடக்கு) திசை :-	1. நித்சன் 2. ரூபவான் 3. தன்யன் 4. சௌமியன் 5. சௌமியதேகன் 6. பிரமத்தனன் 7. சுப்பிரகடன் 8. பிரகாசன் 9. லக்குமிவான் 10. சோமேசன்
ஈசன் (வடகிழக்கு) திசை :-	1. வியாத்தியாதீபன் 2. ஞானபுகன் 3. சர்வன் 4. வேதபாரகன் 5. மாத்ருவிருத்தன் 6. பிங்கலாக்ஷன் 7. பூதபாலன் 8. பலிப்பரியன் 9. சர்வவித்யாதிபன் 10. தாதா
விஷ்ணு (பாதாள) திசை :-	1. அநந்தன் 2. பாலகன் 3. வீரன் 4. பாதாளாதிபதி 5. விபு 6. இடபத்துவஜன் 7. உக்கிரன் 8. சுப்பிரன் 9. லோகிதன் 10. சர்வன்
பிரம்ம (அண்டவெளி) திசை :-	1. சம்பு 2. விபு 3. கணாத்யக்ஷன் 4. த்ரியக்ஷன் 5. திரிதேசகவாதகன் 6. சன்வாகன் 7. விவாகன் 8. நபன் 9. லீபசு 10. விலக்ஷணன் என்பவர்களாவர்.

இவர்களுக்குப் பலமுறை வணக்கம் செய்து போற்றும் யஜுர் வேதப்பகுதியே ஸ்ரீருத்திரம் எனப்படுகிறது என்பர்.

வேதம் சொல்லும் உருத்திர வழிபாடு

இந்து சனாதன தர்மத்தின் ஆணிவேராக இருக்கும் சமய நூல்களில் தலையானவை சதுர் வேதங்களாகும். இவை முறையே ரிக், யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்காகும்.

இந்த நான்கு வேதங்களிலும் உருத்திர வழிபாடு சிறப்புடன் கூறப்பட்டுள்ளது. இதில் உருத்திரனைப் போற்றும் வேதப்பகுதிகளுக்கு ஸ்ரீருத்திரங்கள் அல்லது ருத்ரீயங்கள் என்று பெயர். இவற்றில் இந்திரன் உள்ளிட்ட தேவர்களுக்கு வணக்கத்தைச் சொல்லும் போது வணக்கம் என்பதை குறிக்கும் நம: என்ற சொல் தேவர்களின் பெயருக்குப் பின்னால் அமைந்துள்ளது. ஆனால் உருத்திரனுக்கு வணக்கத்தைச் சொல்லும்போது மட்டும் நம : என்ற சொல்லை முதன்முதலாக வைத்து ஆரம்பிப்பது எண்ணத்தக்கதாகும்.

ரிக்வேதத்தில் ஐந்துபகுதிகள் உருத்திரரைப் போற்றுகின்றன. இப்பகுதிகளை இணைத்து பஞ்சருத்ரீயம் என்று அழைக்கின்றனர்.

இரண்டாவது வேதமான யஜுர் வேதத்தில் அதிக அளவில் உருத்திரன் புகழப்படுகின்றார். இதிலுள்ள, எண்ணில்லாத ருத்திரர்களுக்கு நமஸ்காரத்தைத் திரும்பத்திரும்ப கூறும் சத ருத்ரீயமே அதிகமாக வழக்கத்தில் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றது. யஜுர் வேதத்தின் கிருஷ்ண, சுக்ல ஆகிய இரண்டு சாகைகளிலும் ருத்ரீயங்கள் இரண்டு வகையாக அமைந்துள்ளன. இதன் விளக்கத்தைத் தொடர்ந்து வரும் அடுத்த கட்டுரையில் காணக.

சாமவேதத்தின் தொடக்கத்திலேயே ஸ்ரீ ருத்திரம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவும் பதினோரு பகுதிகளைக் கொண்டதாகத் திகழ்கிறது.

வேதத்தில் சொல்லப்படும் உருத்திரர்கள் எண்ணில்லாதவர்கள் ஆவர். இவர்கள் எடுத்துக் கட்டிய சடைமுடியையும், நீலம், பச்சை, வெள்ளை ஆகிய வண்ணங்கள் பூசிய கழுத்துக்களை உடையவர் களாகவும். வில், அம்பு முதலிய எண்ணிலாத ஆயுதங்களை ஏந்தியவர்களாகவும் மான், கூட்டங்களையும், நாய்க்கூட்டத்தை உடையவர்களாகவும் கடல் மீதும், விண்ணிலும் காற்றிலும் பயணம் செய்பவர்களாகவும், பகைவரை அழிப்பவர்களாகவும், மருத்துக்களின் தந்தையாகவும், பொன்போலும் பிரகாசிப்பவர்களாகவும் விளங்குகின்றனர்.

உருத்திரங்கள் எனும் வேதப்பகுதிகள் எண்ணிலாது பரந்து நிறைந்துள்ள ருத்திரர்களுக்கு நமஸ்காரத்தைத் திரும்பத்திரும்பச் சொன்னாலும், அவைகள் மூலபரம்பொருளான ஸ்ரீருத்திரரையே அடைகின்றன என்பது சைவவைதீகர்களின் நம்பிக்கையாகும்.

ருத்திரர்கள் எண்ணிலாது பரந்து இருந்தாலும் அவர்களைப் பதினொன்றோடு தொடர்புபடுத்திக் கூறுவது மரபு. ஸ்ரீருத்திரத்தின் பகுதிகளும் பதினொன்று என்ற எண்ணிக்கையில் அமைந்திருப்பதும் இங்கு உணரத்தக்கதாகும்.

உருத்திர உபநிஷதங்கள்

வேதங்களேயன்றி வேதங்களை அடியொற்றி எழுந்த உபநிஷதங்களும் உருத்திர வணக்கத்தைச் சிறப்புடன் பேசுகின்றன. காலாக்னி ருத்ரம், கடருத்ரம், ருத்ர இருதயம் ஆகிய கிருஷ்ண யஜுர் வேத உபநிஷதங்களும் ருத்திரத்தை மேலும் விரிவாகப் பேசுகின்றன. இவற்றில் ருத்திரனைப் பற்றிய விரிவான வர்ணனைகளைக் காண்கிறோம்.

உருத்திர பாசுபத அஸ்திரம்

சிவபெருமானால் தமது பக்தர்களுக்கு அளிக்கப்படும் ஆயுதங்களில் மிகவும் உயர்ந்தது பாசுபதமாகும். இதனை அவர் தம்மை நோக்கிக் கடும்தவம் செய்த (பஞ்சபாண்டவர்களில் ஒருவனான) அருச்சுனனுக்கு அளித்தார். அதை விடப் பலமடங்கு வலிமை கொண்டது உருத்திர பாசுபதமாகும். இதனை அவர் முருகப்பெருமானுக்கு அளித்தார் என்று கந்தபுராணம் என்று குறிக்கின்றது. இதனைக் கந்தனாலும், சிவபெருமானாலும் மட்டுமே ஏந்தமுடியும். மற்றவர்கள் இதனைத் தொடவும் முடியாது என்பர்.

யஜுர் வேதத்தில் உள்ள மகாருத்ரம்

ரிக், யஜுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களில் நடுவில் அமைந்த யஜுர் வேதம் இரண்டு பிரிவுகளை உடையது. இவை கிருஷ்ண யஜுர், சுக்ல யஜுர் என்று அழைக்கப்படுகின்றன. நடைமுறையில் அதிகமாக உள்ளது கிருஷ்ண யஜுர் வேதங்களே யாகும். இதன் வேதப்பாடல் பகுதிகள் தைத்ரீய சம்ஹிதை என்றும், ஞானப் பகுதிகள் தைத்ரீய உபநிடதங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இதில் தைத்ரீய சம்ஹிதை ஏழு காண்டங்களை உடையது. அதில் நான்காவது காண்டமாகிய மைய காண்டத்தில் 5வது பிரச்சனமாக அமைந்திருப்பது ஸ்ரீருத்ரமாகும். இது நீண்ட காலமாகவே இது பரமேசுவரனைக் குறித்து தான் பாடப்பட்டதா? அல்லது அக்கினியைக் குறித்து பாடப்பட்டதா? என்ற சந்தேகம் எழுப்பப் பட்டு அதற்கு அறிஞர்களால் நிறையவே விளக்கம் தரப்பட்டு வந்துள்ளது.

இந்த ஸ்ரீ ருத்திரத்தில் 11 (அனுவாகம் என்ற) பிரிவுகள் உள்ளன. இதில் முதல் அனுவாகத்தில் பகவானை நோக்கி எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்தனையும், 2 முதல் 8 வரையிலான அனுவாகங்களில் பல வகையாகப் புகழ்ந்து செய்யப்படும் நமஸ்காரங்களும், 10-ஆவதில் பிரார்த்தனையும் 11வது அனுவாகத்தில் அவருடைய பிரதம கணங்களுக்கு நமஸ்காரமும் செய்யப் படுகின்றதைக் காண்கிறோம்.

இந்நூல் ஸ்ரீ ருத்ரம், மஹா ருத்ரம், சதருத்ரீ, சதருத்ரீயம், நமகம், உருத்திர அத்தியாயம் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது பெருமையுடைய உருத்திரனின் பெருமைகளை விளக்குவதால் ''மஹாருத்ரம்'' எனவும். கணக்கற்ற ருத்திரர்களைப் போற்றுவதால் சதருத்ரீயம் (சதம் என்பதற்கு - நூறு என்பது ஒரு பொருள்) கணக்கற்றது என்பது இன்னொரு பொருள்! எனவும்,, நம: என்ற சொல்லைப் பலமுறை திரும்பத் திரும்பக் கூறுவதால் "நமகம்" எனவும் அழைக்கப்படுகின்றது.

இதற்கு நான்கு வகையான சந்தங்கள் உண்டு. முறையான சந்தத்துடன் பாடப்படும் போதும், கேட்கும் போதும் தாபம் அகலும். இதிலுள்ள மந்திரங்களைக் கொண்டு ருத்ர யக்ஞம் செய்வது பக்தனுக்கு வேண்டிய பலனைத் தருகிறது என்பர்.

இதனை வேதசாரம், ருத்ரோபநிஷத் எனவும் அழைப்பர். இது மோட்சத்தை தருவதாகும்.

நீரில் நின்று உருத்திர ஜபம் செய்தால் மழை வரும் என்பது நம்பிக்கையாகும்.

ஸ்ரீ ருத்திரத்தின் மையப்பகுதியில் "சிவ" எனும் மந்திரம் அமைந்துள்ளது. அதன் தனிச் சிறப்பாகும்.

வேதம் பரம்பொருளின் திருமேனியாகும் அதன் நடுவில் இருதயமாக இருப்பது. "ஸ்ரீருத்திரம்".. அதன் நடுவில் ஆத்மாவாக இருப்பது "சிவ" எனும் மந்திரமாகும்.

கோடைகாலத்தில் குறிப்பாக அக்னி நட்சத்திர காலங்களில் சிவலிங்கத்தின் மீது தாரா பாத்திரம் அமைத்து அதிலிருந்து குசோதகமாக நீர் சிவ லிங்கத்தின் மீது விழும்படிச்செய்து அபிஷேகம் செய்வர் அப்போது "ஸ்ரீ ருத்ரம்" கூட்டமாக இருந்து

உருத்திராபிஷேகம்

சிவாலயங்களில் சிவபெருமானுக்கே உரிய அபிஷேகமாக இருப்பது உருத்திராபிஷேகமாகும். பௌர்ணமி, பிரதோஷம் முதலிய நாட்களில் உருத்திராபிஷேகம் நடைபெறுகிறது.

வேதத்தில் உள்ள ஸ்ரீ ருத்திரம், சமகம் ஆகியவற்றைப் பாராயணம் செய்து அபிஷேகம் செய்வதே உருத்திராபிஷேகமாகும். போரில் விருப்பமுள்ளவர்களான உருத்திரவீரர்களுக்குச் செய்யப்படும், மந்திராபிஷேகமான நீராட்டலே ருத்ராபிஷேகம் ஆகும். ருத்ராபிஷேகம் செய்வதால் உலகம் செழிப்படைகிறது எனும் நம்பிக்கை நிலவுகிறது. திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப் பிரகாச சுவாமிகள் தமது ஜென்மநட்சத்திரந்தோறும் உலகநன்மையைக் கருதி திருவாவடுதுறை கோமுத்தீசுவரப் பெருமானுக்கு உருத்திராபிஷேம் செய்வித்தருளி வருகின்றார்கள்.

ஓதப்படுகிறது. அக்காலங்களில் ருத்ரஹோமமும் ஜெபங்களும் செய்யப்படுகின்றன.

ஸ்ரீருத்திரத்தினை அனேகர் தமிழில் மொழி பெயர்த்து உரைநடையாகவும், பாடலாகவும் இயற்றியுள்ளனர்.

❑ திரு. ஜம்புநாதஐயர் அவர்கள் 1955-ஆம் ஆண்டில் வேதத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அதில் யஜுர் வேத மொழி பெயர்ப்பில் உரிய தலைப்புகளுடன் ஸ்ரீருத்ரம் வெளியிடப்பட்டுள்ளது.

❑ மாபெரும் உரையாசிரியரான அண்ணா அவர்கள் "ஸ்ரீருத்திர"த்திற்கு விரிவான உரை எழுதியுள்ளார்கள். இதனை ஸ்ரீராமகிருஷ்ண மடம் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. இதில் உருத்திரத்தின் வடமொழி மூலபாடம், அதன் தமிழ் வடிவம் அதற்கான பொருள் விளக்கம் ஆகியன உள்ளன.

❑ திருச்சி கவிதாமணி அ.வெ.ரா.கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் இசையுடன் பாடும் வகையில் கவிதை நடையில் ஸ்ரீருத்திரத்தை மொழி பெயர்த்துள்ளார்.

❑ ஸ்ரீருத்திரம் என்னும் தலைப்பில் ருத்திரத் திற்கு விரிவான தமிழ் உரையை நியாய வியாகரண மீமாம்ச பராங்கத பெரம்பூர் பண்டித கே. கணேச சாஸ்திரிகள் 1923ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இதன் முன்னுரையில் ஸ்ரீருத்திரம் சிவபெருமானை எப்படி விளக்கிநிற்கின்றதென்று விரிவாக ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ளது.

❑ 1954 ஆம் ஆண்டில் அமிர்தவசனி பிரசுராலயம் சார்பில் உருத்திர பசுபதி நாயனார் (பெரிய புராணத்திலுள்ள) புராணம் விரிவுரை செய்யப்பெற்று அதன் ஞாபகார்த்தமாக ஸ்ரீருத்திரத் தின் தமிழ்ச் சுருக்கம் பாராயணம் செய்வதற்கேற்ப வெளியிடப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ச. வே சோமதேவசர்மா அவர்களாவார்.

இதில் முதல் அனுவாகம் பூஜைக்குரிய வேண்டுதற்கூறாகவும் 2 முதல் 9 முடிய உள்ள 8 அனுவாகங்கள் அர்ச்சனை செய்யும் வகையிலும் இறுதி இரண்டும் பிரார்த்தனை செய்யும் வகையிலும் அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

❑ 1942 ஆம் ஆண்டில் சென்னை திருஒற்றி யூரான் அடிமை அவர்கள் துணைகொண்டு காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள் அவர்கள் **"கிருஷ்ண எசுர் வேத தைத்திரீய சங்கிதை"** எனும் பெயரில் யஜுர் வேதத்தை தமிழில் உரிய குறிப்புகளுடன் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீ உருத்திரமும் நின்ற திருத்தாண்டகமும்

வடமொழியில் அமைந்த உருத்திரம் உருத்திரர்கள் எங்கும் பரந்துள்ள நிலையைக் கூறி அவர்களுக்கு அனேக நமஸ்காரங்களைச் சொல்கிறது. அதே வகையில் சிவபெருமானின் பரத்துவ நிலையைக் கூறி வியந்து போற்றுவது அப் பரடிகள் அருளிய "நின்ற திருத்தாண்டகம்" ஆகும். **இதனைத் தமிழில் அமைந்த உருத்திரம்"** என்பர்.

ஸ்ரீருத்திரத்தின் எட்டாவது அனுவாகத்தில் தொடராக உச்சரிக்கும் போது **"நம:சிவாய"** என்னும் பஞ்சாட்சரியான பதம் அமைந்துள்ளது. இதை நினைவூட்டும் வகையில் மேற்குறித்த "நின்ற திருத் தாண்டக"த்தின் எட்டாவது பாடலில் "நாவுக்கோர் உரையுமாகி" என்ற சொல் காணப்படுகிறது. இங்கு நாவுக்கோர் உரை என்பது "நமசிவாய" ஆகும் இதனை அப்பர் நமசிவாய பதிகத்தில், "நாவினுக்கு அருங்கலம் நமசிவாயவே" என்று குறிப்பதால் அறியலாம்.

இவ்வாறு **"நமசிவாய"** எனும் பதம் தமிழ் வேதத்திலும், வடமொழி வேதத்திலும் உள்ள உருத்திரப் பகுதியில் சிறப்புடன் விளங்குவதைக் காண்கிறோம்.

உருத்திர வடிவான சூரியன்

யஜுர் வேதத்தில் காணப்படும் "ஸ்ரீருத்திரம்" உருத்திரர் உதயகாலத்தில் சிவந்த நிறமுள்ள சூரியனின் வடிவாகவும், அதனைத் தொடர்ந்து சிவப்பான சூரியனாகவும் விளங்கு கின்றார் என்று கூறி (நமஸ்தே ஸ்தாம்பிராயச்ச அருணாயச்ச) சூரியனை உருத்திரனாகவே காட்டி அவனை வணங்குகின்றது.

உருத்திரபாராயண அபிஷேகம்



ஸ்ரீ உருத்திரத்தில் 1234 பதங்கள் கொண்ட மந்திரங்கள் உள்ளன. இவற்றைப் பாராயணம் செய்து சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதே உருத்திராபிஷேகமாகும். இவ்வாறு, உருத்திர மந்திரத்தால் அபிஷேகித்து அர்ச்சிக்கப்பட்ட சிவபெருமானிடம் வேண்டுதற்கூறாக அமைந்ததே சமகம் ஆகும். வாஜச்சமே என்று தொடங்கி புவனஸ்சாதிபதி ஸ்ச ஸ்வாக என்று 371 பிராத்தனைகளைக் கொண்டதாகக் இது அமைகிறது. உருத்திரம் நம, என்ற சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்வதால் நமகம் எனப் பெயர் பெற்றது போலவே "ஸ்சமே" என்பதனைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கப் படுவதால் சமகம் என்பது அதற்குப் பெயராயிற்று இதுவும் பதினோரு பகுதியாக அமைந்ததாகும்.

உருத்திர பாராயண, வேள்வி முறைகள் பல வகையாக உள்ளன. இவற்றில் முக்கியமானது ஸ்ரீஏகாதசருத்திரம், ருத்ரைகாதசீ, மஹாருத்ரம், அதிருத்திரம் ஆகிய நான்குவகையாகும்.

ஏகாதச ருத்ர பாராயணம் என்பது உருத்திரத்தை ஒரு முறை பாராயணம் செய்து சமகத்தின் முதல் பகுதியைப் பாராயணம் செய்வது. மீண்டும் ருத்திரத்தை முழுவதும் பாராயணம் செய்து சமகத்தின் இரண்டாம் பகுதியைப் பாராயணம் செய்தல். இவ்வாறு ருத்திரத்தை முழுவது மாகப் பாராயணம் செய்து அதன் முடிவில் சமகத்தின் ஒவ்வொருபகுதியாக பாராயணம் செய்யவேண்டும். இதன்படிச் செய்வதால் பதினோரு முறை உருத்திர பாராயணமும் ஒருமுறை சமகமும் பாராயணம் செய்தாகிறது.

இதுபோன்று பதினோரு முறை செய்வது ருத்ரஏகாதேசி என்றும், ருத்திரஏகாதசியைப் போல் பதினோரு பங்கு கொண்டது மஹாருத்திரம் எனவும், மகாருத்திரத்தைப் போல பதினோரு மடங்கு கொண்டது அதிருத்திரம் எனவும் அழைக்கப் படுகின்றன.

ஏகாதசருத்திராபிஷேகம் என்பது ஒரு தடவை மஹந்நியாசம் செய்து நடுவில் சிவ கும்பம் வாத்தனிகலசம் வைத்து அதைச்சுற்றிலும் பதினோரு உருத்திரகலசம் வைத்து ஹோமம் செய்து சமகத்தால் வசுத்தாரை அளித்து 11 பொருள்களால் அபிஷேகம் செய்வதாகும். பின்னர் ருத்ர திரிசதியால் அர்ச்சனை செய்து தீபாராதனை செய்ய வேண்டும்.

இது போன்று ஒரே நாளில் பதினோரு பங்கு கலங்களை நிறுவி 121 பேர்களைக் கொண்டு உருத்திர வேதபாராயணம் செய்து 121 ஆவர்த்தி ஹோமம் செய்து அபிஷேகம் செய்வதே மஹாருத்ரம் ஆகும்.

இத்தகைய ஸ்ரீ உருத்திராபிஷேகங்களைச் செய்பவர்கள் புண்ணியசாலிகள். அவர்கள் இவ்வுலகில் நூறு, நூறு ஆண்டுகள் சகல சௌபாக்கியங்களுடன் வாழ்வர். அவர்களுடைய இந்தப் புண்ணியம் அவர்களின் பல தலைமுறை களையும் காத்து நிற்கும். இறுதியில் சிவசாயுஜ்யமும் பெறுவர் என்ற நம்பிக்கை நிலவுகிறது.


> ஸ்ரீருத்திரபாராயணம் செய்பவன் பஞ்சமா பாதகங்களிலிருந்து விடுபடுகின்றான். அஞ்ஞானம் ஒழிந்து ஆத்மஞானம் பெறுகின்றான். இதற்கு ஈடு இணை வேதத்திலும் சரி ஸ்ம்ருதியிலும் சரி கிடையவே கிடையாது.
>
> – சூத சம்ஹிதை.

உருத்திர பசுபதி நாயனார்

பெரியபுராணம் காட்டும் 63 நாயன்மார்களில் 17-வது நாயன்மாராகத் திகழ்பவர் உருத்திரபசுபதி நாயனார் ஆவார். இந்நூலில் அமைந்த மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் இவருடைய வரலாறு பத்து பாடல்களில் பேசப்பட்டுள்ளது.

திருத்தலையூர் எனும் ஊரில் வாழ்ந்துவந்த பசுபதி என்ற இந்த நாயனார் தினமும் குளத்து நீரில் கழுத்தளவு மூழ்கி வேதப்பயனான உருத்திர மந்திரத்தை ஓதிவந்தவராவார். இநதப் புண்ணியத் தால் இவர் இறுதியில் சிவனை அடைந்தார் என்று கூறப்பட்டுள்ளது. உருத்திரத்தை ஓயாது ஓதிவந்த பசுபதியாதலின் இவர் உருத்திரபசுபதிநாயனார் என்றழைக்கப்பெற்றார்.

இவர் பிற நாயன்மார்களைப்போல ஆலயப் பணிகளையோ அடியார்களைப் புரத்தலையோ செய்யவில்லை. உருத்திரம் ஓதுவது ஒன்றே இவர் செய்து வந்த செயல். இச்செயலே இவரைச் சிவனடிக்கீழ் சேர்க்கின்றது. இவர் வரலாறு "உருத்திரம் ஓதுவதின் மேன்மையை உணர்த்தவே" பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



★ **உருத்திரப் பல்கணத்தார் :-** உருத்திர வழிபாட்டை மேற்கொண்ட பலவேறு குழுக்கள் தமிழகமெங்கும் பரவியிருந்தனர். இந்த அனைத்து குழுக்களுக்கும் ஒருங்கிணைத்து அமைந்த பெயரே உருத்திர பல்கணத்தவர் என்பதாகும். கணம் என்பதற்கு ஒருமிக்க கருத்துக் களையும் கோட்பாடுகளையும் கொண்ட கூட்டத்தினர் என்பது பொருளாகும். உருத்திர வழிபாட்டை மேற்கொன்டிருந்தவர்களில் பல கணங்கள் இருந்ததை உருத்திரப் பல்கணங்கள் என்ற இந்தத் தொடர் குறிக்கிறதென்பர். திருமயிலைப் பதிகத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் "உருத்திரப் பல்கணத்தார்க்கு அட்டிட்டல்" என்று குறிக்கின்றார். இதனால் இக்கணத்தவர்க்கு உணவு படைப்பது அந்நாளில் சிறப்பாகக் கருதப்பட்டதென்பர். திருவாரூர் தேவாரத்தில் அப்பரடிகள் திருவாரூர்ப் பெருமான் வீதிவலம் வரும் போது எட்டுகணங்கள் அவரோடு வந்தனர் என்று குறிக்கின்றார். இதனால் திருவாரூரும் உருத்திரப் பல்கணத்தார்க்கு உரிய சிறப்பிடங்களில் ஒன்றாக இருந்ததை அறியமுடிகிறது.

★ **"உருத்திரப் பிரயாகை" :-** இது மந்தாகினி நதிக்கும் அலகநந்தா நதிக்கும் இடையுள்ள ஒரு திருத்தலமாகும்.

★ **உருத்திர பர்வதம்:-** இது புராணங்களில் கூறப்படும் நானவி நதிக்கரையில் உள்ள ஒரு மலையாகும்.

★ **உருத்திரரிஷி துருவாசர் :-** உருத்திரர் அம்சமாகத் தோன்றியவர் துருவாசமகரிஷி. எனவே எளிதில் கோபம் கொள்பவராக விளங்குகின்றார். இவருக்கு திருவண்ணாமலையில் மலை சுற்றும் பாதையில் ஒரு ஆலயம் அமைந்துள்ளது. காஞ்சீபுரம் காமாட்சி ஆலயத்தில் உற்சவ காமாட்சியின் கருவறைத் தென்புறக் கோட்டத்தில் இவருடைய திருஉருவம் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். திருவாரூரிலும் இவருக்கு ஆலயம் உள்ளது.

★ **சதுர்தசி ருத்ர விரதம் :-** பரம்பொருள் உலகைப் படைக்கவும் இறுதியில் அதனை மீண்டும் தம்முள் அடக்கிக் கொள்ளவும் ஸ்ரீ ருத்திரரைப் படைத்தார். அவருக்கு உரிய திதி சதுர்த்தசியாகும். சதுர்த்தசியில் உருத்திர மூர்த்தியை நினைத்து விரத மிருப்பவர்கள் சகல செல்வங்களையும் அடைவர். - வராக புராணம்

சாக்த தந்திரங்களில் உருத்திர வழிபாடு

தேவியைப் பரம்பொருளாகக் கொண்டு ஆன்ம சாதனையில் ஈடுபடுபவர்கள் சாக்தர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்களிடத்திலும் உருத்திரவழிபாடு சிறப்புடன் திகழ்கிறது.

இவர்களுடைய கருத்துப்படி ஸ்ரீலலிதா தேவியின் இருப்பிடமான ஸ்ரீபுரத்தில் உருத்திரருக்கு ஒரு ஆலயம் அமைந்துள்ளது. அங்கு அது ஸ்ரீசக்ரவடிவாகவும் அதன் மையத்தைச் சுற்றி பதினாறு ஆவரணங்களும் அமைந்துள்ளன. இந்த ஆவரணங்களில் மொத்தம் 274 உருத்திரர்கள் மகாருத்திரரைப் போற்றிக் கொண்டும், லலிதா தேவியின் பக்தர்களைக் காத்துக் கொண்டும் எழுந்தருளியுள்ளனர்.

இந்த உருத்திர ஆலயத்தின் மையத்தில் முத்தினால் அமைந்த ஆலயத்தில் ஜ்வலிக்கும் கோபமுள்ளவராகவும் வலிய வில்லை நாணேற்றி அதனை ஏந்தியிருப்பவராகவும். சடைமுடியைத் தரித்தவராகவும் விளங்குகின்ற மகாஉருத்திரர் எழுந்தருளியுள்ளார்.

இந்த உருத்திர ஆலயத்தைப் பற்றிய விவரமான வர்ணனை ★ ஸ்ரீலலிதோ பாக்யானம் எனும் நூலில் காணப்படுகின்றது. இனி அந்த நூலில் உள்ளபடியான ருத்ராலய ஸ்ரீ சக்ர வடிவத்தையும் அதில் அமைந்துள்ள ஆவரணங்களில் வீற்றிருக்கும் உருத்திரர்களின் பெயர்களையும் விரிவாகக் காணலாம்.

உருத்திராலயமும் அதில் எழுந்தருளியுள்ள உருத்திரர்களின் பெயர்களும்

ஸ்ரீஅம்பிகையின் சிந்தாமணி ஆலயத்தை யொட்டி விளங்கும் ருத்ராலயம் ஒன்று இருக் கின்றது. அது ஐந்து யோஜனை அகலமும் ஐந்து யோஜனை நீளமுமுள்ளது. அதனைச் சுற்றிலும் பதினாறு ஆவரணங்கள் சூழ்ந்துள்ளன. அதன் மத்தியில் ஒரு அழகிய ஆசனமிருக்கின்றது. அந்த மத்ய பிந்து பீடத்தில், ஜ்வலிக்கும் கோபமுள்ள வராயும், மூன்று கண்ணுள்ளவராயும், எப்போதும் நாணேற்றிய வில்லையுடையவராயுமுள்ள "மஹாருத்ரர்" விளங்குகின்றனர்.

முதல் ஆவரணமான முக்கோணத்தில்

1. ஹிரண்யபாஹு, 2. ஸேநாநீ, 3. திசாம்பதி யென்னும் மூன்று ருத்ரர்கள் இருக்கின்றனர்.

இரண்டாவது ஆவரணமாகிய ஆறுகோணத்தில்

1. விருக்ஷர், 2. ஹரிகேசர், 3. பசுபதி, 4. ஸஸ்பிஞ்சரர், 5. த்விஷீமான் (மிகுந்த காந்தியுள்ளவர்), 6. பத்னாம்பதி, (தூமாதி, அர்ச்சிராதி முதலிய மார்க்கங்களுக்கு அதிபதி) என்பவர்களும்.

மூன்றாவது ஆவரணமான எண்கோணத்தில்

1. பப்ருசர் (விருஷபாரூடர்), 2. வ்வ்யாதி (சத்ருக்களைச் சிக்ஷிப்பவர்), 3. அந்நபதி 4. ஹரிகேசர் (கறுத்த கேசமுடையவர்) 5. உபவீதி 6. புஷ்டபதி (பரிபூரண குணமுள்ளவர்களுக்குப் பதி), 7. பவர், 8. ஹேதி என்பவர்களும்.

நான்காவது ஆவரணமான பத்து இதழ்தாமரையில்


1. ஜகத்பதி, 2. ருத்ரர், 3. ஆததாவி (நீண்ட தனுஸ்ஸால் ரக்ஷிப்பவர்), 4. க்ஷேத்ரபதி, 5. ஸூதர் (ஸாரதி), 6. அஹந்த்யர் (கொல்லத்தகாதவர்), 7. வநபதி, 8. ரோஹிதர் (ரக்த நிறமுடையவர்), 9. ஸ்தபதி (பிரபு) 10. விருக்ஷபதி என்பவர்களும்.

ஐந்தாவது ஆவரணமான பன்னிரண்டு இதழ்தாமரையில்

1. மந்த்ரீ 2. வாணிஜர் (வர்த்தகர்களுக்கு யஜமானன்) 3. கக்ஷபதி (செடி கொடிகளின் பதி), 4. புவந்தீ (பிரபஞ்சத்திற்கு ஆதாரமானவர்) 5. வாரிவஸ்க்ருதர் (பக்தவத்ஸலன்) 6. ஔஷதிபதி, 7. உச்சைர்க்கோஷர் (உரத்த குரலுள்ளவர்), 8. ஆக்ரந்தயர்

நன்றி : ஸ்ரீலலிதோபாக்யானம் தமிழ்மொழிபெயர்ப்பு
ஆசிரியர் ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா அவர்கள் (1940).

ஸ்ரீருத்ர மகாயந்திரம்



ஸ்ரீருத்திர மந்திரம்

நமஸ்தே அஸ்து பகவன் விச்வேச்வராய மஹாதேவா த்ர்யம்பகாய த்ரிபுராந்தகாய
த்ரிகாக்னிகாலாய காலாக்னி ருத்ராய நீலகண்டாய ம்ருத்யுஞ்ஜயாய ஸர்வேச்வரா
ஸதா சிவாய ஸ்ரீமன் மஹாதேவாய நம!!

குறிப்பு: இதில் உருத்திரனின் 11 பெயர்களான பகவன், விஸ்வேஸ்வரன், மஹாதேவன், திரியம்பகன், திரிபுராந்தகன், அக்னிகாலன், காலாக்னிருத்திரன், நீலகண்டன், மிருத்திஞ்செயன், சர்வேசன், சதாசிவன் ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. இதை சூரியனை நோக்கி ஜபிப்வர்கள் சகல பாவங்களையும் ஒழித்து சிவலோகம் அடைகின்றனர்.

நன்றி : இந்த எந்திரத்தை வரைந்து உதவியவர் பர்வதமலை தவத்திரு. ஜோதிராமலிங்க சுவாமிகள் அவர்கள்

(சத்ருக்களை யழவைப்பவர்), 9. பத்த்நாம்பதி (பதாதிகளின்பதி) 10. க்ருத்ஸ்நவீதர் (ஸகல ஸேனை களாலும் சூழப்பட்டவர்), 11. தாவன் (சத்ருவைத் தொடர்ந்து ஓடுபவர்) 12. ஸத்வபதி (சரணாகத ரக்ஷகர்) என்பவர்களும்.

ஆறாவது ஆவரணமான பதின்மூன்று இதழ்தாமரையில்

1. ஸஹமானர் (சத்ருக்களை ஸ்வாதீனப் படுத்திக் கொள்பவர்), 2. நிவ்யாதி (சத்ருக்களைச் சிக்ஷிப்பவர்) 3. ஆவ்யாதினிபதி (சூரஸேநாபதி) 4. ககுபர் (பிரதானர்) 5. நிஷங்கீ (கத்தி யேந்தியவர்) 6. ஸ்தேனபதி (ரஹஸ்யமாகத்திருடுபவருக்கு யஜமானன்) 7. நிஷங்கி 8. இஷுதிமான் (அம்பறாத் தூணியுடையவர்) 9. தஸ்கரணாம்பதி (வெளிப் படையாகத் திருடுபவர்க்குப் பதி) 10. வஞ்சத் (ஸ்வாமி திரவியத்தை யபகரிப்பவர்) 11. பரிவஞ்சத் (எல்லா விவகாரங்களிலும் கபடி) 12. ஸ்தாயூநாம்பதி (நம்பியவர் பொருளைத் திருடுபவர்க்குப்பதி) 13. நிசேரு (ஏமாறும் ஸமயம் பார்த்துத் திருடுபவர்) என்பவர்களும்.

ஏழாவது ஆவரணமான பதினாறு இதழ் தாமரையில்

1. பரிசரர் (திருடும் எண்ணத்தோடு எங்குந் திரிபவர்), 2. அரண்யபதி (வழிப்போக்கரைக் கொள்ளையடிக்கக் காட்டில் திரிபவர்) 3. ஸ்ருகாவி (வஜ்ராயுதத்தால் தன்னைக் காத்துக் கொள்பவர்) 4. ஜிகாம்ஸர்கள் (பிராணிகளைக் கொல்வதில் ஆசையுள்ளவர்) 5. முஷ்ணத்பதி (உழவாளி யாயிருந்து யஜமானனது தான்யத்தைத் திருடுபவர்களின்பதி), 6. அஸிமத்துக்கள் (கத்தியை யுடையவர்கள்) 7. நக்தஞ்சரர் (திருடுவதற்கு இரவில் திரிபவர்) 8. ப்ரக்ருந்தபதி (கொன்று திருடு பவர்க்குப்பதி) 9. உஷ்ணீஷீ (தலைப் பாகையணிந்து பெரிய மனிதனைப் போல் நடித்துத் திருடுபவர்), 10. கிரிசரர் (காட்டில் கட்டை வெட்ட வருபவரைப் பறிப்பவர்), 11. குலுஞ்சபதி (பூமியைத் திருடும் திருடர்க்குப்பதி), 12. இஷுமத்துக்கள் (பயப் படுத்துவதற்குக் கையில் அம்பையுடையவர்) 13. தன்வாவிகள் (பயப்படுத்த வில்லுடையவர்) 14. ஆதன்வானர்கள் (வில்லில் நாணேற்றுபவர், 15. ப்ரதித்தானர்கள் (வில்லில் அம்பைத் தொடுப்பவர்) 16. ஆயச்சத்துக்கள் (நாணை யிழுப்பவர்கள்), ஆகிய இப்பதினாறு ருத்திரர்களும் ஏழாவது ஆவரண மாகும் பதினாறிதழ்க் கமலத்திலும்,

எட்டாவது ஆவரணமான பதினெட்டிதழ் தாமரையில்

1. விஸ்ருஜத்துக்கள் (பாணத்தை விடுப்பவர்) 2. அஸ்யத்துக்கள் (குறிவரை பாணத்தைச் செலுத்துபவர்) 3. வித்யத்துக்கள் (லக்ஷ்யத்தைப் பாணத்தாலடிப்பவர்) 4. ஆஸீநர்கள் (உட்கார்ந் திருப்பவர்) 5. சயாநர்கள் (படுத்திருப்பவர்கள்) 6. ஸ்வபத்துக்கள் (தூங்குபவர்) 7. ஜாக்ரத்துக்கள் (விழித்திருப்பவர்) 8. திஷ்டத்துக்கள் (நின்று கொண்டிருப்பவர்) 9. தாவத்துக்கள் (ஓடித்திரிபவர்) 10. ஸபாப்ய: (ஸபை வடிவமாயிருப்பவர்) 11. ஸபாபதிகள் 12. அச்வர்கள் 13. அச்வபதிகள் 14. ஆவ்யாதினிக்கள் (எங்கும் அடிப்பவர்) 15. விவித்யந்திகள் (நன்றாக அடிப்பவர்) 16. உகணர்கள் (உத்க்ருஷ்டமான கண ஸ்வரூபமானவர்), 17. த்ரும்ஹதிகள் (ஹிம்ஸை செய்பவர்) 18. க்ருத்ஸர் (விஷய ஆசையுள்ளவர்) ஆகிய இப்பதினெட்டு ருத்திரர்களும் பதினெட்டு தளமுடைய எட்டாவது ஆவரண வாசிகளாவர்.

ஒன்பதாவதாவரணமான இருபது இதழ்தாமரையில்

1. க்ருத்ஸபதி 2. வ்ராதங்கள் (நானா ஜாதிகளின் ஸமூஹங்கள்) 3. வ்ராதபதிகள் 4. கணர்கள் 5. கணபதிகள் 6. விருபர்கள் 7. விச்வருபர்கள் 8. மஹத்துக்கள் 9. க்ஷுல்லகர்கள் (அற்பர்கள்) 10. ரதிகள் 11. அரதர்கள் 12. ரதர்கள் 13. ரதபதிகள் 14. ஸேனைகள் 15. ஸேநாநிகள் 16. க்ஷத்தாக்கள் (குதிரைப்பாகர்) 17. ஸங்க்ரஹீதாக்கள் (கடிவாளத்தையிழுத்துப் பிடிக்கும் ஸாரதிகள்), 18. தக்ஷர்கள் (தச்சர்) 19. ரதகாரர்கள் (ரதங்கள் செய்பவர்) 20. குலாலர்கள் (குயவர்கள்) இவ்விருபது வகையான ருத்ரர்களும் ஒன்பதாவதாவரணத்தில் இருக்கின்றனர்.

பத்தாவதாவரணமான இருபத்திரண்டு இதழ் தாமரையில்

1. கர்மாரர்கள் (கம்மாளர்) 2. பஞ்சிஷ்டர்கள் (பக்ஷிகளைக் கொல்பவர்) 3. நிஷாதர்கள் (செம்படவர்கள்) 4. இஷுக்ருத்துக்கள் (பாணங்களைச் செய்பவர்கள்) 5. தன்வக்ருத்துக்கள் (வில்லைச் செய்பவர்) 6. ம்ருகயுக்கள் (வேட்டைக்காரர்) 7. ச்வனிக்கள் (நாய்களையுடையவர்) 8. ச்வாக்கள் (நாய்கள்) 9. ச்வபதிகள் (நாய்களுக்கு யஜமானர்கள்) 10. பவன் சிருஷ்டிகர்த்தா), 11. ருத்ரர் (துக்கத்தைப் போக்குபவர்), 12. சர்வர் (பாவத்தை நீக்குபவர் 13. பசுபதி 14. நீலக்ரீவர் 15. சிதிகண்டர் 16. கபர்த்தி 17.

வ்யுப்த கேசர் (முண்டனஞ் செய்யப்பட்டவர்) 18. ஸஹஸ்ராக்ஷர் 19. சததன்வா 20. கிரிசர் 21. சிபிவிஷ்டர் (விஷ்ணுஸ்வரூபர்) 22. மீடுஷ்டமர் (பெருமழை பெய்யும் மேக வடிவினர்) ஆகிய இவ்விருபத்திரண்டு ருத்ரர்கள் பத்தாவதாவரணத்தில் வஸிக்கின்றனர்.

பதினோராவதாவரணம்
இருபத்திநான்கு இதழ்தாமரை

1. இஷுமான் 2. ஹ்ரஸ்வன் (குள்ளமானவர்) 3. வாமநர் (குறுகிய அவயவங்களையுடையவர்) 4. ப்ருஹத் (பெரிய உருவமுள்ளவர்) 5. வர்ஷீயஸ் (குணங்களால் பெரியவர்) 6. விருத்தன் (வயதாற் பெரியவன்) 7. ஸம்வ்ருத்வன் (வேதங்களால் புகழப்பட்டவன்) 8. அக்ரியன் (சிருஷ்டிக்கு முன்னுள்ளவர்) 9. ப்ரதமர் (முக்கியமானவர்) 10. ஆசு (வ்யாபகர்) 11. அஜிரர் (நடப்பதில் ஸமர்த்தர்) 12. சீக்ரியர் (சீக்கிரம் செல்பவர்) 13. சீப்யர் (ஜலப்ரவாஹததிலிருப்பவர்) 14. ஊர்ம்யர் (அலை களிலுள்ளவர்) 15. அவஸ்வன்யர் (ஓட்டமற்றுத் தேங்கும் ஜலத்திலிருப்பவர். 16. ஸ்ரோதஸ்யர் (ஓடும் ஜலத்திலுள்ளவர்) 17. த்வீப்யர் (தீவிலுள்ளவர்) 18. ஜ்யேஷ்டர் (வித்தை, செல்வம் இவைகளாற் சிறந்தவர்) 19. கநிஷ்டர் (அவற்றில் குறைந்தவர்) 20. பூர்வஜர் (மூத்தவர்) 21. அபரஜர் (பின் பிறந்தவர்) 22. மத்தியமர் (மத்தியில் பிறந்தவர்) 23. அபகல்பர் (சிசுக்கள்) 24. ஜகன்யர் (பிருஷ்டபாகத்தில் பிறக்கும் பசுங்கன்று வடிவமானவர்) இவர்கள் இருபத்திநான்கு பேரும் பதினோராவது ஆவரணத்தில் வஸிப் பவர்களாவர்.

பன்னிரண்டாவதாவரணம்
இருபத்தாறு இதழ்தாமரை

1. புத்னியர் (மரத்தின் அடிக்கட்டை போலிருப்பவர் 2. ஸோப்யர் (இருவினைகளோடு கூடியவர்) 3. ப்ரதிஸர்யர் (காப்பணிந்தவர்) 4. பாம்யர் (பாவிகளைச் சிக்ஷிப்பவர்) 5. க்ஷேம்யர் (மோஷத் திற்குத் தகுதியுடையவர்) 6. ஊர்வர்யர் (விளைவோடு கூடிய நிலத்திற்குரியவர்) 7. கல்யர் (வண்டல் வடிவமா யிருப்பவர்) 8. ச்லோக்யர் (துதிக்கப்படுபவர்) 9. அவஸான்யர் (வேதாந்தப் பிரதிபாத்தியர்) 10. வந்யர் (காட்டில் உற்பத்தியாகும் மரம் முதலிய வடிவினர்) 11. கக்ஷ்யர் (செடி கொடி வடிவினர்) 12. ச்ரவர் (சப்த ரூபி) 13. ப்ரதிச்ரவர் (பிரதி த்வனி வடிவமாயிருப்பவர்) 14. ஆசுஷேணர் (வேகமாய் செல்லும் சேனையை உடையவர்) 15. ஆசுரதர் (வேகமாய்ச் செல்லும் ரதமுள்ளவர்) 16. சூரர் 17. அவபிந்தர் (சத்ருவின் உடலைப் பிளப்பவர் 18. வர்மீ (கவசமணிந்தவர்) 19. வரூதீ (நல்ல வீட்டையுடையவர்) 20. பில்மீ (தலைக்குக் கவசமுள்ளவர்) 21. கவசீ (தேஹ ரக்ஷையை யுடையவர்) 22. ச்ருதர் (வேதப் பிரஸித்தர்) 23. ச்ருதஸேநர் (பிரஸித்தமான ஸேனையை யுடையவர்) 24. துந்துப்யர் (துந்துபியென்றும் வாத்திய விசேஷத்தின் சபதவடிவ மாயிப்பவர்) 25. ஆஹநந்யர் (பேரிகையை யடிக்குங் கோல் வடிவமானவர்) 26. த்ருஷ்ணு (சண்டையில் பின்னிடாதவர்) ஆகிய இவ்விருபத்தாறு ருத்ரர்களும் மஹா பலசாலிகளாய்ப் பன்னிரண்டா வதாவரணத் தில் வஸிக்கின்றனர்.

பதிமூன்றாமாவரணமான
முப்பது இதழ் தாமரை

1. ப்ரம்ருசர் (பராமர்சம் செய்பவர்) 2. தூதர் 3. ப்ரஹிதர் (அனுப்பப்பட்டவர்) 4. நிஷங்கீ (கட்கத்தைவர்) 5. இஷுதிமான் (அம்பறாத் தூணியுடையவர்) 6. தீக்ஷ்ணேஷு (கூர்மையான அம்புகளையுடையவர்) 7. ஆயுதீ (பல ஆயுதங்களை யுடையவர்) 8. ஸ்வாயூதீ (நல்ல ஆயுதமான த்ரிசூல முடையவர்) 9. ஸுதன்வா (பினாகமென்னும் வில்லை உடையவர்) 10. ஸ்ருத்யர் (காலடிப்பாதை வடிவ மாயிருப்பவர்) 11. பத்யர் (பெரிய வழி வடிவமானவர்) 12. காட்யர் (சிறியவாய்க்கால் ஜல வடிவினர்) 13. நீப்யர் (கானாற்று ஜலவடிவினர்) 14. ஸூத்யர் (சேற்று நீர் வடிவினர்) 15. ஸரஸ்யர் (குளத்து ஜலஸ்வரூபி 16. நாத்யர் (நதீ ஜல வடிவினர்) 17. வைசந்தர் (சிறிய ஓடையின் ஜல வடிவினர்) 18. கூப்யர் (கிணற்று நீர் வடிவினர்) 19. அவட்யர் (பள்ளத்தில் நிற்கும் ஜலவடிவினர்) 20. வர்ஷ்யர் (மழை ஜல வடிவினர்) 21. அவர்ஷ்யர் (மழையால் ஏற்படாத ஸமுத்திர ஜல வடிவினர்) 22. மேக்யர் (மேக ஜலமாயிருப்பவர்) 23. வித்யுத்யர் (மின்னலோடு கூடியவர்) 24. ஈத்ரியர் (நிர்மலமான சரத்காலமேக வடிவினர்) 25. ஆதப்யர் (வெய்யிலோடு கூடிய மழை வடிவமாக இருப்பவர்) 26. வாத்யர் (காற்று மழை வடிவினர்) 27. ரேஷ்மியர் (பிரளயகால வடிவமா யிருப்பவர்) 28. வாஸ்தவ்யர் (தன தான்யாதி வஸ்து ரூபமாயிருப்பவர்) 29. வாஸ்துபர் (க்ருஹ நிர்மாணத்திற்கேற்ற பூமியைக் காப்பவர்) 30. ஸோமர் (உமையுடன் கூடியவர்) இம்முப்பது ருத்ரர்களும் பதின்மூன்றாவதாவரணத்தின் முப்பது தளங்களில் இருப்பவர்களாவர்.

பதினான்காவதாவரணமான

முப்பது இதழ் தாமரை

1. ருத்ரர் (ஸம்ஸார துக்கத்தைத் தொலைப்பவர்) 2. தாம்ரர் (உதயரவிபோல் சிவந்த நிறமுடையவர்) 3. அருணர் (வெண்மை கலந்த சிவந்த நிறமுடையவர் 4. சங்கரர் (ஸுகத்தைப் பொருத்துபவர்) 5. பசுபதி (பசுக்களைக் காப்பவர்) 6. உக்ரர் (கோபமுடையவர்) 7. பீமர் (பார்த்த மாத்திரத்தில் பயமுண்டாக்குபவர்) 8. அக்ரேவதர் (அநாயாஸமாய் எதிரிலுள்ள சத்ருவைக் கொல்பவர்) 9. துரேவதர் (தூரத்திலிருந்தாலுங் கொல்பவர்) 10. ஹந்தா (எல்லாரையும் கொல்பவன்) 11. ஹநீயான் (பிரளய காலத்தில் யாவரையும் ஒரே க்ஷணத்தில் கொல்பவன்) 12. வ்ருக்ஷர் 13. ஹரிகேசர் 14. தாரர் (பிரணவப் பிரதிபாத்யர்) 15. சம்பு (ஸுகத்தை யளிப்பவர்) 16. மயோபூ (பரசுகத்தையளிப்பவர்) 17. சங்கரர் 18. மயஸ்கரர் 19. சிவன் 20. சிவதரர் 21. தீர்த்யர் (புண்ய தீர்த்தங்களில் விளங்குபவர் 22. கூல்யர் (புண்ய நதீ தீரங்களில் லிங்க ரூபமாய் விளங்குபவர்) 23. பார்யர் (நதியின் அக்கரையில் விளங்குபவர், கரைகண்ட ஞானிகளால் தியானிக்கப் படுபவர்) 24. அவார்யர் (இக்கரையில் விளங்குபவர், என்றால் காம்ய பலனையளிப்பவர்) 25. ப்ரதரணர் (சிறந்த ஜபாதிகளால் பாபத்தைப் போக்கடிப்பவர்) 26. உத்ரணர் (தத்துவ ஞானத்தை அருள்பவர்) 27. ஆதார்யர் (ஞானிகளையும் மறுபடி ஸம்ஸாரத்தில் இழுத்துக் கர்ம பலனைத் தருபவர்) 28. ஆலாத்யர் (ஜீவர்களைப் பிரேரேபிப்பவர்) 29. சஷ்ப்யர் (புண்ய நதீ தீரங்களில் முளைத்த இளம்புல், இளநாணல் நுனிகள் இவற்றால் அர்ச்சிக்கத் தக்கவர்) 30. பேன்யர் (நதீ ஜலத்திலுள்ள நுரை வடிவமானவர்) இம்முப்பது பேரும் மிக்க கோபத்தோடு கூடியவர் களாய்ப் பதினான்கா வதாவரணத்தில் விளங்குபவராவர்.

பதினைந்தாவதாவரணமான

முப்பத்திரண்டு இதழ் தாமரை

1. ஸிகத்யர் (மணல் வடிவமாயிருப்பவர்) 2. ப்ரவாஹ்யர் (வெள்ள வடிவமாயுள்ளவர்) 3. இரிண்யர் (களர் நிலத்தில் இருப்பவர்) 4. ப்ரபத்யர் (வெகு ஜனங்கள் நடமாடும் ராஜ வீதியிலிருப்பவர்) 5. கிம்சிலர் (சுக்காங்கல் நிறைந்த பூமியில் இருப்பவர்) 6. க்ஷயணர் (வாஸயோக்யமான பிரதேசத்தில் இருப்பவர் 7. கபர்த்தீ (ஜடையுடையவர்) 8. புலஸ்தீ (அன்பர்களுள எப்பொழுதும் அவர் முன் நிற்பவர்) 9. கோஷ்ட்யர் (பசுக் கொட்டில்களில் வஸிப்பவர்) 10. க்ருஹ்யர் (வீடுகளில் வஸிப்பவர்) 11. தல்ப்யர் (படுக்கையை வாஸஸ் தலமாயுடையவர்) 12. கேஹ்யர் (அரண்மனையில் வஸிப்பவர்) 13. காட்யர் (முட்கள் நிறைந்த காட்டில் வஸிப்பவர்) 14. கஹ்வரேஷ்டர் (மலைக்குகைகளில் வஸிப்பவர்) 15. ஹ்ருதய்யர் (மடுவில் வஸிப்பவர்) 16. நிவேஷ்ப்யர் (பனிஜலத்தில் வஸிப்பவர்) 17. பாம்ஸவ்யர் (பரமாணுக்களில் வஸிப்பவர்) 18. ரஜஸ்யர் (தூ (சி) ளிகளில் இருப்பவர்) 19. சுஷ்க்யர் (உலர்ந்த விறகில் வஸிப்பவர்) 20. ஹரித்யர் (ஈர விறகிலுள்ளவர்) 21. லோப்யர் (புல்முளையாத கட்டாந்தரையில் வஸிப்பவர்) 22. உலப்யர் (அற்பமான புற்களில் இருப்பவர் 23. ஊர்வ்யர் பூமியில் இருப்பவர் 24. ஸூர்ம்யர் (பெரிய அலைகளோடுகூடிய நதியில் வஸிப்பவர்) 25. பர்ண்யர் (இலைகளில் வஸிப்பவர்) 26. பர்ணசத்யர் (சருகுகளில் இருப்பவர்) 27. அபகுரமாணர் (ஆயுதங்களைக் கையில் ஏந்தியவர்) 28. அபிக்னர் (சத்ருக்களை யெதிர்த்து அடிப்பவர்) 29. ஆக்கிதத்து (கொஞ்சமாய்க் கஷ்டப்படுத்துபவர்) 30. ப்ரக்கிதத்து (அதிகமாய்த் துன்பப்படுத்துபவர்) 31. கிரிகர்கள் (தமது பக்தர் களுக்குப்ப பணத்தை வாரி இறைப்பவர்கள்) 32. தேவஹ்ருதயர் (தேவதைகளுக்குப் பிரியமான வர்கள்) ஆகிய இம்முப்பத்திரண்டு ருத்திரர்களும் பதினைந் தாவதாகும். முப்பத்திரண்டு தள கமலத்தில் விளங்குகின்றவராவர்.

பதினாறாவது ஆவரணம் பூபுரம் (நான்கு துவாரங்களோடு கூடிய நாற்சதுரம்)

1. கிழக்கு வாயிலில் விக்ஷீணகர் (நாசமின்றிய வர்) 2. விசின்வத்கர் (ஜீவர்களின் தர்மா தெற்கு வாயிலில் தர்மங்களைப் பரிசித்துணர்கவர்) 3. மேற்கு வாயி லில் ஆநிர்ஹதர் (பாவந் தொலைப்பவர்) 4. வடக்கு வாயிலில் ஆமீவத்கர்கள் (எங்கும் விஜ்ரும்பித் துள்ளவர்)

மேற்கூறிய பதினைந்து ஆவரணங்க ளிலுள்ள ருத்ரர்கள் யாவரும், மஹாருத்ரரை உபாஸித்துக் கொண்டு விளங்குகின்றனர். அந்த மஹாருத்ர ரோவெனின் ஸ்ரீலலிதா தேவியின் ஆக்ஞையை நிறைவேற்றிக் கொண்டு ஸர்வ ஜகத்தின் க்ஷேமத்திற்காக முத்துக்கோட்டையின் ஈசான கோணத்தில் இருக்கின் றவர். மஹாபலம் வாய்ந்தவரும், சதருத்ரீயரென்று கணிக்கப் பட்டவருமான மேற்கூறிய ருத்ரர்கள் இரவும் பகலும் ஸ்ரீதேவியின் பக்தர்களைக் காக்கின்றனர். லலிதாதேவியினிடத்தில் பக்தியற்றவர்களுக்குப் பலவகையான இடையூறுகளையுண்டாக்குகின்றனர். இங்ஙனம் உருத்திரர்களும் அஷ்ட திக்பாலர்களும் முத்துக் கோட்டையில் வசித்துக்கொண்டும் ஸ்ரீலலிதா பரமேச்வரியை இடையறாது ஸேவித்துக்கொண்டும் வாழ்ந்து வருகின்றனர்

உருத்திர நியாசம்

முன்பகுதியில் சாக்த தந்திரங்களில் ஒன்றான லலிதோபாக்யானம் கூறும் உருத்திர வழிபாட்டினைக் கண்டோம்.

மேலும் தேவியை வழிபாடு செய்பவர்கள் பூஜையின் ஆரம்பத்தில் நியாசம் செய்து கொள்ளுகையில் உருத்திர நியாசத்தையும் மேற்கொள் கின்றனர். நியாசம் என்பதற்கு வைப்பது என்பது பொருள். பூஜைக்குரியதாக இந்த உடலை ஆக்கும் பொருட்டு உடலில் பல வேறு தேவதைகளை எழுந்தருளச் செய்வதே நியாசம் எனப்படும்.

சாக்தர்கள் தேவியின் பூஜையைத் தொடங்குவதற்கு முன்பாக .இவ்வகையில் ஐம்பத்தோரு உருத்திரர்களையும் அவர்களுடைய தேவியரான உருத்திராணிகளையும் தமது உடலில் எழுந்தருளச் செய்து கொள்கின்றனர். இந்த உருத்திராணியோடு கூடிய உருத்திரர்கள் இந்த உடலினில் எழுந்தருளி அதனை தெய்வீகமாக்கு கின்றனர் என்பது கருத்தாகும். இந்த வகை நியாசம் ஸ்ரீ கண்டநியாசம் எனப்படும்.

இனி இந்த ஐம்பத்தோரு உருத்திர - உருத்திராணிகளின் பெயர்களைக் காணலாம்.

1. ஸ்ரீகண்டர்-பூர்ணோதரி (தலை)
2. அநந்தர்-வீரசேனி (முகம்)
3. சூக்ஷ்மர் - சால்மாலி (வலது கண்)
4. திரிமூர்த்தி-லோலாக்ஷி (இடது கண்)
5. அமரேசர்-வர்தூளாக்ஷி (வலது காது)
6. அரபீஜர்-தீர்க்க நாசிகை (இடது காது)
7. பாரபூதி-தீர்க்கமுகி (வலது மூக்கு)
8. திதீசர்-தீர்க்க சிம்சு (இடது மூக்கு)
9. தாணுகர்-குண்டோதரி (வலது கன்னம்)
10. அரசேங்கிடேசர்-அர்த்தகேசி (இடது கன்னம்)
11. பௌரீகர்-விகிர்தமுகி (மேல் உதடு)
12. சத்யோ ஜாதர்-ஜ்வாலாமுகி (கீழ் உதடு)
13. அனுக்கிரகர்-உலூகமுகி (மேல் பல்வரிசை)
14. ஈசுவரர்-ஸ்ரீமுகி (கீழ் பல்வரிசை)
15. அக்ரூரர்-வித்யாமுகி (நுனி நாக்கு)
16. மகாசேனர்-சரஸ்வதி (தொண்டை)
17. குரோதசர்-மகாகாளி (வலத்தோள்)
18. சண்டேசர்-சர்வசித்தி (வலது முழங்கை)
19. பஞ்சாந்தகர்-சமன்மிதி (வலது மணிக்கட்டு)
20. சிவோத்தமர்-கௌரி (வலது கைவிரல் அடிப்பகுதி)
21. ஏகருத்ரர்-திரிலோக்யை (வலது கைவிரல் நுனி)
22. கூர்மர்-வித்யை (இடது தோள்)
23. ஏகநேத்திரர்-மந்தாசக்தி (இடது முழங்கை)
24. சதுரானனர்-ஆன்மசக்தி (இடது மணிக்கட்டு)
25. அஜேகர்-பூதமா (இடது கைவிரல் அடிப்பகுதி)
26. சரு-தேவாம்போதி (இடது கைவிரல்)
27. சோமேச்சுவரர்-தராவிணி (வலது தொடை இடுக்கு)
28. லாங்குலி-நாகரீகேசரி (வலது முழங்கால்)
29. தாருகர்-மஞ்சரூபிணி (வலது கணுக்கால்)
30. அர்த்தநாரீசர்-விரை (வலது கால்விரல் அடிப்பகுதி)
31. உமாகாந்தர்-சேகாரோதரி (வலதுகால் விரல் நுனி)
32. ஆஷாடி-பூதாதனி (இடது தொடை இடுக்கு)
33. டிண்டி-பத்ரகாளி (இடது முழங்கால்)
34. அத்ரி-யோகினி (இடது கணுக்கால்)
35. மீனர்-சங்கினி (இடது உள்ளங்கால்)
36. மேஷர்-கர்சினி (இது கால்விரல் நுனி)
37. லோகிதர்-காளராத்ரி (வலது விலா)
38. சகிஸ்தர்-மூர்த்தன்யக பர்த்தினி (இடது விலா)
39. கலண்டர்-வாசன்மையை (முதுகு)
40. ததுவிலண்டர்-சமை (தொப்புள்)
41. மகாகாளர்-சுமுகை (வயிறு)
42. வாலி-ஐஸ்வர்யை (இதயம்)
43. புஜங்கேசர்-ரேவதி (மார்பு)
44. பினாகேசர்-மாதவி (வலத்தோள்)
45. கஷ்டசர்-வாருணி (மென்னி)
46. பகர்-ரக்ஷோவதாரணி (இடத்தோள்)
47. சுவேதர்-சதானசலக்ஷ்மி (இதயம் முதல் வலது கை நுனி வரையிலுமாக)
48. ப்ருகி-பினாகி (இதயத்திலிருந்து இடது கை விரல் நுனி வரையிலுமாக)
49. லகுளி-வியாபினி (இதயத்திலிருந்து இடது கை விரல் நுனி வரையிலுமாக)
50. சிவர்-மாயாகனி (இதயம் முதல் இடது கால் நுனி வரையிலுமாக)
51. சம்வர்த்தர்-விதை (இதயம் முதல் தலைவரையிலாக).

உருத்திர வீணை

சிவபெருமான் தட்சணாமூர்த்தியாகவும், கங்காளமூர்த்தியாகவும், பிட்சாடணமூர்த்தியாகவும் எழுந்தருளும்போது சில சமயங்களில் வீணையை வாசித்து மகிழ்கின்றார். இத்தகைய கோலத்தைப் பல ஆலயங்களில் காணலாம். இவர் ஏந்தியுள்ள இந்த வீணைக்கு உருத்திர வீணை என்பது பெயராகும்.

இந்த வீணை சிவபெருமானுக்கு அமைந்த கதையை சிவரகசியம் என்ற நூல் சிறப்பாக கூறுகின்றது. ஒரு' சமயம் கந்தர்வ அரசர்கள் ஒரு முனிவரின் அருளுரையால் சிவவழிபாடே உயர்ந்தது என்று அறிந்தனர். அதன்படி ஒரு பெரிய சிவாலயத்தை அமைத்து சிவபெருமானை அதில் அன்புடன் பூசித்து மகிழ்ந்தனர். அவர்களுடைய அன்பான பூசையை கண்டு மகிழ்ந்த பெருமான் அவர்களுக்கு காட்சியளித்து அவர்களிடம் வேண்டிய வரத்தைக் கேளுங்கள் என்று கூறினார். அவர்கள் யாவரும் நாங்கள் ஒரு வீணையாகி உங்களுடைய கரத்தில்'திகழவேண்டும். நீங்கள் எங்களை மீட்டி இசைபாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதன்படியே அவர்கள் அனைவரையும் சேர்த்து ஓர் அழகிய வீணையாக மாற்றி அதனை வாசித்துத் தான் மகிழ்ந்ததுடன் உலக உயிர்களையும் மகிழ்வித்தார். அதைக் கேட்டு பார்வதிதேவியார் மனம்மகிழ்ந்து அவர்களை வீணையாகவே இருந்து மகிழும்படி அருள்பாலித்தார். இந்த வீணையே உருத்திர வீணை என்று பலராலும் போற்றப்படுகின்றது. இது ஸ்ரீகைலாசத்தில் உயர்ந்து பீடத்தில் வைத்துப் கணங்களால் பூசித்துப் போற்றப்படுகின்றது என்பர்.

காசி நகரும் ஏகாதச உருத்திர வழிபாடும்

காசி நகரமே உருத்திரனின் வடிவமாகும். இதற்கு மகாமயானம் என்பது பெயர். இங்கு உருத்திரர்கள் நீங்காது வாசம்புரிவதால் உருத்திரவாசம் என்பதும் இதற்குப் பெயராயிற்று. இங்கு ஏகாதச உருத்திரர்கள் வழிபட்ட லிங்கங்கள் பதினொன்று உள்ளன. இவை உருத்திரர்களின் பெயரால் அழைக்கப்படாமல் பின்னாளில் அவற்றை வழிபட்டவர்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. இனி அந்தப் பதினோரு லிங்கங்களையும் அவை எழுந்தருளியுள்ள இடங்களையும் காணலாம். இவற்றை முறைப்பாகச் சென்று வணங்குவது ஏகாதசருத்திர யாத்திரை எனப்படும்.

1. **அக்னீந்ரேஸ்வரர்** - இவர் இஸர கங்கையில் ஜாகேசுவரர் எனும் பெயரில் வழங்கப் படுகின்றார்.
2. **ஊர்வசீஸ்வரர்** - கோலாபாக் -ஔசான கஞ்சில் இவருடைய ஆலயம் உள்ளது.
3. **நகுலீசுவரர்** - விசுவநாதர் கோயிலுக்கு அருகில் உள்ள அட்சய வடத்திற்குக் கீழே இவர் எழுந்தருளியுள்ளார்.
4. **ஆஷாடீசுவரர்** - இவர் காசீபுராவில் ராஜபேந்தியா வளைவுக்குள் பெரிய கோயிலுக்குப் பின்புறம் உள்ளார்.
5. **பாரபூதேஸ்வரர்** - ராஜாதர்வாஜா, கோவிந்த புராவில் சிவகுமார் சாஸ்த்திரிஜியின் வீட்டிற் குப் பக்கத்தில் இந்த ஆலயம் உள்ளது.
6. **லாங்கலீசுவரர்** - கோவா பஜாரில் பஞ்ச பாண்டவருக்கு முன்பாக உள்ளார்.
7. **திரிபுராந்தகேஸ்வரர்** - இவருடைய ஆலயம்' சிகாரா டீலாவில் உள்ளது.
8. **மனப்பிரகாமேசுவரர்** - இவர் சாட்சி விநாயகர் கோவிலுக்கு அருகில் மிகச் சிறப்புடன் பெரிய ஆலயத்தில் வீற்றிருக் கின்றார்.
9. **ப்ரீதிகேஸ்வரர்** - இவர் காளிகா கல்லிக்குச் சற்று முன்னால் உள்ளார்.
10. **மதாலேசுவரர்** - இவர் காளிகா கல்லிக்கு சற்று முன்னால் உள்ளார்.
11. **திலதர்ப்பனேசுவரர்** - இவர் துர்கா குண்டத் திற்கு அருகில் எழுந்தருளியுள்ளார்.

சிலர் ஏகாதசி தினத்தில் இந்த உருத்திரர்களைச் சென்று வணங்குகின்றனர். ஆனால் காசிக்கண்டத்தில் இத்தகைய ஏகாதசி வழிபாட்டினைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை.

★ ஒரு மரத்தின் வேரில் நீர் ஊற்றினால் கிளைகள் செழிப்பதுபோல ஸ்ரீருத்திர ஜெபத்தால் எல்லா தேவதைகளும் திருப்தி அடைகின்றனர். - ஸயித ஸம்ஹிதை.

சிறப்புமிக்க உருத்திரர் சந்நிதிகள்

உலகெங்கிலும் பரந்திருந்து உருத்திரர்கள் உலகினைக் காத்து நிற்பதாகக் கருதப்பட்டாலும். அவர்களை வேதங்கள் ஸ்ரீருத்திரம் எனும் பகுதிகளால் சிறப்புடன் போற்றினாலும் அவர்களுக்கென தனியே கோயில்கள் அமைக்கும் வழக்கம் இல்லை. அவர்களால் வழிபடப்பட்ட லிங்கங்களுக்கு மட்டுமே ஆலயங்கள் அமைந்துள்ளதைக் காண்கிறோம். அபூர்வமாக சிலதலங்களில் மட்டுமே உருத்திரர்களுக்குச் சிவாலயங்களில் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளதைக் காணகிறோம். அவற்றில் திருமாணிக்குழி, வாமனபுரீசுவரர் ஆலயம் குடந்தைக் கீழ்க்கோட்டம் எனப்படும். கும்பகோணம் நாகேசுவரஸ்வாமி ஆலயம் ஆகியன குறிப்பிடத் தக்கதாகும். இனி அவற்றைத் தொடர்ந்து காணலாம்.

திருமாணிக்குழி பீமருத்திரர்

உருத்திரகணத்தினர் சிறப்புடன் வழிபாடு செய்த திருத்தலங்களில் ஒன்று திருமாணிக் குழியாகும். இங்கு ஏகாதச ருத்திரர்களில் ஒருவரான பீமசங்கரர் இன்றளவும் சிறப்புடன் வழிப்படப்படுகின்றார்.

இந்த திருத்தலம் தென்னாற்காடு மாவட்டத் தின் தலைநகரான கடலூருக்கு அருகில் கெடிலம் ஆற்றின் தென்கரையில் இனிய பசிய சோலைகள் சூழச் சிறப்புடன் விளங்குகின்றது. இங்குள்ள ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் வாமன புரீசுவரர் என்று அழைக்கப் படுகின்றார். கல்வெட்டுகள் இவரை உதவிநாயகர் என்றே குறிக்கின்றன. அம்பிகையின் ஆலயம் தனியே அமைந்துள்ளது. இவள் கல்வெட்டுகளில் உதவி நாயகி என்றும், இந்நாளில் அம்புஜாட்சி (தாமரைக் கண்ணி) என்றும் அழைக்கப் படுகின்றாள்.

இங்கு கருவறையின் முன்புறம் அமைந்த உள்மண்டபத்தில் ஒரு திரைச்சீலை அமைந் துள்ளது. இது ஏறத்தாழ எட்டடி உயரமும் ஐந்தடி அகலமும் கொண்டதாக நீல வண்ணத்தில் அமைந்ததாகும். இந்தத் திரையில் பீமசங்கரரின் உருவம் சிவப்பு வண்ணத் துணிகள், பட்டுநூல் ஜமிக்கிகள், வண்ணவண்ணத்துணிகள், மணிகள், ஆகியவற்றால் வனப்புடன் அமைக்கப்பட்டுள் ளது. இதில் ஏறத்தாழ நான்கடி உயரம் கொண்ட பீமசங்கரர் சிவப்புவண்ணம் கொண்டவராக எட்டு கரங்களுடன் அவற்றில் கத்தி, கேடயம், மணி, மழு, வில், அம்பு, உலக்கை ஆகியவற்றை ஏந்தி யவராகக் காட்சியளிக்கின்றார். இடையில் புலித்தோலாடை, தோளில் பாம்பு மாலை, மணி மாலை காலில் வீரக்கழல்கள், மார்பில் பதக்கங்கள். தலையில் ஜ்வாலாமுடி ஆகியன நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக தேர்ச்சீலை களில் உருவங்களை அமைப்பது போலவே இந்தத் திரையும் அதில் உருத்திரர் வடிவமும் சிறப்பான கலைநுணுக்கத்துடன் அமைக்கப் பட்டுள்ளன.

இக்கோயிலில் நான்கு கால பூஜை நிகழ்கின்றது. பூசைகள் யாவும் திரையில் அமைந்திருக்கும் இந்த உருத்திரமூர்த்திக்கே செய்யப்படுகின்றன. பூசையின் இறுதியில் தீபாராதனை செய்ததும் இந்தத் திரையை விலக்கி கருவறையில் விளங்கும் சிவலிங்கமூர்த்திக்குத் தீபாராதனை செய்கின்றனர். திருமால் வாமன அவதாரம் செய்து மகாசிவபக்தனான மகா பலியைப் பாதாளத்திற்கு அழுத்தியபாவம் தீர இங்கு லிங்கம் அமைத்து ஏகாந்தமாக பூஜை செய்கிறார் என்றும் அதற்கு இடையூறு ஏற்படா வண்ணம் பீமருத்திரர் காவலராக எழுந்தருளி யுள்ளார் என்றும் கூறுவர்.

இங்கு இறைவனும் இறைவியும் ஏகாந்த மாக இருக்கின்றார்கள் என்றும் அவர்களுக்கு பீமசங்கரர் காவலராக இருப்பதுடன் அவர்கள் சார்பாக அன்பர்கள் செய்யும் பூசையை ஏற்றுக் கொண்டு அருள்பாலிக்கின்றார் என்றும் கூறுவர்.

இதுபோன்று ருத்திரமூர்த்தியின் வழிபாடு சிறப்பாகவும் அதுவும் திரையில் எழுதி வழிபடு வதும் வேறெங்கும் காணக்கிடைக்காததாகும்.

குடந்தை பிரளயகால ருத்திரர்

பிரளயகாலம் என்பது கடல்கள் பொங்கி நீரால் இந்த உலகம் அழிக்கப் பெற்று எங்கும் தண்ணீர்க்காடாக விளங்கும் காலமாகும். இக்காலத்தில் பெருமான் காலாக்கினி ருத்திரராக எழுந்தருளி நீர் உள்ளிட்ட அனைத்தையும்



குடந்தை பிரளயகால ருத்திரர்
நன்றி : தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை

உடலில் ஒடுக்கிக்கொள்வார். அந்நிலையில் அவர் மட்டுமே இருப்பார். அவருடன் அவர் அருள் பெற்ற தருமதேவதை மட்டுமே எஞ்சி நின்று இடபவடிவம் கொண்டு அவரைத் தாங்கிநிற்கும் என்பது புராணங்களின் கூற்றாகும்.

இவ்வாறு ஒரு சமயம் யுகம் முடிந்து பிரளயம் உண்டானபோது மீண்டும் உலகினைப் படைக்க இறைவன் தேர்ந்தெடுத்த தலம் திருக்குடந்தையாகும். இதன் விரிவான வரலாற்றை நாம் அமுதீசர் எனும் மலரில் விரிவாகக் காண இருப்பதால் இப்போதைக்கு அதை விடுத்து யுகப்பிரளயத்தின் தேவதையாக விளங்கும் பிரளயகால மூர்த்திக்கு குடந்தையில் அமைக்கப் பட்டிருக்கும் திருக்கோயிலைக் காணலாம்.

பிரளயகாலருத்திரர் எண்ணிலாத முகங்களும், எண்ணிலாத கால்களும், கரங்களும் உடையவர் அவருடைய திருவடிவை மனிதரால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. எனவே அவருடைய திருவடிவை அமைக்கும் வழக்கம் இல்லை. அவருடைய பாதம் அமைந்த பீடத்தை மட்டுமே அமைத்து வழிபடுவது வழக்கமாகும்.

பொதுவாகவே உருத்திரர்களுக்கு வடிவம் அமைக்கப்படுவதில்லை. அவர்களைச் சிவலிங்க வடிவமாகவோ, பலிபீடங்களின் வடிவமாகவோ, அமைத்தே வழிபடப்படுகின்றனர்.

குடந்தையிலும் பிரளயகால ருத்திரர் ஆதிநாளில் பலிபீட உரு விலேயே வணங்கப் பெற்றார் என்று கருதுகின்றனர். ஆனால் பின்னால் வந்தவர்கள் அங்கு பிரளயகால உருத்திரரின் உருவத்தை அமைக்க எண்ணினர். ஆனால் அத்திருஉரு அமையவேண்டிய முறைகளை நூல்கள் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறவில்லை என்பதால், சிவவடிவங்கள் அறுபத்து நான்கில் பிரளயகாலத்தோடு தொடர் புடைய கங்காள மூர்த்தியை அங்கு நிறுவியுள்ளனர் என்பர்.

கங்காளமூர்த்தியின் வடிவோடு இணைந்த குண்டோதரன், ரிஷிபத் தினிகள் முதலிய வடிவங்கள் யாவும் செய்யப்பட்டு இச்சந்நிதியின் உள்ளே ஒரு ஓரமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மூர்த்தி நான்கு கரங்கள் கொண்டவர் ஒரு கரத்தால் மானுக்கு புல் அளிக்கின்றார். இரண்டு கரங்கள் துடியை முழக்கு கின்றன. நீண்ட கத்தியைப் போன்ற எலும்புத்துண்டை தோளில் வைத்து ஒரு கரத்தால் தாங்கியுள்ளார்.

வடக்கு நோக்கியிருக்கும் இவரை உலகம் ஒடுங்கியபின் எஞ்சி நிற்கும் தர்மதேவதை பெண்வடிவில் இடப்புறம் நின்று வணங்கியவாறு கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளாள். (இங்கு இவளை இந்திரயக்ஷி என்று குறித்துள்ளனர்.

கும்பகோணத்தில் உள்ள நாகநாத சுவாமி ஆலயத்தின் முதற் பிராகாரத்தில் தென்பகுதியில் வடக்குநோக்கியவாறு இந்தச் சந்நிதி தனிச்சிறப்புடன் அமைந்துள்ளது.



திருவெண்காட்டு "அகோரருத்திரர்"

வால்மீகி ராமாயணத்தில் சிவசம்பந்தமாக குறிப்பிடப் பட்டுள்ள ஒரே திருத்தலம் திருவெண்காடு ஆகும். இராமர், கரன் என்பவனோடு போர்புரிந்து அவனைக் கொல்லுவதைச் சொல்லும் வர்ணனையில் சுவேதவனத்தில் ருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்தது போல இராமபிரானுடைய சராக்கினியால் கரன் அழித்தான் என்ற குறிப்பு வருகின்றது.

இத்தகைய தனிச்சிறப்புடன் வால்மீகி குறிப்பிடும் உருத்திர மூர்த்தியே இந்நாளில் அகோரமூர்த்தி என்ற பெயரில் திருவெண்காட்டில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றார்.

இவருக்கு உருத்திராபிஷேகம் செய்வது சிறப்பைத் தருவதாகும். இதனையொட்டி பெருந் திருவிழாவில் பெரிய அளவில் உருத்திர பாராயணமும் அபிஷேகமும் செய்யப்படுகின்றன.

இவர் மாசிமாதப்பூரத்திருவிழாவில் உலாக்காணும்போது வழிநெடுக ஆயிரக்கணக்கான பாட்டில் பன்னீர் கொண்டு இவருக்கு அபிஷேகம் செய்கின்றனர்.

திருவண்ணாமலை காலக்னி உருத்திரர்



திருவண்ணாமலை அகோர ருத்திர மூர்த்தி
Photo Courtesy By : INSTITUT FRANCAIS, D'INDOLOGIE, Pondicherry.

திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் கிளி கோபுரத்தின் உட்புறம் தென்கிழக்கில் பிரம்ம தீர்த்தத்தின் கரையில் மேற்குநோக்கியவாறு ஒரு சந்நிதியுள்ளது. இது காலாக்னி உருத்திரருக்கு அமைக்கப்பட்ட கோயிலாகும் இது இந்நாளில் பைரவர் கோயில் என்றே வழங்கப்படுகின்றது. (இவர் பைரவருக்கு உரிய தோற்றத்தில் இல்லை என்பதும் இவருடைய வடிவம் ஏறத்தாழ திருவெண்காட்டு அகோர மூர்த்தியை ஒத்ததாகவும் இருப்பது எண்ணத் தக்கதாகும்). திருவண்ணாமலை அண்ணாமலைப் பெருமான் ஒப்பரிய நெருப்பு மலையாக அக்னி ருத்திரராக நின்றதை நினைவூட்டும் வகையில் இச்சந்நிதி அமைக்கப் பட்டுள்ளதென்பர். இது அக்கினி மூலையில் அமைக்கப்பட்டிருப்பதும் உணரத்தக்கதாகும்.

இவர் கரத்தில் கிளி ஒன்று திகழ்கிறது. கிளிகள் சோலைகளின் குறியீடாகும். உருத்திரர்கள் சோலையில் வசிப்பவர்கள் என்பதை முன்பே கண்டோம் அல்லவா?

எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த உருத்திரர் வழிபாடு

இந்திய மரபில் தெய்வங்களைக் கூட்ட மாக வைத்து வழிபடும் மரபு நெடுங் காலமாகப் போற்றப்பட்டு வருகிறது. இவ்வகையில், இரட்டை விநாயகர், மும்மூர்த்திகள், பஞ்ச லிங்கங்கள், ஏழுமாதர், ஏழுகன்னியர், அஷ்ட லட்சுமிகள், நவக்கிரகங்கள், தசாவதாரங்கள், ஏகாதச (பதினோரு) ருத்திரர்கள், பன்னிரு ஆதித்யர்கள், பதினாறு லட்சுமிகள், பதினெட்டு சித்தர்கள் என்று பல தொகுதிகளாகத் தெய்வங்கள் வழிபடப்படுகின்றதைக் காண்கிறோம்.

பொதுவாக உருத்திரர்கள் பதினொருவர் என்று கூறி ஒரு தொகுப்பாக வைத்து வணங்கப் பட்டாலும் புராணங்களில் ஏகருத்திரர், மகாருத்திரர், அஷ்டருத்திரர், ஏகாதசருத்திரர், சதருத்திரர் (நூறுருத்திரர்) நூற்றுப் பதினெட்டு உருத்திரர், சகஸ்ரருத்திரர் (ஆயிரருத்திரர்), நூறுநூறாயிர உருத்திரர் (கோடி ருத்திரர்) என்று பல வேறு வகையான உருத்திரக் கூட்டங்களைக் காண முடிகிறது. இனி இவர்களைப் பற்றிய சுருக்கமான செய்திகளைக் காணலாம்.

ஏகருத்திரர், பிரளகாலருத்திரர்

யுகங்களின் முடிவில் கடல் பொங்கி வானம் கிழிந்து உலகம் யாவும் அழிந்து எங்கும் அமைதி நிலவும். அந்த அமைதியான இருண்ட பரப்பில் மகாருத்திரர் எல்லாவற்றையும் சங்காரம் செய்து வீற்றிருப்பார். அவர் பிரமன், திருமால் முதலான தேவர்களின் உடலை எரித்து அவருடைய எலும்புகளையும் சாம்பலையும் ஒரு பையில் இட்டு அதனைத் தோளில் தாங்கி நிற்பார். எலும்புகளாகிய கங்காளங்களைத் தாங்கி நிற்பதால் இவரைக் கங்காளர் என அழைப்பர். இவர் தான் ஏந்தியுள்ள சாம்பல், எலும்புகளில் இருந்தே மீண்டும் பிரம்மா, விஷ்ணு முதலியோரைப் படைத்து அவர்கள் மூலமாக இந்த உலகினைத் தோற்றுவிப்பார்.

முதலில் சங்காரம் செய்த சங்காரகால மகா ருத்திரராலேயே சிறிது இடைவெளிக்குப் பிறகு உலகம் படைக்கப்படுதலைக் குறிக்க மானுக்கு அவர் புல் அளிப்பது போலவும் பூதகணத்தை வழிநடத்து பவராகவும் துடியை முழக்குபவராகவும் காட்டப்படுகின்றார். துடி முழக்குதல் என்பது உலக உற்பத்தியைக் குறிப்பதாகும். சிந்தாந்த சாத்திரம் **"தோற்றம் துடி அதனில்"** என்று குறிப்பிடுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

குடந்தை நாகேசுவரசுவாமி கோயிலில் பிரளய கால உருத்திரர் என்ற பெயரில் கங்காள மூர்த்தி எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

பிரளயகால ருத்திரரை, காலாக்னி ருத்திரர் எனவும் அழைப்பர். இவர் யுகசங்கார காலத்தில் யாவும் அழிய இவர் மட்டுமே தனித்திருப்பதால் இவர் ஏகருத்திரர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

அஷ்டருத்திரர்

இவர்கள் உலகின் மூலப்பொருளான பஞ்சபூதங்கள் சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எண் பொருளிலும் வீற்றிருந்து மகாருத்திரரின் ஆணையையேற்று வழிநடத்துபவர்களாவர். அஷ்டதிசை பாலகர்களின் ஆன்மாவில் வீற்றிருந்து அவர்களை வழிநடத்துபவர்களும் இவர்களே. இவர்களின் பெயர் முறையே **பவன், சர்வன், ஈசானன், பசுபதி, உருத்திரன், உக்ரன், பீமன், மகாதேவன்** என்பதாகும்.

திருக்கடையூரில் சிவபெருமான் மார்கண் டேயருக்காக அஷ்ட ருத்திரர்களை ஏவி எமனை சங்கரித்தார் என்று கூறுவர். உருத்திரனின் அம்சமாகத் தோன்றிய மகாருத்திரர் சிவலிங்கத்தி லிருந்து வெளிப்பட்டு யமனை அழித்து மார்க்கண்டேயனைக் காத்தார் என்பர். திருக் கடையூரில் இந்த எட்டு உருத்திரர்களுக்கும் திருமேனிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை உட்பிராகாரமான திருமாளிகைப்பத்தி வரிசையில் வடக்கில் இரண்டும், கிழக்கில் இரண்டும், தெற்கில் மூன்றுமாக ஏழு உருத்திரர்களின் கற்சிலை உருவங்களும் காலசம்ஹாரராக விளங்கும் உலாத்திருமேனியையும் சேர்த்து எட்டாகும். இந்த ஏழு உருத்திர வடிவங்களையும் (இந்நாளில் அஷ்டவசுக்கள் என்று கருதி இங்கு வசுக்களின் பெயரையே மேலே எழுதியுள்ளனர் இக்கருத்து

ஆய்வுக் குரியதாகும்). ஆனால் திருக்கடவூர் பிராகாரத்தில் ஏழு திருவுருவங்களே உள்ளன என்பதும் அவைகள் சூலத்தையும், கத்தியையும், ஏந்தியிருப்பதும் அவர்களுடைய வடிவங்கள் காஞ்சீபுரம், தஞ்சாவூர் முதலிய இடங்களில் உள்ள உருத்திரர் வடிவங்களை ஒத்திருப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும். இதனை நோக்க திருக்கடவூரில் அஷ்டருத்திரவழிபாடு ஒரு காலத்தில் சிறப்பாக இருந்தது என்று கருதலாம்.

மேலும், திருக்கடவூரை ஒட்டி திருக் கடவூர் மயானம் என்ற திருத்தலம் அமைந் துள்ளது. உருத்திர வழிபாட்டினர் தமது வழிபாட்டிடத்தினை மயானம் என்றழைத்துக் கொண்டதும் இங்கு எண்ணதக்கதாகும்.

சிலர் அஷ்டபைரவர்களையே அஷ்ட ருத்திரர் என்று கொள்வர். மேலும் சிலர் ஸ்ரீகண்டர் முதலான அஷ்ட வித்யேசுவரர்களை அஷ்ட ருத்திரர் எனவும் கொள்கின்றனர்.

ஆனால் வேதங்களில் பவன், சர்வன், பசுபதி, ஈசானன், உருத்திரன், உக்ரன், பீமன் மகாதேவன் ஆகிய அஷ்டருத்திரர்களுக்கே வணக்கம் சொல்லப்படுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

ஏகாதசருத்திரர்

ஏகாதசம் என்றால் பதினொன்றாகும். பதினோரு ருத்திரர் பற்றிய செய்திகளை பக்கம் 323-ல் காண்க.

உருத்திரபேத ஆகமங்களும் முப்பத்தாறு உருத்திரர்களும்

சிவபெருமானால் அருளப்பெற்ற சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். இவை சிவபேதம் - உருத்திரபேதம் என்ற இரு பிரிவாக உள்ளன.

முதல்பிரிவான பத்து ஆகமங்களைக் கேட்டவர்கள் சிவர் எனப்பட்டனர். எனவே இவை சிவபேதம் எனப்படும். இரண்டாவது பிரிவான பதினெட்டு ஆகமங்களைக் கேட்ட வர்கள் உருத்திரர்கள் எனப்பட்டனர். ஆதலின் இது உருத்திரபேதம் என்றழைக்கப்படும். இந்த பதினெட்டு உருத்திரர்களும் பதினெட்டு ஆகமங்களைப் பரமேஸ்வரரிடம் இருந்து கேட்டு பதினெட்டு உருத்திரர்களுக்கு உபதேசித்தனர். இப்படி முதலில் கேட்ட உருத்திர பதினென்மரும் அவரிடம் கேட்ட பதினென்மரும் ஆக முப்பத்தாறு பேர்கள் ஆகமம் கேட்டவர்கள் ஆவர். இங்குள்ள பட்டியலில் ஆகமத்தின் பெயர் அதனைக் கேட்டவர் அவரிடம் உபதேசம் பெற்றவர் ஆகியோருடைய பெயர் களையும் காணலாம்.

1. விஜயம் - அநாதிருத்திரர் - பரமேசுவரர்
2. நிஸ்வாசம் - தசாரணர் - பார்வதி
3. சுவாயம்புவம் - நிதனேசர் - பதுமபூ
4. ஆக்னேயம் - வியோமர் - உதாசனர்
5. வீரம் - தேசர் - பிரஜாபதி
6. ரௌரம் - பிரமேசர் - நந்திகேசர்
7. மகுடம் - சிவர் - மகாதேவர்
8. விமலம் - சர்வான்மர் - வீரபத்திரர்
9. சந்திரஞானம் - அனந்தர் - பிரகஸ்பதி
10. முகபிம்பம் - பிரசாந்தர் - தத்சி
11. புரோத்கீதம் - சூலி - கவசர்
12. லளிதம் - ஆலயேசர் - லளிதர்
13. சிந்தம் - பிந்து - சண்டீசர்
14. சந்தானம் - சிவநிட்டர் - அம்சபாதர்
15. சர்வோக்தமம் - சோமதேவர் - நிருசிங்கர்
16. பாரமேசுவரம் - ஸ்ரீதேவி - உசனர்
17. கிரணம் - தேவஇருடி - சம்வர்த்தர்
18. வாதுளம் - சிவர் - மகாகாளர்

சதருத்திரர்

சதம் என்பதற்கு நூறு என்றும், எண்ணிலாதது என்றும் பல பொருள்கள் உள்ளன. எண்ணிலாது பரந்து எங்கும் நிறைந்திருக்கின்ற உருத்திரர்களைப் பற்றி போற்றி பாடப்பட்டதே ஸ்ரீருத்திரம் ஆகும்.

உலகினைப் பத்து திசைகளிலும் பரவி நிறைந்து காக்கும் நூறு உருத்திரர்களைப் பற்றிய செய்திகளையும் அவர்களின் பெயர் களையும் பக்கம் 326-ல் விரிவாகக் காணலாம்.

சகஸ்ர ருத்திரர்

ஆயிரம் உருத்திரர்களாக எங்கும் நிலை பெற்றிருக்கின்ற உருத்திரர்களே சகஸ்ர ருத்திரர் அல்லது உருத்திரர் ஆயிரவர் என்று சிறப்புடன் போற்றப்படுகின்றனர். இவர்கள் அமைத்து

வழிபட்டதே சகஸ்ரலிங்கமென்பர்.

கோடி ருத்திரர்

(நூறு நூறாயிர உருத்திரர்)

சிவபெருமானின் அருளினால் பிரமனின் சிதைந்த உடலில் இருந்து தோன்றிய பதினோரு உருத்திரர்கள் படைத்த கோடி உருத்திரர்களே உருத்திர கோடியர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் கூடிச் சிவபெருமானை வழிபட்ட இடமான திருக்கழுக்குன்றத்திற்கு உருத்திர கோடி என்பது ஒரு பெயராகும். அங்கு உருத்திரகோடி தீர்த்தமும் உருத்திரகோடி சிவாலயமும் இருக்கக் காண்கிறோம்.

மேலும் காஞ்சீபுரம், திருநெல்வேலி, திருவாரூர், காசி முதலிய பலத்தலங்களில் உருத்திர கோடீஸ்வரருக்கான தனி ஆலயங்களோ, தனிச் சந்நிதிகளோ இருக்கக் காண்கிறோம். சில ஆய்வாளர்கள் உருத்திரர் கோடியர் என்பது உருத்திரப் பல்கணத்தவர்களில் ஒரு கணமாக இருக்கலாம் என்றும் அவர்கள் அமைத்து வழிபட்டதே உருத்திரகோடிலிங்கம் என்றும் கருதுகின்றனர்.

உருத்திர பாதம்



சில தெய்வங்களுக்கும் குருபிரானுக்கும் திருவுருவங்களை அமைத்து வழிபடாமல் அவர்களுடைய பாதங்களை பீடத்தில் அமைத்து வழிபடுவது வழக்கமாகும். இவ்வகையில் உருத்திரரைக் குறித்து அமைக்கப் பெற்ற திருவடி பீடங்கள் உருத்திரபாதங்கள் என்றழைக் கப்படுகின்றன.

திருவண்ணாமலையில் பெருமான் நெருப்பு வடிவாக நின்றார். காலாக்கினி ருத்திரம்சமாக பெருமான் மலையாக நின்ற இடமே திருவண்ணாமலையாகும். இதை உணர்த்த மலையின் உச்சியிலும் சுற்றிலுமாக உருத்திர பாதங்கள் அமைத்து வழிபடப்படுகின்றன. மலை சுற்றும் பாதையில் சிறுமண்டபங்களில் அமைந் திருக்கும். இத்தகைய உருத்திர பாதங்களைக் காணலாம்.

இம்மலையின் தென்பகுதியில் காலாக்கினி உருத்திரரின் அம்சமாகத் தோன்றிய துருவாச முனிவருக்குச் சிறு ஆலயமும் அதற்கு முன்புறம் உருத்திரபாதம் இருப்பதைக் காணலாம்.

இந்நாளில் இவற்றை மக்கள் அண்ணா மலையார் பாதங்கள் என்று அழைக்கின்றனர்.

காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் (பெருமாள் கோயிலில் சடாரி வைப்பது போல) பக்தர்களின் தலைமீது உருத்திரபாதத்தை வைத்து ஆசி வழங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நான்கு வேதங்களும் மலையின் நான்கு சிகரங்களாக உள்ள திருக்கழுக்குன்றத்தில் பல இடங்களில் இத்தகைய உருத்திர பாதங்களைக் காணலாம். வேதங்களில் சொல்லப்படும் உருத்திரர்களின் வடிவமாக இங்கு இத்திருப் பாதங்கள் அமைந்துள்ளன என்பர்.

வடநாட்டில் உள்ள கயாவில் விஷ்ணுவின் பாதம் அமைந்துள்ளது. இங்கு மக்கள் தென்புலத் தார்களுக்கான பிண்டம் இடுகின்றனர். என்பதனை அனைவரும் அறிவோம். இதனைப்போலவே "உருத்திரபாதம்" திருவெண்காட்டில் சிறப்பாக உள்ளதைக் காண்கிறோம். இங்கும் நமது முன்னோர்களுக்குரிய பிண்டம் முதலியவற்றை செலுத்தலாம். அப்படி செலுத்துவதால் நமது முன்னோர்கள் உருத்திர வடிவம் பெற்றுச் சிவலோகம் அடைவர் என்பது நம்பிக்கையாகும்.

உருத்திராக்கினி வடிவம்

ஸ்ரீருத்திரர் அக்னியின் வடிவமாக இருப்பதாக புராணங்களும் வேதங்களும் கூறுகின்றன. கோடி கோடி யோசனை தூரமாகிய காலாக்னிருத்திர புவனம் என்ற இடம் உள்ளது. அங்கு இரண்டாயிரம் யோசனை அகலமுள்ள சிம்மாசனத்தின்மீது சிவந்து தழல் போன்ற ஜ்வலிக்கும் நிறமுடையதாய் வலது கரத்தில் வாளும், அம்பும் இடக்கரத்தில் வில்லும் கேடயமும் உடையவராய் உருத்திராக்கினி தேவர் எழுந்தருளியிருப்பார். அவர் உடலினின்றும் எழும்பும் தீச்சுடர் பத்து கோடி யோசனை தூரமும் அதன்மீது புகைமண்டலம் ஐந்து கோடி யோசனை தூரமும் பரவி நிற்கும்.

திருமயானங்களும் உருத்திரர்களும்

மயானம் என்பது இந்நாளில் சுடுகாடு அல்லது இடுகாட்டைக் குறிக்கின்றது. மயானத்தில் சிவபெருமான் உருத்திரமூர்த்தியாக வீற்றிருக் கின்றார் என்றும் அதில் ஆடி மகிழ்கின்றார் என்றும் புராணங்களும், தோத்திரப் பாடல்களும் குறிக்கின்றன. ஆனால் அதில் சொல்லப்படும் மயானம் வேறு, நடைமுறையில் ஊனுடம்பு தாங்கிய மானுடப்பிறவில் கழித்த உடலைச் சுடுதலோ இடுதலையோ செய்கின்ற மயானம் வேறு ஆகும்.

மயானம் என்பதற்கு உருமாற்றம், நிலை



ஸ்ரீருத்திரர் - உருத்திராணி காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயம்.
நன்றி : தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை.

மாற்றம், மேன்னிலை பெறுதல் என்பது பொருள். உலகம் ஓயாது உருமாறி வருகின்றது. நீர்ப்பரப்பு நிலமாகிறது. நிலத்தைக் கடல் கொள்கின்றது. காடுகள் நகரங்களாகின்றன. மைந்தரும் மகளிரும் விளையாடி மகிழ்ந்த நகரங்கள் பாழ்வெளியாகி விடு கின்றன. பாழான கள்ளி முளைத்த காடுகள்கூட கோபுர மாடங்கள் கொண்ட நகரமாகி விடுகின்றது. நல்லவன் தீயவனாகி விடுகின்றான். தீயவன் பரம பக்தனாகி விடுகின்றான். இப்படி எல்லையற்ற மாற்றம் உலகில் ஓயாது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த மாற்றம் நின்றுவிட்டால் உலகம் இயங்காது ஒழியும். இந்த நிகழ்வே மயானம் எனப்பட்டது. இந்த மாற்றங்களை நிகழ்த்தும் ஐந்தொழில் நடனத்தை பெருமான் நிகழ்த்துமிடம் மயானம் எனப்பட்டது. "மய" என்பதற்கு செய்தல் உருவாக்குதல் என்றும், "அயனம்" என்பதற்குத் தொடர்ந்து செல்லுதல் என்றும் பொருள் (மய+அயனம்) ஓயாது புதிய புதிய செயல்கள் நடைபெறும் இடமே மயானம் ஆகும். ஆனால் இதனை வட மொழிச்சொல்லான ஸ்மசானம் என்று எழுதி வேறு பொருள் தவறாகக் கொண்டுள்ளதை அறியமுடிகிறது.

உருத்திரசமயத்தவர் சிலரும், பாசுபதர்களும் தமது வழிபாட்டிடத்தை மயானம் என்று குறித்தனர். திருஒற்றியூரில் உள்ள ஒரு கல்வெட்டு மயானமும் மடமும் உடைய சதுரானன பண்டிதரைக் குறிப்பது இங்கு எண்ணத் தக்கதாகும். பெருத்த அளவில் இல்லாவிட்டாலும் மயானம் என்ற பெயரில் தமிழகமெங்கும் பல கோயில்கள் இருந்ததைக் கல்வெட்டு களால் அறியமுடிகிறது. சிவத்தலங் களில் ஐந்து மயானங்கள் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன. இவை கச்சி மயானம், திருக்கடவூர்மயானம்,

வீழிமயானம், காழிமயானம், நாலூர்மயானம் என்பனவாகும். இவற்றுள் சிலவற்றை இனிக் காணலாம்.

காஞ்சீபுரத்துக் கச்சிமயானம்

காஞ்சீபுரத்தில் உருத்திரர்கள் வழிபாடு சிறப்புடன் இருந்ததை இதே மலரில் வெளியாகி யுள்ள மற்றோர் கட்டுரையால் அறியலாம். இப்பகுதியில் கச்சிமயானம் தொடர்பான செய்திகளைக் காணலாம். காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் கொடி மரத்திற்கு அருகில் மேற்கு நோக்கியவாறு திருக்கச்சிமயானம் எனும் சிற்றாலயம் அமைந்துள்ளது. இங்கு மயானருத்திரர் உருத்தி ராணியோடு வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார் என்பர்.

பல்லவர்காலத்தில் கருவறையில் சிவலிங்கத் திற்குப் பின்னணியில் சோமாஸ்கந்தரை அமைக்கும் வழக்கம் இருந்ததை அறிவோம். அதனையொட்டி பல்லவர்காலத்தில் சிறப்பு பெற்றிருந்த திருக்கச்சி மயானத்தின் கருவறையில் உருத்திராணியுடன் கூடிய உருத்திரர் வீற்றிருக்கும் வகையில் திருமேனி அமைக்கப்பட்டிருந்தது. இதில் இருவரும் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றனர் உருத்திரருக்கு நான்கு கரங்கள் அமைந்துள்ளன. மேல்கரங்களில் கட்டங்கத்தையும் சூலத்தையும் கீழ்க்கரங்களில் கத்தியையும் பானபாத்திரத்தையும் ஏந்தியுள்ளார் இவருடைய அருகில் அமர்ந்துள்ள தேவியின் வடிவமும் குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக ஆண்வடிவங்களோடு அமைக்கப்படும் பெண் தெய்வங்களுக்கு இரண்டுகைகளே அமையும். ஆனால், இங்கு உருத்திராணிக்கும் நான்குகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவள் மேற்கரங்களில் கட்டங்கம் ஏந்தியுள்ளாள். கீழ்க்கரங்களில் கத்தியையும் பானபாத்திரத்தையும் தாங்கியுள்ளாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னாளில், இங்கு திருப்பணி செய்தவர்கள் அந்த சிற்பம் பின்னம் அடைந்து விட்டதால் அதனை இடம் பெயர்த்தெடுத்துக் குளத்திற்கு மேற்கில் உள்ள ஒரு சந்நிதி சுவரில் நிலைப்படுத்தி யுள்ளனர். அதனையே முன்பக்கத்தில் உள்ள படத்தில் காண்கிறோம்.

திருக்கடவூர் மயானம்

சிவபெருமான் திருக்கடவூரில் சிவலிங்க மூர்த்தியினின்று மகாருத்திரராக வெளிப்பட்டு மார்க்கண்டேயருக்காக எமனை அழித்தார் என்பதையும், இங்கு அஷ்டருத்திரர்களுக்கு திருஉருவங்கள் உள்ளன என்பதையும் கண்டோம்.

திருக்கடவூரில் எமனை சங்கரித்த சங்கரர் கோபம் தணிந்து எழுந்தருளிய இடமே திருக்கடவூர் மயானமாகும். புராணங்கள் இங்கு உருத்திரர் பிரமனை ஒரு கற்பத்தில் எரித்து மீண்டும் படைத்து அவன் மூலம் மீண்டும் படைப்புத் தொழிலை புரிந்தார் என்று கூறுகின்றன. இது இந்நாளில் திருமெய்ஞ்ஞானம் என்றழைக்கப்படுகின்றது. மிகப்பெருங்கோயிலான இது மூவராலும் பாடப் பெற்ற திருத்தலமாகும். இங்கு நாவுக்கரசர் தமது தேவாரத்தில் **"ஆரண நான்மறை கணங்கள் சேர்"** திருக்கடவூர் மயானத்தார் என்று குறிப்பதால் இங்கு உருத்திரப்பல்கணத்தார் பலரும் வாழ்ந்ததை அறியமுடிகிறது.

நாலூர் மயானம்

நாலூர் மயானம் என்பது கும்பகோணம்-குடவாயில் சாலையில் உள்ளதாகும் இங்குள்ள இறைவன் கல்வெட்டுகளில் நாலூர் மயானத்துப் பரமசுவாமி என்றும், இந்நாளில் ஞானபரமேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

தென்னகத்தில் பல சிவாலயங்கள் மயானத் தின்பெயரால் அழைக்கப்படாவிட்டாலும் மயானத் தின் அருகில் அமைந்திருக்கக் காண்கிறோம் எடுத்துக்காட்டாக சென்னை மயிலாப்பூரில் உள்ள வாலீசுவரர் ஆலயம், கொங்கு நாட்டுக்கடத்தூர் அர்ச்சுனேசுவரர் ஆலயம் முதலியவற்றைக் கூறலாம். மேலும் மகா அகோரருத்திரராக பெருமான் வீற்றிருக்குமிடம் திருவெண்காடு ஆகும்.இங்கு வடமொழியில் இந்தத் தலத்தைக் குறித்து சங்கல்பம் சொல்லும் போது **"பிரம்ம ஸ்மசானம்"** என்று குறிக்கின்றனர். இத்ன் பொருள் பெரிய மயானம் என்பதாகும்.

இவ்வாறு மயானங்களுக்கும் உருத்திரர் களுக்கும் உள்ள தொடர்பைச் சில கல்வெட்டு களாலும், பழைய நூல்களாலும் அறியமுடியகிறது.

உருத்திர சோலை



உருத்திரர்கள் இயற்கையை நேசிப்பவர்களாக இருந்தனர். எனவே நதிக்கரைகளிலும், கடலோரங்களிலும், மலைமுகடுகளிலும் கூடி வசித்தனர். இத்தகு எழில் சூழ்ந்த இடங்களில் அழகிய சோலைகளை அமைத்து அதில் வழிபாடுகளை நடத்தினர். அவர்கள் கூடி இருந்த அந்த சோலைகள் அவர்கள் பெயரால் உருத்திரசோலைகள் என்று அழைக்கப்பெற்று காலப்போக்கில் அதுவே அந்த இடத்தின் ஊர்ப்பெயராயிற்று என்பர். தென்னாற்காடு, வடாற்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களில் உருத்திர சோலை எனும் பெயர்களில் அமைந்த ஊர்களைக் காண்கிறோம். இப்பகுதியில் உருத்திரசோலையாக விளங்கிய சில தலங்களை அறிந்து மகிழலாம்.

காஞ்சீபுரத்து உருத்திரசோலை

காஞ்சிபுரத்தில் இன்று பிள்ளையார் பாளையம் என அழைக்கப்படும் இடத்தின் பெரும் பகுதி அந்நாளில் உருத்திர சோலை என்று வழங்கப் பெற்றதைக் காஞ்சிப்புராணத்தால் அறிகிறோம்.

இப்பகுதியில் தாயார் கோயில், குருகோயில் என்று பலவாறாக அழைக்கப்படும் காயா ரோகணேசுவரர் ஆலயத்திற்கு மேற்கில் தொடங்கி இன்றைய பிள்ளையார் பாளையத்தில் உள்ள திருமேற்றளீசுவரர் கோயில் உட்பட உருத்திரர்களால் வணங்கப்பட்ட நூற்றுப்பதினெட்டு சிவாலயங்கள் இருந்தன என்று காஞ்சிப்புராணம் கூறுகிறது. வேதங்களில் சொல்லப்பட்ட நூறு உருத்திரர்களும், அனந்தர் முதலான அஷ்ட உருத்திரர்களும், அஷ்ட பைரவர்களும், திருமால் பிரம்மா ஆகிய இருவரும் ஆக (100+8+8+2) நூற்றுப் பதினெட்டு உருத்திரர்கள் அமைத்து வழிபட்ட லிங்கங்களே இவைகளாகும். இந்த லிங்கங்களுக்காக அமைக்கப்பட்டதே இந்த 118 கோயில்களாகும். இவற்றில் சிலவே இப்போது காணப்படுகின்றன.

அனந்தர் முதலான எட்டு உருத்திரர்கள் பூசித்தவற்றில் அனந்த ருத்ரேசர், அனாதி உருத்திரேசர், மகாருத்திரேசுவரர் ஆகிய கோயில் களே எஞ்சியுள்ளன. இவற்றில் அனந்த-ருத்திரேசர், மகாஆனந்தருத்ரேசர் என்று அழைக்கப் படுகிறார். இவர் மீது கச்சி மகா ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூது என்ற நூல் ஸ்ரீமத் மாதவச்சிவஞான முனிவரால் பாடப்பட்டுள்ளது.

மேலும் அஷ்டபைரவர்கள் பூசித்த லிங்கங்கள் அமைந்த கோயில் சோழீசர் கோயில் என்று வழங்குகிறது. இதனுள் எட்டு சிவலிங்கங்கள் தனித்தனி சிற்றாலயங்களில் அமைக்கப்பட்டுள்ள தைக் காண்கிறோம். திருமால் பூசித்த தலமே திருமேற்றளியாகும். இவை தவிர எஞ்சிய உருத்திர லிங்கங்களைப்பற்றிய செய்திகளை அறியமுடிய வில்லை. இவற்றில் பெரும்பாலானவை கால வெள்ளத்தால் அழிந்தன. எஞ்சியவற்றின் பெயர்களும் மாற்றம் பெற்றுவிட்டன.

ஆதலின் இவற்றை முழுவதுமாகக் கண்டறிய முடியவில்லை. இவை "உருத்திர **ஸ்தானங்கள்**" என்றழைக்கப்பட்டன. இவற்றில் இந்நாளில் நன்னிலையில் உள்ளவை நடுத்தெருவில் உள்ள அநாதிருத்ரேசுவரர், மாதானம்பாளையத் தெரு விலுள்ள மஹாருத்ரேசுவரர், சேர்மன் சுவாமிநாத முதலியார் தெருவிலுள்ள ஆனந்த ருத்ரேசுவரர், பிள்ளையார் பாளையத்திலுள்ள ருத்ரகோடீசுவரர் ஆகிய ஆலயங்களாகும்.

இவற்றில் தலைமையானதும் இப்போது நன்னிலையில் உள்ளதும் திருமேற்றளீசுவரர் ஆலயமாகும். இக்கோயில் இரண்டு தொகுதிகளாக உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி ஓத உருகீசர் என்றும் மேற்கு நோக்கிய சந்நிதி மேற்றளீசர் எனவும் வழங்குகின்றது. இரண்டும் உருத்திரத் தலங்களாகும். இங்கு மூலத்தானத்தில் சிவலிங்கத்தின் முன்புறம் ஒரு பாதம் அமைக்கப்பட்டுள்ளது. இது இந்நாளில் விஷ்ணுவின் பாதம் என்று கூறப்பட்டாலும் உருத்திர சமயத்தவர் இதனை உருத்திரபாதம் என்றே அழைக்கின்றனர். இங்கு தேவர்கள் கூடி வேதப்பகுதியான உருத்திரத்தை ஓதக் கேட்டு பெருமான் உருகியதால் ★ ஓத உருகீசர் என்று பெயர் பெற்றார் என்பர்.

★ காஞ்சிப்புராணம் இதனை வேறுவிதமாகக் கூறும்.

உருத்திர சோலையான திருமயிலை அஷ்ட உருத்திரஸ்தானம்

காஞ்சியைப் போன்றே சென்னை மயிலாப்பூரும் உருத்திரர்களால் சிறப்புடன் வணங்கப்பட்ட உருத்திரசோலைத் திருத்தலமாகும். ஞானசம்பந்தப் பெருமான் இங்கு அருளிய திருப்பதிகத்தில் "உருத்திரப் பல்கணத் தார்க்கு அட்டிட்டல்" என்று குறிப்படுவதால் இங்கு உருத்திரர்கள் கூடி வாழ்ந்ததும் அவர்களுக்கு அன்பர்கள் உணவிட்டு மகிழ்ந்ததையும் அறிய முடிகிறது. இங்கு உருத்திர சோலையில் அஷ்ட உருத்திரர்கள் பூசித்த எட்டு சிவாலயங்கள் உள்ளன. இவற்றின் பெயர்களும் அமைப்பும் மாறி உள்ளன. இவற்றை ஓரளவு ஒழுங்குபடுத்தி இங்கு காணலாம்.

1. கானமர் சோலைக் கபாலீச்சரம்

மயிலையில் உருத்திரர்கள் சோலைகளுக்கு இடையே தலைமையாக அமைத்து வழிபட சிவலிங்கமே காபாலீசுவரர் ஆவார், கா+பாலீசுவரர், என்பதற்கு கா-சோலைகள், பாலித்தல்-பாதுகாத்தல் காத்தல், எழுந்தருளியிருத்தல் என்பது பொருள் அதாவது சோலைகளைக் காத்து அதில் வீற்றிருப்பவர் என்பது பொருள். இப்பெயர் இந்நாளில் கபாலீசுவரர் என்றாகி பிரமன் சிரத்தைக் பறித்த கதையோடு தொடர்பு படுத்தப் பட்டுள்ளதைக் காண்கிறோம். சைவ தந்திர நூல்களின்படி கிழக்கு திசையைக் காக்கும் பத்து உருத்திரர்களில் முதல்வனாக விளங்குபவர் கபாலி என்பவர் ஆவார். எனவே கிழக்குக் கடற்கரையில் அமைந்த இந்த லிங்கம் கபாலீச்சுவரர் எனப்பட்டார் என்பர்.

2. தீர்த்தபாலீசம்

இதே ஊரில் தீர்த்த பாலீசுவரர் (தீர்த்தங்களைப் பாதுகாப்பவர்) எனும் பெயரிலும் சிவாலயம் அமைந்திருப்பதைக் காண்கிறோம். உருத்திரர்கள் நீராடுவதில் விருப்பமுடையவர்கள். தண்ணீராகவே இருப்பவர்கள் லலிதோபாக்யானம் உருத்திரக் கோட்டையின் பதிமூன்றாவது ஆவரணத்தில் வசிக்கும் உருத்திரர்கள் காட்டாற்று வெள்ளமாகவும், கிணற்றுநீராகவும், சேற்றுத்தண்ணீர் வடிவமாகவும், கடல்நீராகவும், மழைநீராகவும், உப்பு நீராகவும் எனப்பலவாறு நீர்மயமாகவே அவர்கள் விளங்குவதாகக் குறிப்பது இங்கு எண்ணத்தக்கதாகும். அவ்வகையில் இந்த உருத்திரர் தீர்த்தபாலீசுவரர் என அழைக்கப் பட்டார் என்பர்.

3. விருபாட்சம்

மேலும் உருத்திரர்களுக்குத் தவயோக சிறப்பின் காரணமாக திறக்கும் நெற்றிக்கண் உருத்திராட்சம் எனப்பட்டது. மேலும் அந்தகண் மனித இனத்தின் இயல்புக்கு மாறானதால் விருபாட்சம் (ரூபம்-உருவம்-விரூபம் மேலான உருவம் அல்லது இயல்புக்கு மாறானது என்று பொருள்) எனப்பெற்றது. இதனைப் பெற்றவர்கள் விருபாட்சர்கள் எனப் பட்டனர். இவர்களால் பூசிக்கப்பட்டதால் இறைவன் விருபாட்சர் எனப்பெற்றார். இப்பெயராலும் ஒரு ஆலயம் மயிலையில் இருக்கக் காண்கிறோம்.

4. வெள்ளீச்சரம்

உருத்திரர்களின் கழுத்து தனிச்சிறப்பு பெற்றதாகும் ஸ்ரீருத்திரத்தில் நீலக்கழுத்து உள்ளவர்களுக்கும், கருங்கழுத்து உள்ளவர்களுக்கும், வெள்ளைக்கழுத்து உள்ளவர்களுக்கும் வணக்கம் என்று சொல்லப்படுதல் இங்கு எண்ணத் தக்கதாகும். எனவே ஸ்ரீருத்திரர் சுக்ரீவேசுவர் என்று அழைக்கப்பெற்றார். (சு - மேன்மையான - க்ரீவம் கழுத்தை உடையவர்) இப்பெயரிலும் ஒரு லிங்கம் அமைந்த ஆலயத்தை இங்கு காண்கிறோம். உருத்திரர்கள் பூசித்த இந்தத் தலம் இந்நாளில் பெயர் மருவி சுக்ரேசுவரர் ஆகி சுக்கிரன் ஆகிய வெள்ளி பூசித்ததலமாகக் கொள்ளப் பட்டு வெள்ளீசுவரர் எனும் பெயரில் விளங்கி வருகின்றது.

5. வாலீசம்

"வால்" என்பதற்கு வெண்மை என்பது பொருள். பல உருத்திரர் வெண்மைநிறம் படைத்து இருப்பதும், சாக்த தந்திரங்களின்படி வெண்மையான முத்துக் கோட்டையில் வசிப்பதாலும் வாலியர் எனப்பட்டனர். இவர்களால் அமைக்கப்பெற்ற லிங்கம் வாலீசுவரர் என்றழைக்கப்பட்டது இந்த ஆலயம் உருத்திரபூமியாகிய மயானத்தை ஒட்டியிருப்பதும் எண்ணத்தக்கதாகும். ஐம்பத்தோரு உருத்திரத் தொகுதியில் உள்ள உருத்திரரில்

ஒருவரின் பெயர் வாலி என்பதும் இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

6. காரணீச்சரம்

காரணி என்பதற்கு கருமையை அணிந் திருப்பவர் என்பது பொருள். உருத்திரர்கள் கருமை, நீலம் ஆகியவற்றைப் பூசியவர்களாக இருப்பதை ஸ்ரீருத்திரத்தால் அறிகிறோம். மேலும் கார் என்பதற்கு மேகம் என்பது பொருள் உருத்திரர்கள் நீர்தரும் மேகமாக இருப்பதால் காரணியர் என்று அழைக்கப்பட்டனர். இந்த அடிப்படையில் காரணீசுவரர் என்ற உருத்திரலிங்கம் அமைந்துள்ள தென்பர்.

7. மல்லேச்சரம்

"மல்ல" என்பதற்கு வளமை, வலிமை என்பனபோன்ற பொருள் உண்டு. பெருத்த வலிமை படைத்த உருத்திர சேனாதிபதிகள் மல்லர்கள் எனப் பட்டனர். அவர்கள் வழிபட்ட லிங்கள் மல்லேசுவரர் ஆகி இன்று மல்லீசுவரராகி விளங்குகிறது என்பர்.

8. வேடீச்சரம்

எட்டாவதான உருத்திரத்தலமாக விளங்குவது அந்நாளைய மயிலையின் ஒரு பகுதியான திருவல்லிக்கேணி திருவேட்டீசுவரர் கோயிலாகும். இங்கு இறைவன் வில்லேந்திய வேடுவராக காட்சியளித்தார் என்றும் அதனால் இது அந்நாளில் திருவேடீசுவரம் என வழங்கப்பட்டு இந்நாளில் திருவேட்டீசுவரம் என்றழைக்கப்படுகிறதென்பர். ஸ்ரீருத்திரத்தின் ஆரம்பத்திலேயே வேடனாகிய பெருமானின் வில்லுக்கும் அம்புகளுக்கும், நடுவில் அவனது வேட்டை நாய்களுக்கும் நமஸ்காரங்களைச் சொல்வது சிந்திக்க தக்கதாகும்.

இவற்றை நோக்க மயிலையில் உள்ள ஏழு தலங்களும் மயிலையின் ஒரு பகுதியான திருவல்லிக்கேணியில் உள்ள திருவேட்டீசுவரர் கோயிலொன்றும் ஆக எட்டு தலங்களும் உருத்திர சமயத்தவரால் சிறப்புடன் போற்றப்பட்ட "எட்டு தலங்கள்" என்பது ஒரு கருத்தாகும். இவற்றை அஷ்டமி நாளில் வலம் வருவது என்பது உருத்திரயாத்திரை எனப்படும். இதனை பலர் வெளிப்படுத்தாது வழிவழியாகப் போற்றி வருகின்றனர். மேலும் திருமயிலை கபாலீச்சரம் ஒரு உருத்திர சோலையாக திகழ்ந்தது என்பதற்கு ஆதாரமாக இச்சோலையின் காவல் தெய்வமாக அமைந்த அம்பிகை சோலைவாழியம்மன் என்றழைக்கப்பட்டாள். மயிலையில் அவளது ஆலயம் இன்றளவும் சிறப்புடன் விளங்கி வருவதையும் காண்கிறோம்.

"உருத்திரபட்டம்"

"பட்டம் கட்டிக்கொள்ளுதல்" என்பதற்கு "உரிமை பெறுதல்" என்று பொருள். அரசகுமாரன் இளவரசு பட்டம் கட்டிக்கொண்டான் என்பதற்கு இளவரசனாக இருக்கும் உரிமையை அவன் பெற்றுள்ளான் என்பது பொருள். ஒருவனுக்கு பட்டம் கட்டுவதன் மூலம் அவனுக்குரியனவற்றை அளித்து அப்படி அளித்ததை நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்பது பொருள்.

தமிழகத் திருமணச் சடங்குகளில் ஒன்றாக பட்டம் கட்டுதல் திழ்வதைக் காணலாம். மணமகனுக்கும், மணமகளுக்கும் அத்தை, மாமி உறவுடையோர் பட்டம் கட்டுவர். சிறுபொன் துண்டை மஞ்சள் நூலில் கோர்த்து நெற்றியில் வைத்துக் கட்டுவதே பட்டம் எனப்படும். இதன் மூலம் (மணமகனுக்குப்) பெண் கொடுக்கும் உரிமையுள்ளவர்களும் (மணமகளை) மருமகளாகக் கொள்ள வேண்டிய முறையுள்ளவர்களும் நடைபெற்ற திருமணத்தை ஏற்றுக்கொண்டோம் என்பதை உறுதி செய்கின்றனர் என்பர்.

இதுபோன்றே உருத்திர நிலையில் தகுதி பெற்றவர்களுக்கு, அந்தத் தகுதியுள்ளவர்கள் அணிவிக்கும் குறியீட்டு பட்டமே உருத்திரபட்டம் எனப்பெற்றது. மகாருத்திரனாகிய சிவபெருமான் உருத்திரபட்டத்தை அணிந்திருந்தார் என்று அப்பரடிகள் கூறுகின்றார். இது இரண்டு வடமாக இருந்ததுபோலும் எனவே **"ஒத்த வடத்திள நாகமுருத்திர பட்ட மிரண்டும்"** என்று திருவதிகை தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. சிலர் உருத்திராக்கங்களை நெற்றியில் பட்டமாக வைத்துக் கட்டிக் கொண்டனர் என்று கூறுகின்றனர். உருத்திரர்கள் நெற்றிக் கண்போல இந்த சிறுமணியை அணிந்ததால் இந்தச் சிவமணி உருத்திராட்சம் எனப்பெயர் பெற்றதென்பர்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் உற்சவரான பெரியநாயகருக்கு கல்லிழைத்த பட்டம் அணிவிக்கப்படுகின்றது. இது உருத்திரபட்டத்தை நினைவுகூறுகின்றது.

உருத்திர கோடீச்சரங்கள்

சிவபெருமானின் அருளால் தோன்றிய ஒரு கோடி உருத்திரர்கள் வழிபட்ட திருத்தலங்கள் உருத்திரக் கோடிச்சரங்கள் என்றழைக்கப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

திருக்கழுக்குன்றத்து உருத்திர கோடீச்சரம்

செங்கை மாவட்டத்தில் சிறப்புமிக்க திருத்தலமாகவும், புனிதப் பயணத்தலமாகவும், பக்ஷிதீர்த்தம் என்று வடநாட்டர்களால் கொண்டாடப் படும் இடமாகவும் விளங்குவது திருக்கழுக் குன்றமாகும். இதற்கு உருத்திரகோடி என்பதும் பெயராகும்.

சிவபெருமானின் அருளால் தோன்றிய ஒரு கோடி உருத்திரர்கள் இங்கு ஒரு சமயம் ஒரு கோடி லிங்கம் அமைத்து பூசை செய்தனர். அவர்கள் ஒவ்வொருவர் முன்பாகவும் சிவபெருமான் தோன்றி அவர்களுக்கு அருள் பாலித்தார். பின்னர் அவர் ஒரே வடிவ லிங்கமாக எழுந்தருளினார். அந்த லிங்கமே உருத்திர கோடிலிங்கம் எனப்பெற்றது. பின்னாளில் இங்கு அந்தலிங்கத்திற்குக் கோயில் அமைக்கப்பெற்றது.

ருத்திரன் கோயில் என அழைக்கப்படும் இக்கோயில் திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்தத்திற்கு 1 கி.மீ. தொலைவில் உள்ளதாகும். இறைவர் உருத்திர கோடீசுவரர், அம்பிகை (இந்நாளில்) அபிராமி தீர்த் தம் என்றழைக்கப்படுகின்றாள் அருகிலுள்ள தீர்த்தம் உருத்திரகோடி தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

உருத்திரகோடி லிங்கத்திற்கு என்று அமைக்கப் பெற்ற பெரிய தனிக்கோயில் இது ஒன்றேயாகும்.

திருவாரூர் உருத்திர கோடீச்சரம்

இது திருவாரூருக்குத் தெற்கில் புராணங் களால் கபிலநிதி என போற்றப்படும் ஆற்றின் கரை யோரமாக உள்ளது. இங்கு சிவபெருமான் யோகாச்சாரியராக எழுந்தருளியிருந்து யுகம்தோறும் விஞ்சையர், முனிவர் தேவர் முதலானவர்களுக்கு வேண்டுவனவற்றை உபதேசிப்பார் என்பர். இப்படியிருக்கும் ஒரு நாளில் ஒரு கோடி முனிவர்கள் அங்கு எழுந்தருளி தனித்தனியே சிவபூசை செய்து மகிழ்ந்தனர். அவர்கள் ஒவ்வொரு வர் முன்பாகவும் சிவபெருமான் உருத்திர வடிவம் கொண்டு அருள்பாலித்தார். அந்த ஒரு கோடி உருத்திரர்களின் வடிவைக் கண்ணுற்ற முனிவர்கள் மகிழ்ந்து தாங்கள் வணங்கிய அனைத்து லிங்கங் களையும் ஒன்று சோத்து உருத்திர கோடீசர் என்ற பெயரால் அமைத்து ஒரேலிங்கமாக வழிபட்டனர். அப்புண்ணியத்தால் சிவலோகம் அடைந்தனர்.

இந்த தலத்தின் அருகில் உருத்திர பூமியாகிய மயானம் உள்ளது. அங்கு எரிக்கப்படுபவர்கள் உருத்திர வடிவம் கொண்டு விடையாகிய நந்தியும் பெருமானுடன் கயிலாயம் புகுவர். இதற்கடையாள மாக எரிக்கப்பட்ட சாம்பலில் எருதின் கால்குளம்பு அடையாளம் இருக்குமென்று நம்புகின்றனர்.

திருநெல்வேலி உருத்திரகோடீஸ்வரர்

திருநெல்வேலிப்புராணம் உருத்திரகோடீஸ் வரரைப் போற்றுகின்றது. ஒரு சமயம் எல்லையற்ற அவுணர்கள் தோன்றி கடுந்தவம் செய்து அரியவரங்களைப் பெற்று பின்னர் உலகிற்கு கடுந்துன்பம் விளைத்தனர். அதனால் வருந்திய தேவர்கள் பெருமானிடம் முறையிட்டனர்.

அப்போது சிவபெருமானின் திருமேனியில் இருந்து ஒரு கோடி உருத்திரர்கள் தோன்றினர். அவர்கள் அவுணர்களை ஒரு நொடியில் அழித்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் கூடி அவுணர்கள் துன்பம் விளைத்ததால் தண்டிக்கப்பட்டார்கள் என்றாலும் அவர்கள் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தவர்கள் எனவே அவர்களைக் கொன்ற பாவம் தீரும் பொருட்டு சிவபூசை செய்ய விரும்பினர். அவர்கள் பெருமானை வணங்கி தமது விருப்பத் தைத் தெரிவித்தனர். அவர் அவர்களைத் திருநெல்வேலிக்குச் சென்று சிவலிங்கமமைத்து வழிபடும்படிக் கூறினர். அதன்படி அப்படி அவர்கள் அமைத்து வழிபட்ட சிவலிங்கமே உருத்திர கோடீஸ்வரர் என வழங்கப்படுகின்றது என்பர்.

காஞ்சீபுரத்து உருத்திர கோடீச்சரம்

இது காஞ்சீபுரத்துப் புதுப் பாளையத்தில் புதுப்பாளையத்தெருவில் அமைந்துள்ளது. இங்கும் ஒரு கோடி உருத்திரர்கள் வழிபட்டனர் என்பர். இக்கோயில் கருவறை உள்மண்டபம் மகாமண்டபம் ஆகிய பகுதிகளில் உள்ளன. இக்கோயிலில் உருத்திரபீடம் என்று ஒரு பீடமுள்ளது. இதன் அடிப்பட்டைப் பகுதியில் சூரியன் சந்திரன், பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பர். கருவறையில் பெரிய லிங்கவடிவில் உருத்திரகோடீசுவரர் எழுந்தருளியுள்ளார்.

உருத்திர தீர்த்தங்கள்

உருத்திரர்கள் நீராடுவதில் விருப்பமுள்ளவர்கள். நீர்மயமாகவே இருப்பவர்கள். அவர்கள் சிவவழிபாட்டிற்கென பல தீர்த்தங்களை உண்டாக்கினர். அவை அவர்கள் பெயரால் உருத்திர தீர்த்தங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. பல சிவத்தலங்களில் உருத்திர தீர்த்தங்களைக் காணலாம். திருக்களர், திருக்கழுக்குன்றம், திருவிடைமருதூர் முதலிய அனேக தலங்களில் உருத்திரதீர்த்தங்கள் சிறப்புடன் விளங்குகின்றன.

இவற்றில் திருவிடைமருதூரிலுள்ள உருத்திர தீர்த்தம் தனிச்சிறப்புடையதாகும். ஒரு சமயம் உருத்திரர்கள் தாங்கள் சிவபெருமானைப் போலவே திருஉருவம் உடையவர்கள் அளவிறந்த ஆற்றல் உடையவர்கள் என்று அகங்காரம் கொண்டனர். அதன் விளைவாகச் சாபம் பெற்றனர். அச்சாபம் நீங்க மீன்வடிவம் கொண்டு திருவிடைமருதூரில் இருந்த ஒரு குளத்தில் இருந்தவாறு தவம் செய்தனர். அந்த தீர்த்தத்தில் வசித்த மகிமையால் அவர்கள் மீண்டும் சுயவடிவம் எய்தி உருத்திரர் பதவியெய்தினர். அன்று முதல் இந்த தீர்த்தம் அவர்கள் பெயரால் உருத்திரதீர்த்தம் என்ற சிறப்புப் பெயர் பெற்றது.

மேலும் ஒருசமயம் திட்டகேது எனும் மன்னன் தன்புதல்வனுக்கு உண்டான கண்டமாலை என்ற நோயால் மிகவும் வருந்தினான். அவன் காத்யாயன முனிவரின் கட்டளைப்படி இங்கு வந்து மகனுடன் தீர்த்தமாடி மகாலிங்க மூர்த்தியை வழிபட்டான். சிலநாளில் மகனின் நோய் குணமாகவே பெரும் பொருளை மகாலிங்க சுவாமிக்கு அர்ப்பணித்து விட்டு தன்நாடு சென்றான் என்று மருதவன புராணம் என்னும் திருவிடைமருதூர்ப் புராணம் கூறுகின்றது.

இத்தீர்த்தம் திருவிடைமருதூர் ஆலயத்திற்குத் தென்புறம் உள்ளதாகும்.

மேலும் கனகதீர்த்தம் என்ற தீர்த்தமும் திருவிடைமருதூரில் இருந்ததாகப் புராணம் கூறுகின்றது. ஒரு பிராமணன் பண்டைய பிறப்பில் நேர்ந்த சாபத்தால் காக்கை வடிவம் கொண்டு அலைந்து இந்தக் கனகதீர்த்தத்தில் மூழ்கியதால் உருத்திர வடிவம் அடைந்தான் என்றும் மேற்படி புராணம் கூறுகின்றது. ஆதலின் இங்குள்ள தீர்த்தங்களில் மூழ்குவோர் உருத்திரராவர் என்பது நம்பிக்கையாகும்.

உருத்திர தீர்த்தமும் உருத்திர தீபமும்

மகாசிவபக்தையான ராணி அகல்யா பாய் அரசு செலுத்திய தலைநகரமான மாஹிஷ்மதி என்ற நகரம் நர்மதை நதிக் கரையில் இப்பொழுது சிற்றூராகக் காட்சியளிக்கின்றது. இங்கு நர்மதை நதியுடன் மகேஷ்வரி எனும் சிற்றாறு கலக்குமிடத்திலுள்ள மண்மேட்டில் காலாக்னி உருத்திர தீர்த்தம் எனும் பெயரில் ஒரு தீர்த்தம் அமைந்துள்ளது. இதன் அருகில் திரிபுரங்களை எரித்த சிவபெருமான் அந்த நிகழ்ச்சிக்குப் பின் தனது பாசுபதாஸ்திரத்தை இங்கு வீசி எறிந்தார் என்றும் அது பாதாளம் வரை ஊடுருவி இருந்ததென்றும் அந்த இடத்தில் ஜாலேசுவரர் என்ற பாண லிங்கம் சுயம்புவாக எழுந்ததென்றும் கூறுகின்றனர். இங்கு ஏகாதச ருத்திரர்களை நினைவூட்டும் வகையில் பதினோரு நெய் விளக்குகளை ஏற்றும் வழக்கத்தை பக்தர்கள் கொண்டுள்ளனர்.



சூரியன் ஆதிரத்தினேசுவரர் சினேகவல்லி

ஆதித்யேசுவரர்

இந்திய புராணங்களின்படி "ஆதித்தியன்" எனப்படும் சூரியர்கள் பன்னிரண்டு பேர்கள் ஆவர். ஆதலால் சிவமஞ்சரியின் இந்தப் பன்னிரண்டாம் பகுதி சூரியனைப் பற்றியதாக மலர்கிறது. சூரியனைச் சிவபெருமானின் வடிவமாகவே கூறுவது சைவநன்மரபாகும். சிவபெருமானின் "எட்டு **வடிவங்களில்"** ஒன்றாகச் சூரியன் விளங்குகிறான்.

சைவர்கள் சூரியவழிபாட்டைச் சிறப்புடன் போற்றுகின்றனர். சிவபூஜையின் ஒரு அங்கமாகச் சூரியவழிபாடு விரிவுடன் செய்யப்படுகிறது. சிவாலயங்களில் சிவபெருமானுக்கு அமைந்துள்ள அஷ்ட பரிவாரங்களில் ஒருவனாகச் சூரியன் திகழ்கின்றான்.

சிவபெருமானின் வடிவமான உருத்திரர் சூரிய மண்டலத்தில் இருந்தவாறு உலக உயிர்களுக்கு ஒளியையும் உயிர்ச்சத்தையும் அளிக்கின்றார் என்பர்.

ஆதலால் சூரியனைச் சிவசூரியனாகக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி வணங்குகின்றனர். இந்தமலரில் சூரியனைச் சிவபெருமானாகக் கூறும் வேத, ஆகம புராணப்பகுதிகளையும் காணலாம்.

மேலும் சிவனருளால் அவருடைய அம்சமாகவே தோன்றிய சூரியர்கள், அவர்கள் சிவவழிபாடு செய்து பேறுபெற்றத் திருத்தலங்கள், சூரியனின் ஒளிக்கதிர்கள் படர்ந்து சிவவழிபாடு செய்யும் திருத்தலங்கள் ஆகியவற்றை விரிவாகக் காணலாம்.

சூரியனைப் பற்றிய பலவேறு செய்திகள் புராணங்களில் பரவலாகக் கிடைக்கின்றன. அவற்றை அன்பர்கள் அறிந்துகொள்ளும் வகையில் இயன்ற அளவு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இனி சிவசூரிய வழிபாட்டினை விரிவாகக் கண்டு மகிழலாம்.

சிவாலயங்களில் சூரியன் சந்நிதி



சிவாலயங்களில் சிவசூரியனுக்குத் தனியே சந்நிதி அமைக்க வேண்டுமென்பதைச் சிவாகமங்கள் வலியுறுத்துகின்றன. ஆலயத்தின் தென்கிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கியவாறு சிவசூரியன் எழுந்தருள்கின்றார்.

பாண்டிய, சோழ நாட்டுப் பெருங்கோயில்களில் சூரியனுடன், அவனுடைய மனைவியரான உஷா, பிரத்யுஷா ஆகிய இருதேவியரும் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம்.

இவ்வாறு எழுந்தருளும் சூரியன் இரண்டு கரங்களைக் கொண்டு, அவற்றில் தாமரை மலர்களை ஏந்தியவாறு காட்சியளிக்கின்றார். இருபுறம் அமையும் தேவியர் ஒருகையில் தாமரை மலர் ஏந்தியும் மறுகையைத் தொங்கவிட்டவாறும் காட்சியளிக்கின்றார்கள்

சில தலங்களில் சூரியனுக்கு நான்கு கரங்களும் அமைகின்றன. இத்தகைய திருவடிவங்களில் மேற்கரங்கள் இரண்டில் தாமரை மலர்களும், கீழ்க்கரங்களில் அபய, வரத முத்திரைகளும் அமைகின்றன.

சிவாலயங்களில் காலைசந்திப் பூஜையை சூரிய பூஜையில் இருந்து தொடங்குவதே வழக்கமாகும்.

சூரியன் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசியில் பிரவேசிக்கும் ஒவ்வொரு தமிழ்மாத முதல் தேதியிலும், இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

சூரியனுக்கு அமையவேண்டிய சந்நிதியைத் தனிக்கோயிலாக விநாயகர், சண்டீசர் உள்ளிட்ட பரிவார தேவர்கள் புடை சூழ அமைக்கலாம் என்று பூஜாபத்ததி நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் அத்தகைய சந்நிதிகளைத் தமிழகத்தில் பரவலாகக் காணமுடியவில்லை.

பெரும்பாலான சிவாலயங்களில் பிராகாரத்தின் தென்கிழக்கில் சிறு மேடையின் மீது சூரியன் தனியாகவோ, தேவியருடனோ எழுந்தருளியிருக்கவே காண்கிறோம்.

சில தலங்களில் சின்னஞ்சிறு சந்நிதிகளும் அமைகின்றன. இந்த சந்நிதிகள் சிறுவிமானத்துடன் ஒற்றைக்கலசம் கொண்டதாக அமைகின்றன.

சிவாலயங்களில் சூரியனுக்கென நாட்பூசை - மாதப்பிறப்பு பூசையைத் தவிர தனி விழாக்களோ உலாத்திருமேனிகளோ அமைக்கும் வழக்கம் இல்லை.

நவக்கிரகங்களில் சூரியன்

சூரியன் சிவாலயங்களில் தனியே எழுந்தருளியிருப்பதுடன் ஆலயத்தின் வடகிழக்கு அல்லது தென்கிழக்கு மூலைகளில் அமையும் நவக்கிரகங்களுக்கு மையப்பகுதியிலும் அமைகின்றார். இவ்வாறு நவக்கிரகத்துடன் அமையும் சூரியன் இரண்டு விதங்களில் காட்சி அளிக்கின்றார்.

நவக்கிரகங்களை வைதீகப்பிரதிஷ்டை எனும் அமைப்பில் அமைக்கப்படும் பொழுது சூரியன் கிழக்கு நோக்கியவாறும், ஆகம முறைப்படி அமைக்கப்படும்பொழுது மேற்கு நோக்கியவாறும் அருள்பாலிக்கக் காண்கிறோம். சிவாகமப்படி செய்யும் பூசைகளில் சூரியனை மேற்கு நோக்கியிருப்பவராகவே கருதி பூசை செய்கின்றனர்.

சூர்ய மண்டல பூஜா சக்கரம்

சிவதீட்சை பெற்ற சிவபூஜா துரந்தரர்கள் செய்யும் சிவபூஜையின் முதல் அங்கமாகச் சிவசூர்ய பூஜை திகழ்கிறது. அவர்கள் சூரியனைக் கண்கண்ட கடவுளாக விளங்கும் சிவபெருமானாகவே கருதி உரிய பரிவாரங்களுடன் பூசிக்கின்றனர்.

இனி அவர்கள் கூறும் முறைப்படி அமைந்த "சூரிய மண்டலத்தில்" விளங்கும் பரிவாரங்களை விரிவாகக் காணலாம்.

சிவபூஜையில் வழிபடப்படும் சூரியயந்திரம் அல்லது சூர்ய சக்கரத்தின் படம் இங்கு அளிக்கப்பட்டுள்ளது. இதில் அன்பர்கள் பரிவார தெய்வங்கள் வீற்றிருக்கும் இடங்களை அறிந்து கொள்ளும் வகையில் அடைப்புக்குறிக்குள் எண்கள் தரப்பட்டுள்ளன.


இந்த சக்கரத்திற்கு நாற்புறமும் வாயில் இருந்தாலும், சூரியன் மேற்கு நோக்கி எழுந்தருளி இருப்பதால் இந்த வாயிலே முதலில் பூசைக்கு உரியதாகிறது இந்த வாயிலின் தென்புறம் தண்டி (1), என்கிற துவாரபாலகனும், வடபுறம் பிங்களன் (2), என்னும் துவாரபாலகர்களும் எழுந்தருளியுள்ளனர்.

இவர்களைப் பூசித்தப் பின்னர் வடகிழக்கு முனையில் கணபதியையும் (3), தென் கிழக்கு முனையில் குருமார்களையும் (4) எண்ணி பூசிக்க வேண்டும்.

பிறகு தகட்டின் மையத்தில் பிரபூதாசனம் (5) என்கிற வெண்மையான பீடத்தையும் ; சக்கரத்தின் நான்கு முனைகளில் அந்த ஆசனத்தைத்தாங்கும் நான்கு சிங்கங்களையும் பூசிக்க வேண்டும்.

அக்னி மூலையாகிய தென்மேற்கில் விமலன் என்னும் வெண்ணிறமான சிங்கத்தையும் (6)

நிருதி மூலையாகிய தென்மேற்கில் சாரா (7) எனும் பொன்நிற சிங்கத்தையும், வாயுமூலையாகிய



சூரிய யந்திரம்

வடமேற்கில் ஆராத்யா (8) எனும் சிவந்த நிறமான சிங்கத்தையும் ஈசான்யமாகிய வடகிழக்கில் பரமசுகம் எனும் பெயருடைய பச்சைநிறம் கொண்ட சிங்கத்தையும் பூசனை செய்யவேண்டும் (9)

அதன் பிறகு அவற்றால் தாங்கப்படும் மகாபத்மம் எனும் (10) பெரிய தாமரையின் நடுப்பொகுட்டையும், அதன் எட்டு இத்ழ்களில் எழுந்தருளியுள்ள அஷ்டசக்திகளான தீப்தா (11) என்பவளை கிழக்கு இதழிலும், சூட்சுமையை (12) தென்கிழக்கு இதழிலும், ரூஜாவை (13) தெற்கு இதழிலும், பத்ரையை (14) தென்மேற்கு இதழிலும், விபூத்யை (15) மேற்கு இதழிலும், விமலாவை (16) வடமேற்கு இதழிலும், அமோகாவை (17) வடக்கு இதழிலும் வித்யுதாவை (18) வடகிழக்கு இதழிலும். இந்த தாமரையின் ஈசானபாகத்தில் ஒன்பதாவது சக்தியான சர்வதோமுகியைத் தனியாகவும் (19) போற்றி வணங்க வேண்டும்.

இவர்கள் ஒன்பது பேர்களும் செந்நிறம் கொண்டவர்களாகவும், இரண்டு திருக்கரங்களில் தாமரைப்பூவையும், வெண்சாமரத்தையும் ஏந்தியவர்களாய் பேரழகு படைத்தவர்களாகவும் விளங்குகின்றனர்.

இவர்களைச் சௌரநவசக்தியர் என்பர். பின்னர் சூரியனின் சிறப்பான ஆசனமாகிய அர்க்காசனத்தை (20) பூசித்து அதன் மீது இரண்டு திருக்கரங்களுடன் விளங்கும் சூரியனைப் பூசித்து (21) சிவசூர்யனைத் (22) தியானிக்க வேண்டும்.

பின்னர் சூரியனுக்கு வலப்பகுதியில் பிரத்யுஷாவையும் (23) இடப்புறம் உஷாவையும் (24) பூசிக்க வேண்டும்.

அடுத்து தாமரையின் இதழ்களின் முனைகளில் கிழக்கில் சந்திரனையும் (25), தெற்கில் புதனையும் (26), மேற்கில் குருவையும் (27), வடக்கில் சுக்கிரனையும் (28), தென் கிழக்கில் செவ்வாயையும் (29), தென் மேற்கில் சனீச்சரனையும் (30) வடமேற்கில் ராகுவையும் (31), வடகிழக்கில் கேதுவையும் (32) பூசிக்க வேண்டும்.

பின்னர் சிவபூசையின் இறுதியில் சண்டீசுவரரை வணங்குவது போலவே சூரிய சண்டியாகிய தேஜஸ் சண்டீசுவரரை வணங்க வேண்டும். இவர்களை வணங்கிப் போற்றித் தியானிக்கத் தனித்தனி மந்திரங்களும் முத்திரை களும் உள்ளன.

இவ்வகையில் சூரியனின் துவாரபாலகர்கள், கணபதி, குருமார்கள். சிவசூரியனின் ஆசனமான தாமரை, அதனைத் தாங்கும் நான்கு சிங்கங்கள், தாமரையில் விளங்கும் நவசக்திகள், அவர்களைச் சூழ்ந்துள்ள எட்டு கிரங்கள் நடுவில் உஷா, பிரத்யுஷா உடன் கூடிய சூரியன் ஆகியோர் வணங்கப்படுவது அறிந்து மகிழத்தக்கதாகும்.

சிவசூரிய வணக்கம்

பேசிடு வெண்தாமரை ஆசனன் ஆகிச்சிவந்த
பேரொளி சேர் தருவிருத்த மண்டல மத்தியனாய்
ஆசறு மாதுளங்க மலர் போலும் நிறத்தினனாய்
அலர்ந்தனவாய் இருபுயங்கள் அடைந்த வெண் தாமரையின்
காசறு நாளம் பிடித்த கையிரண்டி னோடு
கருதுமொரு முகமிரண்டு கண்களுடையவனாய்த்
தேசுமலி செய்யவுடை தனைஉடுத்தோ னாகித்
திகழ் சிவசூரியனை நிதம் சிந்தனை செய்திடுவாம்.

சிவசூரியன்

பரமவித்தை, சாத்வீக ஒளி, கைவல்யம் (தனித்து நிற்றல்) ஞானம், பிரகாம்யம், சம்வித்து, போதகம், கதி,, ஸ்மிருதி முதலியவற்றை உருவமாகக் கொண்ட பரமப்பிரகாசனாய் இருப்பவர் சிவசூரியன். இவர் எல்லையற்று பரந்திருந்த இருளில் உண்டான அண்டத்தைப் பிளந்து ஒளியை உண்டாக்கினார். அப்போது 'ஓம்' என்ற ஒலி உண்டாயிற்று. அதுவே மூன்றாக விரிந்து **பூ: புவ: சுவ:** எனும் மூன்றாயிற்று. பிறகு ஓங்காரத்தால் சூரியனுடைய சூட்சும உருவும் அதனையடுத்து அதிதூல உருவமான **ம:** என்பதும் தூலதரமான **ஜந:** என்னும் விருத்திகளும் பின்னும் **தப:**என்னும் சத்யவிருத்திகளும் உண்டாயின.

இந்த பரம புருஷனே ஜ்வாலைகளுடன் பிரகாசிக்கும் சிவசூரியன் ஆவார்.

சிவசூரிய லிங்கம்

முன்கட்டுரையில் சிவபூஜா துரந்தரர்கள் கூறும் சிவசூரியனைக் கண்டோம். இப்பகுதியில் ஆகமங்கள் காட்டும் சிவசூரியனைக் காணலாம்.

சிவசூரியன் நான்கு முகமும், எட்டு தோள்களும் உடையவராய் சிவந்த ஆடைகள் அணிந்து கமலாசனத்தில் வீற்றிருக்கின்றார். இவரைச் சுற்றி கிழக்கில் தத்புருஷர், வடக்கில் வாமதேவர், தெற்கில் அகோரர், மேற்கில் சத்யோ ஜாதர் ஆகிய மூர்த்திகள் அமர்ந்துள்ளனர். மேலும் இவருடைய முன்புறம் பாஸ்கரனும், வலப்புறம் பானுமூர்த்தியும் பின்புறம் ஆதித்யனும், இடப்புறம் ரவியும் ஆகிய சூரியர்கள் வீற்றிருக்கின்றனர். இந்தச் சூரியர்கள் நால்வரும் நான்கு முகமும், நான்கு கரங்களும் கொண்டவர்கள். இவர்களுடன் இவர்களுடைய தேவியரான வித்தாரை, சுதாரை, போதினி, யாப்யாயனி ஆகியோர் எழுந்தருளி யுள்ளனர்.

மேலும் சூரியனின் தாமரை மலர்போன்று அமைந்துள்ள பிரபூதம் எனும் ஆசனத்தையும் அதனைத் தாங்கும் விமலம், சாரம், ஆராத்யம் பரமசுகம் எனும் நான்கு சிங்கங்களையும் காண்கிறோம்.

இந்தப் பீடத்தைச் சுற்றி 1. தீப்தை, 2. சூட்சுமை 3. ரூஜா 4. விபூதி 5. விமலை '6. அமோகை 7. நான்கு கரத்துடன் கூடிய வித்துயுதா 8. பத்தரை ஆகிய அஷ்டசக்திகளும் நான்கு முகமுடைய சர்வதோமுகி ஆகிய பீடசக்தியும் எழுந்தருளி யிருப்பர்.

இதனை விளக்கும் வகையில் வடநாட்டில் பல சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை சூரிய லிங்கம் எனப்படும். இதன் மையப்பகுதியில் சிவசூரியன் லிங்கமாக விளங்குகின்றார். இதன் நான்குபுறங்களிலும், நான்குமுகங்களும், நான்கு தோள்களும் கொண்டவர்களான ஆதித்யன், பானு, பாஸ்கரன், ரவி ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். அவர்களுக்கு மேலே உச்சியில் அகோரர், வாமதேவர், சத்யோஜாதர், தத்புருஷர் ஆகியோர் சின்னஞ்சிறு விமானங்களில் எழுந்தருளியுள்ளனர். இவர்களைச் சுற்றி அஷ்டசக்தி, பீடசக்தி, கந்தர்வர்கள், முனிவர்கள் ஆகியோரைக் காண்கிறோம். இத்தகைய சூரிய லிங்கத்தையே அருகில் உள்ள படத்தில் காண்கிறீர்கள்.



சிவசூரிய லிங்கம் - வடநாட்டு சிற்பம்

சூர்ய மண்டலத்தில் விளங்கும் சிவசூரியன்

சூர்யமண்டலத்தில் திகழும் உருத்திரன் எனும் சிவபெருமான் அர்த்தநாரீசுவரராக நான்கு முகங்களும், எட்டு தோள்களும் கொண்டவராகக் காட்சியளிக்கின்றார்.

சிவமகாபுராணம் இத்திருமேனியைச் சிறப்புடன் குறிக்கின்றது. அதன் விரிவை இனிக் காணலாம். ஒரு சமயம் எந்த பூசையைச் செய்தால் நற்கதி பெறலாம் என்று தேவர்கள் கேட்க பரமேசுவரன் சூரிய மண்டலத்தில் நின்று அவர்களுக்குக் காட்சிதந்தார்.

அப்போது அவர் கோடி மின்னல்கள் திரண்டது போன்று ஒளி பொருந்தியவராக விளங்கினார். எட்டு கரங்கள், நான்கு முகங்கள், பன்னிரண்டு கண்கள், பாதி சிவனும், பாதி சக்தியுமான அர்த்தநாரீசுவரவடிவம். தலையில் ஜடாமண்டலம், சிவந்த சந்தனம் பூசி, சிவந்த பூக்களால் ஆனமாலையைச் சூடி, சிவந்த ஆடை தரித்து சிவந்த கற்களிழைத்த ஆபரணங்களைப் பூண்டு நின்றார்.

அவருடைய கிழக்கு முகம் மஞ்சளாகவும், தெற்கு முகம் சிவப்பாகவும். மேற்கு முகம் வெளுப்பாகவும், வடக்கு முகம் பவழ வண்ணமாகவும் விளங்கியது அவரைச் சுற்றி உத்ரா, போதிநீ, அத்யாநீ, ஏகவக்த்ரா முதலிய நான்கு சக்திகள் காணப்பட்டனர்.

அவர் அருகில் ஒளிப்பிழம்பாக தேவி நின்றாள். அவர்களுக்கு வலப்புறம் பிரமனும் இடப்புறம் திருமாலும் நின்றனர். அம்பிகையைச் சுற்றி அவளுடைய சக்தி கணங்கள் நின்றனர். அவர்களுக்கிடையே நவக்கிரகங்கள் காணப் பட்டனர். சூரியன் சிவன் வடிவாகவும், சந்திரன் அம்பிகையின் வடிவாகவும் காட்சியளித்தார்கள்.

இக்காட்சியைக் கண்ட தேவர்கள் அளவில்லா மகிழ்ச்சியுடன் போற்றி வழிபட்டனர். அப்போது பெருமான் என்னை சூரிய மண்டலத்தின் மத்தியில் தியானம் செய்து சூரியனை வணங்கினால் எல்லாவித இன்பங்களையும் பெறுவர். சிவலிங் கத்தை அர்ச்சிப்பதே மேலான சிறந்த பூஜை என்று திருவாய் மலர்ந்தார்.

அன்றுமுதல் ஆன்றோர்கள் சூர்ய மண்டலத்தில் விளங்கும் சிவபெருமானைக் காலையிலும், மாலையிலும் வணங்குகின்றனர். அப்படி வணங்கும் போது கீழ்க்காணும் மந்திரத்தைக் கூறுவது மரபாகும். அது

சௌர மண்டல மத்யஸ்தம்
ஸாம்பம் ஸம்ஸார பேஷஜம்
நீலக்கிரீவம் விருபாக்ஷம் நமாமி
சிவமவ்யயம்


இதன் பொருள்:-

சூர்ய மண்டலத்தின் நடுவில் இருப்பவரும்,, சம்சார நோய்க்கு மருந்தானவரும், நீலமான கழுத்துள்ளவரும். நெற்றியில் கண்ணுள்ள வரும் ஒப்பற்றவருமான சிவபெருமானை வணங்குகிறேன் என்பதாகும்.

சிவபுராணம் கூறும் இத்தகைய சிற்பத் திருமேனியைக் கோயில்களில் வழிபாட்டில் காணமுடியவில்லை. என்றாலும் அபூர்வமாகத் தஞ்சைமாவட்டம் கும்பகோணத்தை அடுத்த தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலில் அமைந்துள்ள வெளிப்புறக் கோட்டங்களில் தென்கிழக்கில் கிழக்கு நோக்கி அமைந்த கோட்டத்தில் சிவமகாபுராணம் காட்டும் சிவசூரியனைக் காண்கிறோம்.

இவருக்கு முன்புறம் இடம், வலம் ஆகியவற்றில் அமைந்த முகங்கள் அழகுடன் திகழ்கிறது. பின்னால் உள்ள முகம் தெரியவில்லை. தலையைச் சுற்றிலும் சூரிய மண்டலம் திகழ்கிறது. எட்டுகரங்களில் தாமரை, தண்டம், கபாலம், கத்தி, ஜபமாலை, பாசம், அங்குசம், வரதமுத்திரை ஆகிய ஆயுதங்கள் உள்ளன. நின்ற நிலையில் அமைந்துள்ள இத்திருமேனி ஒருபால் பெண்மைக் குரிய ஸ்தனத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

புராண அடிப்படையில் அமைக்கப் பெற்ற இந்தச் சிவசூரியனை அறிந்து கொள்ளாததால் பல அறிஞர்கள் இத்திருமேனிக்கு மனம் போன போக்கில் தமது விருப்பப்படி பல பெயரிட்டு வழங்கியுள்ளனர். பலர் இத்திருமேனியை மகாமாயை என்று குறிப்பிட்டுக் குழப்பியுள்ளனர்.



சிவசூரியன் - அர்த்த நாரீசுவர வடிவம்
தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில்
படம் உதவி - தமிழ்நாடு தொல்பொருள் துறை

தேவாரமும் உபநிஷதங்களும் கூறும் சிவசூரியன்

சிவபெருமான் சூரிய மண்டலத்தில் விளங்குகின்றார் என்பதை சாந்தோக்ய உபநிஷத்தும் தைத்ரீய சங்கிதையும் சிறப்புடன் குறிப்பிடுகின்றன. இனி அப்பகுதிகளையும் அதற்கிணையாக அமைந்த தேவாரப்பாடல்களையும் காணலாம்.

சாந்தோக்ய உபநிஷதம் (1-6-6-7) பொற்றொடியோடும், பொன்வண்ணக் கேசத்தோடும், நகம் உள்ளிட்ட மேனிமுழுவதும் (கபி எனப்படும்) சூரியனால் விகசிதமாகிய இரண்டு தாமரைபோலும் கண்களும் உடையவர். இந்த பொன் போன்ற புருஷர் ஞாயிறு மத்தியில் விளங்குகின்றார் என்று கூறுகிறது.

இதில் சிவபெருமானைப் பற்றிய வர்ணனை நேரடியாக இல்லாவிட்டாலும் அடுத்து வரும் தைத்ரீய சங்கிதை பெருமானின் நீலகண்டத்தையும், செந்நிறத்தையும் சிறப்புடன் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இது சூரியமண்டலத்துள்ளிருந்து உதயாஸ் தமனஞ் செய்விக்கும் பொருட்டுச் சிவபெருமான்) பிரவிருத்திக்கின்றார். இவர் நீலகண்டமும் செந்நிறமும் கொண்டவர். சூர்ய வடிவாக விளங்கும் இவரைக் கோபாலரும், மாலையில் தண்ணீர் எடுக்கும் பெண்களும் கண்டார்கள். அவரை பசு, எருமை முதலான உயிரினங்களும் பார்க்கின்றன. அவ்வியல்பினராகிய அவர் (அகக்கண்ணுக்குப் புலப்படின்) எங்களுக்கு ஆனந்தம் விளைப்பாராக" என்று கூறுகின்றது.

இந்தக் காட்சி மாலைக்காலத்தினை வர்ணிக்கின்றது. மாலைக் காலத்தில் முனிவர்கள் சூரியனையும் அவனுள் பிரகாசிக்கும் சிவ பெருமானையும் வணங்குவதைக் குறிப்பிடுகிறது. இதற்கு இணையான தமிழ் மறையான தேவாரப் பாடலை இனிக்காணலாம்.

அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கனாவான் அரன்வுரு அல்லனோ
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினையார் கன்மனமாவரே

(திருநாவுக்கரசர்-ஆதி புராணக்குறுந்தொகை)



இதன் பொருள்:- மாலைக்காலத்தில் (அருக்கன் எனப்படும்) சூரியனை அனைவரும் வணங்கு கின்றனர். அந்த சூரியவடிவம் சிவபெருமான் அல்லவோ? இருக்கு முதலான நான்கு மறைகளும் ஈசனைத்தான் தொழுகின்றன என்ற கருத்தை அறியாதவர் கல் மனத்தைக் கொண்ட மூடரல்லவோ? என்பதாகும்.

மேலும் தைத்ரீய ஆரணியகம் எனும் உபநிஷதம், அண்டகடாகத்தைச் சூழ்ந்த இருளுக்கு மேலே ஆதித்தினின் வண்ணமாகப் பிரகாரத்துடன் விளங்கும் பரமேசுவரனாகிய அவரை அறிந்தவன் சிவமாகவே ஆகிறான். இதைத் தவிர மோட்சத்திற்கு வேறு வழியே இல்லை என்று கூறுகிறது. இதற்கு இணையாக அப்பரடிகள் (சித்தத்தொகை திருக்குறுந்தொகையுள்)

அண்டமாரி ருளூடு கடந்தும்ப
ருண்டு போலுமோ ரொண்சுடரச்சுடர்
கண்டு இங்கு ஆர் அறிவார் அறிவாரெல்லாம்
வெண்திங்கள் கண்ணி வேதியரென்பரே

என்று அருளிச் செய்துள்ளார்.

இதன் பொருள்:- அண்டத்தின் மேல் ஓட்டையும் கடந்து பரவி நிற்கும் இருளில் சிவபெருமான் மிகுந்த கதிர்களையுடைய சூரியனைப் போல பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார். அவரை அறிந்தவர்கள் தலைசிறந்தவர்களாவர் என்பதாகும்.

இதனையொத்த எண்ணற்ற வடமொழி, மறைகளிலும் அதற்கிணையான தென்மொழி மறையிலும் சிவசூரியனைப் பற்றிய சிறப்புச் செய்திகளைப் பரவலாகக் காண்கின்றோம்.

சூரியப்பிரபை வாகனம்



சூரியப் பிரபை வாகனத்தில் மயிலாப்பூர் ஸ்ரீகாமாட்சிஉடனுறை வெள்ளீஸ்வரர் பவனி வருதல்

கிரக மண்டலங்களில் மிகவும் பிரகாசமானது சூர்ய மண்டலமாகும். சூரியனின் கதிர்களால் உலகம் வெம்மையும், உயிர்ச் சக்தியையும் பெறுகின்றன. சூரியன் சிவபெருமானின் வடிவமாகவே திகழ்பவன்.

இதனை உணர்த்தும் வகையில் பெருந் திருவிழாவின் இரண்டாம் நாள் காலையில் சூர்யப்பிரபை வாகனத்தில் சிவமூர்த்தியை எழுந்தருளி வைத்து விழாக்காண்கின்றனர்.

மார்கழித் திருவாதிரை நாளில் நடராச மூர்த்தியையும் சூர்யப் பிரபையில் எழுந்தருளி

வைத்து விழாக்காணும் மரபு பரவலாகக் காணப் படுகின்றது. உலகைப்படைக்க எண்ணிய சிவமூர்த்தி முதலில் ஒளி பொருந்திய சூரியனைப் படைத்தார். பின்னர் அம்மண்டலத்தில் வீற்றிருந்து உலகனைத் தையும் படைத்து ஐந்தொழில் விளங்கச் செய்தார். அந்நாளே திருவாதிரை ஆகும். எனவே ஐந்தொழிலைத் தனது திருவடிவால் விளக்கி நிற்கும் நடராசப் பெருமானை திருவாதிரை நாளில் சூர்ய மண்டலத்தில் எழுந்தருளி வைத்து விழாக்காணும் நெறி பின்பற்றப்படுகின்றது.

விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் உலகம் தோன்றுவதற்கு முன்பு அண்டவெளியில் ஒரு மாபெரும் வெடிப்பு உண்டாயிற்று என்றும், அதிலிருந்து முதலில் தோன்றியது. திருவாதிரை நட்சத்திர மண்டலம் என்றும் அதன் பிறகு படிப்படியாக அண்டவெளியில் பலவும் தோன்றின என்று குறித்துள்ளனர். இக்கருத்து புராணக் கருத்துடன் ஒத்துள்ளது அதிசயமானதாகும்.

சூர்யப்பிரபை வாகனத்தில் பெருமானைத் தரிசிப்பவர்கள் ஞானம், புகழ், ஆகியவற்றைப் பெறுவர் என்பது நம்பிக்கையாகும்.

ஸ்படிகலிங்கம்

சூரியனுக்கு உரிய கற்களில் தலைசிறந்தது ஸ்படிகமாகும். எனவே சிவசூர்யனாக விளங்கும் சிவபெருமானை ஸ்படிகக் கல்லில் லிங்கமாகச் செய்து வழிபடுகின்றனர்.

ஸ்படிகலிங்கத்தை வழிபடுவதால் இம்மையில் ஞானமும், மறுமையில் மோட்சமும் கிடைக்கும் என்பர். எனவே ஞானசார்யராக விளங்கும் துறவிகள் ஸ்படிக லிங்கத்தைப் பூஜை செய்கின்றனர்.

ஸ்படிக லிங்கத்தை இல்லறத்தார் பூசிப்பதால் ஞானமும் பொருட்செல்வமும் உண்டாகுமென்பர். எனவே சிவதீட்சை பெற்ற பலர் ஸ்படிகலிங்க பூசை செய்கின்றனர். நெருஞ்சிபேட்டை, சிதம்பரம், காளாஹஸ்தி முதலிய அனேக தலங்களில் ஸ்படிக லிங்கங்கள் நித்திய பூஜையில் சிறப்புடன் வழிபடப் படுகின்றன.

சூர்ய மண்டலத்தில் சிவசக்தி வடிவமாக பெருமான் அர்த்த நாரீசுவராக காட்சியளிக் கின்றார். இதனைக் குறிக்கும் வகையில் இயற்கையாகவே பல ஸ்படிக லிங்கங்களில் சிவப்பு அல்லது கருநீல நிறம் ஒரு பக்கத்தில் படர்ந்துள்ளதைக் காண்கிறோம். இத்தகைய லிங்கங்கள் அர்த்தநாரீசுவர ஸ்படிக லிங்கங்கள் என்றழைக்கப்படுகின்றன.

சூர்ய மண்டலத்தில் விளங்கும் உருத்திரரைத் தரிசனம் செய்ய அகத்தியர் கூறும் தியானம்

உருத்திர மூர்த்தியின் தரிசனம் பெற சித்தர்கள் பலவகையான மந்திரங்களை உபதேசித்துள்ளனர், அத்தகையவற்றில் அகத்திய முனிவர் பரிபூரணம் 1200 என்ற தமது நூலில் குறித்துள்ள மந்திரத்தை இப்போது காணலாம்.

உண்மையென்ற ருத்திரரைத் தியானிக்கக்கேள்
ஒரு மனதாய் மனதுகந்து "சிங் வங்"கென்று
தன்மையுடன் சன்னதியை நோக்கி மைந்தா
தாயான புருவமதிற் சார்ந்து நின்றால்
நன்மையுடன் ரவிமதிபோல் ருத்திரமூர்த்தி
நாமூன்று கலையுடனே நடுவே நிற்பார்
நுண்மையுட னவர் பதத்தைப் பூசித்தக்கால்
நீடூழி காலமொரு நாளாம்பாரே.

இதன்பொருள்:-

உரிய குருவின் மூலப் உருத்திரமந்திரமான "சிங், வங்" என்ற மந்திரத்தைப் பொருளும் முறையும் அறிந்து மனம் ஒன்றிச் சிவசந்நிதியில் நின்று புருவமத்தியில் தியானம் செய்ய உருத்திரமூர்த்தி அர்த்தநாரீசுவரராக பன்னிரண்டு கலைகளுடன் தோன்றுவார். அத்தரிசனம் கிடைக்கப் பெற்றவர் களுக்கு ஒரு ஊழிக்காலம் ஒரு நாளாகும். அதாவது (நீண்ட காலம் வாழ்வர் என்பதாகும்)

கங்கை கொண்ட சோழபுரத்துக் கமலயந்திரம்

சில தெய்வங்களுக்கு அவர்களுடைய உருவத்தை அமைக்காமல் அவர்களுக்குரிய யந்திரத்தை அமைத்து வழிபடுவது ஒருவகையான பூசை முறையாகும்.


இவ்வகையில் சிலகோடுகளையும், வட்டங் களையும் பீடத்தில் அமைத்து வழிபடும் வழக்கம் உள்ளது. இவை யந்திர ஸ்தாபனம், ஸ்ரீபீடம் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றன. இவ்வாறு சூரியனுக்கு அமைக்கப்பெற்ற யந்திரபீடம் ஒன்று கங்கைகொண்ட சோழபுரம் பெருவுடையார் ஆலயத்தில் உள்ளது. கங்கை கொண்ட சோழபுரம் கும்பகோணம் - ஜெயங்கொண்டம் பாதையில் அமைந்துள்ள ஊராகும்.

இதற்குக் கமலயந்திரம் என்பது பெயராகும். இதன் நடுவில் சூரியனை உருவமாக அமைக்காமல் நடுவில் பொகுட்டுடன் கூடிய பெரிய தாமரை மலராக அமைத்துள்ளனர். இம்மலர் இரண்டு அடுக்குகளைக் கொண்ட இதழ் வட்டங்களால் ஆனதாகும்.

இந்த மலரினைச் சுற்றி எட்டுத் திக்கிலும் சூரியனின் அஷ்டபரிவாரங்கள் உருவமாக அமைக்கப் பட்டுள்ளனர். இந்தப் பரிவாரங்களில் ஒருவரான அருணன் தேரைச் செலுத்தும் பாவனையில் மேற்கில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளார். தென்மேற்கு முனையில் தேஜஸ் சண்டி காணப்படுகின்றார். பீடத்தில் பூவேலைகளும் அதன் இடைவெளி களில் தேவகீதங்களை இசைக்கும் கணங்கள் காட்டப்பட்டுள்ளனர்.

இது அபூர்வமான கலைப்படைப்பாகும். சோழமன்னர்கள் சிவமூர்த்திகளின் தனிச் சிற்பங்களைச் செய்வதை விடுத்து அம்மூர்த்தி களோடு தொடர்புடைய புராணங் களையும் கருத்தில் கொண்டு புதிய நோக்கில் தெய்வவடிவங்களை அமைத்தனர். அவ்வகையில் அமைக்கப்பெற்ற சிறப்பான சிற்பங்களே தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் சூர்யமண்டல உருத்திரரும்; இந்த சூர்ய மண்டலம் அல்லது சூர்ய சக்கரமுமாகும்.

இதில் தாமரை மலரே பிரதானமாகக் காட்டப்பட்டிருப்பதால் இதனைக் கமலயந்திரம் என்று கூறுகின்றனர். இதில் எட்டுதிக்கிலும் அஷ்டபரிவாரங்கள் அமைந்திருப்பதை எட்டு கிரகங்கள் என்பதாகக் கொண்டு நடைமுறையில் இதனை நவக்கிரகம் என்றே எழுதியும் பேசியும் வருகின்றனர். இக்கருத்து ஆய்வுக்குரியதாகும்.



கமலயந்திரம் - கங்கைகொண்ட சோழபுரம்

காயத்திரி மந்திரத்தின் உட்பொருள் சிவபெருமானே

அனைத்து மந்திரங்களுக்கும் தாயான காயத்திரி மந்திரத்தின் உட்பொருள் சிவபெருமானே என்பது சைவர்களின் கொள்கையாகும்.

பிறப்பால் வைணவரான கஞ்சனூர் ஸ்ரீ ஹரத்தத்த சிவாச்சாரியார் நெருப்பில் பழுக்காச்சிய முக்காலிமேல் அமர்ந்து சிவபெருமானே பரம்பொருள் என்று கூறி அதற்கு ஆதாரமாக 25 செய்திகளைப் பட்டியலிட்டு ஒரு பாடலாகப் பாடியுள்ளார்.

அது சுலோகபஞ்சகம் என்று வழங்குகின்றது. அதனைத் தமிழில் மொழிபெயர்த்து "சுலோக பஞ்சக விஷயம்" என்ற பெயரில் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்துள்ளார்.

இதில் முதற்பொருளாக சொல்லப் பட்டிருப்பது காயத்திரிக்கு உரியபொருள் சிவபெருமானே என்பதாகும்.

காயத்திரி மந்திரம் என்பது,

ஓம் தத் சவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந: ப்ரசோதயாத் । என்பதாகும்.

இதன்பொருள் : ய - எவன், ந - நம்முடைய, திய - புத்திகளை, ப்ர - நன்றாக, சோதயாத் - நடத்துவானோ, தத் - அந்த, ஸவிதா - சூரியனில் உள்ள பர்க் - பர்கனாகிய தேவஸ்ய - தேவனுடைய வரேண்யம்-மஹிமையை, தீமஹி- தியானிப்போம்.

இதன் கருத்து சூரியனிடத்தில் ஒருதேவன் இருக்கின்றான். அவர் பெயர் பர்க்கன். அந்தப்பர்க்க தேவனை தியானிக்க வேண்டும் என்பதாகும்.

மைத்ராரண்ய உபநிஷதம் பர்கன் என்பது சிவபெருமானுக்கு உரியபெயர் என்று கூறுகிறது. மேலும் இதில் ப-உலகங்களை விளக்கி, ர - எல்லா உயிர்களுக்கும் இன்பம் விளைவித்து, க - எல்லா உயிர்களையும் அடக்கி ஆளுவதால் பர்க்கன் என்பது அச்செயலைப் புரியும் சிவபெருமானுக்கே உரியது என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

ஆதித்ய ஸ்தோத்ர ரத்னம்

அடையபலம் மகான் அப்பைய்ய தீட்சதரால் இயற்றப்பட்டது ஆதித்ய ஸ்தோத்திர ரத்னமாகும். இது 14 பாடல்களையும் ஒரு பலச்சுருதியையும் கொண்டுள்ளது.

இதில் 12 வது பாடல் சூரியனை சிவ பெருமானின் வடிவமாகப் போற்றுகின்றது. அதனை இங்கு காணலாம்.

ஆதித்யே மண்டலார்ச்சிக புருஷ
விபிதயா தியந்த மத்யாகமாத்மந்
யாகோபாலங்கனாப்யோ நயநபத ஜுஷா
ஜியோதிஷா தீப்யமானம் ।
காயத்ரி மந்த்ர ஸேவ்
யம் நிகில ஜநதியாந்
ப்ரேரகம் விச்வரூபம்
நீலக்ரீவம் திரிநேத்திரம் சிவம் அநிசம்
உமா வல்லபம் ஸம்சிரயாமி ।

இதன் பொருள் :- சூரியன் உருவில் விளங்கி ஒளிர்பவனும் உலக உயிர்களைத் தோற்றம் முதல் அழிவு வரை பேணி வளர்ப்பவனும், வேள்வித்தீய்ய ஒத்த தன் கண்களால் அனைத்து ஒளிகளையும் பிரகாசிக்கச் செய்பவனும் ; காயத்திரி மந்திரத்தால் வணங்கப் படுபவனும் அறிவை இயக்குபவனும். உலகினைத் தன் வடிவாய்க் கொண்டவனும் நீலகண்டமும் மூன்று கண்களையும் கொண்டு உமையொரு பாகனாக விளங்கும் சிவபெருமானை இடைவிடாது சிந்திக்கின்றேன் என்பதாகும்.



சூரியன் வழிபட்ட திருத்தலங்கள் - 1

சூரியன் சிவபெருமானை வழிபட்டுப்பேறு பெற்றத் திருத்தலங்கள் அவன் பெயராலும் அவனுடைய பரியாயப் பல்வகைப் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் ஆதித்திய புரங்கள், பாஸ்கரபுரிகள், பருதிபுரம், சூரியக்ஷேத்திரம் ஞாயிறு, தலைஞாயிறு என்றுப் பலதிருத்தலங்கள் விளங்குகின்றன. இவை இரண்டு வகைப்படும்.

இவற்றில் முதல் வகையான திருத்தலங்கள் சூரியன் தேவவடிவில் இருந்து ஆகமங்களில் கூறியபடி சிவலிங்கத்தை அமைத்து வழிபட்டு பேறு பெற்றத் திருத்தலங்களாகும். இவை மங்கலக்குடி, பருதிநியமம், திருநாகேசுவரம் போன்றவை களாகும்.

இரண்டாவது வகையில் அமைபவை ஆண்டின் சிலநாட்களில் சூரியன் தன் ஒளிக்கதிர்களால் கோபுரவாயில், பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றைத் தாண்டிச்சென்று மூலவராகிய லிங்கத்தை ஜோதிமயமாக்கும் திருத்தலங்களாகும். இவற்றில் முதல்வகைத் திருத்தலங்களை இப்பொழுது காணலாம்.

கச்சபேசமும் சூரிய வழிபாடும்

காஞ்சீபுரத்தில் அமைந்துள்ள பெரிய ஆலயங்களில் ஒன்று கச்சபேசுவரர் ஆலயமாகும். இங்கு முருக்க மரத்தின் நிழலில் ஜோதிலிங்கமாக கச்சபேசுவரர் எழுந்தருளியுள்ளார்.

இவரைச் சூரியன் வழிபட்டுப் பேறு பெற்றான் என்பர். அவன் இங்கு ஒரு தீர்த்தம் அமைத்து ஜோதிலிங்கமான கச்சபேசப் பெருமானுடன் இஷ்டசித்தீசுவரர், ஞானசித்தீசுவரர், யோகசித்தீசுவரர், தர்மசித்தீசுவரர், வேதசித்தீசுவரர் ஆகிய லிங்கங்களையும் எழுந்தருளி வைத்து வழிபட்டு எண்ணியதை எல்லாம் அடைந்தான் என்பர்.

இங்கு சூரியன் அமைத்த குளத்தின் நான்கு பக்கங்களும் முறையே இஷ்டசித்திதீர்த்தம், ஞானசித்தி தீர்த்தம், யோகசித்தி தீர்த்தம், வேதசித்தி தீர்த்தம் எனவும் அதன் மையப்பகுதி சூரியதீர்த்தம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இக்குளத்தின் தென்கிழக்குப் பகுதியில் பெரிய விசாலமான முற்றத்தில் பஞ்ச சந்தி விநாயகர், துர்க்கை, பைரவர், சூரியன், ஐயனார் ஆகிய ஐந்து சந்நிதிகள் அமைந்துள்ளன. தென்புறம் கச்சபேசர் ஆலயமும் தென்மேற்கு முனையில் முருக்க மரமும் அதன்கீழ் கச்சப வடிவத்தில் திருமால் சிவலிங்கத்தை வழிபடும் ஐதீகச் சிற்பமும், தென்கரையில் இஷ்டசித்தீச்சரமும் அமைந்துள்ளன.


கருவறையில் ஜோதிர்லிங்கமாக கச்சபேசுவரர் எழுந்தருளியுள்ளார். அவருக்குப் பின்புறம் சோமாஸ்கந்தர் அமைந்துள்ளார்.

இக்கோயிலில் சூரியன் விருச்சிக ராசியில் ஆட்சி பெற்று விளங்கும் கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகளும், திருவிழாக்களும் நடைபெறுகின்றன. அன்று ஏராளமான மக்கள் இங்கு மண்டை விளக்கு எடுத்தல் என்னும் நேர்த்திக் கடனைச் செலுத்துகின்றனர்.

இந்நாட்களில் கச்சபேசுவரர் (சோமாஸ்கந்தர்) திருவிழாக்காண்கின்றார்.

கார்த்திகை மாதம் முழுவதும் சூரிய உதயத்தில் இங்கு நீராடி ஜ்யோதிர்லிங்கத்தை வழிபட்டுச் சூரியனை வழிபடுபவர் பூர்வீக சொத்துக்களை அடைவதுடன் நோய்நொடி இன்றி வாழ்வர். குறிப்பாக கண்ணில் நோயுள்ளவர்கள் இவ்வாறு ஞாயிற்றுக் கிழமைகளில் வழிபட்டால் கண் சம்பந்தமான நோய்கள் இப்பிறவியில் நீங்குவதுடன் இனிவரும் பிறவிகளிலும் வராது என்பது நம்பிக்கையாகும்.

மயூரசர்மன் என்னும் கௌடதேசத்து மன்னன் ஒருவன் வடமொழி இலக்கியங்களில் பெரும்புலமை படைத்தவனாக இருந்தான். அவனுக்கு ஒரு சமயம் வினைவசத்தால் இரண்டு கண்களும் பழுதாகிப் பார்வை போய்விட்டது. அவன் பல இடங்களுக்கும் சென்று இறுதியில்



காஞ்சீபுரத்தை அடைந்தான். அவன் இங்குள்ள சூரிய தீர்த்தத்தின் மகிமையைக் கேள்வியுற்று இதில் முறைப்படி நீராடி சூரியனையும் கச்சபேசரையும் வணங்கிப் போற்றி மீண்டும் தமது பார்வையை அடைந்தான் என்று வரலாறு கூறுகின்றது.

அதன் பயனாக அவர் சூரியன் மீது இயற்றியதே "சூர்ய சதகம்" என்ற நூலாகும். இதனை "மயூக சதகம்" எனவும் அழைப்பர்.

சூர்ய சதகத்தின் சிலபாடல்களும் வரலாற்றுக் குறிப்பும் இக்கோயிலில் கல்வெட்டாக வெட்டப் பட்டுள்ளதென்பர்.

'சூரியனுக்கு உரியது அரசமரமாகும். இங்கு அவனருளால் உண்டான பெரிய அரசமரம் உள்ளது. அதன் கீழே குழந்தைப்பேறு இல்லாதவர்கள் நாகப்பிரதிஷ்டை செய்து வழிபட்டால் பூர்வஜென்ம வினைகள் தீர்ந்து குழந்தைப்பேறு உண்டாகும் என்பது நம்பிக்கையாகும்.

மங்கலன் வழிபடும் மங்கலக்குடி

மங்கலக் குடியீசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வனும் விண்ணோடு மண்ணும்
சங்கு சக்ரதாரி சதுமுகன் (நேர்
அங்ககத்தியனும் அர்ச்சித்தாரன்றே

- அப்பர்குறுந்தொகை

தேவாரத்தில் சிவபெருமானைச் சூரியன் வழிபட்டதாக குறிப்புள்ள தலங்கள் சிலவேயாகும். அவற்றிலொன்றே திரு மங்கலக்குடியாகும். இங்கு சூரியனும் எட்டு கிரகங்களும் சிவபெருமானை வழிபட்டன என்பர்.

அதற்கான புராணக்கதை வருமாறு.

ஒரு சமயம் காலவர் எனும் முனிவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு நாள் தவத்தில் ஆழ்ந்திருந்த போது தமக்கும் தனது சந்ததிகளுக்கும் கிரகநிலை மாறுதல்களால் கடுந்துன்பம் நேரப்போவதை அறிந்தார். எனவே நவக்கிரகங்களைக் குறித்து தவம் செய்தார். நவக்கிரகங்கள் அவர் முன்னே தோன்றின. அவர் அவற்றை மகிழ்வித்து வணங்கித் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் துன்பம் நேராதிருக்க வரம் வேண்டுமென்று கேட்டார். நவக்கிரக நாயகர்களும் அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள்பாலித்தனர். இதையறிந்த நவக்கிரக தேவதைகளின் அதிபர்களும், காலதேவனும் கோபம் கொண்டனர். ஒருவனின் விதியை மாற்றும் அதிகாரம் உங்களுக்கு இல்லை. வரம்பு மீறி வரமளித்ததால் நீங்கள் குஷ்டநோய் பிடித்துத் துன்புறுங்கள் என்று சாபம் கொடுத்தனர். இதனால் வருந்திய நவக்கிரகங்கள் பூமிக்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தனர். அவர்களுக்கு சிவபெருமான் அருள் புரிந்து நோய் நீக்கம் செய்தார்.

மங்கலனாகிய சூரியனால் வழிபடப்பட்டதால் இவ்வூர் மங்கலக்குடி என்றானதென்பர். இங்கு சூரியனால் வழிபடப்பட்ட பெருமான் பிராண வரதேசுவரர் என்றும் அம்பிகை மங்கலநாயகி என்றும் அழைக்கப்படுகின்றார்கள். இதன் அருகில் தான் சூரியனார் கோயில் அமைந்துள்ளது. இங்கு வழிபட்ட பின்னரே சூரியனார் கோயிலில் வழிபாடு

செய்ய வேண்டும் என்பது நியதியாகும்.

இங்கு கார்த்திகை மாதம் ஞாயிறு தொடங்கி (மொத்தம் பன்னிரண்டு) ஞாயிற்றுக் கிழமைகள் தொடர்ந்து இங்குள்ள மங்கல தீர்த்தத்தில் மூழ்கி சிவபெருமானுக்கு வெள்ளெருக்கு இலையில் தயிர் அன்னத்தை நிவேதித்து வழிபட்டால் தொல்லை தரும் பரம்பரை வியாதிகளில் இருந்து விடுபடலாம் என்பது நம்பிக்கையாகும்.

காசி நகரும் ஆதித்ய வழிபாடும்

சூரியன் சிவபூசை செய்த வடஇந்தியத் தலங்களில் முதன்மையானது காசி நகரமாகும். இங்கு அவர் பன்னிரண்டு இடங்களில் பன்னிரண்டு பெயர்களில் எழுந்தருளியுள்ளார்.

காசிக்கண்டம் எனும் நூலில் காசியில் உள்ள பன்னிரண்டு ஆதித்யர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

இவை

1. லோலார்க்கர்
2. உத்ரார்க்கர்
3. ஸாம்பாதித்யன்
4. திரௌபதி ஆதித்யன்
5. மயூகாதித்யன்
6. கஷோல்காதித்யர்
7. அருணாதித்யர்
8. விருத்தாதித்யர்
9. கேசவாதித்யர்
10. விமலாதித்யர்
11. கங்காதித்தியர்
12. யம ஆதித்யர்

என்பனவாகும். இவை சூரியனின் பல்வேறு பெயர்கள் இல்லை. சூரியனைப் பன்னிரண்டு பேர்கள் சிறப்புடன் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றதால் அவர்கள் பெயரால் சூரியன் அழைக்கப்படுகின்றார் என்பர்.

இவர்களை ஞாயிற்றுக்கிழமைகளில் சென்று வணங்க வேண்டியது முறையாகும். ஞாயிற்றுக் கிழமையோடு சஷ்டியும், சப்தமியும் கூடி வந்தால் அதனை பானுசஷ்டி என்றும் பானுசப்தமி என்றும் கூறுவர். பானுசப்தமியை பத்மயோகம் என்பர். இது ஆயிரம் சூரியகிரணங்களுக்கு ஒப்பானதாகும்.

இனி இவற்றின் விளக்கத்தைக் காணலாம்.

1. லோலார்க்கர் எனும் சூரியன் நமது மனசஞ் சலங்களை தமது ஞானத்தால் தீர்ப்பதால் இப்பெயர் பெற்றார் என்பர். இவருடைய கோயில் அசி சங்கமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற "லோலார்க்க" குண்டத்தின் அருகில் உள்ளது. இந்த இடத்தில் பெரிய குளம் உள்ளது. அதன் மையத்தில் சிறு குளம் உள்ளது. இதில் நீராடி சூரியனை வழிபடுகின்றனர். ஞாயிற்றுக்கிழமையும் சஷ்டிதிதியும் கூடிவரும் பானுசஷ்டி நாளில் இவரை வழிபடுவது புண்ணியம் தரும் என்பர்.

2. காசிக்கு வடக்கில் அமைந்த சூரியதீர்த்தமே உத்திரஅர்க்க குண்டமாகும். இது இந்நாளில் அலேப்புராவில் உள்ள வக்ரியா குண்டத்திற்கு அருகில் உள்ளது. இங்குள்ள சூரியன் உத்திரஅர்க்கர் எனப்படுகின்றார். இங்கு ஒரு பெண்ணும் ஆடும் தவம் செய்து பேறு பெற்றன. எனவே, இது ஆட்டுக் குண்டம் என்று பொருள்பட (வக்ரி – ஆடு) வக்கிரிக் குண்டம் எனப்பெயர் பெறுவதாயிற்று.

3. கிருஷ்ணனின் மகனாகிய சாம்பன் ஒரு முறை தனது தந்தையால் குஷ்டரோகம் எனும் நோய் அடையுமாறு சபிக்கப்பெற்று பின்பு அவருடைய அறிவுரையின் பேரில் காசி சென்று சூரியனை வணங்கிப் பொன்னுடல் பெற்றான். அவனால் வணங்கப் பெற்ற சூரியன் அவன் பெயரால் சாம்பாதித்தியன் எனும் பெயரில் விளங்குகின்றார். இவருடைய ஆலயம் சூரியகுண்டம் எனப்பெயர் பெற்று விசுவநாதர் கோயிலுக்கு மேற்கில் உள்ளது.

4. பாண்டவர்களின் மனைவியான திரௌபதி காசியில் சூரியனை வழிபட்டு அட்சயபாத்திரத்தைப் பெற்றாள். அதனால் இவர் திரௌபதி ஆதித்தியர் எனப்படுகின்றார். இவருடைய கோயில் விசுவநாதர் கோயிலுக்கு அருகில் அட்சய வடத்தின் கீழ் அமைந்துள்ளது.

5. ஒரு முறை சூரியன் காசியில் கபஸ்தீசுவரர் என்ற பெயரில் சிவபெருமானையும் மங்கள கௌரி எனும் பெயரில் அம்பிகையையும் அமைத்து பூசித்து ஒரு லட்சம் ஆண்டுகள் கடுந்தவம் இயற்றினார். அவருக்குக் காட்சியளித்த சிவபெருமான் ஒளிமண்டலமாக விளங்கும் அவருக்கு மயூகன் என்று பெயரிட்டு அருள் புரிந்தார். அன்று முதல் இவர் மயூகாதித்தியன் என்ற பெயரில் பஞ்சகங்கா காட் அருகில் உள்ள மங்கள கௌரி கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

6. கஷோல்கா ஆதித்யர், புகழ்பெற்ற திரிலோசனர், காமேசுவரர் ஆலயத்தின் பிராகாரத்தில் எழுந்தருளியுள்ளார். அவர் கருடனாலும் அவன் தாயான வினதையாலும் ஆராதிக்கப் பெற்றவர். எனவே அவள் பெயரால் வினதாதித்யர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

7. ஒரு சமயம் காஸ்யபனின் மனைவியாகிய அதிதி மூன்று முட்டைகளைப் பெற்றாள். அவற்றில் முதல் முட்டையில் இருந்து ஆந்தை பிறந்தது. இரண்டாவது முட்டையில் இருந்து அருணன் (பூரணமாக வளராமல்) கால்கள் இன்றிப்பிறந்தான். அவனுக்குத் பிறகு மூன்றாவது முட்டையில் இருந்து தோன்றியவனே கருடபகவான் ஆவார். இவற்றில் ஆந்தையும் அருணனும் காசி சென்று வழிபட்டனர். அருணனின் வழிபாட்டை ஏற்றுக்கொண்ட சூரியன் அவனைத்தமது தேரோட்டியாக ஏற்றுக் கொண்டார். அவனால் வணங்கப்பட்ட சூரியன் அருணாதித்யன் என்றழைக்கப்படுகின்றார். இவருடைய ஆலயம் திரிலோசனர் ஆலயத்தில் உள்ளது.

8. சகல வேதங்களிலும் வல்ல விருத்தன் என்பவன் சூரியனை நோக்கி தவம் செய்து மாறாத இளமையைப் பெற்றான். அவனுக்கு அருள் செய்த சூரியன், விருத்தாதித்யன் எனும் பெயரில் பீர்காட் எனுமிடத்தில் அனுமார் கோயிலுக்கு அருகில் ஒரு வீட்டில் இருக்கின்றார்.

9. கேசவனாகிய திருமால் அருளால் சூரியன் ஒரு லிங்கம் அமைத்து வழிபட்டு தானும் கேசவாதித்யன் எனும் பெயரில் எழுந்தருளினார். இவர் வருணா சங்கமத்தில் கேசவர் கோயிலுக்குள் அமைந்துள்ளார்.

10. விமலன் என்பவன் குஷ்ட நோயால் துன்பம் எய்த உடனே காசிநகரை அடைந்து சிவலிங்கம் அமைத்து சூரியனையும், சிவபெருமானையும் வழிபட்டான். அவனுக்கு அருள் புரிந்த சூரியன் அவனுக்கு மட்டுமின்றி அவனுடைய பரம்பரைக்கே அந்நோய் வராது என்று அருள் செய்தான். அதனால் அவனுக்கு விமலாதித்யன் என்பது பெயராயிற்று. இவர் கதோலியாவுக்கு அருகில் உள்ள ஜங்கம் பாடியில் எழுந்தருளியுள்ளார்.

11. பகீரதன் தன் மூதாதைகளுக்கு சுவர்கம் அளிக்க வேண்டி வானுலக கங்கையை பூமிக்குக் கொண்டு வந்தான். கங்கையோடு விண்ணிலிருந்து மண்ணிற்கு வந்து காசியில் கங்கைக் கரையில் தங்கிய ஆதித்தின் கங்காதித்யன் எனப்படுகின்றார். இவருடைய ஆலயம் "லலிதா காட்" எனும் இடத்தில் உள்ளது.

12. சூரியனின் புதல்வனாகிய யமதருமன் காசியில் சூரியனுக்குக் கோயில் அமைத்து கடும் தவம் செய்து அரிய வரங்களைப் பெற்றான். யமனுக்கு அருள்செய்த சூரியனே யமாதித்தியர் எனும் பெயரில் சங்கடா காட் எனும் இடத்தில் எழுந்தருளியுள்ளார்.

இந்த பன்னிரண்டு ஆதித்யர் கோயில் களையும் அதனை யொட்டிய சிவாலயங்களையும் காசிக் கண்டம் விரிவாகக் கூறுகின்றது. காசியில் இவர்களைத் தரிசிப்பது அர்க்கயாத்திரை அல்லது சௌரயாத்திரை எனப்படும்.



சூரிய கோடீசுவரர்

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள கஞ்சனூரை ஒட்டி அமைந்துள்ள தலம் சூரியமூலையாகும். இந்நாளில் இது சூரிய மலை என்றழைக்கப்படுகிறது. இங்கு அமைந்துள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு சூரிய கோடீசுவரர் என்பது பெயராகும். உருத்திர கோடி என்பது போலவே கோடி சூரியர் வழிபட்டதால் இப்பெயர் வந்ததென்பர்.

பரிதி நியமம்

பரிதி என்றால் சூரியன் - நியமம் என்றால் கோயில். சூரியன் வழிபட்டுப் பேறு பெற்ற கோயில் பரிதி நியமம் என்று அழைக்கப்படுகின்றது என்பர். இந்நாளில் இக்கோயில் பருத்தியப்பர் கோயில் என வழங்குகிறது. சுவாமிக்கு பாஸ்கரேசுவரர் பருதியப்பர் என்ற பெயர்கள் வழங்குகின்றன.

இது தாங்கமுடியாத வெப்பத்துடன் விளங்கும் சூரியன் குளிர்ச்சியுடன் திகழச் சித்திரைமாதப் பௌர்ணமி நாளில் மணலைக் கூட்டிச் சிவலிங்கம் செய்து வழிபட்ட தலம் என்பர். சூரியனால் உண்டாக்கப் பெற்ற தீர்த்தம் ஆலயத்தின் முன்னேயுள்ளது. சூரியன் பூசித்ததை நினைவுகூறும் வகையில் பங்குனிமாதம் 18, 19, 20 ஆகிய தேதிகளில் சூரியக் கிரணங்கள் சுவாமியின் மீது படிகின்றன. அம்பிகையின் பெயர் மங்கலநாயகி என்பதாகும்.

இக்கோயிலைத் திருநாவுக்கரசர் "பருதி நியமத்தார் பன்னிருநாள்" என்று தமது கோயில் பதிகத்தில் குறிப்பிடுகின்றார். இதனை பன்னிருநாள் பருதிநியமம் என்று குறித்து பன்னிரண்டு நாட்கள் இங்கு சூரியன் வழிபட்டான் என்பர்.

இது தஞ்சாவூர் பட்டுக்கோட்டை சாலையில் தஞ்சையில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. ஒரு காலத்தில் இது சூரியனின் கோயிலாக இருந்து பின்னாளில் சிவன் கோயிலாக மாற்றப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கு கருவறைக்கு முன்பு அமைந்துள்ள நந்தி பலிபீடத்திற்கு பின்புறம் சூரியன் மூலவரை நோக்கி வணங்கும் பாவனையில் எழுந்தருளியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்கழுக்குன்றமான பாஸ்கரபுரி

சிவபெருமான் அருளால் தோன்றிய பன்னிரண்டு சூரியர்கள் 1. வைகருத்தன் 2. விவசுவான் 3. மார்த்தாண்டன் 4. பாஸ்கரன் 5. இரவி 6. லோகப்பிரகாசன் 7. சாக்கி 8. சுவிக்கிரமன் 9. ஆதித்தன் 10. சூரன் 11. அஞ்சுமாலி 12. திவாகரன் என்பவர்களாவர். இவர்களைத் துவாதச ஆதித்தியர்கள் என்றழைப்பர்.

ஒரு சமயம் இவர்கள் தங்களில் யார் உலகில் பணிசெய்வது என்று போட்டியிட்டுக் கொண்டனர். பிரமன் அவர்களை சித்திரை தொடங்கி மாதத்திற்கு ஒருவராகப் பணி செய்யும்படி ஆணையிட்டார்.

அவர்கள் அப்படிப் பணி செய்யும் காலத்தில் உதயவேளையில் மந்தேகர் முதலிய அசுரர்கள் தடைகளை உண்டாக்கினர். அவர்கள் மீண்டும் பிரமனை அடைந்து தமது குறையை முறையிட்டனர். அவர் அவர்களைத் திருக்கழுக்குன்றத்திற்குச் சென்று வழிபடும்படிக் கூறினார். அதன்படியே அவர்கள் உருத்திரகோடியாகிய திருக்கழுக் குன்றத்தை அடைந்து சிவபெருமானை வழிபட்டனர். அங்கு அவர்களுடைய பக்திக்கு இரங்கிய சிவபெருமான் அவர்கள் முன்பு தோன்றிகாட்சி யளித்து தடைகள் நீங்கி உதிக்க அருள்பாலித்தார்.

எனவே திருக்கழுக்குன்றத்திற்கு பாஸ்கரபுரி, தினகரபுரி, ஆதித்தியபுரி என்பன பெயராயிற்று. இதனைத் திருக்கழுக்குன்றத்து உலா. திருக்கழுக் குன்றபுராணம் முதலியவற்றால் அறியலாம்.


சூரியன் வழிபட்ட ஆவினன்குடி

ஒரு சமயம் தேவர்கள் அனைவரும் கூடி திருக்கயிலாய மலையை அடைந்து சிவ பெருமானைத் துதித்து நின்றனர். அப்போது மகதி என்ற யாழை ஏந்திய நாரதன் சூரியனை நோக்கி நீ ஒளிபரப்பாவிடில் உலக உயிர்கள் வருந்துமே என்றான். அதைக் கேட்ட சூரியன் அகங்காரம் கொண்டு அப்படித்தான் நான் ஒளிபரப்பவில்லை யென்றால் உலக உயிர்கள் அழியும் என்றான். இந்த அகங்காரத்தால் தன் கதிர்களை மறைத்துக்கொண்டு உலகத்தை இருளில் மூழ்கடித்தான்.

இதை அறிந்த சிவபெருமான் தனது கண்களை விழித்தார். இவ்வாறு நீண்ட காலம் கடந்தன. சூரியன் இல்லாமலேயே சிவனின் விழி ஒளியினால் இந்த உலகம் செழிப்புடன் நடைபெற்றது இதனை உணர்ந்த அவன் சிவபெருமானைப் பன்முறை வணங்கி ஆற்றாதவனாய் மண்ணுலகம் வந்து நெல்லி மரக்காட்டில் சிவலிங்கம் அமைத்து தவம் செய்தான். அவனாலும் காமதேனுவாலும், திருமகளாலும் போற்றப்பட்டதால் அப்பதி திரு+ஆ+இனன் குடி என்றாயிற்று. அதுவே பழனிமலையின் அடிவாரத்தில் திருவாவினன்குடியாக இன்று விளங்கி வருகிறது.

- பழனித்தலபுராணம்.

திருச்செம்பொன்பள்ளி நாதர்



உருத்திரகோடியாகிய திருக்கழுக்குன்றத்தில் பன்னிரண்டு சூரியர்கள் வழிபட்டார்கள் என்புதைக் கண்டோம். அவர்கள் வழிபட்ட இன்னொரு சிறப்பான தலம். திருச்செம்பொன்பள்ளியாகும்.

இந்நாளில் செம்பொன்னார் கோயில் என அழைக்கப்படும் இத்தலம் மயிலாடுதுறையில் இருந்து தரங்கம்பாடி செல்லும் வழியில் உள்ளது.

பன்னிரண்டு சூரியர்கள் இங்குவந்து ஒருதீர்த்தம் அமைத்தனர். அதுவே இந்நாளில் சூர்ய புஷ்கரணி என்றழைக்கப்படுகிறது என்பர். இதன் மத்தியில் இந்திரனால் உண்டாக்கப்பட்ட கிணறு ஒன்றும் உள்ளதென்பர்.

இப்பன்னிருவர் சூர்ய பூசை செய்து பேறு பெற்றதை விளக்கும் வகையில் சித்திரை மாதம் (ஏழாம் தேதி முதல் பதினெட்டாம் தேதி வரை) பன்னிரண்டு நாட்களுக்கு சூர்யனின் கதிர்கள் கருவறையில் விழுந்து சிவலிங்கத்தை ஒளிமயமாக்குகின்றது. இக்காட்சி கண்டு களிக்கத்தக்கதாகும்.

இந்நாட்களையொட்டி ஒன்பது நாட்கள் பெருந்திருவிழா நடைபெற்று வந்துள்ளது. இதற்கு சௌர மகோற்சவம் (சூர்யப் பெருந்திருவிழா) என்பது பெயராகும். இதனை சூரியனே சிவபெருமானுக்கு நடத்தியதாக ஐதீகம்.

சூர்யனுக்கு உரிய உலோகம் தங்கம் எனப்படும் பொன்னாகும் அதன் பெயரால் இந்த ஊருக்கு பொன்கோயில் என்று பொருள்பட செம்பொன்பள்ளி, செம்பொன்னார் கோயில் எனவும் இறைவனின் பெயர் சொர்ணபுரீசுவரர் எனவும் அமைந்திருப்பதும் எண்ணத்தக்கதாகும்.

சூரியன் வணங்கும் சோற்றுத் துறையார்

அங்கதிரோன் அவனை அண்ணலாய் கருத வேண்டா
வெங்கதிரோன் வழியே போவதற்கு அமைந்து கொண்மின்
அங்கதிரோன் அவனை உடன்வைத்த ஆதிமூர்த்தி
"செங்கதிரோன் வணங்கும்" திருச்சோற்றுத் துறையனாரே.

- திருநாவுக்கரசர்

தஞ்சை மாவட்டத்தில் திருஐயாற்றை ஒட்டி அமைந்த தலம் திருச்சோற்றுத் துறையாகும். இங்கு சூரியன் பெருமானுக்கு வழிபாடு செய்து பேறு பெற்றான் என்று அப்பரடிகள் பாடியருள்கின்றார். சூரியன் இப்பெருமானுக்கு பெருந் திருவிழாவை நடத்தி மகிழ்ந்தான் என்று தல புராணம் கூறுகின்றது. இங்கு ஆதித்த சோழன் பலதிருப்பணிகளைச் செய்துள்ளான் என்பர்.

ஆதித்தனோடு அரவம் வழிபடும் நாகேச்சுவரம்

கும்பகோணத்தை அடுத்த திருநாகேசுவரம் எனும் தலத்தில் சந்திரனும், துவாதச ஆதித்யர்களும் வழிபட்டுப் பேறுபெற்றார்கள். அவர்களையடுத்து அவர்களுக்குப் பகையான நாகங்களும் இங்கு வழிபட்டன. இதனால் இதனை பகைமறந்து பரமனடி தொழும் இடம் எனப்படும்.

இவ்வாறு சந்திரசூரியர்களும், நாகமும் தொழுததை தமிழ்மறையான தேவாரம்,

'ஞாயிறும், திங்களும் கூடி வந்தாடு நாகேச்சுரம்' எனவும்,

சந்திரனோடு சூரியர் தாமுடன்
வந்து சீர் வழிபாடுகள் செய்தபின்
ஐந்தலை அரவின் பணி கொண்டருள்
மைந்தர்போன் மணி நாகேச் சரவரே.

— அப்பர் சுவாமிகள்

என்றும், கூறிமகிழ்கிறது.

ஆதவன் வழிபடும் திருஆடானை - ஆதிரத்தினேசுவரர்

அதிதியின் புதல்வனான ஆதித்தன், பிரம்மனைக்குறித்து தவம் செய்தான். அவர் அவனுக்கு அனேக வரங்களைத் தந்து ஒற்றைச் சக்ரத்தேரையும் குதிரையையும் கொடுத்து மேருமலையை வலம்வந்து உலகிற்கு ஒளியூட்டும் படி ஆணையிட்டார். அப்படி அவன் தன்பணியைத் தொடங்கும் போது அவனுடைய தேர் நகரவில்லை. இதனால் வருந்திய அவன் மீண்டும் பிரம்மனைக்குறித்து தவம் செய்தான். பிரமன் அவன் முன் தோன்றி, "அன்பனே, சிவபெருமானைத் தியானியாது தொடங்கும் செயல் எவ்வாறு நன்கு நடைபெறும்", என்று சொல்லி அவனுக்கு பஞ்சாட்சர உபதேசம் செய்து பூமியில் நவரத்னமயமான லிங்கத்தை பூசித்து சிவனருள் பெருவாய் என்றார்.

அதன்படியே அவன் பாரிஜாதவனம் என்று புகழப்பெறும் திருவாடானைக்கு வந்து பாரிஜாத மரத்தின் கீழ் நீலரத்தினத்தால் சிவலிங்கத்தையும் சினேகவல்லி என்ற அம்பிகையையும் அமைத்து தன்பெயரால் ஒரு தீர்த்தத்தையும் அமைத்து வழிபட்டான். அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் காலச்சக்கரம் சுழலும் வரை அவன் சூரிய பதவியில் இருந்து சிறப்படைய அருள் பாலித்தார் என்பர்.

மேலும் இங்கு சூரியன் காசியில் வணங்கியது போலவே பன்னிரண்டு லிங்கங்களை அமைத்து வழிபட்டான் என்று தலபுராணம் கூறுகின்றது. அவை சூசகலிங்கம், கோடீசுவரர் லிங்கம், மாவடிநாதர், ஜோதீஸ்வரர், அந்தரங்கேசர், முக்தேசுவரர், பத்ரீசுவரர், சக்தீசுவரர், வைடூர்யலிங்கம், கோமேதலிங்கம், கபஸ்தீசுவரர், கிரணேசுவரர் என்பனவாகும். காசியில் உள்ளது போலவே இங்கும் கபஸ்தீசுவரர் எனும் பெயரில் லிங்கம் இருப்பதையும் இங்கு காண்க. ஆனால் இந்நாளில் இவை எங்கெங்கு உள்ளன என்பதை அறியமுடியவில்லை.

இத்ததைகய சிறப்பு பெற்ற திருவாடானை சிவகெங்கையில் இருந்து 33 மைல்தொலைவிலும் காளையார் கோயிலிலிருந்து 21 மைல் தொலைவிலும் உள்ளது.

அருணன் தொழும் ஆனைமேல் அழகியான்

திருமீயச்சூர் எனும் தலத்தில் சூரியன் மேகநாதர் எனும் சிவபெருமானையும் செளந்தர நாயகியாகிய் அம்பிகையையும் ஐராவணம் எனும் யானைமீது அமர்த்தி வழிபட்டான் என்பர். இதன்ன நினைவு கூறும் வகையில் இங்குள்ள கருவறை தூங்கானை மாட வடிவில் உள்ளது. அம்பிகையும் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக் கின்றார். திருமீயச்சூர் மயிலாடுதுறை-திருவாரூர் சாலையில் உள்ள பேரளத்தில் இருந்து கம்பூர் செல்லும் சாலையில் 2 கி.மீட்டரில் உள்ளது.

சூரியன் வழிபட்ட திருத்தலங்கள் - 2

சூரியன் தேவவடிவில் இருந்து சிவலிங்கம் அமைத்து வழிபட்ட திருத்தலங்கள் சிலவற்றை முதற்பகுதியில் கண்டோம். இரண்டாவதான இந்தப்பகுதியில் பிரகிருதி சூரியன் தன் ஒளிக்கிரணங்களால் காலை உதயவேளையில் கோபுரவாயில் மண்டபங்களைக் கடந்து கருவறையில் நிறைந்து சிவலிங்க மூர்த்தியை ஜோதிமயமாக்கும் திருத்தலங்களைக் காணலாம். இவைகளும் பாஸ்கரக்ஷேத்திரங்கள் என்றே வழங்குகின்றன. இத்தலங்களில் சூரியனின் ஒளி ஆண்டுதோறும் குறிப்பிட்ட சில நாட்களில் கருவறையிலுள்ள சிவலிங்கத்தின் மீது விழுகின்றன. சிலர் இது கட்டிடக்கலை நுணுக்க அமைப்பால் அமைந்த விந்தை என்பர், என்றாலும் பக்திமான்கள் சூரியன் தன் கதிமாறாமல் சிவபெருமானை வழிபாடு செய்யும் நிலை என்றே எண்ணுவர்.

பெரும்பாலும் காலைவேளைகளில் மட்டுமே இவ்வாறு ஒளிக்கதிர்கள் இறைவன் மீது படியும் வகையில் அமைந்துள்ளதைக் காண்கிறோம். சில மேற்கு நோக்கிய தலங்களில் மாலை நேரத்தில் ஒளிவிழும்படியாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மூன்று நாட்கள் மட்டுமே சூரியஒளிவிழும் வகையில் பல கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருச்செம்பொன் பள்ளியில் பன்னிரண்டு நாட்கள் ஒளிவிழுகிறதென்கின்றனர். பொதுவாக ஆண்டிற்கு ஒரு முறையே இப்படி ஒளிவிழும் நிலை உள்ளது. அபூர்வமாக திருநெல்லிக்கா எனும் தலத்தில் ஐப்பசி மாதத்திலும், மாசி மாதத்திலும் ஆக இரண்டுமுறை கதிர்கள் விழும்படி அமைக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த அனைத்து தலங்களிலும் சிவலிங்கத் திருமேனியை மட்டுமே சூரியனின் கதிர்கள் ஒளியூட்டுகின்றன. பனையபுரம் எனும் தலத்தில் அம்பிகையின் பாதத்திலும் ஒளி வெள்ளம் சில நாட்கள் விழுவதைக் காண்கிறோம்.

இனி சூரியன் ஒளிக்கதிரால் வழிபாடு செய்யும் திருமுறைத்தலங்களை காணலாம். இதில் தலம், சூரியனின் கதிர்கள் லிங்கத்தின் மீது விழும் நாட்கள் சுவாமியின் பெயர் அம்பிகையின் பெயர் ஆகியன இடம்பெறுகின்றன.

1. மயிலாடுதுறையை அடுத்த அன்னியூரில் பங்குனி 24 முதல் 28 முடிய ஐந்து நாட்கள் - ஆபத்சகாயேசுவரர் - பெரியநாயகி.
2. கும்பகோணம் நாகேசுவரசுவாமி - சித்திரை 11,12,13, ஆகிய மூன்று நாட்கள். நாகேசுவர சுவாமி-பெரியநாயகி.
3. காரைக்கால் அருகிலுள்ள கோயிற்பத்து எனப்படும் திருத்தெளிச்சேரி-பங்குனி 13 முதல் பத்து நாட்களுக்கு - பார்வதீசுவரர் -சத்தியம்மை
4. தஞ்சை மாவட்டம் திருவாரூருக்கு தெற்கே உள்ள நெல்லிக்கா மேற்கு நோக்கிய சந்நிதியாக இருப்பது-ஐப்பசி தீபாவளி (கிருஷ்ண பட்ச சதுர்த்தசி முதல் ஏழு நாள்ட்கள் - மாசி மாதம் 18 தேதி முதல் ஏழுநாட்கள் ஆக ஆண்டில் இருமுறை நெல்லிவனநாதர்-மங்களநாயகி
5. தஞ்சை மாவட்டம் - சாலியமங்கலத்தை அடுத்து பருதியப்பர் கோயில் என வழங்கும் பருதிநியமம் - பங்குனி 19 ஆம் தேதி-மருத்சுவரர் மங்களநாயகி
6. விழுப்புரத்தை அடுத்த பனையபுரம் எனப்படும் புறவார் பனங்காட்டூர் சித்திரை 1 முதல் 7 ஆம் தேதி வரை - பனங்காட்டீசுவரர் -புறவம்பை
7. தஞ்சாவூரிலிருந்து ஒன்பது மைல் தொலைவில் உள்ள கண்டியூர் - மாசி 13,14,15 ஆகிய நாட்களில் மாலை 4-45 முதல் 6.10 வரை - வீரட்டேசுவரர் மங்களநாயகி
8. திருவாரூரை அடுத்த பேரளம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மீயச்சூரில் சித்திரை - 21 முதல் ஏழு நாட்கள்-மேகநாதர்-சௌந்தரநாயகி. இங்கு ரதசப்தமியில் விழா கொண்டாடப்படுகின்றது.
9. மகேந்திரபள்ளியில் - பங்குனி 1 முதல் 7 வரை - திருமேனி அழகர் - சோம வடிவாம்பிகை. இங்கு கதிரவன் வழிபடுவதை சந்திரன், கதிரவன் எனத்தொடங்கும் சம்பந்தரின் பாடல் குறிக்கிறது.
10. இன்னம்பர் - கும்பகோணத்தை அடுத்துள்ளது தேவாரத்தலம் இனன் - சூரியன் இனன் வழிபட்ட தலம். எழுந்தறிநாதர்-சுகந்த குந்தளாம்பிகை.

இவைகளேயன்றித் திருமுறைத்தலங்களாக இல்லாத பரங்கிப்பேட்டை அகரம் திருமூலநாத சுவாமி கோயில், பிடாகம் சந்திரநாதசுவாமி கோயில் முதலிய எண்ணற்ற கோயில்களில் இத்தகைய சூரியக்கதிர் வழிபாட்டினைக் காணலாம்.

பாம்புபஞ்சாங்கம் என அழைக்கப்படும் மனோன்மணி விலாச அச்சுக்கூட பஞ்சாங்கத்தில் ஆடுதுறையில் சித்திரை 5,6,7 தேதிகளிலும் வேளூரில் புரட்டாசி 19,20,21 மாசி மாதத்திலும், உத்ரமாயூரம் வள்ளலார் கோயிலில் பங்குனி 1 முதல் 7 வரையிலும் திருநாவலூரில் பங்குனி 23 முதல் 27 வரையிலும் சூர்யபூஜை நடப்பதாகக் குறிக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.

ஆதித்தியனுக்கு அபயம் அளித்த திருநீடூர் அம்பிகை

சோழ நாட்டு தேவாரத் தலங்களில் ஒன்றாகத் திகழ்வது திருநீடூர் ஆகும். மயிலாடுதுறையில் இருந்து நீடூருக்குப் பேருந்து வசதி உள்ளது.

இங்கு முதல் யுகத்தில் சூரியன் வழிபட்டான் என்பர். இங்குள்ள இறைவன் சோமநாதேசுவரார் என்றழைக்கப்படுகின்றார். இறைவிக்கு ஆதித்திய அபயப்பிரதாம்பிகை என்று பெயர்.

ஒரு சமயம் இறைவனுடைய கோபத்திற்கு அஞ்சிய சூரியனுக்கு அபயம் கொடுத்ததால் இவள் ஆதித்திய அபயப்பிரதாம்பிகை என்று அழைக்கப் படுகின்றாள் என்பர்.

இங்கு சூரியன் அம்பிகைக்கு வழிபாடு செய்ய எடுத்த குளம் சூர்ய புஷ்கரணி என வழங்குகின்றது என்பர்.



சூரியன் வழிபடும் மங்கலநாயகி

சூரியனால் வழிபாடு செய்யப்பட்டு சிறப்பு பெற்ற திருத்தலங்களில் உள்ள அம்பிகைக்கு மங்கல நாயகி என்பதே பெயராகி விளங்குகின்றது. இத்தலங்களில் உள்ள தீர்த்தங்கள் சூரிய தீர்த்தங்கள் என்றே அழைக்கப்படுவதும் குறிக்கப்படுவதாகும்.

நெல்லிக்கா, பருதி நியமம், மங்கலக்குடி, குடந்தை, சிறுகுடி முதலிய தலங்கள் யாவும் சூரியன் தன்பெயரால் தீர்த்தம் அமைத்து சிவ வழிபாடு செய்த தலங்களாகும். இங்குள்ள அம்பிகைளின் பெயர்கள் யாவும் "மங்கல நாயகி" என்றே அமைந்திருப்பது எண்ணத்தக்கதாகும்.

காசியில் சூரியன் அமைத்து வழிபட்ட சிவலிங்கம் கபஸ்தீசுவரர் என்றும் அம்பிகை மங்கள கௌரி என்று வழங்குவதும் இங்கு எண்ணத் தக்கதாகும். எனவே சூரியன் வழிபட்ட அம்பிகைக்கு மங்கல நாயகி என்பது சிறப்புப்பெயராக விளங்குவதை அறியலாம்.

குடந்தை நாகேசுவரர் ஆலயமும் சூரியவழிபாடும்

தமிழகத்தில் சூரியனுக்கென அமைந்த சந்நிதிகளில் தனிச்சிறப்புடைய சந்நிதி கும்பகோணம் நாகேசுவரசுவாமி ஆலயத்தில் அமைந்துள்ள சந்நிதியாகும். இது இக்கோயில் வடகிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இதில் சூரியன் இரண்டு திருக்கரங்களுடன் காட்சியளிக்கின்றார். இவனுடைய சந்நிதியின் சுவரில் கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் ஐந்து கோட்டங்கள் அமைந்துள்ளன. இவற்றில் தெற்கில் உள்ள கோட்டம் ஒன்றில் சௌரவிநாயகர் எழுந்தருளியுள்ளார். மற்ற நான்கில் சூரியனின் நான்கு பரிவார சூரியர்களான ஆதித்யன், பாஸ்கரன்,, ரவி, பானுமூர்த்தி ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். இச்சந்நிதியின்மீது அழகிய விமானம் அமைந்துள்ளது.

இந்தச் சந்நிதியில் பலகல்வெட்டுகள் உள்ளன. இவை சூரிய தேவருக்கு திருவிளக்கிடவும், சிதாரிக்காகவும், நிலம்விடப்பட்ட செய்தியைக் கூறுகின்றன. மேலும் இதன் மூலம் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டதையும் அறிகிறோம். இவ்விழா நடைபெற தென்கரை நாட்டுப்பிரிவான கிழார்க் கூற்றத்து ஆயிரத்தளி தேவதானமான காவலூருடையான் வில்லவன் பேரரரையனான சிறுபாயன் பாண்டன் என்பவனால் 105 துலை பொன் அளிக்கப்பற்றதையும் இக்கல்வெட்டுக்ள குறிக்கின்றன.

மேலும் இக்கோயிலில் தேர்வடிவில் அமைக்கப்பெற்ற ஒரு பெரிய துணை ஆலயத்தையும் காண்கிறோம். இந்நாளில் இது நடராசர் சபையாக உள்ளது. இது ஆதியில் சிவசூரியனுக்கு கட்டப்பட்ட சந்நிதியாகவே தோன்றுகின்றது. சோழநாட்டில் தலச்சிறப்பிற்குரிய தெய்வங்களை தெற்குநோக்கிய சபையில் அமைப்பதே மரபு அவ்வகையில் சிவசூரிய சந்நிதியாக அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சூரியனை தெற்கு நோக்கியோ வடக்குநோக்கியோ அமைப்பது முரண்பாடுடையது என்பதால் பின் நாளில் இந்த சந்நிதி நடராசசபையாக மாற்றப் பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இந்தத் தேர் வடிவ ஆலயத்தில் அமைக்கப் பட்டிருக்கும் சக்கரங்களின் கலைச்சிறப்பு குறிப்பிடத்தக்கதாகும். சுமார் 6 அடி உயரமுள்ள இப்பெரிய கல் சக்கரங்களில் தாமரையை உச்சியில் கொண்ட தாமரைத் தண்டமும் சூரியனின் வடிவமும் மாறிமாறி ஆரக்கால்கள் போல அமைந்துள்ளன. இவ்வாறு 12 சூரியர்களும் 12 தாமரைத் தண்டங்களும் அமைந்துள்ளன.

மேலும் வட்ட வட்டமாக பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதில் அன்னவரி எனப்படும் 60 அன்னங்களைக் கொண்ட ஒரு வட்டம் அமைந்துள்ளது.


உபநிஷதங்கள் சூரியனை அண்டவெளியில் இயங்கும் ஜோதி வடிவமான ஹம்சம் என்றே குறிக்கின்றன. இதனையொட்டி இந்த அன்னப் பறவைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பர்.

இந்த சூரியத்தேரின் சக்கரங்கள் இரண்டும் தலைசிறந்த கலைப்படைப்புடன் அமைந்திருப்பது கண்டு மகிழத்தக்கதாகும். இவை ஏறத்தாழ ஒரிசா மாநிலத்தில் உள்ள கொனாரக் என்னும் இடத்தில் அமைந்துள்ள சூரியன் கோயில் சக்கரங்களை ஒத்ததாக உள்ளது. இந்தத் தேரினை இழுத்துச் செல்லும் வகையில் இரண்டு மிகப்பெரிய குதிரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிஜக்குதிரையின் அளவிற்கும் கூடுதலாகச் செய்யப்பட்டள்ள இவற்றின் கலை அலங்காரம் தனிச்சிறப்பு மிக்கதாகும். இவைகள் கொனார்க்கில் உள்ள குதிரைகளின் கலைத்திண்மையை விட கூடுதலாக அமைந்துள்ளது.

சூரியனுக்கு பல சிறப்புகளை வழங்கும் இக்கோயில் ஒரு காலத்தில் சௌர வழிபாட்டின் (சூரியனை வழிபடுவோரின்) தலைமை இடமாக இருந்தது என்றால் மிகையாகாது.

❑ திருமீயச்சூர் எனும் தலத்திலும் சூரியனுக்கென அமைக்கப்பெற்ற சிறப்பான சந்நிதி உள்ளது. இங்கு சூரியன் சிவபெருமானை யானைமீது வைத்து வழிபட்டான் என்று கூறுவர்.



கும்பகோணம் நாகேஸ்வரசுவாமி ஆலயத்தில் அமைந்துள்ள நடராசர்சபை எனும் சந்நிதியின் இருபுறமும் அமைந்த கல்லாலாகிய பெரிய சக்கரமும், குதிரையும் சக்கரத்தில் 12 சூரியர்களும் 12 தாமரைத் தண்டங்களும் வட்டமாக அமைந்த அன்னபட்சிகளின் வரிசையும் காண்கிறோம்.

சூரியன் பூசித்த ஏழுதலங்கள்

சூரியன் வழிபட்டுப்பேறு பெற்ற ஏழு திருமுறைத் தலங்களை ஒரு பாடல் பட்டியலிட்டுக் காட்டுகிறது. இது திருவேதிக்குடி தலபுராணத்தில் இடம் பெற்றுள்ளதாகும். அந்தப் பாடல்

கண்டியூர் வேதிகுடி நற்குடந்தைக் கீழ்க்கோட்டம்
பண்பரிதி நன்நியமம் பாங்கார் தெளிச்சேரி
பொற்புற வார்பனங்காட் டூர் நெல்லிக் காவேழும்
பொற்பரிதி பூசனை செய் யூர்.

என்பதாகும். இதன்பொருள் கண்டியூர் (1) வேதிக்குடி (2) நல்ல குடந்தைக் கீழ்க்கோட்டம் என்னும் கும்பகோணம் நாகேசுவரசுவரர் ஆலயம் (3) பண்பமைந்த பரிதி நியமம் எனும் பருத்தியப்பர் கோயில் (4) பாங்கான திருத்தெளிச்சேரியான கோயில்பத்து (5) பொன் புறவார் பனங்காட்டூர் எனும் (பனங்காட்டூர்) (6) நெல்லிக்கா (7) ஆகிய ஏழும் பொன்போல் பிரகாசிக்கும் சூரியன் சிவபெருமானைப் பூசிக்கும் பதிகளாகும்.

நன்றி : சிவ, திருச்சிற்றம்பலம் - தஞ்சாவூர்

வியாசர்பாடி ரவீசுவரர்

சூரியனின் வம்சா வழியில் திருமாலின் அவதாரமாகத் தோன்றியவர் வேதவியாசர் ஆவார். இந்த வியாசரே வேதங்களையும் பதினென் புராணங்களையும் தொகுத்தவர். இவர் ஒருசமயம் பூவுலகம் வந்து ஒரு பர்ணகசாலை அமைத்து தவம் செய்தார். அவருடைய தவச்சாலைக்கு எழுந்தருளிய சூரியன், அந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தான். அந்த இடமே இந்நாளில் வியாசர்பாடி என வழங்குகின்றது. அங்கு சூரியன் அமைத்த லிங்கம் ரவீசுவரர் என்றழைக்கப் படுகின்றார். அம்பிகை மரகதாம்பிகை என்றழைக்கப் படுகின்றாள்.

வியாசர்பாடி சென்னையின் வடமேற்குப் பகுதியில் பாரிமுனையிலிருந்து மூலகொத்தளம் செல்லும்வழியில் எருக்கஞ்சேரிக்கு முன்னால் உள்ளது. இக்கோயிலில் அழகிய ராஜகோபுரமும் விமானங்களும் உள்ளன. வேத வியாசருக்கு தனிச் சந்நிதி மேற்குப் பிரகாரத்தில் உள்ளது.

சூரியனார் கோயில்



உஷா சூரியன் பிரத்யுஷா (மூலவர்)
சூரியனார் கோயில்

சூரியனுக்குத் தனியே ஆலயம் அமைக்கும் வழக்கம் இக்காலத்தில் பொதுவாக இல்லை. அவர் சிவாலயங்களில் தனிச் சந்நிதியில் மட்டுமே எழுந்தருளியுள்ளார்.

ஆனால் சிலப்பதிகாரத்தில் சூரியன் சந்திரன் ஆகியோர்களுக்கு தனித்தனியே . கோயில் அமைந்திருந்ததை இளங்கோவடிகள் குறித்துள்ளார். அவர் இயற்றிய சிலப்பதிகாரம், காவிரி பூம்பட்டினத்தில் இருந்த சூரியனின் ஆலயத்தை உச்சிக்கிழான் கோட்டம் என்று குறிக்கின்றது.

பதினோறாம் நூற்றாண்டில் முதலாம் குலோத்துங்க சோழனால் குலோத்துங்கசோழ மார்த்தாண்டாலயம் என்ற பெயரில் திருமங்கலக்குடிக்கு அருகில் ஒரு சூரியனின் ஆலயம் அமைக்கப்பட்டது. (சிலர் பழைய கோயிலே புதுப்பிக்கப்பட்ட தென்பர்) அதுவே இந்நாளில் சூரியனார் கோயில் என்றழைக்கப் படுவதாகும்.

இக்கோயிலில் சூரியன் கருவறையில் வீற்றிருக்க அவரைச் சுற்றி ஏழுகோள்களுக்கும் தனித்தனி சிற்றாலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. குருபகவான் மட்டும் கருவறைக்கு நேர் எதிரில் சிறுபீடத்தில் எழுந்தருளியுள்ளார். தமிழகத்தில் சூரியனுக்கென அமைந்த ஆலயம் இது ஒன்றேயாகும்.

இதனைக் குலோத்துங்கன் கன்னோசி அரசர்களிடம் கொண்டிருந்த தொடர்பால் கட்டினான் என்பர். காசியை சூழ்ந்திருந்த பகுதியே கன்னோசியாகும். சூரியனார் கோயிலில் காசியின் தலைமைத் தெய்வங்களாக விளங்கும் காசிவிசுவநாதரும் விசாலாட்சியும் எழுந்தருளியிருப்பது இங்கு எண்ணத் தக்கதாகும். கன்னோசியின் பழைய பெயர் கன்யாகுப்ஜம் ஆகும். காசியில் சூரிய வழிபாடு சிறந்திருந்தது என்பதை இதே மலரில் வெளியாகி யுள்ள வேறு கட்டுரையாலும் அறியலாம். இக்கோயிலில் அமைந்துள்ள சூரியனை சோழர்கால கல்வெட்டு சூரியதேவர் என்று குறிக்கின்றன. இங்கு அமைந்துள்ள பலகல்வெட்டுகள் சூரியதேவருக்கு அளிக்கப் பெற்ற தானங்களை விரிவாகக் கூறுகின்றன.

சூரியனார் கோயில் எனும் இந்தத் திருத்தலம் மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் உள்ள ஆடுதுறை என்னும் ஊருக்கு வடக்கே 4கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள தாகும். இதனையொட்டி அமைந்துள்ள திருத்தலம் மங்கலக்குடியாகும். மங்கலக்குடி ஈசனை வழிபட்ட பின்னரே சூரியனார் கோயிலில் வழிபாடு செய்யவேண்டும் என்பது முறையாகும்.

ஆதித்யர் பன்னிருவர்

துவாதச ஆதித்யர்

இரண்டு சுடர்கள், மும்மூர்த்திகள், நான்கு வேதம், ஆறுஅங்கம், ஏழு மாதர்கள், எட்டு வசுக்கள், நவக்கிரகம், என்பது போன்று சூரியனைப் பன்னிரண்டு பேர்கள் கொண்ட தொகுதியாகப் புராணங்கள் கூறுகின்றன.

இவர்கள் சிவனருளால் உதித்த ஆதித்-தீ (முதலில் தோன்றிய தீக்கோளம்) என்ற பொருள்பட ஆதித்யர்கள் எனப்பட்டனர். இவர்களை பன்னிரு ஆதித்தியர் அல்லது துவாதச ஆதித்தியர்கள் என அழைக்கின்றனர். இவர்களுடைய பெயரைப் புராணங்கள் பலவாறு கூறுகின்றன. இவர்கள் மாதத்திற்கு ஒருவராக வானமண்டலத்தில் பிரகாசித்து. உலகிற்கு ஒளியையும் உயிர்ச் சக்தியையும் அளிக்கின்றனர் என்று கூறுவர்.

இந்தியாவில் சிறப்புடன் விளக்கும் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களும் பன்னிரண்டு ஆதித்யர்களால் உண்டாக்கப்பட்ட தென்ற கருத்தும் நிலவுகிறது. இவர்கள் சோழ நாட்டில் பன்னிரண்டு திருத்தலங்களில் வழிபட்டார்கள் என்றும் அவை அஷ்டவீரட்டத்தலம், சப்த விடங்கத்தலம் என்பன போன்று) "சௌரக்ஷேத்திரங்கள்" என்று அழைக்கப்பட்டதென்றும் கூறுவர். இந்நாளில் ஏராளமான தலங்களில் சூரிய வழிபாடு நடைபெற்றதாகப் புராணங்கள் கூறுவதால் ஆதியில் குறிக்கப்பெற்ற பன்னிரண்டு ஆதித்தியத்தலங்கள் எவையென்று உறுதியாகக் கூறமுடியவில்லை.

பன்னிரு ஆதித்தர்களும் கூடி வழிபட்ட தலங்கள் திருக்கழுக்குன்றமும், திருச்செம்பொன்



துவாதச ஆதித்யர்கள் - காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில்
படம் உதவி - தமிழ்நாடு தொல்பொருள் துறை

பள்ளியுமாகும் தொடர்ந்து வரும் கட்டுரையில் அத்தலச் சிறப்புகளைக் காணலாம்.

பன்னிரண்டு சூரியர்களுக்கான உருவ அமைதிகளைக் கூறும் தியானச் சுலோகங்கள் உள்ளன என்றாலும் இப்போது அவற்றை அறிய முடியவில்லை.

இந்த பன்னிரண்டு சூர்யர்களும் மாதத்திற்கு ஒருவராக வலம் வருகின்றனர் என்பதைக் கண்டோம் அல்லவா? அப்படி அவர்கள் வலம் வரும் போது அவர்களை முனிவர்கள் வாழ்த்து கின்றனர். நாகங்கள் தேரின் வடமாக இருக்கின்றன. கந்தர்வர்கள் பாடுகின்றனர். அரம்பையர்கள் தேரின் முன்பு நடனமாடுகின்றனர், அரக்கர்கள் காவலாக இருக்கின்றனர். இயக்கர்கள் தேர்வடத்தைப் பற்றியிழுக்கின்றனர்.

ஒவ்வொரு சூரியன் பவனிவரும் பொழுதும் அவனுடைய பவனியில் பங்குபெறும் கூட்டத்தில் தலைவராக விளங்கும் முனிவர் வடக்கயிறாக விளங்கும் நாகர்-கந்தர்வர்-அரம்பையர்-அரக்கர்-இயக்கர் ஆகியோர்களின் பெயரைப் பல புராணங்கள் குறிக்கின்றன.

இந்தப் பன்னிரண்டு சூரியர்களின் பெயர்களை முறையே 1. தாத்ரு 2. சக்கரன் 3. அரியமான் 4. மித்திரன் 5. வருணன் 6. அம்சுமான் 7. இரணியன் 8. பகவான் 9. விவச்சுவான் 10. பூஷன் 11. கவித்துரு 12. துவஷ்டன் எனவும், 1. அஞ்சன் 2. தாதா 3. இந்திரன் 4. சவிதா 5. விச்சுவான் 6. பகன் 7. பருச்சனி 8. தோஷ்டா 9. மித்திரன் 10. தோஷா 11. விஷ்ணு 12. பூஷா எனவும், 1. விசுவான் 2. அரியமா 3. பூஷா 4. துவஷ்டா 5. சவிதா 6. பகன் 7. தாதா 8. விதாதா 9. வருணன் 10. மித்திரன் 11. சுக்கிரன் 12. உருக்கிரமன் எனவும் பலவாறு கூறுகின்றனர்.

இவர்களைத் தவிர வழக்கில் அதிகமாக உள்ள பன்னிரண்டு ஆதித்யர்களின் பெயர்கள் 1. வைகர்த்தன் 2. விவச்சுதன் 3. பகன் 4. மார்த்தாண்டன் 5. பாஸ்கரன் 6. ரவி 7. லோகப்பிரகாசன் 8. லோகசாஷி 9. திருவிக்ரமன் 10. ஆதித்தன் 11. திவாகரன் 12. அங்கிசமாலி என்பதாகும்.

சைவர்கள் பெரும்பாலும் இந்தச் சூரியர்களையே போற்றி வழிபடுகின்றனர். இவர்கள் சிவாதித்யர்கள் என அழைக்கப்படுகின்றனர். வைணவ மரபில் இப்பன்னிருவரை கேசவாதித் யர்கள் என்று குறிப்பர். மேலும் ஜைன, பௌத்த சமயங்களில் கூட ஆதித்ய வழிபாடு சிறப்புடன் இருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய சூரியன் தனது பணியைத் தொடங்கும் போதும் அவனை வாழ்த்தி வரவேற்பதாகவே தமிழ் மாதத்தின் முதல் நாளில் சூரிய வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. இதனை மாதசங்கராந்தி அல்லது மாதப் பிரவேசம் என அழைப்பர். இந்நாட்களில் சூரியனுக்கும் உலாத்திருமேனியாக விளங்கும் சோமாஸ்கந்தர் அல்லது சந்திரசேகர மூர்த்திக்கும் அபிஷேக அலங்காரம் செய்து வழிபடுவர்.

துவாதச ஆதித்ய வீதி

திருச்செங்காட்டங்குடியில் துவாதச ஆதித்யர்கள் சிவலிங்கப் பெருமானை வணங்கிப்பேறு பெற்றார்கள். அவர்கள் பெயரால் இவ்வூரின் மேற்கு வீதி துவாதச ஆதித்ய வீதி என்று அழைக்கப்பெற்றது.

சூரிய நமஸ்காரம்

பிருஹத் ஸ்தோத்ர ரத்னாகரம் எனும் நூலில் சூரியனின் பன்னிரண்டு பெயர்களும் வரும்படி அமைந்த மந்திரம் உள்ளது. இதனைத் தினமும் கூறி சூரியனை வழிபட்டால் சிறந்த செல்வமுண்டாகும் என்பர். இதில் குறிக்கப்படும் பன்னிரண்டு சூரியநாமங்கள் 1. வைகர்த்தன் 2. விஸ்வன் 3. மார்த்தாண்டன் 4. பாஸ்கரன் 5. ரவி 6. லோகப்பிரகாசன் 7. லோகசாக்ஷி 8. திருவிக்ரமன் 9. ஆதித்தன் 10. சூரியன் 11. அம்சமாலி 12. திவாகரன் என்பனவாகும்.

மங்கள சூரியன்

மங்களன் என்பது நடைமுறையில் செவ்வாய் கிரகத்திற்கு உரியபெயராகும். அதுபோலவே பவழமும் அவனுக்கே உரிய ரத்தினமாகும். என்றாலும் சைவமரபில் மங்களகிரி விமானம், பவழக்கால் விமானம் ஆகியன சூரியனால் அமைக்கப்பட்டதென்றே கருதப்படுகிறது. அவைகளைப் பற்றி இனிக் காணலாம்.

மங்கள விமானம்

மங்களன் என்பது சூரியனுக்கு உரிய சிறப்புப் பெயராகும். சூரியன் சிவலிங்கத்தை அமைத்து அதற்கு ஆலயம் கட்டி அதன் மீது அமைத்த விமானம் மங்கள விமானம் எனப்படும்.

சூரியனால் அமைக்கப்பெற்ற இத்தகைய விமானங்களில் உச்சியில் நடுவில் ஒன்றும் நான்கு புறத்தில் நான்கும் ஆக ஐந்து கலசங்கள் அமைந்திருக்கும். இது நடுவில் சிவசூரியனும் நான்கு பக்கங்களில் நான்கு சூரியர்களும் எழுந்தருளியிருப்பதை உணர்த்துகிறது என்பர். விரிவான விளக்கத்திற்கு சிவசூரிய லிங்கம் என்கின்ற தலைப்பில் காண்க.

திருப்பூவணம், முதலிய தலங்களில் இத்தகைய விமானங்களைக் காணலாம்.

மங்களகிரி விமானம்

மங்களகிரி என்பது சூரியன் உதிக்கும் மலையைக் குறிக்கும். சிவாலயங்களில் சிறியமலை வடிவில் செய்த வாகனத்தில் சிவபெருமானை அமர்த்தி வீதியுலாக் காண்பர் இம்மலை உதயகிரி விமானம் அல்லது மங்களகிரி விமானம் என்றழைக்கப்படும். இந்த வாகனத்தில் சுற்றிலும் எண்ணற்ற ரிஷிகள் அமைக்கப்பட்டிருப்பர். சூரியனின் உதயகாலத்தில் அவனுக்கு ஏற்படும் தடைகளை நீக்கி அவனை வரவேற்று போற்றும் வகையில் ரிஷிகள் அமைகின்றனர். இது அதிகாலையில் வீதியுலாக்காண்பதற்கென அமைந்த வாகனமாகும்.

இது போன்றே சூரியன் மறையும் அஸ்தமான கிரியையும் ஒரு வாகனமாக அமைத்து பெருமானை அதன் மீது அமர்த்தி உலாவரக் காண்பர். இது அஸ்தமானகிரி விமானம் எனப்படும். இதில் மோகினிகளும், பசுக்கூட்டங்களும், பறவைக் கூட்டங்களும் காட்டப்பட்டிருக்கும். உபநிஷதங்கள் மாலைக்கால சூரியனை தண்ணீர் எடுக்கவரும் பெண்களும், விலங்குகளும், பறவைகளும் பார்த்தார்கள் என்று கூறுவதற்கேற்ப இவை அமைக்கப்பட்டுள்ளன. இது மாலைக்காலத்தில் இறைவன் பவனி வருவதற்காக அமைக்கப்பட்ட வாகனமாகும். குறிப்பாக பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் மாலையில் பிக்ஷாடனமூர்த்தியை இவ்வாகனத்தில் அமர்த்தி வலம் வரச்செய்வர்.

பவழக்கால் சப்பரம்

சூரியனுக்கு உரிய ரத்தினங்களில் ஒன்று பவழமாகும். பவழங்களைக் கால்களாக அமைத்து செய்யப்பெற்ற விமானமே பவழக்கால் சப்பரமாகும். சூரியன் பவழங்களால் இத்தகைய சப்பரத்தைச் செய்து அதில் பெருமானை அமர்த்தி வழிபட்டான் என்பர்.

நடைமுறையில் பவழங்களைக் கொண்டு சப்பரம் செய்யமுடியாது என்பதால் நீண்ட மரத்தை மணி மணியாகக் கடைந்து பொருத்தி சிவப்பு வண்ணம் தீட்டி இத்தகைய விமானங்களை அமைக்கின்றனர். இதற்குப் பன்னிரண்டு கால்கள் அமைந்துள்ளன. பன்னிரண்டு சூரியர்களும் பன்னிரண்டு கால்களாக அமைகின்றனர் என்பர். இதனை ஆதித்திய விமானம் என்றும் அழைப்பர்.

சென்னை அரண்மனைக்காரன் தெருவில் உள்ள கச்சாலீசுவரர் ஆலயத்தில் மூலத்தானத்தில் இத்தகைய விமானம் உள்ளது. இக்கோயில் காஞ்சீபுரத்தல் சூரியன் பூசித்த கச்சபேசுவரர் ஆலயத்தின் சாயலாக சென்னையில் அமைக்கப் பட்டது என்பதும் இங்கு கருத்தில் கொள்ளத் தக்கதாகும்.

ஆதித்யேசுவரங்கள்

ஆதித்தன் என்பது சூரியனுக்கு உரிய சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். அவன் காஸ்யபனின் மனைவியான அதிதியின் புதல்வன் ஆதலால் ஆதித்யன் எனப்பட்டான்.

அத்தகைய ஆதித்தியன் சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற இடங்கள் ஆதித்யபுரங்கள் எனவும், அவனால் வழிபடப்பட்ட சிவலிங்கம் ஆதித்யேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றன.

இதுவுமன்றித் தம்மைச் சூரியனின் வழித் தோன்றல்கள் என்று கூறிக்கொண்ட சோழர்கள் ஆதித்தியன் என்ற பெயரைச் சிறப்பாகச் சூட்டிக் கொண்டனர். மேலும் சூரியனின் பல்வேறு பெயர்களான ரவி, மார்தாண்டன் முதலிய பெயர்களையும் இட்டுக் கொண்டனர்.

ஆதித்த சோழன், ஆதித்த கரிகாலன், ஆதித்தன் கோதைப்பிராட்டி கண்டராதித்தன் பாஸ்கரமார்தாண்டன் போன்றுவரும் சோழர்கால மன்னர்களின் பெயர்கள் இங்கு எண்ணத்தக்கதாகும். இவ்வகையில் ஆதித்யன் என்று பெயர் பூண்ட



தொண்டைமானுடு — ஆதித்தேசுவரம்
(பள்ளிப்படை)

சோழ மன்னர்கள் கட்டிய கோயில்களும் ஆதித்யேசுவரங்கள் என்றே அழைக்கப்பெற்றன எடுத்துக்காட்டாக திருப்புறம்பயம் எனுமிடத்தில் முதலாம் ஆதித்யசோழன் 9 ஆம் நூற்றாண்டில் கட்டிய ஆலயம் ஆதித்யேசுவரம் என்றழைக்கப் பட்டதை கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

சோழர்களின் திருப்பணியான திருத்தேவூர் ஆலயமும் கல்வெட்டுகளில் ஆதித்யேசுவரம் என்றே குறிக்கப்படுகிறது.

தஞ்சை மாவட்டம் திருத்தருப்பூண்டிக்கு அருகில் உள்ள களப்பாழ் என வழங்கப்படும் களந்தை 9 ஆம் திருமுறையுள் திருவிசைப்பா பாடல் பெற்ற திருத்தலமாகும். இது அந்நாளில் களந்தை ஆதித்யேசுவரம் என்று வழங்கப்பெற்றது. இங்குள்ள பெருமான் இந்நாளில் அழகிய நாத சுவாமி என்றழைக்கப்படுகின்றார். இக்கோயில் பெருமானை இக்கோயில் கல்வெட்டுகளில் ஆதித்யேசுவரர் என்றே குறித்துள்ளனர். அம்பிகை சூரியனின் ஒளிமண்டல பிரபையை விளக்கும் வகையில் பிரபாநாயகி என்றழைக்கப்படுகின்றாள். இதுவும் ஆதித்தசோழனால் கட்டப்பட்டதென்பர்.

இவைகளேயன்றி ஆதித்தன் என்ற பெயர் பூண்ட மன்னர்கள் வீரமரணம் எய்தியபோது அவர்களுக்கு அமைக்கப்பெற்ற சமாதிக் கோயில்களும் ஆதித்யேசுவரம் என்றே அழைக்கப் பெற்றன. எடுத்துக்காட்டாக, மாபெரும் சிவபக்தனான முதலாம் ஆதித்த சோழன் கிபி 907 ஆம் ஆண்டில் சித்தூர் ஜில்லா காளஹஸ்திக்கு அருகில் உள்ள தொண்டைமானாற்றூரில் நடைபெற்ற பெரும் போரில் இறந்தான். அங்கு அவனுக்கு பள்ளிப் படைக்கோயில் எழுப்பப்பெற்றது. அவ்வாறு அமைக்கப்பெற்ற சிவாலயமும் "ஆதித்யேசுவரம்" என்றே அழைக்கப்பெற்றதை வரலாற்றால் அறியலாம்.

இவ்வாறு பலவகைகளில் ஆதித்யேசு வரங்கள் எனும் சிவாலயங்கள் தென்னாட்டில் பரவலாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

சூரிய தீர்த்தம்

சூரியன் சிவவழிபாடு செய்வதற்கு முன்பு தீர்த்தம் நீராடுவதற்கென அமைத்த தீர்த்தங்களே சூர்ய தீர்த்தங்கள், சூரிய புஷ்கரணி எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

தொன்மைக் காலமுதலே சூர்ய தீர்த்தங்கள் மிகவும் சிறப்புடன் விளங்கி வந்ததை பழந்தமிழ் நூல்களில் அறியமுடிகிறது. சிலப்பதிகாரத்தில் சோமகுண்டம், சூர்ய குண்டம் எனும் தீர்த்தங்கள் பற்றிய குறிப்பு உள்ளது.

திருவெண்காட்டில் சோமதீர்த்தம், சூர்ய தீர்த்தம், அக்னி தீர்த்தம் ஆகிய மூன்று தீர்த்தங்கள் உள்ளன. இந்தச் சூர்ய தீர்த்தத்தின் கரையில் சூரியன் அமைத்து வழிபட்ட சூரியலிங்கம் அமைந் துள்ளளது. இந்த மூன்று குளங்களிலும் நீராடி வெண்காடரை வழிபட்டால் பிறவி வினைகள் நீங்கி குழந்தைச் செல்வம் உண்டாகும் என்பது தமிழ் மறையின் வாக்காகும்.


காஞ்சீபுரத்தில் சூரியனும் மற்றைய எட்டுகிரங்களும் தீர்த்தம் அமைத்து சிவபெருமானை வழிபட்டனர் என்பர். சூரியனுக்குப் பருதி என்பது பெயராதலின் அவனால் இங்கு அமைக்கப்பெற்ற தீர்த்தம் பருதிக்குளம் என்றழைக்கப் பெற்றது.

நாட்டியத்தான்குடி, திருமீயச்சூர், திருக் கோலக்கா (திருத்தாளமுடையார் கோயில்) ஆகிய திருத்தலங்களில் சூரியன் அமைத்த திருக்குளங்கள் சிறப்புடன் உள்ளன.

திருச்செம்பொன்பள்ளி என்னும் செம்பொன் னார்கோயிலில் சூரியன் அமைத்த தீர்த்தம் சூர்ய புஷ்கரணி என்று அழைக்கப் படுகின்றது. தாமரை மலர்கள் நிறைந்த இத்தீர்த்தம் ஆலயத்தின் தெற்கில் அமைந்துள்ளது.

இன்னும் ஏராளமான தலங்களில் சூர்ய தீர்த்தம் சிறப்புடன் திகழ்கின்றன. இவற்றில் இயலுமானால் கார்த்திகை மாதத்தின் அனைத்து நாட்களிலும், அல்லது கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளிலாவது சூரிய ஓரையில் நீராடி சூரியனை வழிபட்டு அவனுக்கு அர்க்கியம் நமஸ்காரம் செய்து பின்னர் சிவபெருமானை வழிபட்டால் பூர்வஜென்ம வினைகள் நீங்கும், கண் சம்பந்தமான கோளாறுகள் நிவர்த்தியாகும். சொத்துக்கள் சேரும், தாய் தந்தையர்க்கு ஆயுள் கூடும். என்று ஆன்றோர் கூறுவர்.

இந்த தீர்த்தங்களில் சூர்ய ஓரையில் மூழ்க இயலாவிட்டாலும் உதயத்தின் போதோ உச்சி வேளையிலோ மூழ்க வேண்டும். சூரியனையும், சிவபெருமானையும் தாமரை புஷ்பங்கள் கொண்டு அர்ச்சிப்பது சிறந்த பலனைத் தருமென்பர்.



சூரிய புஷ்கரணி திருவையாறு

சிவசூரிய ஆசனமும் பஞ்சாவரண பூசையும்

சிவமஞ்சரியின் முதல் இதழில் சிவாசனத்தையும், எட்டாம் இதழில் பஞ்சாவரண சிவபூசையையும் பற்றி விரிவாகக் கண்டோம். இப்பகுதியில் சிவசூரியன் எழுந்தருளும் சிவசூர்ய ஆசனத்தையும் அந்த ஆசனத்தைச் சுற்றி அமையும் ஐந்து வீதிகளையும் அதில் எழுந் தருளியுள்ள தேவதைகளையும் காணலாம்.

சிவசூர்யன் எழுந்தருளும் சிவசூர்யாசனத்தை முதலில் காணலாம். இந்த ஆசனத்தை நான்கு வலிமையான சிங்கங்கள் தாங்குவது போல அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிங்கங்கள் முறையே பரமசுகம், விமலம், ஸாரா, ஆரா என்றழைக்கப்படும்.

இதன்மீது அமைந்த இரண்டாவது அடுக்கில் ஐந்துகோண பீடம் அமைந்துள்ளது. இந்த கோணங்களில் ஆதாரசக்தி, அனந்தர் எனும் பெரும்பாம்பு, பிருதிவி, காலாக்னி ருத்ரர், ரத்னதீபம், ஆகியன அமைந்துள்ளன. இதற்கு அனந்தாசனம் என்று பெயர்.

மூன்றாவது அடுக்கில் மாயை ஒரு பீடமாக அமைகிறது. அதனை எட்டு சிங்கங்கள் எட்டு பக்கங்களில் இருந்து தாங்குகின்றன. இவை முறையே தர்மம், அதர்மம், ஐஸ்வர்யம், அனைஸ்வர்யம் முதலானவைகளாகும். இதன் மேலே ஞானம் விதானமாக அமைகிறது. இதற்கு மாயா சிம்மாசனம் என்று பெயர்.

இதன் மீது நான்காவது அடுக்காக உலகினை ஒத்த பெரிய கிழங்கில் இருந்து தோன்றியது போன்ற பெரிய தாமரை மலர் எட்டு இதழ்களுடன் அமைகிறது. இந்த எட்டு இதழ்களில் ஆவரண சக்திகளான 1. தீப்தா 2. சூட்சுமை 3. ஜூஜா 4. பத்ரை 5. விபூத்யை 6. விமலா 7. அமோகா 8. வித்யுதா ஆகிய எண்மரும் நடுப்பொகுட்டில் பீடசக்தியான சர்வதோமுகியும் எழுந்தருளியுள்ளனர். இந்த தாமரையின் தண்டிலும் அதில் அமைந்துள்ள முட்களிலும் இதழ்நுனிகளிலும் அடிவட்டங்களிலும் எண்ணிலாது தேவர்கள் வீற்றிருக்கின்றனர். இந்த தாமரை ஆசனம் பத்மாசனம் எனப்படும். இந்த பொகுட்டின் நடுவில் யோகபீடம் அமைகிறது. இது ஐந்து கோணங்களைக் கொண்டதாகும். இவற்றில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், அந்தராத்மா, பரமாத்மா என ஐவரும் எழுந்தருளியுள்ளனர். இது யோகாசனம் அல்லது யோகபீடம் எனப்படும்.

இதன் உச்சியில் சிவபெருமான் அர்த்த நாரீசுவரராக நான்கு முகங்களும் எட்டு தோள்களும் உடையவராக எழுந்தருள்கின்றார். இவருடைய திருக்கரங்களில் பாசம், கத்தி, கபாலம், அங்குசம், தாமரை, சங்கு, சக்கரம், அட்சையவடம் (உருத்திராக்கமாலை) ஆகியன திகழ்கின்றன.

இவருடைய இருதயத்தில் பிரகாசம் எனும் சக்தியோக கூடியவராக சிவசூர்யனைத் தியானிக்க வேண்டும். இனி சூரியனைச் சுற்றி அமையும் பஞ்சாவாரணங்களையும் அதில் எழுந்தருளும் தேவர்களையும் காணலாம்.

சிவசூர்ய பஞ்சாவரண விளக்கம்

சிவசூர்யன் எழுந்தருளியிருக்கும் மையப் பகுதியான சௌர மண்டல பஞ்சாசனத்தைச் சுற்றி ஐந்து வீதிகள் அமைகின்றன. இதனைப் பஞ்சாவரணங்கள் என அழைப்பர். இவ்வகையில் அமையும் முதல் ஆவரணத்தில் அஷ்டதிக்பாலர் எழுந்தருளியுள்ளனர். (சிலர் இந்திரன், யமன், வருணன், குபேரனை நீக்கிவிட்டு பூசிப்பர்.)

இரண்டாவது ஆவரணத்தில் துவாத ஆதித்யர் எனப்படும் 1) வைகர்த்தன், 2) விசுவவான், 3) மார்த்தாண்டன், 4) பாஸ்கரன், 5) இரவி, 6) லோகப்பிரகாசன், 7) லோகசாட்சி, 8) சுவிக்கிரமன், 9) ஆதித்யன், 10) சூரன், 11) அஞ்சுமாலி, 12) திவாகரன் எனும் பன்னிரண்டு ஆதித்யர்கள் எழுந்தருளியுள்ளனர்.

மூன்றாவது ஆவரணத்தில் கிழக்கில் அர்க்கன், தெற்கில் உருத்திரன் மேற்கில் விஷ்ணு, வடக்கில் பிரம்மா ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

நான்காவது ஆவரணத்தில் கிழக்கில் சந்திரனும், தென்கிழக்கில் சுக்கிரனும், தெற்கில் செவ்வாயும், தென்மேற்கில் சனியும், மேற்கில்

புதனும், வடமேற்கில் ராகுவும், வடக்கில் குருவும், வடகிழக்கில் கேதுவும் எழுந்தருளியிருக்கின்றன.

ஐந்தாவது ஆவரணத்தில் கிழக்கில் தீர்த்தங்களுக்குரிய தேவதைகளும், தெற்கில் ரிஷிகளும், மேற்கில் தேவர்களும், வடக்கில் கந்தர்வர்களும் எழுந்தருள்கின்றனர். இவர்களுடன் நாகர்களும் கலந்திருந்து சூரியனைப் போற்றி வழிபடுகின்றனர். இந்த பஞ்சாசனத்தையும் பஞ்சாவரணங்களில் உள்ள தேவர்களையும் பூசிப்பவர் ஞானவான்களாகவும் பூர்வபுண்ணியங் களைப் பெற்றுச் சுகபோகங்களை அனுபவிப்பர் களாகவும் விளங்குவர்.

சூர்யன் கர்வபங்கம்

ஒரு சமயம் மாலீ, சமாலீ என்ற சகோதரர்கள் சிவபெருமானை நாடிச் சூரியனைப் போன்று ஒளிபெற தவம் புரிந்தனர். பெருமான் அவர்களுடைய தவத்திற்கிரங்கி அருள் புரிந்தார். அவர்கள் தமது ஒளிமண்டலத்தால் இரவைப் பகலாக்கி மகிழ்ந்தனர். இதனைக் கண்ட சூரியன் கோபம் கொண்டான். அவர்களைத் தேடிப்பிடித்துக் கொன்று போட்டுவிட்டான்.

இதனால் கோபம் கொண்ட சிவபெருமானின் அருள்பெற்ற உருத்திரர் சூரியனைக் கடுமையாகத் தாக்கினார். அவருககு அஞ்சி ஓடிய சூரியன் பல இடங்களுக்கும் ஓடி இறுதியில். பிரமனைச் சரணடைந்தான். அவர் அவனிடம் சிவபெருமானைச் சரணடைந்தால் மட்டுமே தப்புவிக்க முடியும் என்று வழிப்படுத்தினார். அவனும் அதன்படியே சிவபெருமானைத் துதித்து வழிபட்டான். சிவபெருமான் அவனை மன்னித்தருளி இறந்து போன தமது பக்தர்களையும் உயிர்ப்பித்து அருள்புரிந்தார்.



சூர்ய சண்டிகேசுவரர்

சூரியன் சிவவடிவமாகவே விளக்குவதால் அவனுடைய பூசை முடிவிலும் (சிவபூசையின் முடிவில் சண்டீசுவர பூஜை செய்வது போல) சண்டீசுவர பூஜை செய்யப்படுகின்றது. இந்த சண்டீசர் தேஜஸ் சண்டீசுவரர் என்றழைக்கப் படுகின்றார். இவர் தாமரைமலரையும் தண்டத்தையும் ஏந்தியவராகக் காட்சியளிக்கின்றார்.

சிவாலயங்களில் சூரியனுக்குத் தனிசந்நிதி அமைக்கப் படுகிறதே தவிர தனி ஆலயம் அமைக்கப்படாததால் தேஜஸ் சண்டீசரை அமைக்கும் வழக்கம் இல்லை.

சூரியனுக்கென்றே அமைக்கப்பெற்ற ஆடுத்துறை சூரியனார் கோயிலில் அமைந்துள்ள சூரியன் ஆலயத்தில் தேஜஸ் சண்டீசரைக் காணலாம்.

சூர்ய தீபம், சந்திர தீபம்

சிவாலயங்களின் கருவறையில் சிவலிங்கத் திற்குப் பின்புறம் அலங்கார தீபங்களை அமைப்பது வழக்கம். இது இரும்பு சட்டங்களைப் பொருத்தி அதில் இரும்பு அகல்களை அமைப்பர். இதில் சிவலிங்கம் சூரியன் சந்திரன் ஆகிய உருவங்களை தீபமாக அமைப்பர். இது சூர்யதீபம் சந்திரபிறை தீபம் என்றழைக்கப்படும்.

வீதியுலாக்களில் பெருமானுக்கு முன்பு தீவட்டிகளைப் பிடித்துச் செல்வது ஒருவழக்கமாகும். இவற்றில் வட்டமான தீவட்டியும் பிறைவடிவ தீவட்டியும் இடம்பெறும். வட்டமான தீவட்டி சூரிய தீவட்டி எனப்படும்.

ஞாயிறு புஷ்பரதீசுவரர்

சூரியன் பூசித்த தலங்களில் சிறந்த ஒன்று "ஞாயிறு" எனும் தலமாகும். இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் மனைவியாரான சங்கிலிநாச்சியார் அவதரித்த திருப்பதியாகும்.

இது சென்னையை அடுத்துள்ள பொன்னேரி வட்டத்தில் உள்ளதாகும். இவ்வூருக்குச் சென்னை தங்கசாலையில் இருந்து நகரப்பேருந்துகள் செல்கின்றன. சென்னையிலிருந்து செங்குன்றம் சென்று அங்கிருந்து வடக்கே செல்லும் கிளைப்பாதையில் பாலவாயில். அருமந்தை முதலிய ஊர்களின் வழியாகச் சென்று இவ்வூரை அடையலாம். ஊரின் வடகிழக்கில் சாலையோரத்தில் கோயில் அமைந்துள்ளது.

சூரியன் தேவகுருவின் ஆணைப்படி சிவபூசை செய்ய பூவுலகில் இடம் தேடி வந்தபோது இங்கு ஒரு குளத்தில் தாமரைமலர்கள் நிறைந்திருக்க கண்டு மகிழ்ந்தான். அம்மலர்களின் மத்தியில் ஒருமலர் பெரியதாகவும் நன்கு விரிந்து மணம் பரப்பும் வகையில் அமைந்திருந்தது அதன்மீது ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டு மகிழ்ந்து அதனைப் பற்றியெடுக்க எண்ணினான். ஆனால் அது தாமரைத்தண்டின் வழியே புகுந்து நீருக்குள் மறைந்து விட்டது. அவன் சிவன் அருளால் மீண்டும் அச்சிவலிங்கத்தைப் பெற்றான். அதனைச் தாமரைபீடத்தில் வைத்து பூசித்து சிவபெருமான் அருள் பெற்றான். அன்று முதல் இத்தலம் அவன் பெயரால் "ஞாயிறு" என்று அழைக்கப்படுகின்றது என்பர். இறைவன் இங்கு பூக்களை விரும்பி அதில் உறைந்ததால் புஷ்பரதீஸ்வரர் என்றழைக்கப் படுகின்றார். அம்பிகையின் திருப்பெயர் சௌந்திரவல்லி என்பதாகும்.

சூரியன் தாமரை மலர்மீது சிவலிங்கத்தை வைத்து வழிபடும் காட்சி முகமண்டபத் தூணில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். சூரியனார் கோயிலில் உள்ளது போலவே இங்கும் காசிவிசுவநாதரும் விசாலாட்சியும் எழுந்தருளியுள்ளனர்.

மேலும் சூரியனின் அம்சமாகத் தோன்றிய வரும் பன்னிரண்டு சூரியர்களில் ஒருவருமான இரணியன் எனும் சூரியன் வழிபட்ட இரண்யேசுவரர் ஆலயமும் இவ்வூரில் உள்ளது. அதில் லிங்கமும் நந்தியுமே எஞ்சியுள்ளன.


ஸப்தமி சூர்ய விரதம்

இறைவனுடைய ஞான சக்தியாகிய அருள் சூர்யனாக வெளிப்பட்டது சப்தமி திதியிலேயாகும். அவ்வாறு வெளிப்பட்ட சூர்யனுடைய கதிர்கள் அளவுக்குமீறிய உஷ்ணமும், ஒளியும் கொண்டிருந்ததால் அக்கதிர்களை விசுவகர்மா பட்டை தீட்டிக் குறைத்தான். அதுவும் ஒரு சப்தமி நாள் ஆகும். இந்நாளில் விரதமிருந்து சூர்யனையும் சிவபெருமானையும் வழிபடுபவர்கள் நோயற்ற வாழ்வையும் பெருஞ்செல்வத்தையும் அடைவர்.

- ஸ்ரீ வராகபுராணம்.

தலை ஞாயிறு

திருநாகேசுவரத்தில் சூரியனும், பாம்பும் வழிபட்டது போலவே தஞ்சைமாவட்டம் திருத்துறைப் பூண்டியை அடுத்துள்ள தலை ஞாயிறு எனுமிடத்திலும் சூரியனும் மகாகாளன் முதலிய பாம்புகளும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். இங்கு ஊர்ப்பெயர் தலை ஞாயிறு என்றும் சிவபெருமானின் பெயர் மகா காளேசுவரர் என்றும் வழங்கப்படுகின்றது. அம்பிகை (சென்னையை அடுத்த ஞாயிறில் உள்ளது போலவே) அம்பிகை அழகாம்பிகை சௌந்தர வல்லி என்றழைக்கப்படுகின்றாள். மேலும் மயிலாடுதுறையை அடுத்தும் ஒரு ஞாயிறு உள்ளது. இங்கும் தொன்மையான சிவாலயம் உள்ளது.



சோமாஸ்கந்தர்

தமிழகத்திலுள்ள சிவாலயங்களில் எழுந்தருளி வைத்து வழிபடப்படும் இறைவனின் திருமேனிகளில் தனிப்பெருஞ் சிறப்புடன் திகழ்வது "சோமாஸ்கந்தர்" எனும் வடிவமாகும். இதில் சிவபெருமான், முருகன், உமாதேவியார் ஆகிய மூவரும் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பது போல அமைக்கப் பட்டுள்ளனர்.

உலக சமயங்களில் எதிலும் இது போன்று இறைவனின் வடிவை கணவன், மனைவி, குழந்தையுடன் கூடிய குடும்பத் தோற்றத்துடன் அமைத்துப் போற்றப்படுவதில்லை என்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும். இது தமிழகத்திற்கே உரிய தனிச் சிறப்புடனான குடும்பப் பாங்கை உணர்த்துவதாக அமைகின்றது.

சிவபெருமானாலேயே அருளப்பெற்ற சிவாகமங்களில் இந்தத் திருமேனியைப் பற்றிய குறிப்புகள் சிறப்புடன் இருந்தாலும் பல்லவர் காலத்தில்தான் அதிக அளவில் சோமாஸ்கந்தர் வழிபாடு சிறப்புப் பெற்றது. அவர்கள் இந்த மூர்த்தியைக் கற்பாறைகளிலும், குடைவரைக் கோயில்களிலும் செதுக்கி வைத்து அன்பர்கள் வழிபட வகைசெய்தனர். பின்னாளில் வந்த பல்லவ மன்னர்கள் தாங்கள் திருப்பணி செய்த ஆலயங்களில் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்புறம் சுதைச்சிற்பங்களாகச் சோமாஸ்கந்தரை எழுந்தருளி வைக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர்.

சோழர்கள் காலத்தில் இது உலாத்திரு மேனியாக அமைக்கும் உன்னத நிலையை அடைந்தது. அதுவே பின்னர் தியாகராஜ வழிபாடாக மலர்ந்தது என்பர். சிவமஞ்சரியின் இந்தப் பதிமூன்றாவது மலரில் சோமாஸ்கந்தரைப் பற்றிய சிறப்புச் செய்திகளைக் காணலாம். இனிய நல்ல இல்லறம் அமையவேண்டு வோர் சோமாஸ்கந்த மூர்த்தியை வழிபட வேண்டு மென்று சிவாகமங் களும், பூஜாபத்ததி நூல்களும் கூறுகின்றன.

எனவே இந்த மலரில் சோமாஸ்கந்த வழிபாடு தோன்றி வளர்ந்ததைப் பற்றி புராணங்களில் கூறப்பட்டுள்ள சரித்திர வரலாறுகளையும், நாட்டுப் புறக்கதைகளில் உள்ள செய்திகளையும் நடைமுறையில் சோமாஸ்கந்த மூர்த்திக்கு ஆலயங்களில் நடத்தப்பெறும் விழாக்கள், பூசைகள் முதலியன பற்றிய செய்திகளையும் தொகுத்துக் காணலாம்.

சோமாஸ்கந்தர் - பெயர் விளக்கம்

ஸக+உமா+ஸ்கந்தர் என்ற மூன்று சொற்களின் கூட்டமைப்பே சோமாஸ்கந்தர் என்பதாகும். ஸக என்பதற்குக் கூடியுள்ள, இணைந்துள்ள, சேர்ந்துள்ள, என்பது பொருள். அதாவது உமையம்மையுடனும் முருகனுடனும் கூடியுள்ளவர் என்பது பொருள். இதில் சிவபெருமானுக்குப் பெயர் தனியாக இல்லை. ஆனால் உமையுடனும், கந்தனுடனும் கூடியிருப்பவர் என்ற பொருள்படும்படியாக அமைந்த சோமாஸ்கந்தர் என்ற சொல்லே சிவபெருமானுக்கு ஆயிற்று.

கல்வெட்டுகள் இப்பெருமானை "உமாஸ்கந்த ஸகிதர்" என்று கூறுகின்றன. இதற்கு உமையோடும் கந்தனோடும் கூடியிருப்பவர் என்பது பொருளாகும். தமிழில் இவரை "உமைமுருகு உடனாயபிரான்" என்று குறிக்கின்றனர்.

இந்த வடிவத்தை வழிபடுவதால் இவ்வுலகவாழ்வில் செல்வமும் மேன்மையும், மறுமையில் சிவப்பேறும் கிடைக்கும் என்பர்.

சச்சிதானந்தம் ஆகிய சோமாஸ்கந்தர்


சோமாஸ்கந்த வடிவம் சச்சிதானந்த வடிவமாகும். இதில் **சத்து** சிவபெருமான், **சித்து** உமையவள், **ஆனந்தம்** முருகப்பெருமான். எனவே முருகனை ஆனந்தத்தால் குதிக்கும் குழந்தை வடிவமாக அமைக்கின்றனர்.

மூலபரம்பொருள் இன்ன தன்மையென்று உணர முடியாத நிலையை உடையது. அது சத்து என்னும் சிவமாகவும், சித்து எனும் செயல் வடிவமான தேவியாகவும், செயலின் பயனான ஆனந்தமாகன முருகனாகவும் தோன்றுகின்றது.

பரிபூரணானந்த போதம் எனும் நூலின் பாயிரத்தில் பாம்பன் சுவாமிகள் "**ஆனந்த வஸ்து வணக்கம்**'' என்ற துணைத் தலைப்பில் பாடலொன்றை அருளிச் செய்திருக்கின்றார். அது சோமாஸ்கந்த வணக்கமாகவே அமைந்துள்ளது. அப்பாடல்,

சத்தெனச் சொல்லும் தாவில் சிவத்திலும்
சித்தெனச் சொல்லும் தேவி யிடத்திலும்
புத்திரப் பெயர் பூண்டி லகானந்த
வத்துவின் கழல் வாழ்த்தி வணங்குவாம்.

என்பதாகும். (வத்து - வஸ்து என்பதன் தமிழ்வடிவம்) மேலும் சுவாமிகள் அட்டாட்ட விக்கிரக லீலையில் சோமாஸ்கந்தரை சுபசோமாஸ்கந்தம் என்றும் கூறி மகிழ்கின்றார்.



சோமாஸ்கந்த (தியான) தேவாரம்

செல்வியை பாகங் கொண்டார்
சேந்தனை மகனாகக் கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க்
கொன்றை சூடிக்
கல்வியைக் கரையிலாத
காஞ்சி மாநகர் தன்னுள்ளாள்
எல்லியை விளங்க நின்றார்
இலங்கு மேற்றளியனாரே


—திருநாவுக்கரசர்

சோமாஸ்கந்தர் - திருமேனி உண்டாதல்

இறைவன் அன்பர்களுக்கு சந்திரசேகரர், இடபாரூடர், உமாசகிதர் முதலிய பல்வேறு வடிவங்களில் காட்சியளித்து அருள்பாலித்ததைப் புராண வரலாறுகள் தனிச்சிறப்புடன் பேசுகின்றன. இது போலவே அவர் சிலசமயங்களில் சோமாஸ் கந்தராக வடிவம் தாங்கி அருள் பாலித்ததையும் புராணங்கள் குறிக்கின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்க நூல்கள் கந்தபுராணம், திருவொற்றியூர்ப்புராணம், திருவாரூர்ப்புராணம் பெரியபுராணம் முதலியன வாகும். இவற்றில் "கமலாலயச் சிறப்பு" என்னும் திருவாரூர்ப் புராணத்தில் உள்ள **"சோமாஸ்கந்த சருக்கம்"** எனும் பகுதி சோமாஸ்கந்தர் திருமேனி உண்டான வரலாற்றைத் தனிச்சிறப்புடன் குறிக் கின்றது. இனி அதனைக் காணலாம்.

ஒரு சமயம் திருமால் திருமகளுடன் இமயமலைச் சாரலுக்குச் சென்று சிவபெருமானைத் தொழுது தமக்குப் பிள்ளை வரமளிக்க வேண்டு மென்று கேட்டுக் கடுந்தவம் புரிந்தார். வெய்யிற் காலங்களில் ஐந்து நெருப்பிடை நின்றும், குளிர் காலங்களில் தண்ணீருக்குள் நின்றும் கடும்தவம் செய்தார். இப்படி அவர் ஓராயிரம் ஆண்டுகள் கடும் தவம் செய்த பின்னர் அவர்களுக்கு இரங்கிய பரமேசுவரன், தமது தேவியான பார்வதி தேவி யுடனும், குமரனுடனும் கூடிக் காட்சியளித்தார்.

பின்னர் அவர்கள் மீது கருணை கொண்டு திருமாலை நோக்கி, "அன்பரே! உமக்கு என்ன குறை? ஏன்? இப்படிக் கடும் தவம்புரிகின்றீர்" என்று கேட்டனர். அதற்குத் திருமால் " ஐயனே! தங்கள் அருளால் எனக்கு எந்த ஒரு குறையும் இல்லை. ஆனாலும் என்னிடத்தில் எனக்கு அழகிற் சிறந்த மகன் ஒருவன் தோன்றுவதற்கு அருள் செய்ய வேண்டும்" என்று கேட்டார்.



பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள திருமால் தமது மார்பில் தியாகராசப் பெருமானை வைத்துப் பூசித்தல் (திருவாரூர் ஓவியம்)

உடனே சிவபெருமான் "அப்படியே ஆகட்டும். உமக்குச் சிறந்த மகன் பிறக்கட்டும்" என்று அருள்பாலித்தார்.அந்த மகிழ்ச்சியால் திருமால், பெருமானின் அருகில் இருந்த உமையவளையும், கந்தனையும் கவனித்துப் போற்றவில்லை. இதனால் உமையவள் திருமால் தன்னை மதிக்கவில்லை என்று கோபித்து, "திருமாலே, சிவனருளால் உமக்கு மகன் தோன்றுவான். ஆனால் அவன் விரைந்து மறைந்து அழிவான்" என்று சாபமிட்டாள்.

அதனைக் கேட்ட திருமாலின் உள்ளம் நடுங்கியது, உமையவளைப் பலமுறை பணிந்து தனது அறியாமையை மன்னித்து, தனது மகனுக்கு அளித்த சாபத்தைப் போக்கியருள வேண்டுமென்று கேட்டார். அதற்கவள் ஏதும் பதில் கூறவில்லை.

பின்னர் தேவியோடும், குகனோடும் தோன்றிய சிவபெருமான் மறைந்தருளினார்.

திருமால் திருமகளை அழைத்துக் கொண்டு வைகுண்டத்திற்கு மீண்டார். பிறக்கப் போகும் தன் மகனுக்கு உண்டாகவுள்ள தீங்கைத் தவிர்க்க சிவன் தனக்குக் காட்சியளித்ததைப் போலவே ஒரு உருவத்தைச் செய்து வழிபட விரும்பினார்.

உடனே தேவதச்சனான விசுவகர்மனை அழைத்து தாம் விரும்பியபடி சிவன், முருகன், உமையவள் ஆகிய மூவரும் ஒரே பீடத்தில் அமர்ந்திருப்பது போன்ற அழகிய திருவுருவத்தைச் செய்யும்படி ஆணையிட்டார். அதன்படியே அவன் சிறந்த கலைநுணுக்கத்துடன் கலையழகு மிக்கதாக ஒரு திருமேனியைச் செய்தான். அதுவே "சோமாஸ்கந்த மூர்த்தியாகும்".

இந்த வடிவம் மூன்று கண்களும், நான்கு கரங்களும் கொண்டதாக விளங்கியது. அதன் மேற்கரங்களில் வலதுகரத்தில் மழுவும், இடது கரத்தில் மானும், முன்னிரு கரங்களில் அபய, வரத முத்திரைகளும் அமைந்திருந்தன. தலையில் அழகிய சடாபாரமும், அதில் இளம்பிறையும் பாம்பும், துலங்கின. மார்பினில் பூணூலும் கமலத் திருவடிகளில் சிலம்பும் விளங்கின. அவ்வடிவம் இடதுகாலை மடித்து வலது காலைத் தொங்க விட்டவாறு அழகிய பீடத்தில் அமர்ந்திருந்தது.

அதே பீடத்தில் உமையவளும் வீற்றிருந்தாள். அவர்களுக்கு இடையில் கந்தனும் வீற்றிருந்தார். கந்தன் தாமரை மலர்களை ஏந்தி மகிழ்ச்சியுடன் குதித்தாடி நின்றவாறு காட்சியளித்தார்.

திருமால் இந்த வடிவத்தை அழகிய பீடத்தின்மேல் அமைத்து முறைப்படி பூசித்துத் தானங்கள் தருமங்கள் செய்து மகிழ்ந்திருந்தார்.

இவருடைய இத்தகைய சிறப்பான பூசையைக் கண்டு மகிழ்ந்த மூவரும் முன்புபோலவே அவருக்குக் காட்சியளித்தனர். திருமால் மிகவும் மகிழ்ந்து முன்னிலும் அன்பனாகி அவர்களைப் பூசித்தார். உமையவளைத் தனியே சிறப்புடன் பூசித்து அவளையும் மகிழ்வித்தார். அவளிடம் "அம்மையே", முன்பு நீ எம் மகனுக்கு அளித்த சாபத்தை விலக்கி அருள் செய்க" என்று பணிந்து வேண்டினார்.

உமையவளும் மகிழ்ந்து, திருமாலை நோக்கி, "தமையனே எமது சாபம் பலித்தே தீரும் என்றாலும் அதனை மாற்றி உனக்கு உன் மகன் உருவமில்லாமல் அநங்கனாக எல்லையில்லாத காலம் வாழ்வான் (எமது சேனைக்குத் தலைவனாவான். அவனைக் காதலின் தெய்வமாக இந்த உலகம் போற்றும்) என்றாள்.

திருமால் பலமுறை பணிந்து போற்றிய பிறகு அவருக்குப் பல வரங்களைத் தந்து அந்த திருவுருவத்திலேயே அவர்கள் கலந்து மறைந்தனர். திருமால் அந்த மூவரும் ஒன்றாக எழுந்தருளியிருக்கும் மூர்த்தத்தைச் சிவபெருமானின் அருளாணையின்படி பாற்கடலுக்கு எடுத்துச் சென்று தனது மார்பில் வைத்துப் பூசனை செய்து கொண்டிருந்தார்.

ஒரு சமயம் வாற்கலி எனும் அசுரனால் தேவர்கள் தோற்கடிக்கப்பட்டு இந்திரலோகத்தை இழந்து வருந்தினர்.இந்திரனும் தேவர்களும் திருமாலைச் சரணடைந்து தம்மைக் காத்தருள வேண்டுமென்று பலமுறை வேண்டினர். திருமால் தமது மார்பில் விளங்கிய சோமாஸ்கந்த மூர்த்தியை அவனுக்கு அளித்து இதனை முறைப்படி பூசித்து வருவாய் உனக்கு வெற்றி கிடைக்கும்" என்று கூறினார்.

அதன்படியே இந்திரன் சோமாஸ்கந்தரைப் பூசித்துவர தேவர்கள் மீண்டும் இந்திரலோகத்தைப் பெற்றுச் சுகமடைந்தனர். அவர்கள் இந்திரலோகத்தில் சோமாஸ்கந்தரை முறைப்படி சிம்மாசனத்தில் அமர்த்தி உரிய உபசாரங்களைச் செய்து சிறப்புடன்

வழிபட்டு வந்தனர். இவ்வாறு மகிழ்சியுடன் நாட்கள் உருண்டோடின.

மீண்டும் தேவர்களுக்குச் சோதனைக் காலம் தோன்றியது. வலன் என்ற ஒரு அசுரன் தோன்றினான். அவன் அவர்களைத் துன்புறுத்தி தேவலோகத்தின் மீது படையெடுத்தான்.

இந்திரன், மிகவும் அஞ்சி பிரம்மா, விஷ்ணு ஆகியோரை அடைந்து வலனை எதிர்த்துப் போரிட உதவும்படி வேண்டினான். அவர்கள் இந்திரனிடம், "அன்பனே,வலன் மானுடனால் மட்டுமே மரணமடைவான். எனவே நீ சோழ நாட்டை ஆண்டுவரும் முசுகுந்தன் என்ற மன்னனைத் துணையாகக் கொண்டு போரிடு. வெற்றி எளிதில் உனக்குக்கிட்டும்" என்றனர்.

இந்திரன் சோழ நாட்டிற்கு வந்து அங்கு மன்னனாக அரசு செலுத்தும் முசுகுந்தனை அழைத்துக் கொண்டு வலன் மீது படையெடுத்தான். முசுகுந்தன் வலனுடன் கடுமையாகப் போரிட்டு அவனை வென்றான்.

இந்தப் போரின் வெற்றியால் மீண்டும் தேவேந்திரன் இந்திரலோகத்தைப் பெற்று மகிழ்வெய்தினான். ஒரு சமயம் அவன் முசுகுந்த சக்கரவர்த்திக்குத் தமது நன்றி தெரிவிக்கும் வகையில் அவனை அழைத்துப் பல சிறப்புகளைச் செய்து தேவலோகத்தைச் சுற்றிக் காட்டினான். அவன் அங்கு வீற்றிருந்தருளும் சோமாஸ்கந்தமூர்த்தியைக் கண்டு அதில் மனம் தோய்ந்தான். சில நாட்கள் சுவர்கத்தில் தங்கினான், பின்னர் இந்திரன் சோழ மன்னனுக்கு பூவுலகம் செல்ல விடை கொடுக்கும் போது உனக்கு என்ன வரம் வேண்டுமோ? அதைக் கேள் தருகிறேன் என்றான், உடனே முசுகுந்தன் "தேவர் தலைவனே, நீ உமது நாட்டில் எழுந்தருளி வைத்து வழிபடும் சோமாஸ் கந்தமூர்த்தியை எமது நாட்டுக்கு எடுத்துச் சென்று ஆலயம் அமைத்து வழிபட விரும்பு கின்றேன். அதனை எமக்குத் தருக அதுவே நான் விரும்பும் வரம்" என்றான்.

இந்திரனுக்கு சோமாஸ்கந்தரைப் பிரிய மனமில்லை என்றாலும் தன்னாட்டை தனக்கு மீட்டுக்கொடுத்தவனுக்கு அவன் கேட்ட வரத்தை அளிக்காமல் மறுப்பது நியாயமில்லை என்பதை உணர்ந்தான்.

முசுகுந்த தபோ வல்லியான சோமாஸ்கந்தர்

சோமாஸ்கந்தம் பரந்தாமம் சோமார்ந்த க்ருத சேகரம்!
முசுகுந்த தபோவல்லீ மூலகந்தம் உபாஸ் மஹே!!

வட்டமாகக் கட்டிய சடையில் அர்த்த சந்திரனை சூடியுள்ள தேவர் தலைவனான பரந்தாமனும் முசுகுந்த சக்கரவர்த்தியின் தவமாகிய கொடியின் வேரும், தண்டும், கிழங்கும் ஆக விளங்கும் சோமாஸ்கந்த மூர்த்தியை தியானிக்கிறேன்.

அரசே, இது எமக்குத் திருமாலால் அளிக்கப் பெற்றது. எனவே அவர் அனுமதியைப்பெற்று இதனை உமக்குத் தருவேன் என்றான். அதன்படியே திருமாலின் அனுமதியைப் பெற்று அந்த மூர்த்தியை அம்மன்னனுக்கு வழங்கினான். அவன் பூமிக்கு கொண்டு வந்து திருவாரூரில் பெரிய கோயில் அமைத்து அதில் அந்த மூர்த்தியை எழுந்தருளி வைத்து வீதிவிடங்கன் என்ற பெயருமிட்டு சிறப்பாக வழிபடத் தொடங்கினான்.

இதுவே சோமாஸ்கந்தமூர்த்தி உருவான தற்கும், வானுலகத்திலிருந்து பூமிக்கு எழுந்தருளி வந்ததற்குமான வரலாறாகும். திருவாரூர் பூஉலகின் மூலத்தானமாகையால் பின்னாளில் இதனைப் போற்றி அனைத்து ஆலயங்களிலும் சோமாஸ் கந்தரை அமைக்கும் வழக்கம் உண்டானதென்பர்.

திருவாரூரின் பெருமையை விளக்கும் கமலாலய சிறப்பு எனும் நூலில் சோமாஸ்கந்த மூர்த்தியை வழிபடுபவர்களுக்கு உண்டாகும் பயனை உமாதேவியாரே கூறுவதாக அமைந்த பாடல் இடம் பெற்றுள்ளது. இதன் பொருள் இம்மூர்த்தியை வழிபடுபவர்களுக்கு நல்ல அழகிய சிறந்த குழந்தைப் பேறு உண்டாகும், அஷ்டமாசித்திகளும் கைகூடும், விரும்பியதைப் பெறுவர்," என்பதாகும்.

மேலும், இந்நூலில்,

முறை விதியால் திகழ் தேவதீர்த்தத்தில்
மூழ்கி முத்தன் தன்னை
இறையவனை உமை கந்தனோடு
ஏகாதனத்து இருக்கும் எழிலினானை
நறை மலர் தூய்ப் பதந்தொழுவர் நடலை வினை
அனைத்தும் அற நயந்து வாழ்ந்து
சிறையுடலைத் தீர்த்து சிவபுரத்து உறைந்து
சிவனடியைச் சேர்வர் திண்ணம்.

என்றும் கூறப்பட்டுள்ளது.

கந்தபுராணம் காட்டும் சோமாஸ்கந்தர்



முந்தைய கட்டுரையில் திருவாரூர்ப் புராணத்ததில் கூறப்பட்டுள்ளபடி சோமாஸ்கந்தரின் உருவம் அமைந்த வரலாற்றைக் கண்டோம். இனி கந்தபுராணம் காட்டும் சோமாஸ்கந்தரைக் காணலாம்.

கந்தபுராணத்தில் இரண்டு இடங்களில் சிவபெருமான் உமை கந்தனுடன் கூடி சோமாஸ்கந்த மூர்த்தியாகக் காட்சியளித்ததைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

அவற்றில் முதலாவது செய்தி உற்பத்தி காண்டத்தில் உள்ளதாகும். அதுவருமாறு:-

முருகன் சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு நெருப்புப் பொறிகளாய்த் தோன்றி பின்பு சரவணப் பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகளாய் அவதரித்து உமையவளால் ஒன்று சேர்க்கப்பெற்று "கந்தன்" எனப்பெயரிடப்பட்டான். சிவபெருமான் அவனை உமையவளுக்கும் தனக்கும் இடையில் அமர்த்தி தேவர்களுக்கும் கார்த்திகைப் பெண்களுக்கும் சோமாஸ்கந்தராக காட்சியளித்தார். திருமால் நான்முகன் முதலியோர் அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

அப்போது தேவர்கள் பூமாரி பொழிந்தனர் என்பதாகும்.

இரண்டாவது நிலையில்

முருகன் நாரதன் செய்த வேள்வியினின்று உதித்த செம்மறி ஆட்டை வாகனமாகக் கொண்டும் எதிர்த்துப் போரிட்ட தேவர்களை வென்றும், பிரணவத்தின் பொருளறியாத பிரமனைச் சிறையிலிட்டுப் படைப்புத் தொழிலை தாமே மேற் கொண்டும், தந்தையான பரமேசுவரனுக்கு பிரணவத்தின பொருளை உபதேசித்தும் பல திருவிளையாடல்களை நிகழ்த்தி கந்த வெற்பில் வீற்றிருந்தார். பின்னர் ஒருநாள் திருமாலின் பெண்களான அமுதவல்லி, சுந்தரவல்லிக்கு அருள் செய்து கயிலைமலைக்குச் சென்று தாய் தந்தையரை வணங்கி அவர்களுக்கு நடுவே அமர்ந்தான். இதனைக் கந்தபுராணம்

கந்தவேள் தாயொடு தந்தையைத்
தாழ்ந்து போற்றியே,
ஆயவர் நடுவுற அருளின் வைகினான்

என்று குறிப்பிடுகின்றது.

அந்த நேரத்தில் சூரபதுமனின் கொடுமை களுக்கு ஆற்றாத தேவர்கள் பிரமன், திருமாலுடன் அங்கு வந்து மூவரும் ஒன்றாக இருக்கும் அழகினைப் போற்றி தம்மைக் காத்தருளுமாறு வேண்டினர். சிவபெருமான் அவர்களுக்கு அருள் புரிந்து, முருகனை அவர்களுக்குத் துணையாக அனுப்பினார்.

இவ்வாறு இரண்டு இடங்களில் சோமாஸ் கந்தரைப் பற்றிய செய்திகளைக் காண்கிறோம். கந்தபுராணத்தை இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனதில் காஞ்சிபுரத்தில் ஏகம்பத்தில் மாவடியில் வீற்றிருக்கும் சோமாஸ்கந்தர் தனியிடம் பெற்றிருந்தார். அந்தக் காட்சியை சிறப்புடன் தேவைப்பட்ட இடங்களில் குறித்து மகிழ்கின்றார் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.


தேவர்கள் கண்ட சோமாஸ்கந்தர்

ஒரு சமயம் தேவர்கள் இந்திரலோகத்தில் மகிழ்ந்திருந்த போது, சூரபதுமன் முதலிய அசுரர்களை அழித்து துன்பங்களை நீக்கி இன்பத்தில் தம்மை நிலைபெறச் செய்த தேவசேனாதிபதியான முருகப்பெருமானுக்கு நன்றி தெரிவித்து அவருக்குச் சிறப்பான பூசனையைச் செய்ய விரும்பினர். அதற்காக இந்திரன், பிரமன் முதலியோர் ஒன்றுகூடி முருகன் வீற்றிருந்தருளும் கந்தமானகிரிக்குச் சென்று முருகனைக் கண்டு வணங்கினர். அவரிடம் தாங்கள் அவருக்குச் செய்யப் போகும் சிறப்பான பூசனையை ஏற்று அருள் செய்ய வேண்டும் என்று வேண்டினர். அதற்கு முருகப் பெருமான், "யான் பெற்ற வெற்றிக்கு எமது அன்னை தந்த வேலாயுதமே காரணம் ஆதலின் அவளைப் போற்றுதலே முறை வாருங்கள் நாம் அவளைப் போற்றுவோம்" என்றார்.

அவர்கள் அம்பிகையிடம் சென்று தங்கள் விருப்பத்தைக் கூறினர். அதைக் கேட்ட உமாதேவியர் ஐந்தொழிலை நடத்தி இந்த உலகினைக் காத்துவரும் பரமேசுவரனே எல்லோருடைய பூஜைக்கும் உரியவர். அவர் தமது நெற்றிக்கண்ணால் படைத்தருளிய முருகப் பெருமானன்றோ உமது துயரத்தை மாற்றி அருளினார். ஆதலின் உமது பூசையை அவருக்குச் செய்யுங்கள் என்றாள்.

எனவே தேவர்கள் அனைவரும் கூடி கயிலைமலையை அடைந்து அங்கு இரத்தின மயமான சிம்மாசனத்தில் சிவபெருமானையும் அம்பிகையையும் அமரச்செய்து அவர்களுக்கு இடையில் முருகப்பெருமானை அமர்த்தி அந்த மூவருக்கும் ஒருசேர சிறப்பான பூசனைகளைச் செய்தனர். இந்தக் காட்சியைக் கண்ட இந்திரன் உள்ளிட்டவர்கள் இதுபோன்ற அழகிய வடிவைச் செய்து தங்களின் பூசைக்கு வைத்துக் கொண்டனர். இதுவும் சோமாஸ்கந்தர் உண்டான வரலாறுகளில் ஒன்றாகும்.

தேவர்கள் கண்டு மகிழ்ந்த வடிவமாதலின் இவருக்கு, "தேவர்கண்ட பெருமான்" என்ற பெயரும் உண்டாயிற்று என்பர். இன்னும் இதுபோன்ற பலவரலாறுகள் சோமாஸ்கந்த மூர்த்தி உண்டானதை விவரித்துக் கூறுகின்றன.



சோமாஸ்கந்தர் - விரிஞ்சிபுரம் - வலப்புறம் நிற்பது சிவசருமனாக அவதரித்த பிரமன்

சோமாஸ்கந்தரும் - தியாகராஜரும்


சிவபெருமான் உமையுடன் விற்றிருக்க அவர்களுக்கு இடையில் முருகப் பெருமான் எழுந்தருளும் திருக்கோலமே சோமாஸ்கந்த மூர்த்தமாகும். இதுவே அனைத்து ஆலயங்களிலும் சிறப்புடன் கொலுவிருக்கும் திருவடிவாகும்.

ஆனாலும் திருவாரூர் முதலிய தலங்களில் சிறப்பாக சோமாஸ்கந்த மூர்த்திக்குத் தியாகராசர் என்ற பெயர் வழங்குகின்றது. இங்கு இவருடைய முகமும் அம்பிகையின் முகமும் மட்டுமே தெரியும் படி விட்டு விட்டு உடல் முழுவதையும் மலர்களாலும் நகைகளாலும் மூடி அலங்கரிக்கின்றனர். இடையில் உள்ள முருகனின் உருவம் கூட வெளியே தெரிவதே இல்லை. தியாகராசருக்கு இத்தகைய தனி அலங்காரம் சிறப்புடன் போற்றப்படுகின்றது.

தியாகராஜரை வாகனங்களில் வைத்து உலாவரச் செய்வதில்லை. திருவாரூரில் அவர் ஆழித் தேரில் மட்டுமே வலம் வருகின்றார். மணித்தண்டில் அவரை வைத்து நடனங்களை மட்டுமே நிகழ்த்துவர். ஆனால் சோமாஸ்கந்தரை இடபம், யானை, புருஷாமிருகம் போன்ற அனேக வாகனங்களில் வைத்து உலாக்காண்பர்.

தியாகராஜரின் திருமேனி இரகசியமாகப் போற்றப் படுகின்றது. இதனை சோமகுலரகசியம் என்பர் சோமாஸ்கந்தராகப் போற்றப்படும் திருமேனிகளை மூடிவைப்பதில்லை. பல விதமான அலங்காரங்களைச் செய்து உலாவரச் செய்து மகிழ்கின்றனர்.

அடிப்படையில் தியாகராசர் திருமேனியும், சோமாஸ்கந்த மூர்த்தியும் ஒன்றே என்றாலும் எழுந்தருளிய இடத்தின் காரணமாகவும், சிறப்பு வழிபாட்டின் காரணமாகவும் தியாகராசர் திருமேனிகள் தனிச்சிறப்பும் சிறப்பு அலங்காரங் களையும் பெறுகின்றன. எனவே இம்மலரில் சோமாஸ்கந்த மூர்த்தியை விரிவாகக் கூறி பதினைந்தாவது மலரில் தியாகராஜரைப் பற்றிய செய்திகளை விரிவாகக் காணலாம்.



சோமாஸ்கந்தருக்கு வழங்கும் பல்வேறு பெயர்கள்

சிவாலயங்களில் உமைகந்தன் உடனாய சிவமூர்த்திக்குச் சோமாஸ்கந்தர் என்பது என்று பொதுப்பெயராக வழங்கப்பட்டாலும், சிலதலங்களில் இந்த மூர்த்திக்குப் பெரிய நாயகர், விடங்கர், அழகர், உமாஸ்கந்ததேவர், உமாஸ்கந்தசகிதர் முதலிய பலபெயர்கள் சிறப்புடன் வழங்குகின்றன. இனி அவற்றையும் அது வழங்கப் படுவதற்கான காரணத்தையும் காணலாம்.

பெரியநாயகர்


நாயகன் என்பதற்குத் தலைவன் என்பது பொருள். எனவே தன்னேரில்லாத் தலைவனாக விளங்கும் சிவபெருமான் நாயகன் என்று சிறப்புடன் அழைக்கப் படுகின்றார். சிவாலயங்களில் நடராச மூர்த்தியைச் சபாநாயகர் என்றும், பிரதோஷ உற்சவரைப் பிரதோஷ நாயகர் என்றும், ஸ்ரீ பலி அளிக்கும் உலாத்திருமேனியை பலிநாயகர் என்றும், பள்ளியறைக்கும் எழுந்தருளும் பெருமானைப் பள்ளியறை நாயகர் என்றும் அழைக்கின்றனர்.

இவ்வகையில் பெரிய உலாத்திருமேனியான சோமாஸ்கந்த மூர்த்திக்குப் பெரியநாயகர் என்பது பெயராயிற்று. திருவண்ணாமலையில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்திக்குப் பெரியநாயகர் என்பது பெயராகும். இவ்வூரில் உள்ள அளவால் சிறிய சோமாஸ்கந்த மூர்த்திக்குச் சிறிய நாயகர் என்பதும் பெயராகும்.

திருஇடைமருதூரில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்திக்கு ஏகநாயகர் என்பது பெயராகும்.

திருப்பூவணம் எனும் தலத்தில் உள்ள சோமாஸ்கந்தருக்கு அழகிய நாயகர் என்பது பெயராகும். இவர் அதிக பளப்பளப்பாக இருப்பதாலும் சூரியனால் வழிபாடு செய்யப்பெற்றதாலும் "காந்திநாயகர்" என்றும் அழைக்கப்படுகின்றார்.

மதுரையில் சோமசுந்தரராக வீற்றிருக்கும் சோமாஸ்கந்தர் பாண்டிநாயகர் என்றழைக்கப் படுகின்றார். இவர் பாண்டி மன்னனாகச் செங்கோல் செலுத்தியதால் "பாண்டிநாயகர்" எனப் பெற்றார் என்பர். இவரைக் கூடல்நாயகர் என்றும் கூறுவர்.



திருவண்ணாமலை-பெரியநாயகர்
வெள்ளிக் கவச அலங்காரத்துடன்

திருமுதுகுன்றம் என்று தேவாரத்தில் அழைக்கப்படும் விருத்தாசலத்தில், பழமலைநாதர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தருக்குப் பெரிய நாயகர் என்பது பெயர். இவர் விபசித்து என்ற முனிவருக்கு காட்சியளித்தவர் என்று புராணம் கூறுகிறது.



விடங்கர்

விடங்கர் என்பதற்குப் பலவகையான பொருள்களை அறிஞர்கள் கூறுகின்றனர். விடர் என்பதற்கு "ஞானப்பிளவு" என்றும், அந்த ஞானப் பிளவிலிருந்து தோன்றிய ஒளிமயமான அங்கத்தை உடையவராதலின் சிவபெருமான் (விடர்+அங்கர்) விடங்கன் எனப்பட்டார் என்பர். சிவபெருமான் ஞானப் பிழம்பிலிருந்து உருவம் தாங்கி வந்து அருள் பாலிக்கும் நிலையே "விடங்கம்" என்பர்.

"டங்கம் என்றால் உளி என்றும், விடங்கம் என்றால் உளியால் செதுக்கப்படாத திருமேனியை உடையவர் என்றும் அதாவது தானே சுயம்புவாய் முளைத்த திருமேனி என்றும் பொருள் கூறுவர்.

ஆனால் இப்பெயர் விளக்கம் ஏற்புடையதாக இல்லை. திருமால் தான் கண்ட காட்சியை விவரித்து தேவதச்சனைக் கொண்டு செய்த திருமேனியே சோமாஸ்கந்தர் என்று புராணமும் செவிவழிச் செய்திகளும் கூறுகின்றன. ஆதலால் உளியால் செதுக்கப்படாத திருமேனியை உடையவர் என்பது பொருத்தமாக இல்லை. எனவே விடங்கர் என்பதற்கு இதை விடச் சிறந்த பொருள் இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

பாற்கடலில் பெருகிவந்த விஷத்தை தமது அங்கத்திலே தேக்கி வைத்ததனால் விஷ + அங்கர் என்பதே. விஷங்கர் என்றாகித் தமிழில் விடங்கர் என்றானதென்பர். பெருமான் நஞ்சுண்டவரலாறே உயர்த்தியாகம் புரிய நின்ற வரலாறாகும் எனவே அவர் தியாகராஜன் எனப்பட்டார் என்பர்.


"விடங்கர்" என்பது தியாகராஜ மூர்த்தி களுக்கே தனிச் சிறப்புடன் வழங்கப்படும் பெயராகும். இவ்வகையில் திருவாரூர்ப்பெருமான் வீதி விடங்கர் என்றும்; நாகைப் பட்டினத்தில் சுந்தர விடங்கர் என்றும்; நள்ளாற்றில் நகவிடங்கர் என்றும், திருமறைக்காட்டில் புவனி விடங்கர் என்றும், திருக்காறாயிலில் ஆதிவிடங்கர் என்றும், திருவாய் மூரில் நீல விடங்கர் என்றும், திருக் கோளிலியில் அவனி விடங்கர் என்றும் பெருமான் பலவாறு அழைக்கப்படுவதைக் காணலாம்.

மேலும் "விடங்க" என்பதனை யோக நூல் வல்லார் யோகவழியில் விண்பக்ஷிண: டங்கைதி இதி விடங்க: என்று பிரித்து பொருள் காண்பர். இதன் பொருள் சுதந்திரமாகப் பறப்பது என்பதாகும். இப்படி சுதந்திரமான (அம்சப்பட்சியாக) அன்னமாகப் பறப்பவன் யோகசாதனையால் தானே சிவமானவன். இதற்கு வழிகாட்டுபவனே விடங்கன். இது யோகரகசியமாதலின் விடங்கர்மேனியும் ரகசிய மாகப் போற்றப்படுகிறதென்பர்.

விடங்கன் என்பதற்கு அழகன் என்று பொருள் கூறுபவர். சிவபெருமான் விடங்கராய் வீதிபோந்தார் என்னுமிடத்தில் அழகனாகி உலா வந்தார் என்றே பொருள் காண்பர். இப்பொருள் ஓரளவிற்கு பொருள் பொதிந்ததாகும். திருவாரூர் தியாகராஜருக்கு அழகின் அடிப்படையில் கம்பிக்காதழகர், செல்வந்தித் தோடழகர், முன்னிலும் மும்மடங்கு பின்னழகர் என வழங்கும் பலவேறு பெயர்கள் இதை உணர்த்துகின்றது.

சோழர்கள் திருவாரூர்ப் பெருமானிடம் கொண்டிருந்த பேரன்பால் தாங்கள் பலதலங்களிலும் எடுப்பித்த சோமாஸ்கந்த மூர்த்திகளுக்கும், விடங்கர் என்ற பெயரையே சூட்டினர்.

எடுத்துக்காட்டாக, மாமன்னர் ராஜ ராஜ சோழ தேவரால் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் எழுந்தருளி வைக்கப் பெற்றிருக்கும் சோமாஸ்கந்தர்



காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலய சோமாஸ்கந்தர் தங்க கவசத்துடன் (பக்கம் 397)

தட்சணமேரு விடங்கர் என்றழைக்கப்பட்டார். மேலும் இக்கோயிலில் சில சோமாஸ்கந்தத் திருமேனிகள் மகாமேருவிடங்கர், தஞ்சைவிடங்கர் என்ற பெயரில் இருந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

திருஐயாற்றுக் கோயிலில் ராஜராஜசோழ தேவரின் மனைவியான லோகமாதேவி எழுப்பித்த கற்றளியான ஒலோக மாதேவீச்சரத்தில் எழுந்தருளி யிருந்த சோமாஸ்கந்த மூர்த்தி "ஒலோக விடங்கர்" என்றழைக்கப்பட்டார். இவருக்கு அவள் பொன்னாலும், மணியாலும் செய்தளித்த தானங்கள் இக்கோயிலில் விவரமாகக் குறிக்கப்பட்டுள்ளன. இந்நாளில் இக்கோயில் உத்திரகயிலாயம் என்றழைக் கப்படுகின்றது.

திருப்புகலூர் எனும் தலத்தில் எழுந்தருளும் சோமாஸ்கந்தர் "ராஜராஜ விடங்கர்" ஆவர். ராஜ ராஜனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் இவரை ராஜ ராஜ மங்கலத்தரையன் என்பவர் எழுந்தருளிவைத்தான் என்று இவ்வூர்க் கல்வெட்டு குறிக்கின்றது.

தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனத் திற்கும், உப்பு வேலூருக்கும் இடையில் உலகாபுரம் என்ற ஊர் அமைந்துள்ளது. இது ராஜராஜசோழ தேவரின் மனைவியான ஒலகமாதேவியாரின் பெயரால் அமைந்ததாகும். இராஜேந்திரன் காலத்தில் இங்குள்ள கோயிலுக்கு சோமாஸ்கந்தர் திருமேனி செய்தளிக்கப் பெற்றது. இவ்வூர் நகரத்தாரால் செய்தளிக்கப்பெற்ற இத்திருமேனி எழுந்தருளும் சந்நிதி இராஜேந்திர சோழ விடங்கர் சந்நிதி என்று குறிக்கப்பெற்றது. ஆனால் இந்நாளில் இத் திருமேனியைக் காணமுடியவில்லை.

திருவாரூர் தியாகராசப் பெருமான் வீதி விடங்கர் என்றழைக்கப்படுகின்றார். மேலும் இக்கோயிலின் உட்கோயில்களான அசலேசுவரத்தில் எழுந்தருளியிருந்த சோமாஸ்கந்தர் திருஅறநெறி தர்மவிடங்கர் என்றும், சத்யவாசகேசுவரர் கோயிலில் எழுந்தருளியிருந்த சோமாஸ்கந்தர் ஆலவிடங்கர் என்றும் அழைக்கப்பெற்று அவர்களுடைய பூசைக்கும் விழாவுக்கும் நிவந்தங்கள் அளிக்கப் பெற்றதை திருவாரூர்க் கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன.

திருஒற்றியூரில் எழுந்தருளியிருக்கும் சோமாஸ்கந்தர் காரணை விடங்கர் எனப்பெற்றார் என்று அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது. மயிலாடுதுறையை அடுத்த குத்தாலம் என்றழைக்கப் படும் தலத்தில் உள்ள சோமாஸ்கந்தர் பொற்பலகை விடங்கர் எனப்பெற்றார். சிதம்பரத்தில் சபாநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர் "தில்லைவிடங்கன்" என்றழைக்கப் படுகின்றார். இவர் பெயரால் தில்லைவிடங்கன் என்ற சிற்றூரும் அமைந்திருப்பது எண்ணத்தக்கதாகும்.

திருவேங்கை வாசல் எனும் தலத்தில் முதலாம் ராஜேந்திரன் காலத்தில் நித்த சூளாமணி விடங்கர் எனும் பெயரில் சோமாஸ்கந்தர் எழுந்தருளிவைக்கப் பெற்றார். மூன்றாம் ராஜராஜன் காலத்தில் சதிரவிடங்கத் தேவர் என்பவரும் எழுந்தருளி வைக்கப்பெற்றார்.

மேலும் கொங்கு நாட்டில் அமைந்த கொடுவாய், கடத்தூர் முதலிய தலங்களில் உள்ள சோமாஸ்கந்தர்களும் கொங்கு விடங்கீசுவரர்கள் என்ற பெயரால் அழைக்கப் பட்டதை ஆய்வாளர்கள் குறிக்கின்றனர். செட்டிநாட்டில் உள்ள கானூர் இறைவர் பிரளய விடங்கர் என வழங்கப் பெற்றதையும் அறிகிறோம்.

உமாஸ்கந்ததேவர்


தஞ்சை மாவட்டம் தென் திருமுல்லை வாசலில் உள்ள சிவாலயத்தில் எழுந்தருளும் சோமாஸ்கந்தர் பீடத்தில் உமாஸ்கந்ததேவரை எழுந்தருளிவித்தான். குன்றனூர்க் கிழவன் குலமாணிக்கம் எடுத்தபாதம் என்றவரி எழுதப் பட்டுள்ளது. இச்செய்தியால் சோமாஸ்கந்தர் உமாஸ்கந்த தேவர் என்ற பெயராலும் அழைக்கப் பட்டது தெரியவருகின்றது.

உமாஸ்கந்தசகிதர்

திருச்சிக்கு அருகில் உள்ள அல்லூர்க் கோயிலில் முதலாம் ராஜ ராஜ சோழன் காலத்தில் ஓகை உடையான் என்பவன், சோமாஸ்கந்தரைச் செய்தளித்தான். அத்திருமேனி "உமாஸ்கந்த சகிதத் திருமேனி'' என்று கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளதை அறிகிறோம்.

அழகர்


சிவபெருமான் அழகுகெலாம் திரண்டெழுந்த பேரழகர். எனவே அழகன் என்பது அவருக்குச் சிறப்புப் பெயராயிற்று. அழகன் என்பது சிவபெருமானையே குறிக்கும். இதனை வடமொழியில் சுந்தரன் என்பர். மதுரையில் உமையுடன் பிரியாது வீற்றிருப்பதால் அங்கு சோம சுந்தரர் என்று சிறப்புப்பெயர் பெற்றார். மதுரைச் சோமசுந்தரருக்கு கூடல் அழகன் என்பதும் பெயராகும். திருப்பூவணம் முதலான தலங்களில் உள்ள சோமாஸ்கந்தமூர்த்திக்கு அழகிய பிரான் என்பது பெயராகும். திருவாரூர் தியாராஜருக்கு முன்னிலும் பின்னழகர் என்பது ஒரு பெயராகும். நாகைப்பட்டினத்து சோமாஸ்கந்தரான தியாகராஜர் அழகிய விடங்கர் என்றும் குறிக்கப்படுகின்றார்.



காஞ்சீபுரம் - சோமாஸ்கந்த திருத்தலம்

தொண்டை மண்டலத்தின் தலைநகரான இன்றைய காஞ்சீபுரம் சோமாஸ்கந்தத் திருத்தலம் என்ற சிறப்புப்பெற்றதாகும். இங்குள்ள அனைத்து ஆலயங்களிலும் சோமாஸ்கந்தர் சிறப்புடன் போற்றப்படுகின்றார்.

காஞ்சீபுரத்தின் தலைமைக் கோயிலாக போற்றப்படுவது "திருக்கச்சி ஏகம்பம்" என்று புகழப்படும் ஏகாம்பரநாதர் ஆலயமாகும். இங்கு கருவறையின் பின்புறம் அமைந்த பெரிய முற்றத்தின் நடுவில் சுமார் 5000 ஆண்டுகளுக்கும் பழைமையான முதிர்ந்த மாமரம் செழித்து வளர்ந் துள்ளது. இதன் கீழ் ஒரு மேடையும் சிறுமண்டப மும் உள்ளன. இதில் கல் திருமேனியாக சோமாஸ் கந்தர் எழுந்தருளியுள் ளார். இவருடைய மேற்கரங்களில் மானும், மழுவும் திகழ் கின்றன. முன்கரங்களில் வலது கரம் சின்முத்திரையுடன் வலப்புறம் படுக்கை நிலையில் வைக்கப் பட்டுள்ளது. இடது கரம் மடிமீது உள்ளங்கை மேல் நோக்கியவாறு உள்ளது. இடப்பக்கம் வீற்றிருக்கும் அம்பிகை ஒரு கையில் மலரேந்தி ஒரு கையை பீடத்தில் ஊன்றி வலக் காலை முழந்தாளிட்டு இடது காலை பீடத்தில் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார்.



மாவடி சோமாஸ்கந்தர் - காஞ்சீபுரம்

இருவருக்கும் இடையிலுள்ள முருகன் அம் பிகையின் மடியில் ஒய்யாரமாகப் படுத்துள்ளதைக் காண்கிறோம். அடிப்பீடத்தில் அண்ணாமலையார், கம்பாநதிக் காட்சிகள் செதுக்கப் பட்டுள்ளன. இந்த மாவடிவைகும் சோமாஸ்கந்தரே மிகவும் பழைய திருமூர்த்தம் என்று கருதப் படுகின்றது.


இங்கு திருமணம் தடைப்பட்டு வருந்து பவர்களும், பிள்ளைப்பேறு இல்லாதவர்களும், நேர்ந்து கொண்டால் விரைவில் திருமணம் நடக்கும், அழகிய குழந்தைகள் பிறக்கும் என்பது உறுதியாகும்.

இது யோகியான சிவபெருமானைப் பார்வதி மணந்து குமாரனைப் பெற்ற இடம் என்று பக்தர்கள் கூறுவர். எனவே சிவபெருமான் யோகிகளுக்குரிய முத்திரைகளைக் கைகளில் ஏந்தியுள்ளார். அம்பிகை மணப்பெண்ணாக தலைகுனிந்து நாணத்துடன் வீற்றிருக்கின்றாள். அவர்களுக்கு அப்போது தான் பிறந்த மகனாக குமாரன் படுத்த நிலையில் காணப்படுகின்றான். எனவே பிற ஆலயங் களில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்தத்தில் இருந்து இது முற்றிலும் வேறுபட்ட தென்பர். இவரை போக யோக மூர்த்தி என்பர்.

இச்சந்நிதிக்குத் தெற்கில் பெரிய சந்நிதியாக உற்சவ சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. இங்கு வெள்ளி மஞ்சத்தில் வெள்ளிப் பிரபையுடன் ஐம்பொன் திருமேனியாக எழுந்தருளும் சோமாஸ் கந்தரைக் காண்கின்றோம். அவர் தங்கக் கவசங்கள் தரித்து சிறப்புடன் கொலு வீற்றிருக்கின்றார்.

இவருடைய தனியம் மனுக்கு "ஏலவார் பூங்குழலி" என்பது பெயராகும். இவள் மாவடிக்கு வடக்கில் தனிச் சந்நிதியில் கொலு வீற்றிருக்கின்றாள். இவருக்கு வலப்புறம் முருகனுக்கு தனி ஆலயம் அமைந் துள்ளது. இங்கு குமாரர் வள்ளி தெய்வானை யுடன் அருள்பாலிக்கின்றார். இவருக்கு மாவடிக் குமாரர் என்பது பெயர். "மாவடிவைகும் செவ்வேள்" என்று இலக்கியங்களில் போற்றப்படுகின்றார்.

ஒரே வரிசையில் உலாத்திருமேனியான சோமாஸ்கந்தர் மாவடிவைகும் கல்திருமேனியான



ஏகாம்பரேஸ்வர் - மூலவர்

சோமாஸ்கந்தர், குமாரர், ஏலவார் பூங்குழலி (உலாத்திருமேனி) அம்பிகை ஆகிய நால்வரும் எழுந்தருளியிருப்பது வேறெங்கும் காணப்படாத காட்சியாகும்.

மேலும் இங்கு கருவறையில் லிங்கமாக விளங்கும் ஏகாம்பர நாதருக்குப் பின்புறம் சுவரில் சோமாஸ்கந்த மூர்த்தம் எழுந்தருளி வைக்கப் பட்டுள்ளதையும் காண்கிறோம்.

கந்த புராணம் இந்த சோமாஸ்கந்த மூர்த்தியைச் சிறப்பித்து,

ஏலவார் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலன் ஆகிய குமரவேள் நடுவுறும் பான்மை

என்று பாடிச் சிறப்பிக்கின்றது.

காஞ்சீபுரத்தில் உள்ள பல்லவர்கால அனைத்து சிவாலயங்களிலும் சோமாஸ்கந்த மூர்த்தம் கருவறைச் சுவரில் லிங்கத்திற்குப் பின்புறம் அமைந்துள்ளதைக் காணலாம்.

பல்லவர்களுக்கு இந்த வடிவத்தின் மேல் அன்பும் பக்தியும் அதிகமாக இருந்தது. எனவே இதனைத் தாங்கள் அமைத்த மதங்கேசுவரர், அமரேசுவரர், இறவாதீசுவரர், பிறவாதீசுவரர், அபிராமேசுவரர், ஐராவதீசுவரர், முதலிய அனேக கோயில்களில் மூலத்தானத்தில் அமைத்துப் போற்றினர். இவைகள் சுதையால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப் பட்டவைகளாகும்.

பல்லவர்களைத் தொடர்ந்து சோழர்களின் ஆட்சிக்காலத்திலும் காஞ்சீபுரத்தில் சோமாஸ்கந்த வழிபாடு சிறப்பு பெற்றது. கச்சபேசுவரர், முதலிய ஆலயங்களில் அமைந்த இத்தகைய மூர்த்திகளுக்கு சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பெற்றன.

காஞ்சீபுரத்தை ஆண்ட பல்லவமன்னர்களில் தலைசிறந்தவர் இராஜ சிம்மனாவார். இவரையே அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான காடவர் கோன் கழற்சிங்கன் என்று பலர் கருதுகின்றனர். இவரால் கட்டப்பெற்றதே காஞ்சி கயிலாயநாதர் ஆலயமாகும். இக்கோயிலில் இம்மன்னனின் 250க்கும் மேற்பட்ட விருதுகள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ரிஷபலாஞ்சனன், ஸ்ரீசங்கரபத்தன், ஸ்ரீஆகமப் பிரியன், சிவசூடாமணி, போன்றவை இவனுடைய எல்லையற்ற சிவ பக்தியைக் காட்டுவதாக அமைகின்றது.

இக்கோயிலில் சோமாஸ்கந்தருக்கு தனிச் சிறப்பளிக்கப்பெற்று 30க்கும் மேற்பட்ட சிற்றாலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் சுதையினால் சோமாஸ்கந்தர் அமைக்கப்பெற்று வண்ணம் தீட்டப்பட்டு வணங்கப்பட்டதை அறிகிறோம்.

இக்கோயிலின் வெளிச்சுற்றில் எட்டு சிற்றாலயங்கள் உள்ளன. இவற்றில் ஒன்றை இவனது மனைவியான ரங்கபதாகைப் பிராட்டியார் என்பவள் அமைத்தாள் என்பர். இதிலும் சோமாஸ்கந்தர் வடிவமும் சிவலிங்கமூர்த்தியும் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

காஞ்சீபுரத்து கச்சபேசுவரர் ஆலயம் சோமாஸ்கந்த வழிபாட்டிற்குரிய சிறப்புத் தலமாகும். இங்கு கருவறையில் லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்த மூர்த்தியைச் சிறப்புடன் காணலாம். இங்குள்ள உற்சவரும் தலை சிறந்த அழகுமிக்க வராவார். இவரைத் திருமால் வழிபட்டு பேறுபெற்றார் என்பர்.

இத்தகைய பல காரணங்களால் காஞ்சீபுரத் தினைச் சோமாஸ்கந்த திருத்தலம் என்பர். மேலும் ஏகாம்பரநாதர் கோயில் காமாட்சி யம்மன் கோயில் அதற்கிடையில் குமார கோட்டம் எனும் முருகன் கோயில் ஆகிய மூன்றும் ஒரே கோட்டில் அமைந்திருப்பதாலும் இதனைக் சோமாஸ்கந்தத் திருத்தலம் என்பர். (ஆனால் இக்கருத்தைப் பலர் ஏற்பதில்லை).

மாமல்லபுரமும் சோமாஸ்கந்தரும்



உலகிலுள்ள தலைசிறந்த கலைக்கூடங்களை World Heritage என்ற நிறுவனம் பட்டியலிட்டுள்ளது. அதில் இந்தியாவில் உள்ள புராதன சின் னங்கள் பன்னிரண்டாகும். அவற்றில் இரண்டு தமிழகத்தில் உள்ளன. அவை தஞ்சைப் பெரு வுடையார் கோயிலும், மாமல்லபுரம் சிற்பங்களுமாகும் இத்தகைய சிறப்பு படைத்த மகாபலி புரம் இன்று சிற்றூராகக் காட்சியளித் தாலும் பல்லவர்காலத்தில் பெருஞ் சிறப்புமிக்க துறைமுகப்பட்டினமாகத் திகழ்ந்ததாகும்.

இங்கு பல்லவர்கள் ஏராளமான சிற்பக்கலைச்செல்வங்களைப் படைத்தனர். அவை பல காலவெள்ளத் தால் அழிந்துபட்டன. எஞ்சியிருப் பவை சிலவே, என்றாலும் அவை அவர்களுடைய பக்தியையும் கலை யுள்ளத்தையும் இந்தியக் கலையின் மாண்பையும் உலக அரங்கில் பறை சாற்றி நிற்கின்றன.

இங்குள்ள சிற்பங்களில் குறிப் பிடத்தக்கவை. சோமாஸ்கந்தரின் வடிவங்களாகும். மகிஷாசுர மர்த்தினி குகைக் கோவில், கடற்கரைக் கோயில் கள் இரண்டிலும் (கிழக்கிலும் மேற்கிலு மாக இரண்டு) தருமராசர் ரதத்தின் முதல்தளம் ஆகிய பல இடங்களில் பெரிய அளவில் சோமாஸ்கந்தர் புடைப்புச் சிற்பமாக செதுக்கப் பட்டுள்ளார். இவை அளவால் பெரியன. இவற்றில் குழந்தைக்குமாரன் தனிஎழிலுடன் அமைக்கப் பட்டுள்ளான் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவர்களைச் சுற்றி பூதகணங்களும் பிரம்ம விஷ்ணுக்களும் காட்டப்பட்டிருப்பது இதன் தனிச்சிறப்பாகும். இவற்றிலொன்றான சோமாஸ்கந்தர் சிற்பத்தை இங்கு காண்கிறோம்.

மாமல்லபுரத்தின் ஒரு பகுதியான சாளுவன் குப்பம் எனுமிடத்திலும் ஒரு குகைக் கோயிலில் சோமாஸ்கந்தர் சிற்பம் காணப்படுகின்றது. இங்கு பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு "பசுபதி யானவன் உமையோடும் குகனோடும்" இங்கேயே தங்கட்டும் என்று கூறுகிறது.

சைவ அன்பர்கள் மாமல்லபுரத்தை சுற்றுலாத்தலமாகவே எண்ணி கண்டுகளிக்காமல் விட்டு விடுகின்றனர். ஆனால், இங்குள்ள சோமாஸ்கந்தர், அர்த்தநாரீசர் முதலான சிவசிற்பத்திருமேனிகளை வேறெங்கும் காணமுடியாது என்பது உணரத்தக்கதாகும்.



மூலவமூர்த்தியாக விளங்கும்

சிறப்புமிக்க சோமாஸ்கந்தர்கள்

காஞ்சீபுரத்தில் மட்டுமே கருவறையின் உட்புறம் லிங்கத் திருமேனிக்கு பின்புறம் சோமாஸ்கந்தரை அமைக்கும் வழக்கம் இருந்ததென்பர். ஆனாலும் சில திருத்தலங்களில் சோமாஸ்கந்தரைக் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்னணியில் காணமுடிகிறது. அவற்றில் சிலவற்றை இங்குகாணலாம்.

உருத்திரகங்கை ஆபத்சகாயர்

திருவாரூர் - கும்பகோணம் சாலையில் உள்ள பூந்தோட்டத்திற்குக் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் இருப்பது உருத்திர கங்கை என்ற தலமாகும். இங்குள்ள ஆபத்சகாயேசுவரர் ஆலயத்தின் கருவறையில் சிவலிங்க மூர்த்திக்குப் பின்னணியில் கல்லாலான திருமேனியாக சோமாஸ்கந்தரைக் காண்கின்றோம். சோழமண்டலத்தில் இது போன்ற அமைப்பை வேறெங்கும் காணமுடியவில்லை.

ஈரோடு கயிலாயநாதர்

ஈரோடு நகரில் காவிரியாற்றங்கரையில் கயிலாயநாதர் கோயில் என்ற சிவன்கோயில் அமைந்துள்ளது. இங்கு காஞ்சி கயிலாயநாதர் கோயிலில் இருப்பது போலவே மூலத்தானத்தில் சிவலிங்கத்திற்கு பின்புறம் சோமாஸ்கந்தர் அமைக்கப் பட்டுள்ளார். இத்தகைய அமைப்பை (சேலம் கோவை ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய) கொங்கு மண்டலத்தில் வேறெங்கும் காணமுடியவில்லை.

மேற்சொன்னவை மூலத்தானத்தில் உள்ள சோமாஸ்கந்தர் வடிவங்களாகும். இனி சில தலங்களில் மூலத்தானத்தில் இல்லாமல் தனிச்சந்நிதியில் சிறப்புடன் விளங்கும் சில சோமாஸ்கந்த மூர்த்திகளைக் காணலாம்.

திருஇடைமருதூர்
கயிலாயநாதரான சோமாஸ்கந்தர்

திருஇடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தின் உட்சுற்றில் பெரிய கட்டுமலை அமைந்துள்ளது. இதனைத் தென்கயிலாயம் என்பர். இதன் கீழ் இராவணன் வீணை வாசித்துக் கொண்டு மலையைத்தாங்கும் பாவனையில் உள்ளான். மலையின் மீது சோமாஸ்கந்தரின் கல் திருமேனி அமைந்துள்ளது. இங்கு பெருமானுடன் வீற்றிருக்கும் அம்பிகையின் பெயர் அன்பிற்பிரியாள் என்பதாகும். இவர்களுக்கிடையே குழந்தையாக வீற்றிருக்கும் முருகன் அளவிலா மகிழ்ச்சியுடன் விளங்குகின்றார்.

இவருடைய காலடியில் நந்தியம் பெருமான் படுத்தவாறு காட்சியளிக்கின்றார்.

திருமழபாடி மாணிக்கம்

திருமழபாடி திருச்சி மாவட்டத்தில் உள்ள தலமாகும். திருவையாற்றிற்கு வடமேற்கில் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்தும், திருவையாற்றிலிருந்தும் நகரப் பேருந்துகள் இவ்வூருக்குச் செல்கின்றன.

இங்குள்ள வஜ்ரஸ்தம்பேசுவரர் ஆலயத்தில் சோமாஸ்கந்தருக்கென இரண்டு சிறப்புமிக்க சந்நிதிகள் உள்ளன. இவற்றில் முதலாவது சந்நிதி உட்பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கியவாறு அமைந்ததாகும். இதில் பெரிய கருங்கல் திருமேனியாக சோமாஸ்கந்தர் எழுந்தருளியுள்ளார். பெரிய பிரபையுடன் ஒற்றைக்கல்லில் செய்யப்பட்டிருக்கும் இந்த மூர்த்தி

கலையழகுமிக்கவராவார். இவ்வாறு தனிச்சந்நிதியில் சோமாஸ்கந்தமூர்த்தி எழுந்தருளிவைக்கப்பட்டுள்ளதை சோழமண்டலத்தில் வேறெங்கும் காணமுடியவில்லை.

இரண்டாவதாக மூலத்தானத்திற்கு இணையாக அதன் வலப்புறம் ஒரு தனிக்கோயில் அமைக்கப்பெற்று அதில் உலாத்திருமேனியான சோமாஸ்கந்தர் எழுந்தருளி வைக்கப்பெற்றுள்ளார். இக்கருவறையும் முன் மண்டபங்களும் இணைத்து சோமாஸ்கந்த மண்டபம் என்றே அழைக்கப் படுகின்றன. இங்கு எழுந்தருயுள்ள சோமாஸ்கந்தர் ஜயங்கொண்ட சோழவிடங்கர் என்றழைக்கப் பெற்றார். இவருடன் பிரம்மா, விஷ்ணு, திருமகள் ஆகிய திருமேனிகளும் எழுந்தருளி வைக்கப் பெற்றதாக இக்கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஜயங்கொண்டசோழன் என்பது முதலாம் ராஜ ராஜனின் பட்டப்பெயராகையால் இத்திருமேனி அவனாலேயே செய்தளிக்கப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மேலும் உதிரிச்சிற்பமாக ஒரு சோமாஸ் கந்தரின் கல்திருமேனி உள்ளது. இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவில் இருக்கவேண்டிய முருகன் சிவபெருமான் மடியில் இருக்கின்றான். சிறிய உருவமாக அமைந்த அவனை பெருமான் இடக்கரத்தால் பற்றியுள்ளார். இவ்வகை வடிவம் வேறெங்கும் இல்லை எனலாம். இந்தப் படத்தை மேலே காண்கிறோம்.



திருமழபாடி - சோமாஸ்கந்தர்

திருநெல்வேலிக் கயிலாயநாதர்

சோமாஸ்கந்த மூர்ததிக்குச் சிறப்பான தலங்களில் திருநெல்வேலியும் ஒன்றாகும். இங்கு உலாத்திருமேனியான சோமாஸ்கந்த மூர்த்தி ஒரு தனித்த சிற்றாலயத்தில் எழுந்தருளியுள்ளார். அளவால் சிறிய மூர்த்தி என்றாலும், கலையழகிலும் சிறப்பிலும் மேலோங்கி நிற்கின்றார். இந்த மூர்த்தியில் உள்ள தனிச்சிறப்பு இதில் உள்ள அம்பிகை நம்மைப் பாராது பெருமானை நோக்கி அமர்ந்தவாறும் அவரையே பார்த்து மகிழ்ந்து கொண்டு இருப்பவளா கவும் அமைந்துள்ள நிலையாகும். இந்த அமைப்பை வேறு சோமாஸ்கந்த வடிவங்களில் காணமுடிய வில்லை. அரச கோலத்துடன் மதுரையில் திகழ்வது போலவே இங்கும் அரசனாகத் திகழ்கின்றார். இந்தச் சந்நிதி முகமண்டபம் உள்மண்டபம் முதலிய அமைப்புகளுடன் சிறப்புடன் அமைந்துள்ளது.

மேலும் இக்கோயிலின் பிரகாரத்தில் தென்மேற்கு முனையில் பெரிய கட்டுமலை ஒன்று உள்ளது. இதனை ஸ்ரீகயிலாயம் என்று அழைப்பர். இதனைத் தாங்கும் பாவனையில் ராவணனின் பெரிய சுதைச்சிற்பம் அமைந்துள்ளது. வடக்குப்புறம் அமைந்த படிக்கட்டுகளின் வழியே இந்த செயற்கை மலைமீது ஏறிச்சென்றால் பெரிய மண்டபத்தையும் அதனை ஒட்டிய சந்நிதியையும் காண்கிறோம். இச்சந்நிதியில் சோமாஸ்கந்த மூர்த்தி அழகிய உருவுடன் காட்சியளிக்கின்றார். இவருக்கு சந்நன காப்பு அணிவிக்கப்பட்டுள்ளது. இந்த சோமாஸ் கந்தரை **சந்தன சோமாஸ்கந்தர்** என அழைக் கின்றனர். முன் கட்டுரையில் சொன்ன திருவிடை மருதூர் கயிலாயம்போலவே இது நெல்லை கயிலாயமாகத் திகழ்கிறது.


உலாத்திருமேனிகளாக விளங்கும்

தனிச்சிறப்புபெற்ற சோமாஸ்கந்தர்கள்

சிவபெருமானின் பொதுவாக மான்மழு ஏந்தி அபய, சிம்மகர்ணமுத்திரை தாங்கி சுகாசனத்தில் தேவியுடன் கந்தன் இடையிருக்க அமைந்த கோலமே சோமாஸ்கந்த வடிவமாகும் என்றாலும் சில வடிவங்கள் தனிச்சிறப்புடன் படைக்கப்பட்டிருப்பதையும் காண்கின்றோம். அத்தகைய திருஉருவங்கள் சிலவற்றை இங்கு காணலாம்.

மாங்கனி ஏந்திய சோமாஸ்கந்தர்

தஞ்சை மாவட்டம் நன்னிலத்தை அடுத்துள்ளது திருப்பனையூர் ஆகும். இது திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற பதியாகும். இங்குள்ள சோமாஸ்கந்தரில் உள்ள பெருமான் மேற்கரங்களில் மான், மழுவும் கீழ்க்கரங்களில் வலக்கையில் அபய முத்திரையும் இடக்கையில் மாங்கனியையும் தாங்கியுள்ளார். இவ்வாறு மாம்பழத்தைக் தாங்கியுள்ளதை வேறெங்கும் காணமுடியவில்லை. சோமாஸ்கந்தரின் சிறப்புப் பெயரான அழகர் என்பது முன்னாளில் இங்கு அமைந்துள்ள மூலவருக்கு வழங்கிவந்ததைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. இந்நாளில் அது வடமொழியாக்கம் பெற்று சௌந்தரேசுவரர் என வழங்குகின்றது.



பனையூர் - மாங்கனி ஏந்தும் சோமாஸ்கந்தர்

திருக்கழுக்குன்றத்து பொற்கட்டி ஏந்தும் சோமாஸ்கந்தர்

வேதகிரி என்று புகழப்பெறும் திருக்கழுக்குன்றம் சோமாஸ்கந்த திருத்தலமாகும். இங்கு மலைமீது வேதகிரீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. மூன்றாம் ராஜ சிம்மன் என்ற பல்லவப்பேரரசனால் திருப்பணி செய்யப்பட்ட இக்கோயிலில் கருவறையில் சிவலிங்கமும் அதற்குப் பின்னணியில் சோமாஸ்கந்தர் வடிவமும் சிறப்புடன் அமைக்கப் பட்டுள்ளன.

கல்வெட்டுகளில் சிவலிங்க மூர்த்தியான வேதகிரீசுவரர் ஸ்ரீ மலைமேல் மூலத்தானத்துப் பெருமானடிகள் என்று குறிக்கப்படுகின்றதைக் காண்கிறோம். முதலாம் ராஜேந்திரன் காலத்திலும் பின்னர் வந்த விஜய நகர மன்னர்கள் காலத்திலும் ஸ்ரீ மூலத்தானத்து தேசி விடங்கர் என்ற பெயர் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதில் தேசிவிடங்கர் என்பது கருவறையில் அமைந்த சோமாஸ்கந்தருக்கு வழங்கிய பெயராக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இம்மலையின் அடிவாரத்தில் உள்ள (தாழக் கோயிலில்) அமைந்த பக்தவத்சலேசுவரர் ஆலயத்தில் உற்சவருக்கான பெரிய சபாமண்டபம் போன்ற தனிக்கோயில் உள்ளது.

இதில் சோமாஸ்கந்தரான உற்சவர் எழுந்தருளியுள்ளார். இவர் இயல்பான வடிவத்துடன் பொன் கட்டியை ஏந்தியவராக காட்சியளிக்கின்றார். இங்கு இவரை சுந்தர மூர்த்திகள் வியந்து போற்றிப் பாடிப் பொன் பெற்றார் என்று இவ்வூர்ப் புராணங்கள் கூறுகின்றன. இக்கோயிலில் உள்ள பாண்டியர்காலக் கல்வெட்டுகள் சில இறைவனைப் பொன்னிட்ட ஈச்சரமுடைய நாயனார் என்று குறிப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

அரசமூர்த்தி (ராஜாங்க நாயகர்)


சோமாஸ்கந்த மூர்த்திக்கு ராஜாங்க மூர்த்தி என்பது பெயர். சோமாஸ்கந்த மூர்த்தி தனியே வீதியுலாவோ, விழாவோ காணபதில்லை. அவருடன் தனி அம்பிகை எனப்படும் நின்ற நிலையிலான பராசக்திஅம்பிகை, விநாயகர், வள்ளி தெய்வ யானை உடனாய முருகப்பெருமான், அணுக்கத் தொண்டரான சண்டீசர் ஆகிய நால்வருடன் உலாக் காண்கின்றனர். இவர்கள் ஐவரையும் சேர்த்தே பஞ்சமூர்த்திகள் என வழங்குவர். இவர்கள் பெருந்திருவிழாவின் இரவிலும் பகலிலும் உலா வருகின்றனர்.

இவரை முன்னிருத்தியே கொடியேற்றம் செய்து கங்கணம் அணிவித்து திருவிழாவைத் தொடங்குவர்.

இவர் உலா வருவதற்கு முன்பாக அரசர்கள் வலம்வருவதற்கு முன் குடை, வாள் முதலியவற்றை அனுப்புவதுபோல, இவருடைய படைக்கலமான திரிசூலம் வலம் வரச்செய்யப்படுகின்றது. இந்தச் சூலமாகிய அத்திரதேவர் வலம் வந்து பெருமானின் வரவை உலகைக் காக்கும் லோகபாலகர்களுக்கு அறிவித்து அவர்களுக்கு உணவூட்டும் நவசந்தி பலி எனப்படும் நிகழ்ச்சி நடைபெறும்.

மதுரை முதலான திருத்தலங்களில் சோமாஸ்கந்தருக்கு இடையில் கத்தியைக் கட்டி மகாராஜாவாக அலங்கரிக்கின்றனர். இவருக்கு முன்னே இடபத்தை உச்சியில் கொண்ட செங்கோல் ஏந்தி கட்டியம் பராக் ஆகியவற்றைக் கூறி சேவகர் வருவார்.

மன்னர்களுக்கு உரிய தசாங்கம் எனப்படும் பத்துவகை சிறப்புப்பொருள்கள் சோமாஸ்கந்தருக்கு உண்டு. அவற்றை தியாகராஜர் என்னும் மலரில் விரிவாகக் காணலாம்.



மதுரையில் அரசு செலுத்தும் சோமசுந்தரப் பெருமானும் மீனாட்சி தேவியும் (சோமாஸ்கந்தர்)

சில்பரத்தினம் எனும்நூல் இவரை ராஜ ராஜனைப் போன்றவர் என்றும் அரசனைப் போன்று காட்சிதருபவர் என்றும் குறிப்பிடுகின்றது.

சோமாஸ்கந்தருக்கு மாலையில் செய்யும் வழிபாடு சிறப்புடையதாகும். அப்போது பூசை செய்யும் அர்ச்சகர் தேவேந்திரனாகவும், பாடுவோர் கின்னரர்களாவும், ஆடுவோர் தேவலோக அரம்பையர்களாகவும், தீபம் ஏற்றித் தருவோர் சூரிய சந்திரர்களாகவும், பணியாளர்கள் சிவகணத்தவர் களாகவும் இருப்பதாக எண்ணி அவர்களையும் வணங்குதல் வேண்டும்.

சோமாஸ்கந்தரும் வாகனங்களும்

ஆலயங்களில் நடைபெறும் பெருந் திருவிழாவின் போது சோமாஸ்கந்த மூர்த்தியைப் பலவிதமான ஆபரணங்களாலும், மலர்மாலை களாலும் அலங்கரித்து இடபம், யாளி, பூதம், அதிகாரநந்தி, நாகம், அன்னம், தேர் முதலிய அனேக வாகனங்களில் வைத்து உலாவரச் செய்து மகிழ்கின்றனர். ஆனால் சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுருவத்திலேயே இயல்பாக வாகனங்களை அமைக்கும் வழக்கமில்லை என்றாலும், அபூர்வமான வகையில் இவ்வடிவில் இடம் பெற்றிருக்கும் வாகனங்களை இப்போது காணலாம்.

கல்திருமேனியான விளங்கும் திருஇடை மருதூர் சோமாஸ்கந்தரின் காலடியில் அழகிய நந்தியம்பெருமான் படுத்திருக்கக் காணலாம்.

திருப்புகலூர் எனும் ஆலயத்தில் உள்ள உற்சவ சோமாஸ்கந்தருக்கு அருகில் வீற்றிருக்கும்



சோமாஸ்கந்தர் திருமழபாடி

அம்பிகை தனது இடது கையை பீடத்தில் ஊன்றியுள்ளாள். அவளுடைய அந்த ஊன்றிய கரத்தின் கீழ் நந்தியம் பெருமான் படுத்துள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான புராணக் கதையை அறிய முடியவில்லை.

இதனையொத்து ராமநந்தீச்சரம் எனும் ஊரில் உள்ள ஆலயத்து அம்பிகையின் கரத்தின் கீழும், நந்தியின் வடிவம் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதுவரை பெருமான் உலாவரும் வாகனங் களையும் பெருமானின் திருவுருவத்துடன் இணைந்த முறையில் அமைந்த வாகனங்களையும் கண்டோம். இனி எதிரில் அமைந்த வாகனங்களைக் காணலாம்.

பொதுவாக கருவறையில் வீற்றிருக்கும் மூலவருக்கு முன்பு மட்டுமே அவர்க்குரிய வாகனம் பலிபீடம், கொடிமரம் ஆகியன அமையும். பிற்காலத்தில் இதனையொத்து அம்பிகையின் முன்புறம் சிங்கமும், பலிபீடமும் அமைக்கப் பெற்றன.

ஆனால் உலாத்திருமேனிகள் முன்போ சாதாரணமாக சோமாஸ்கந்தரின் முன்போ வாகனம் பலிபீடம் ஆகியவற்றை அமைப்பதில்லை என்றாலும் தியாகராஜராக எழுந்தருளும் சோமாஸ் கந்தமூர்த்திக்கு எதிரில் நின்ற நிலையிலான நந்திதேவரின் பித்தளையினாலான திருஉருவத்தை அமைக்கின்றனர். காஞ்சீபுரத்தில் மாமரத்தடியில் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் முன்பு சிறுமண்ட பத்தில் நந்தி அமைந்திருப்பதையும் காண்கிறோம்.

இந்த அமைப்பை நோக்க சோமாஸ்கந்தர் சந்நிதிகள் தனி ஆலயங்களாகவே கருதப்பட்ட நிலையையும் உணரமுடிகின்றது.

பக்த உற்சவம்

பெருந்திருவிழாவின் முடிவில் பக்தர்களுக்கு விழா எடுக்கப்படும் வழக்கம் அனைத்து ஆலயங்களிலும் சிறப்புடன் போற்றப்படுகிறது. இதற்குப் பக்த உற்சவம் என்று பெயர். பொதுவாக, சிவபெருமானின் ஒவ்வொரு மூர்த்தத்திற்கும் ஒவ்வொரு அடியவர் சிறப்புப் பக்தர்களாகக் கொள்ளப்பட்டுள்ளார். அந்தந்த மூர்த்தத்திற்கு நடைபெறும் விழாவின் இறுதியில் அவருடைய பக்தர்களுக்கு விழா எடுக்கப்படும்.

எடுத்துக்காட்டாக நடராஜ மூர்த்தியை எடுத்து கொள்ளலாம். அவருக்கு மணிவாசகப் பெருமான் பக்தராக அமைக்கப்பட்டுள்ளார். மார்கழி மாதம் திருவாதிரைக்கு முன்னதாகக் கொண்டாடப்படும் ஒன்பது நாள் விழாவிலும் மணிவாசகப் பெருமானை எழுந்தருளிவைத்து உரிய உபசாரங்களைச் செய்து விழா எடுப்பர். பத்தாம் நாள் காலையில் நடராஜரை எழுந்தருளவைத்து விழாக் காண்பது மரபாகும்.

இது போலவே காலசம்ஹார மூர்த்திக்கு மார்க்கண்டேயரும், கங்காதரமூர்த்திக்குப் பகீரதனும், திரிபுராந்தக மூர்த்திக்குத் திருமாலும், அர்த்த நாரீசுவரருக்குப் பிருங்கியும், பக்தர்களாகக் கொள்ளப்பட்டு விழாக்கள் கொண்டாடுகின்றனர்.



சங்கிலியார்-சுந்தரமூர்த்திசுவாமிகள்-பரவையார்

இது போலவே சோமாஸ்கந்த மூர்த்திக்குத் தலைமைப் பக்தராகக் கொள்ளப் பெற்றுள்ளவர் சுந்தரமூர்த்திகள் ஆவார். சோழ மண்டலத்தில் சோமாஸ்கந்தமூர்த்தி நேர்எதிரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளை அவருடைய தேவியருடன் எழுந்தருளிவைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சோமாஸ்கந்த மூர்த்திக்கு நடைபெறும் பத்து நாள் திருவிழாவில் தீர்த்த வாரியை அடுத்து நிகழும் ஊடல் விழாவில் சுந்தர மூர்த்தியே பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் இடையே ஏற்பட்ட ஊடலை நீக்கி அவர்களை இணைப்பவராக விளங்குகின்றார். விழாவின் இறுதியில் சுந்தரமூர்த்திக்கு தனிச்சிறப்பு விழா நடத்துதல் மரபாகும்.

சோழர்கள் காலத்தில் சோமாஸ்கந்த மூர்த்திக்கு நேர் எதிரில் சுந்தரர் எழுந்தருளி வைக்கப்பட்டதோடு திருவிழாவின் முடிவில் அவருக்கு பெரிய விழாவும் கொண்டாடப் பட்டுள்ளதைப் பல கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. திருவிழா நாட்களில் பெருமான் பவனி வரும் போது அவருக்கு முன்பாக அவரை நோக்கிய வாறு சுந்தர மூர்த்திகளை வீதி வலமாக எடுத்துச் செல்லுதல் மரபாகும்.

பெருமானின் விழா முடிந்த பிறகு சுந்தரருக்குப் பெரிய அளவில் விழா கொண்டாட வேண்டுமென்று "பூஜா பத்ததி" நூல்களும் கூறுகின்றன.

இராஜராஜனுக்கு கொண்டாடப்பட்ட விழா

முதலாம் ராஜ ராஜ சோழ மன்னர் ஆரூர் சோமாஸ்கந்தப் பெருமானான வீதிவிடங்கரிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் காலத்தில் தமிழகமெங்கும் எண்ணிலாத சோமாஸ்கந்தமூர்த்தங்கள் சிவாலயங்களில் எழுந்தருளிவைக்கப்பெற்றன. இவ்வகையில் அவரால் தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளி வைக்கப்பெற்ற சோமாஸ்கந்தர் தட்சிணமேரு விடங்கர் எனப்பெற்றார்.

அவருடைய காலத்திற்குப் பிறகு அவருடைய மகன் முதலாம் ராஜேந்திரசோழன்

பட்டம் சூடினான். அவன் தஞ்சைப்பெரிய கோயிலில் எழுந்தருளியிருந்த தட்சணமேரு விடங்கரான சோமாஸ்கந்தமூர்த்திக்கு நேர் எதிரில் இடம் பெற்றிருந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளின் திருமேனியை இடம் பெயர்த்து விட்டு அங்கு எப்போதும் நின்று தொழும் நிலையில் தமது தந்தையான ராஜராஜசோழன் சிலையை அமைத்தார். விழாக்காலங்களில் சுவாமிக்கு முன்பாக சுந்தர மூர்த்திக்குப் பதிலாக ராஜராஜனின் சிலையை எடுத்துச் செல்லவும் ஏற்பாடு செய்தான்.

இதனை பிரகதீஸ்வரர் மஹாத்மியம் என்ற நூல் கூறுகின்றது. இப்போதும் தஞ்சையில் ராஜராஜரின் சிலை சோமாஸ்கந்தமூர்த்திக்கு நேர் எதிரில் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். (இப்போதுள்ள ராஜராஜன் சிலை பிற்காலத்தைச் சேர்ந்தது. பழைய சிலை வடநாட்டில் உள்ளதாகக் கூறுகின்றனர்). இதனையொட்டி ராஜராஜனின் உருவம் பல இடங்களில் சுந்தரமூர்த்திகளின் சிலையைப் போல கையில் செண்டாயுதத்துடன் அமைக்கபடலாயிற்று என்பர்.

மரகத (விடங்க) லிங்கம்

சிவபெருமான் அபிஷேகப் பிரியன், பாலொடு நெய்யும், பழச்சாறும் கொண்டு திருமுழுக்காட்டு செய்வதால் மகிழ்பவன். மூலவராக விளங்கும் சிவலிங்கப் பெருமானுக்கு நமது விருப்பம் போல பலவிதமான அபிஷேகங்களைச் செய்து மகிழலாம்.

ஆனால் ஆடை ஆபரணங்கள் பூண்டு அழகிய திருக்கோலத்துடன் விளங்கும் சோமாஸ் கந்தரை அலங்காரம் களைந்து அபிஷேகித்து மீண்டும் முறையாக அலங்காரம் செய்யவேண்டு மென்றால் மிகுந்த நேரமாகும். ஆதலால் மாதப்பிரவேசம், பௌர்ணமி முதலிய சிறப்பு நாட்களில் மட்டும் அவருக்கு அபிஷேகம் செய்து அலங்காரம் செய்வர். மற்ற நாட்களில் பழைய பூமாலைகளைக் களைந்துவிட்டு பாவனா அபிஷேக மந்திரம் கூறி புதிய மாலைகளைச் சூட்டி நிவேதனம், தீபாராதனை செய்வர்.

அவருக்குச் செய்ய வேண்டிய அபிஷே கங்களை, (அவருடைய பீடத்தின் மீது ஒரு பேழையில் எழுந்தருளி வைக்கப்பட்டிருக்கும்) மரகதலிங்கத்திற்கு செய்வர். இவ்வகையில் அபிஷேகம் செய்ய சப்தவிடங்கத்தலங்கள், ★ திருவண்ணாமலை, விருத்தாசலம் முதலிய தலங்களில் சோமாஸ்கந்த மூர்த்தியின் சந்நிதியில் உடையவர் எனப்படும் மரகதலிங்கங்கள் அமைந்திருக்கக் காண்கிறோம். இவற்றை சிறு பேழையில் பாதுகாப்பாக வைத்து சோமாஸ்கந்தரின் பீடத்திலேயே வைத்திருப்பர். பூஜாகாலங்களில் வெளியே எடுத்து அபிஷேகம், அர்ச்சனை செய்வர்.

இவற்றிற்கு "விடங்க லிங்கங்கள்" என்பது பெயராகும். இவை விடங்கரான சோமாஸ்கந்தருக்குப் பதிலாக அபிஷேக ஆராதனைகளை ஏற்பதால் இப்பெயரால் அழைக்கப்படுகிறதென்பர். இது போன்றே நடராஜருக்குப் பதிலாக அவருடைய சந்நிதியில் இருந்து அபிஷேகம் காணும் சிவலிங்கங்களுக்கு அழகிய சிற்றம்பலமுடையார் என்பது பெயராகும்.

(★ இந்நாளில் இது வேட்டவலம் மனோன்மணி ஆலயத்தில் உள்ளது)

சோமாஸ்கந்தரின் ஆசனம்

சோமாஸ்கந்தர் வடிவில் இறைவன் அம்பிகை, குமாரர் ஆகிய மூவரும் ஒரு நீள்செவ்வக வடிவமான ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றனர். இவர்களைப் பிரித்து எடுக் முடியாத வகையில் இணைக்கப் பட்டிருந்தால் அதற்கு ஏகாசன மூர்த்தம் என்று பெயர். ஆனால் இவ்வகையில் அமைத்து விட்டால் பெரிய மாலைகளைச் சூட்டி அலங்காரம் செய்யும்போது மலர் அலங் காரத்தில் அம்பிகை மறைந்து விடுகின்றாள் என்பதால் மூவரும் தனித்தனியாக பிரித் தெடுக்கும் வகையில் அமைக்கப்பெற்று பொதுவான நீண்ட ஆசனம் அமைக்கப்பெற்றது. இவ்வகையில் அமைந்த மூர்த்தி பின்னாசன மூர்த்தி என்றழைக்கப் பெற்றார்.

பரமனடி தொழுத பாவையர்

பூவணத்துப் பொன்னனையாள்

மதுரையை அடுத்துள்ள பாண்டியநாட்டுப் பழம்பதி "திருப்பூவணம்" ஆகும். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள பூவணநாதரை நவக்கோள்களும், இந்திரனும், சூரியனும் எண்ணிலாத தேவர்களும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளார்கள்.

இத்திருத்தலத்தில் நீண்ட நாட்களுக்கு முன்பு பொன்னனையாள் என்ற பெண் வாழ்ந்து வந்தாள். இவள் எல்லையற்ற சிவபக்தி உடையவள். திருப்பூவணநாதரைத் தனது பதியாக ஏற்றுப் பணிபுரிந்து வந்த "உருத்திரகணிகை" குலத்தைச் சேர்ந்தவள் பண்ணிசைப்பதிலும், பரதமாடுவதிலும் தலை சிறந்தவள்.

தேவலோகப் பெண்களையொத்த பேரழகு படைத்தவள். இவள் தினமும் தோழியரோடு அதிகாலையில் சென்று வைகை நதியில் நீராடி, பூந்தோட்டங்களுக்குச் சென்று, மலர்களைப் பறிப்பாள். பறித்து வந்த மலர்களை வகை வகையாகத் தொடுத்து மாலையாக்கி பெருமானுக்கு அணிவித்து சிவபூசை செய்து மகிழ்வாள். இறைவன் முன்பு சுத்த நிருத்தம் எனும் நாட்டிய சேவைபுரிவாள்.

பின்னர் சிவனடியார்களுக்கு அமுதூட்டு தலை மேற்கொள்வாள். தான் ஈட்டிய பொருள்கள் அனைத்தையும் அடியவர்களுக்கு அன்னம் பாலித்தலிலேயே செலவிட்டாள்.

அவளுடைய மனத்தில் பொன்னார் மேனியனாக விளங்கும் சிவபெருமானைப் பொன்னால் செய்து வணங்கி மகிழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் அவள் ஈட்டிய செல்வமெல்லாம் அடியவர்களுக்கு செலவு செய்யவே சரியாகப் போய் விட்டதால் அவளது எண்ணம் நிறைவேறவில்லை. அவள் தினமும் சோம சுந்தரப்பெருமானைச் சிந்தித்து, வணங்கி, தனது எண்ணத்தை நிறைவேற்றி அருளுமாறு வேண்டுவாள். இப்படியே பல நாட்கள் கழிந்தன.


அவளுடைய எண்ணத்தை ஈடேற்ற சிவபெருமான் எண்ணினான். எனவே எல்லாம் வல்ல, ரசவாதம் செய்யும் சித்தராக உருவம் தாங்கி திருப்பூவணத்திற்கு வந்து பொன்னனையாளின் திருமனையின் வாயிலில் அமர்ந்திருந்தார்.



அப்பொழுது உச்சிப் பொழுதானதால் சிவனடியார்கள் பொன்னனையாள் இல்லத்தில் உணவருந்தி விட்டுச் சென்று கொண்டிருந்தார். பொன்னனையாள் தமது தோழியரிடம் இன்னும் யாராவது உணவருந்தக் காத்திருக்கின்றார்களா? என்று பார்த்துவரும்படிக் கூறினாள்.

அதன்படியே அந்தத் தோழியர்கள் வந்து பார்த்த போது அனைவரும் உணவருந்திச் செல்ல ஒரு சித்தர் மட்டும் உணவருந்த வராமல் திண்ணையின் மீது அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரைத் தொழுது உணவருந்த வரும்படி வேண்டினர்.

சித்தரோ அப்பெண்களை நோக்கி, "உங்கள் தலைவியை அழைத்து வாருங்கள்" என்றார். அதன்படியே அப்பெண்கள் தங்கள் தலைவியான பொன்னனையாளிடம் சென்று சித்தரின் வரவைக்



திருப்பூவணத்து பொன்னனையானும் மின்னனையாளும்

கூறினர். அவள் வாயிலுக்கு வந்து சித்தரை, "வருக" என்று சொல்லி பணிந்து வரவேற்றாள்.

சித்தர் அவளை நோக்கி "பெண்ணே நீ ஏன் மெலிந்திருக்கின்றாய்? உனக்குற்ற கவலை என்ன?" என்று கேட்டார்.

பொன்னனையாள் அவரை மீண்டும் வணங்கி", ஐயன்மீர், எனக்குப் பொன்னார் மேனியனான சிவபெருமானைப் பொன்னால் செய்து வணங்க வேண்டுமென்ற ஆசை நீண்டநாளாக இருந்து வருகின்றது. அதற்காக மெழுகினால் கரு கூட கட்டி வைத்துள்ளேன். ஆனால் நான் தேடும் செல்வமெல்லாம் அடியவர்களுக்கு அமுதூட்டவே சரியாகிவிடுகிறது. எனவே பெருமானின் திருவுருவை எனது மனம்போல் செய்து, பூசிக்க இயலவில்லை. அதுவே எனது தீராத மனக்குறை" என்றாள்.

சித்தராக வந்த சிவபெருமான் இளநகை புரிந்து "பெண்ணே," இனி அந்தக் கவலையை விடுக, யாம் ரசவாதம் அறிவோம். உன் வீட்டிலுள்ள இரும்பு, செம்பு, பித்தளை, தரா முதலிய பாத்திரங்களை எடுத்துவா, அவற்றை இன்றிரவு உலையில் இட்டு அதிகாலையில் உமது விருப்பம்போல் சிலையாக் குவாய், என்று கூறினார்.

அவளும் அப்படியே, பாத்திரங்களை எடுத்து வந்து அவர் முன் வைக்க, பெருமான் அவற்றின் மீது விபூதியைத் தெளித்தார்.

பொன்னனையாள் அவரை அன்றிரவு தங்கி அப்பணியை நிறைவேற்றித் தரும்படி வேண்டினாள், அவரோ, "நாம் இருப்பது மதுரை இன்றிரவு அங்கே செல்லவேண்டியது அவசியமாகும்" என்று கூறி அவளிடம் விடைபெற்று மறைந்தார்.

அன்றிரவு பொன்னனையாள் சிற்பிகளை அழைத்து பாத்திரங்களை உலையிட்டுக் காய்ச்சி உருக்கித் தான் செய்து வைத்திருந்த கருவில் வார்க்கச் செய்தாள்.

சூரியன் உதித்து வரும் அதிகாலையில் கருதானே உடைந்து பொன்னொளி வீசும் சோமாஸ்கந்தராக திருவுருவம் அமைந்திருந்தது. இந்த நிகழ்ச்சியைக் கண்டு ஊரார் அனைவரும் அதிசயித்தனர் சித்தராக வந்தவர் , சோமசுந்தரப் பெருமானே, என்று தெளிந்தனர். அந்த சோமாஸ் கந்தமூர்த்தியைப் பொன்னனையாள் தனது குழந் தையை போலத் தழுவிக் கொஞ்சி மகிழ்ந்து கன்னத் தைக் கிள்ளி," அச்சோ, அழகியபிரானோ?. என்றாள் பெருமான் அவள் கிள்ளிய நகத்தழும்பையும் அந்த உலோகத் திருமேனியில் குழைந்து ஏற்றார்.

அவள் அப்பெருமானை பலகாலும் பூசித்து மகிழ்ந்து இறுதியில் சிவப்பேறும் பெற்றாள். இதனை பல நாட்டுப்புறக் கதைகளும் திருவிளையாடற் புராணமும் சிறப்பாகக் கூறுகின்றன.

மதுரையினின்று 14 கி.மீ. தொலைவில் திருப் பூவணம் அமைந்துள்ளது. கோயிலின் முன்புறம் வைகையாறு உத்திர வாகினியாக ஓடுகிறது. பொன்னனையாள் செய்து வைத்த உற்சவர் பொன்னொளி வீசி எழிலுடன் திகழ்கின்றார். கன்னத்தில் அவள் கிள்ளிய போது உண்டான நகத்தழும்பைக் காண்கிறோம். இத்திருமேனி இனம் காணமுடியாத உலோகத்திருமேனியாக விளங்குகின்றது.

பொன்னனையாளின் வீடும், அவள் அடியவர்க்கு அமுதூட்டிய மடமும் இருந்த இடத்தில் மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பின்னாளில் அவை அழிந்து போனதால், திருமலை நாயக்கர் காலத்தில் கலைச்சிறப்புடன் அவை புதுப்பித்துக் கட்டப்பட்டன. அதில் கண்கவர் கலைச் சிறப்புடன் மன்னர், மந்திரி, பொன்னனையாள், எல்லாம் வல்ல சித்தர் ஆகியோரின் சிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் அம் மண்டபமும் நிலைகுலையவே அதிலிருந்த மேற்குறிப்பிட்ட சிற்பங்கள் இடம் பெயர்க்கப் பெற்று திருப்பூவணநாதர் ஆலயத்தின் முன் மண்டபத்தில் நிலைப்படுத்தப்பட்டன. அவற்றை நாம் இன்றும் கண்டு மகிழலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற "பூவணநாதர் உலா" பொன்னனையாளின் சிவபக்தியைச் சிறப்பாகப் போற்றுகின்றது. அந்நூல் இந்த ஆலயத்தில் பொன்னனையாளின் வரலாற்றை விளக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததைக் கூறுகின்றது. அதில் பொன்னனையாள் தோழியருடன் அதிகாலையில் வைகையில் நீராடுதல், சிவபூசைசெய்தல், பூ எடுத்தல், அதை மாலையாக்கி மகிழ்தல், பெருமான் முன்பு சுத்த நிருத்தம் ஆடுதல், சித்தரை வணங்குதல், பெருமானை கிள்ளி முத்தமிட்டு மகிழ்தல் ஆகியவை சிறப்புடன் சித்தரிக்கப்பட்டிருந்தது" என்று அந்நூலில் கூறப்பட்டுள்ளது.

பின்னாளில் அமைக்கப்பட்ட மகாமண்டபத்தில் உள்ள தூணொன்றில் பொன்னனையாளின் வரலாறு புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளதையும் காண்கிறோம்.

தேவ சபை

சோமாஸ்கந்தரை ஆலயத்தின் பிராகாரத்தில் மூலவருக்குத் தெற்கிலாவது. தென்மேற்கிலாவது கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளி வைப்பது மரபாகும். இவருடைய சந்நிதியை தனித்த கருவறை போலவே உள்மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் முதலிய சிறப்பான கட்டிட வகைகளுடன் அமைப்பர். இத்தகைய சோமாஸ்கந்தருக்கான சிறப்புமிக்க சந்நிதிகளை திருக்கழுக்குன்றம், விரிஞ்சிபுரம், காஞ்சீபுரம், திருநெல்வேலி, திருவாரூர் முதலான சப்தவிடங்கத்தலங்கள் ஆகியவற்றில் கண்டு மகிழலாம். இவற்றின் மீது அழகிய விமானங்கள் அமைக்கப்படும்.

இதற்குத் தேவசபை என்பது பெயர். தேவ உலகத்திலிருந்து சோமாஸ்கந்த மூர்த்தி பூமிக்கு எழுந்தருளியபடியால் தினமும் மாலைவேளையில் தேவர்கள் உலகிலுள்ள அனைத்து சோமாஸ்கந்தர் சந்நிதிகளிலும் வந்து வழிபட்டுச் செல்கின்றனர் என்பது நம்பிக்கையாகும். தேவர்கள் சிறப்புடன் வழிபாடு செய்யுமிடமாதலின் இது தேவசபை எனப்பெற்றது என்பர். திருவாரூர்த் தியாகேசப் பெருமானை (சோமாஸ்கந்தரை) தேவேந்திரனே வந்து வழிபடுகிறான் என்பது நம்பிக்கையாகும். எனவே முன்னாளில் திருவாரூர் அர்ச்சகர்களிடம் கிரீடம், நீண்ட அங்கி ஆகியவற்றை அணிந்து பூஜை செய்யும் வழக்கம் இருந்ததென்று கூறுவர். இந்த சபையில் எழுந்தருளும் நந்திக்கு இந்திரநந்தி என்பது பெயர்.

சிதம்பரத்தில் தில்லைவிடங்கர் ஆகிய சோமாஸ்கந்தமூர்த்தி எழுந்தருளும் சபை தேவசபை என்றே அழைக்கப்படுகிறது. (இது சிதம்பரத்தில் உள்ள ஐந்து சபைகளில் ஒன்றாகும்). திருவாரூர்ப் பெருமான் எழுந்தருளும் ஆயிரங்கால் மண்டபத்திற்கு தேவாசிரியம் என்ற பெயர் வழங்குவதும் எண்ணத்தக்கதாகும்.

ஆடலில் மகிழ் சோமாஸ்கந்தர்



இன்பத்தில் செழிக்கும் போது மனிதனின் உள்ளத்தில் கலையை உணர்ந்து அனுபவிக்கும் எண்ணம் உண்டாகிறது. அதனைத் தான் மட்டும் கண்டு களித்து மகிழாமல் தன் இனமும் கண்டு களித்து மகிழ விரும்புகின்றான். அந்த எண்ணத்தால் பல கலைக் கூடங்களை எழுப்பினான். ஆன்மிக எண்ணமும், மேன்மைச் சிந்தனையும் வளர்ந்த போது அவன் கண்ட கலைகள் யாவும் இறைமணம் கமழ்வதாகத் திகழ்ந்தது. தனது ஒப்பற்ற கலையினை இறைவன் முன்பு நிகழ்த்தி மானசீகமாக அவரை மகிழ்வித்தான்.

ஆலயங்களில் இதற்கென இசைக்கருவி களை இசைக்கும் வாத்யமண்டபம், ஆடற்கலையை நிகழ்த்த நிருத்தமண்டபம், சபாமண்டபம் ஆகியவற்றை அமைத்தான்.

இவற்றில் அமைந்த உயர்ந்த மேடையில் இறைவனை எழுந்தருளி வைத்து அவர் முன்பு ஆடல் மகளிரைக் கொண்டு சுத்தநிருத்தம் என்னும் நாட்டியக்கலையை நிகழ்த்துவித்தான். சாக்கியர் என்னும் கூத்துக் கலைஞர்களைக் கொண்டு சாக்கியக் கூத்து நடத்தப்பெற்றது.

வசந்த காலங்களில் இறைவனை சோலை களுக்கு இடையே அமைந்த வசந்த மண்டபங்களில் அமர்த்தி அவர் முன்பு கலைகளை நிகழ்த்திக் காட்டுவது வழக்கமாகும். இறைவன் தன் குடும்பத் துடன் இருந்து கண்டுகளிப்பதாக எண்ணியதால் கூத்துகளையும் ஆடல் பாடல்களையும் சோமாஸ் கந்தரின் முன்பு நிகழ்த்துவதே வழக்கமாகும்.

திருவாரூரில் வெட்டப்பட்டுள்ள ஒரு கல் வெட்டு வீதி விடங்கப் பெருமானான சோமாஸ்கந்தர் "தேவாசிரிய மண்டபம்" என்னும் ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருந்தபோது "வீர அணுக்க விஜயம்" என்ற இசை நாடகத்தை பூங்கோயில் நாயகத் தலைக்கோலி என்பவள் நடித்ததைக் கூறுகின்றது. மேலும் இதே கோயிலில் உள்ள மற்றோர் கல்வெட்டு இறைவன் முன்பு புக்கத்துறை வல்லவத்தலைக்கோலி என்பாள் நாட்டியம் ஆடியதையும் குறிக்கின்றது.

வேங்கை வாசலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இக்கோயிலில் எழுந்தருளியிருந்த சதிரவிடங்கத்தேவர் எனும் சோமாஸ்கந்தர் வைகாசித் திருவாதிரை நாளில் எழுந்தருளும் போது இவர் முன்பு சாந்திக் கூத்து நிகழ்த்த நிலம் அளிக்கப் பெற்றதைக் கூறுகின்றது.

"சதிர்" என்பது பலவகையான நாட்டியங்கள் இணைத்து ஆடும் முறையாகும். இவை சதிர்க்கச்சேரி என்றே அழைக்கப்பெற்றன. வேங்கை வாசல் பெருமான் சதிரவிடங்கர் என்று அழைக்கப் பெற்றதால் அவர் முன்பு சதிர்கள் நடத்தப் பெற்றிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கின்றது.

முன்னாளில் தொண்டைநாட்டுத் திருத் தலங்களில் பெருந்திருவிழாவிற்கு பின்னர் அரைக்கட்டு உற்சவம் என்ற ஒன்றை கோயிற் பெண்களான உருத்திரகணிகையர் நடத்துவது வழக்கமாகும். அழகிய மண்டபங்களைப் போன்று தங்கள் கைவண்ணத்தில் நேர்த்தியாக கலைத் திறனுடன் செய்யப்பட்ட அமைப்பிற்குள் சோமாஸ் கந்தரை எழுந்தருளி வைத்து அவர் முன்பு தங்கள் கலைத்திறமை மிக்க நடனங்களை நிகழ்த்துவர். இதைக் காண திரளான மக்கள் கூடுவர். இவை காலப்போக்கில் தடைபட்டுவிட்டன.

சோமாஸ்கந்தருக்கு இருந்தாடும் கூத்தர் என்பதும் ஒருபெயராகும். இவற்றை நோக்க ஆடலில் மகிழ்தல் என்பது மற்றைய சிவவடிவங் களுக்கு இல்லாத தனிச் சிறப்பாக சோமாஸ்கந்த வடிவத்திற்கு அமைவது உணரத்தக்கதாகும்.

ஊஞ்சல் விழா

தென்னகச் சமயம் சார்ந்த சடங்குகளில் "ஊஞ்சல் ஆடுதல்" என்பது தனியிடம் பெறுகின்றது. இளம் வயதில் தொட்டிலில் ஆடி மகிழ்ந்த மனிதன் பருவவயதில் மரங்களில் ஊஞ்சல் கட்டி ஆடினான். காலப்போக்கில் ஊஞ்சலாடுதல் வாழ்வியல் சடங்குகளில் ஒன்றாயிற்று. குறிப்பாக திருமணநாளில் மணமக்களை ஊஞ்சலில் அமர்த்தி ஆட்டுவது முக்கியமானச் சடங்காகியது.

ஊஞ்சல் என்பது மனத்தின் குறியீடாகும். அது கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், எதிர்கால நம்பிக்கையிலும் ஓயாது பயணம் செய்து கொண்டே இருக்கின்றது. ஊஞ்சலைப் போலவே மனமும் முன்னும் பின்னும் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் ஓயாது அலைந்து கொண்டிருக்கின்றது.

மனிதன் தமது மனத்தின் வடிவமான ஊஞ்சலில் இறைவனை அமர்த்தி அவர் மூன்று காலங்களிலும் தமக்குத் துணையாகி நிற்பதை உணர்த்துவதற்காகவே ஊஞ்சல் விழாக்கள் ஏற்படுத்தப்பட்டு நடைபெறுகின்றன என்பர்.

பொதுவாக விழாவின் ஒவ்வொரு நாளும் வீதி உலா முடிந்த பிறகு சிறிது நேரம் உலாத் திருமேனியை ஊஞ்சலில் வைத்து ஆட்டிப் பாடல் பாடுதல் மரபென்றாலும் ஊஞ்சல் ஆடுவதற்கென தனிவிழாக்களே உள்ளன.



புஷ்ப ஊஞ்சலில் மயிலாப்பூர் கபாலீசுவரர்

மார்கழித் திருவாதிரையின் முதல்நாள் இரவில் சோமாஸ்கந்தரை அலங்கரித்து உலாவரச் செய்து ஊஞ்சல் மண்டபத்தில் அமர்த்தி உபசாரங்களைச் செய்து தீபாராதனைகளைச் செய்வர்

பொதுவாக இம்மண்டபங்களை அம்மன் சந்நிதியின் முன்புறம் அமைப்பதே வழக்கமாகும். சென்னை திருஒற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர் முதலிய ஆலயங்களில் இத்தகைய ஊஞ்சல் மண்டபங்களைக் காணலாம்.

தனி அம்மனை ஒரு ஊஞ்சலிலும், சோமாஸ்கந்தரை அதற்கு நேர் எதிரே மற்றோர் ஊஞ்சலிலும் அமர்த்திப் பாடல்களைப் பாடி உபசாரங்களைச் செய்வதும் வழக்கமாகும்.

சிலர் முதல் கட்டுரை பக்கம் 388-ல் கூறியபடி

திருமாலின் மார்பில் எழுந்தருளியிருந்த சோமாஸ் கந்தர் அவருடைய மூச்சு உட்செல்லும் போதும் வெளிவிடும் போதும் முன்னும் பின்னும் ஆடியது ஊஞ்சலில் அவர் அமர்ந்து ஆடியது போன்றி ருந்தது. அதை நினைவுகூறும் வகையில் சோமாஸ் கந்தருக்கு ஊஞ்சல் விழா நடத்தப்படுகிறதென்பர்.

பண்டை நாளில் பெருந்திருவிழாக் காலங்களில் சோமாஸ்கந்தப் பெருமானை ஊஞ்சலில் வைத்து அந்நாளில் கோயிற் பணிகளில் ஈடுபட்டிருந்த ஆடல் மகளிர் திருவாசகத்தில் வரும் பொன்னூசல் எனும் பாடல்களை இசையுடன் பாடி ஆட்டுவது மரபு. பின்னாளில் இவ்வகையில் பாடுவதற்கென பல புலவர்களால் ஊசற்பாடல்கள் இயற்றப்பட்டன.

திருவிடைமருதூர் சோமாஸ்கந்தரான ஏகநாயகர் மீது **ஏகநாயகர் ஊசல்** என்ற நூல் டாக்டர் உவே. சாமிநாத ஐயர் அவர்களால் 1885 ஆம் ஆண்டில் அந்த ஆலயத்து கட்டளைத் தம்பிரான் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாடப் பட்டுள்ளது. இதனை ஐயரவர்கள் என்சரித்திரம் எனும் நூலில் குறித்துள்ளார்.

இலங்கையிலும் பலர் ஊசற்பாடல்களை இயற்றி திருவாதிரையில் பாடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதை பல இலங்கை நூல்களால் அறியமுடிகிறது. இவற்றை நோக்க மக்கள் தாமும் தம் குடும்பத்தினரும் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க பெருமானை அம்பிகையுடன் ஊஞ்சலில் வைத்துப் பாடி ஆட்டி விழா எடுத்து மகிழ்ந்தனர் என்பதை உணரமுடிகிறது.

❑ திருவாசகத்தில் உள்ள திருப்பொன்னூசலில் முதலாம் பாடலில் "சீரார் பவளங்கால், முத்தம் கயிறாக" ஏறாரும் **"பொற்பலகை"** ஏறி இனிதமர்ந்து என்ற சொல் காணப்படுகின்றது. இதனையொட்டி குத்தாலம் எனும் ஊரில் அமர்ந்திருந்த சோமாஸ்கந்த பெருமான் **"பொற்பலகை விடங்கர்"** என குறிக்கப் பெற்றார் என்பதை அவ்வூர் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. இப்பெயர் ஒற்றுமையை நோக்கி இப்பெருமான் பொன்னூஞ்சலில் எழுந்தருளி வைக்கப்பெற்று வழிபடப்பட்டிருக்கலாம் என்று எண்ணவேண்டி உள்ளது.

❑ காசி நகரில் உள்ள காசி விசுவநாதர் கோவிலைப் பிறசமயத்தவர் தாக்குதலால் ஏற்பட்ட அழிவிலிருந்து மீண்டும் கட்டி வழிபட வகை செய்த ராணிஅகல்யா பாய் தனது தலைநகரான மாகிஷ்மதியில் பெரிய பொன்னூஞ்சலை வைத்து அதில் நவரத்தின லிங்கங்களை வைத்து மணிக்கணக்கில் ஆட்டி பூசை செய்தாள் என்பதை அவளுடைய வரலாறு குறிப்பிடுகின்றது. இன்றும் அந்தப் பொன்னூஞ்சல் மிகவும் பாதுகாப்பாக வைத்துப் போற்றப்படுவதைக் காண்கிறோம்.

மாணிக்க சோமாஸ்கந்தர்

நவரத்தினங்களில் ஒன்றான மாணிக்கத்துடன் சோமாஸ்கந்தர் தொடர்பு கொண்டவராக சித்தரிக்கப் படுகின்றார். திருஒற்றியூரில் உள்ள சோமாஸ் கந்தருக்கு மாணிக்கத் தியாகர் என்று பெயராகும். இவர் திருவள்ளுவரின் சீடரான ஏலேல சிங்கருக்கு மாணிக்கங்களை அளித்ததால் மாணிக்கத் தியாகர் என்று பெயர் பெற்றார் என்று திருஒற்றியூர்ப் புராணம் கூறுகின்றது.

திருவாரூரில் தியாகேசப் பெருமானுக்குப் பெரும் பணி செய்துப் பேறு பெற்ற ஆடல் மகள் ஒருத்தி மாணிக்க நாச்சியார் என்று பெயர் பெற்றிருந்தாள். (அவள் வரலாற்றை தியாகராஜர் எனும் மலரில் காண்க) அவள் வாழ்ந்த மனையில் இன்று சிவாலயம் அமைக்கப்பெற்றுள்ளது. அது அவள் பெயரால் மாணிக்க நாச்சியார் கோயில் என்றே அழைக்கப்படுகின்றது. திருவாரூரில் தியாகராஜப் பெருமான் தேரில் அமர்த்தப்பட்டதும் மாணிக்க நாச்சியார் பெயரால் அர்ச்சனை செய்து அவள் வழிவந்தவர்க்கு மரியாதைகள் செய்த பின்னரே வடம் பிடிக்கிற வழக்கம் உள்ளதென்று கூறுகின்றனர்.

முன்னாளில் சோமாஸ்கந்தர் சந்நிதியில் மட்டுமே பணிபுரிந்த ஆடல் மகளிர் ''மாணிக்கத்தாள்'' என்று அழைக்கப்பட்டு அப்பெயர் பின்னாளில் அனைத்து சிவாலய ஆடல் மகளிருக்கும் பொதுப்பெயராயிற்று. கொங்கு நாட்டுப்

பட்டையங்கள் பலவற்றில் ஆடல் மகளிரை மாணிக்கத்தாள் என்று குறித்திருப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும். சோமாஸ்கந்தருக்கு இருந்தாடும் கூத்தர், மாணிக்கக் கூத்தர் என்பனவும் பெயராகும்.

திருமழபாடியில் சோமாஸ்கந்தருக்கென தனிச்சந்நிதி சிறப்புடன் அமைந்துள்ளது. திருவாரூர்ப் பெருமானிடம் பற்றுகொண்ட சுந்தரர் இப்பெருமானைக் கண்டு மகிழ்ந்து ''மழபாடியுள் மாணிக்கமே" என்று குறித்துள்ளார் என்பர்.

இவற்றை நோக்க மாணிக்கம் என்ற பெயருக்கும் சோமாஸ்கந்தருக்கும் உள்ள உறவு நம்மை சிந்திக்கவைக்கின்றது.

தனி அம்பிகை என்கின்ற சோமாஸ்கந்த நாயகி

சிவபெருமானுடன் இணைபிரியாது வீற்றிருப்பவள் அன்னை பராசக்தி. இவள் எண்ணிலாத பெயர்களை உடையவள். இவளுடைய பெயர்களில் தலையானது உமா என்பதாகும். இப்பெயரின் அடிப்படையில் சிவபெருமான் உமாசகிதர், உமா ஆலிங்கன மூர்த்தி, உமையொருபாகர், உமாகாந்தர் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

பெருமான் வீரம் விளைத்த போதும், அன்பு ததும்ப அன்பர்களுக்கு அருள்புரிய எழுந்தபோதும் அவருடைய இடப்பாகத்தில் வீற்றிருந்து இவள் அருள்பாலிக்கின்றாள். பெருமான் கொள்ளும் ஒவ்வொரு கோலத்திற்கேற்ப அவளுக்குப் பெயர்கள் தனித்தனியாகவும் அமைகின்றன.

சோமாஸ்கந்தர் வடிவத்தில் அமையும் அம்பிகைக்குத் தனிச் சிறப்பு இருக்கின்றது. மற்றைய சிவவடிவங்களில் அம்பிகை சிவனின் அருகில் இருப்பவளாக ஒருமுறை மட்டுமே இடம் பெறுவாள். ஆனால் சோமாஸ்கந்தர் வடிவில் மட்டும் இரண்டு முறை இவள் இடம்பெறுகின்றாள். முதல் முறையில் பெருமானோடு ஒரே ஆசனத்தில் அவருக்கு இடப்பாகத்தில் வீற்றிருக்கின்றாள். இரண்டாம் நிலையில் தனித்து பீடத்தில் நின்றவாறு காட்சியளிக்கின்றாள்.

இவ்வாறு இரண்டு சக்திகள் இருப்பதற்குப் பலவகையான காரணங்கள் இருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர். சிவனோடு இணைபிரியா சக்திகள் மூவர் என்றும் ஞானசக்தி பெருமானின் வடிவத்திலேயே உறைந்து வெளியில் தோன்றாதவளாகவும், இச்சாசக்தி அருகில் வீற்றிருப்பவளாகவும், கிரியாசக்தி தனித்து நிற்பவளாகவும் காட்டப் பட்டிருக்கின்றாள் என்பர்.

வேறு வகையில் பெருமானோடு வீற்றிருப்பவள் போகசக்தி என்றும், தனித்து நிற்பவள் வீரசக்தி எனவும் பேசப்படுகின்றனர்.

பொதுவாக இவளைத் தனியம்மன் என்று அழைப்பர். திருவாரூரில் இவ்வாறு தனித்திருக்கும் அம்பிகை கொண்டி என்றழைக்கப்படுகின்றாள்.

தனியம்மன் பெருமானைப் போலவே பலவித வாகனங்களில் வீதியுலாக்காண்கின்றாள். இவளைப் பாலாம்பிகை எனவும் அழைப்பர். சில இடங்களில் இவள் தமது தோழியரோடும் எழுந்தருளுகின்றாள்.

இந்தத் தனி அம்மனாகிய கிரியாசக்தி இரண்டு கரங்களை கொண்டவளாய் வலக்கரத்தை மலர் ஏந்தும் பாவனையிலும் இடக்கரத்தைத் தொங்கவிட்டவாறும் காணப்படுகின்றாள். இவள் பெருமான் காண ஊஞ்சலாடி மகிழ்கின்றாள் என்பர்.



கல்வெட்டுகளில் இவள் நம்பிராட்டியார் என்று குறிக்கப்படுகின்றாள். தென்குடித் வீப மகாத்மியம் என்கின்ற திட்டக்குடி தலபுராணம் இவளை "புத்திரப்பிரதாயினி" என்று பெயரிட்டு அழைத்து மகிழ்கின்றது.

சோமாஸ்கந்தரும் சிறுத்தொண்டரும்

இறைவன் தம்மை வழிபடும் அன்பர்களுக்கு அருள் வழங்கத் தோன்றும் பொழுதெல்லாம் தான் மட்டுமல்லாது அம்பிகையோடு உடன் வந்தே காட்சியளிக்கின்றார். இறைவன் தேவியுடன் இடபவாகனத்துடன் அன்பர்களுக்கு அருள்பாலிக்க எழுந்த கோலம் "காட்சி கொடுத்த நாயகர்" என்று அழைக்கப்படுகின்றது. தஞ்சைத் தரணியிலுயுள்ள அனைத்து ஆலயங்களிலும் இந்த மூர்த்தியைக் காணலாம்.

இவ்வகையில் பெரிய புராணம் காட்டும் அறுபத்து மூன்று அடியவர்கள் வரலாற்றில் பலருக்குப் பெருமான் உமாதேவியோடு தோன்றிக் காட்சியளித்ததை சேக்கிழார் பெருமான் சிறப்புடன் குறிக்கின்றார். ஆனாலும் சிறுத்தொண்டர் என்ற அடியவருக்கு மட்டும் பெருமான் உமாதேவியுடன் குமரனையும் உடன் கொண்டு "சோமாஸ்கந்த மூர்த்தியாகக்" காட்சிளித்ததைப் பெரியபுராணம் தனிச்சிறப்புடன் குறிப்பிடுகின்றது. (சிறுத்தொண்டர் வரலாறு பின்வரும் மலரில் விரிவாகப் பேசப்பட உள்ளதால் அது இப்போது சுருக்கமாக வெளியிடப்படுகின்றது).

தஞ்சை மாவட்டம் திருச்செங்காட்டங்குடியில் வசித்து வந்தவர் "பரஞ்சோதி" எனப் பெயர் கொண்ட சிறுத்தொண்டராவார். இவர் முதலில் பல்லவ மன்னனிடம் சேனாதிபதியாக இருந்து அவனுக்காக வாதாபின் மீது போர் நடத்தி அதனை வெற்றி கொண்டவர். பின்னாளில் இவர் சிவனடியாராகிச் "சிறுத்தொண்டர்" என்ற பெயர் பூண்டு சைவப்பணி செய்து வந்தார். இவரை திருஞானசம்பந்தப் பெருமான் சந்தித்து இவரைப் போற்றி திருச்செங் காட்டாங்குடியில் அருளிய தேவாரப் பதிகத்தில் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் இவருடைய பெயர் வரும்படி அமைத்துப்பாடியுள்ளார்.

இவர் அன்பர்களுக்கு உணவூட்டும் பணியைச் சிவப்பணியாக செய்து வந்தவராவார். ஒரு சமயம் இவருடைய அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்த எண்ணிய சிவபெருமான், ஒரு நாள் வடநாட்டுத் துறவியாக உருவம் தாங்கி இவருடைய இல்லத்திற்கு எழுந்தருளினார். அப்பொழுது சிறுத்தொண்டர் அடியவர்களைத் தேடி வெளியே சென்றிருந்தார். எனவே சிவபெருமான் அவருடைய வீட்டில் இருந்தவர்களிடம், "நாம் இன்று உமது இல்லத்தில் இன்று நாம் உணவருந்த வந்துள்ளோம். நாம் ஊரின் புறத்தேயுள்ள ஆத்திமரத்தின் கீழ் அமர்ந்திருக்கின்றோம். அவர் வந்தவுடன் எம்மிடம் அனுப்புக," என்று சொல்லிவிட்டு ஊரின் புறத்தே இருந்த ஒரு ஆத்தி மரத்தின் கீழ் எழுந்தருளினார்.

சற்றுநேரம் கழித்து வீட்டிற்குத் திரும்பிய சிறுத்தொண்டர், அடியவர் விருந்துண்ண வந்த தையும் தாம் வீட்டில் இல்லாமையால் அவர் ஊரின் புறத்தே சென்று தங்கியிருப்பதையும் உணர்ந்தார். உடனே அடியவர் இருக்குமிடம் தேடி வந்து அவரை வணங்கித் தமது இல்லத்திற்கு உணவருந்த வருமாறு வேண்டினார்.

அப்பொழுது வடநாட்டு பைராகியாக உருவம் தாங்கிய பெருமான் சிறுத்தொண்டரிடம், "அன்பனே நாம் பிள்ளைக்கறியை சமைத்து தந்தால் மட்டுமே உண்போம். அதுவும் ஒரு தாய்க்கு ஒரே மகனாக உள்ள ஒரு பிள்ளையை அரிந்து எமக்கு உணவிட வேண்டும் அது உம்மால் முடியுமா?" என்றார்.

சிறுத்தொண்டர் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி, அடியவரை அழைத்துக் கொண்டு தமது வீட்டிற்கு வந்து அவரைத் திண்ணையில் அமர்த்தி விட்டு உள்ளே சென்றார்.

தன் மனைவியிடம் அடியவரின் வினோத மான விருந்தைக் கூறினார். பின்னர் தன் ஒரே மகனான சீராளனை அவனுடைய சம்மதத் துடன் அறுத்துக் கறி சமைத்தனர். அவர்களுக்கு திரு வெண் காட்டுச் சந்தன நங்கை என்ற பணிப் பெண் உதவியாக இருந்து சமைத்தாள்.

சமைத்து முடிந்த பின்னர் இலையில் சோறும், கறியும் பரிமாறி வைத்து பின்னர் மூவரும் அடியவரை வணங்கி அவரை விருந்துண்ண வரும்படி அழைத்தனர்.


அதன்படி விருந்துண்ண அமர்ந்த அடியார் அவர்களுக்கு விபூதியளித்து, உங்கள் மகனை அழையுங்கள் என்றார். அவர்கள் அவரிடம் " அவன் இங்கு உதவான் நீங்கள் விருந்துண்ணுங்கள் என்றனர். அடியவரோ, "அவனை அழையுங்கள் வருவான்" என்று உறுதியாக கூறினார். அவர்கள் அவரிடம் தங்கள் மகனைத்தான் அரிந்து விருந்து சமைத்துள்ளோம் என்று கூறினால் எங்கே அவர் உணவு உண்ண மறுத்து விடுவாரோ என்று அஞ்சி, வெளியில் சென்று மகனே, சீராளா"என்று அழைத்தனர்.

அப்பொழுது அதிசயிக்கத் தக்க வகையில் அவன் பள்ளி யிலிருந்து ஓடி வந்தான். அதனைக் கண்டு அவர்கள் மகிழ்ந்து உட்சென்று பார்க்க அடியவர் ஒளிவடிவாகி மறைந்தார். அங்கு பெருமான், உமாதேவி, குமரன் ஆகியோருடன் விடைவாகனத்தில் தோன்றினார்.

சிறுத்தொண்டர், அவருடைய மனைவியார், பணிப்பெண் சந்தன நங்கை, சீராளன் ஆகியோர் பெரு மானின் திருவடிகளில் பலமுறை வீழ்ந்து வணங்கினர்.

பெருமான் அவர்களைத் தமது திருவடியில் நீங்காது நிலைபெற்றி ருக்கும்படி அருள் புரிந்தார். அப்போது அவர் சோமாஸ்கந்தராக காட்சியளித் ததை சேக்கிழார் பெருமான் தமது பெரியபுராணத்தில் இரண்டு இடங்களில் சிறப்பாக குறிப்பிடுகின்றார்.

முதலாவது வகையில் மகனை அழைத்துக் கொண்டு வியப்புடன் வீட்டிற்கு உள்வந்த சிறுத்தொண்டரும் அவர் மனைவியும் உணவருந்த



கும்பகோணம் - ஆதிகும்பேசுவர ஆலய சோமாஸ்கந்தர்

அமர்ந்திருந்த அடியவரைக் காணாது தேட அப்பொழுது சிவபெருமான் காட்சியளித்ததை

.......................மலை பயந்த தையலோடும்
சரவணத் தனையரோடும் தாமனைவார் என்றும்

இரண்டாவது வகையில்

தம்மைத் தொழுதுநின்ற சிறுத்தொண்டர் அவர் மனைவியார், பெருமை பொருந்திய மகன் சீராளன், தாதிப்பெண் சந்தனநங்கை ஆகியோர் பணியும் போது,

"கொன்றை வேணியர் தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும் வென்றி நெடுவேல் மைந்தரும் விரைபூங் கமலச் சேவடிக்கீழ் என்றும் பிரியாதிருக்க கொண்டேகினார்," என்றும் குறித்து மகிழ்கின்றார்.

இப்படி பெருமான் சோமாஸ்கந்தராகக் காட்சியளித்ததை வேறு அடியவர்களின் வாழ்க்கை வரலாற்றில் காண முடியாததால் இது தனிச்சிறப்புடையதாகப் போற்றப்படுகின்றது.

சோமாஸ்கந்தர் - சிந்தனைத்துளிகள்

✤ கொங்குநாட்டில் உள்ள முருகன், சிவன் ஆலயங்களில் சிவன் சந்நிதிக்கும் அம்பிகையின் சந்நிதிக்கும் இடையில் முருகப் பெருமான் சந்நிதி அமைத்துள்ளதைக் காண்கிறோம். இந்த அமைப்பை சோமாஸ்கந்தராகக் கொள்வர். ஆனால் இது பொருந்தாது. சிவபெருமான் ராஜாதிராஜனாக வும், அம்பிகை மகாராணியாகவும் வீற்றிருக்க இடையில் இளவரசன்போல குகன் வீற்றிருக்கும் கோலமே சோமாஸ்கந்தர் எனப்படும்.

✤ கொங்குநாட்டில் வெள்ளியங்கிரி, நீலமலை, மருதமலை ஆகிய மூன்றும் ஒருசேர அமைந்திருப்பது சோமாஸ்கந்தரை நினைவு படுத்துகிறது என்று பேரூர்புராணம் கூறும். வெள்ளியங்கிரி சிவபெருமானையும், நீலமலை பார்வதிதேவியையும் அவைகளுக்கு இடையே அமைந்த மருதமலை முருகப் பெருமானையும் நினைவூட்டுகிறதென்பர்.

✤ கந்தபுராணம் உற்பத்தி காண்டத்தில், பார்வதி தேவி சிவனது நெற்றிக்கண் தீப்பொறியால் உண்டாகி சரவணப்பொய்கையில், நாணற்காட்டில் இருந்த ஆறு குழந்தைகளையும் இணைத்து ஒன்றாக்கி கந்தனெனப் பெயர்புனைந்து கொஞ்சி மகிழ்ந்தாள், என்று அப்பொழுது குமாரன் ஆறுமுகங்களுடன் திகழ்ந்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை கருத்திற் கொண்டு சென்ற நூற்றாண்டில் ஓவியர் பலர் சிவபெருமானுக்கும், உமையம்மைக்கும் இடையில் முருகன் ஆறுமுகப்பெருமானாக வீற்றிருப்பதுபோல ஓவியம் தீட்டினர். ஆனால் இம்முறை சிற்பிகளால் ஏற்கப்படவில்லை. சுப்பிரமணிய பராக்கிரமம் முதலிய நூல்களில் வெளியான சோமாஸ்கந்தர் படங்களில் முருகன் ஆறுமுகப்பெருமானாக காட்சியளிப்பதைக் காணலாம்.

✤ திருக்கருகாவூர் எனும் தலத்தில் மூலவரான முல்லைவனநாதருக்கும், அம்பிகையான கரும்பனை யாள் கோயிலுக்கும் இடையே ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி அருள்பாலிப்பதைக் காண்கிறோம்.

✤ சோமாஸ்கந்தர் திருமேனியை ஓவியமாகத் தீட்டும்போது சிவபெருமானைச் சிவந்த வண்ணம் கொண்டவராகவும், அம்பிகையைப் பச்சைநிறம் கொண்டவளாகவும், முருகப்பெருமானை நீல வண்ணம் கொண்டவராகவும் எழுதவேண்டும் என்று "தத்துவநிதி" என்ற நூல் குறிப்பிடுகின்றது. ✤



பெருந்தோட்டதுத்து அகத்தீசுவர புராணத்திலுள்ள சோமாஸ்கந்தர் துதி.

அத்தன் அருள் சிவனேசத் தவன்
இடப்பால் உமையம்பிகையே,
சித்து இவர் யோகத்து இன்பே
திகழ் கந்தன் எனும் உண்மை
சத்து சித்து ஆனந்த பதம்
தனி னோர்த னோர் விளக்கு
மெய்த் தகு "சோமாஸ்கந்தர்"
விரைமலர் சேவடி பணிவாம்.

பொருள்:-அத்தனாகிய சிவபெருமான் சத்தாகவும் அவன் அருளாக வெளிப்பட்டு அவனுடைய இடப்பாகத்தில் வீற்றிருக்கும் அம்பிகை சித்தாகவும், அவர்களுடைய யோகத்துப் பிறந்த இன்பமாகத்திகழ் கந்தன் ஆனந்தமாகவும் இருப்பதை உணர்த்தி நிற்கும்-உண்மைத்திருவுருவாம் சோமாஸ்கந்தரின் திருச்சேவடிகளைப் பணிந்து போற்றுவாம். சுபம்........

உ

சிவமயம்



சைவ சமய சாத்திரங்கள்

பதினான்கு என்ற சொல் நேரடியாகப் பொருள் தரும்போது பதினான்கு என்ற எண்ணைக் குறிக்கின்றது. இதனை நுண்பொருளாகப் பிரித்தால், பதில்+நான்கு என்ற பொருள் கிடைக்கும். அந்தப் பதிலாக விளங்கும் நான்கு எது? அந்த பதிலைத் தந்த கேள்வி எது? என்ற மற்றோர் கேள்வி எழுகின்றது. இனி அந்தக் கேள்வியையும் அதன் பதிலையும் காணலாம்.

முதலில் பதிலாகப் பெறப்பெற்ற நான்கு எது? என்றால் அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்காகும். இந்த நாற்பொருளே உலகம் இயங்குவதற்கான அச்சாணியாகும். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகும்.

இந்த நான்கைப் பெறுவதெப்படி? இதனை வரையறுக்கும் கருவி யாது? என்ற கேள்விகளுக்கு விடையாக எழுந்தவைகளே சாத்திரங்கள் என்ற நூற்களாகும். சாத்து என்பதற்குச் செல்வம், எளியது; சுருக்கமானது என்பன பொருளாகும். திரம் என்பதற்கு வழி என்பது பொருள். எனவே உலகத்தின் அடிப்படையான அறம், பொருள், இன்பம், வீடு, எனும் நாற்பொருள்களையும், ஆன்மாவுக்குச் சிறப்பான முறையில் கிடைக்கச் செய்யும் எளிய வழியையும் அதன் பயனால் அது பெறத்தக்க பொருள் ஆகியவற்றினையும் விளக்குவதே சாத்திரங்

களாகும். சிவபெருமானால் அருளப்பெற்ற ஆகமம், வேதம், முதலிவற்றில் இகவாழ்விற்கு அடிப்படையான அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருளை அடைவதற்கான நெறிகள் விரிவாகவும், வீடுபேறடைவதற்குரிய நெறிகள் சிறப்பாகவும் பேசப்பட்டுள்ளன.

அறிஞர்களும், ஞானிகளும், காலங்காலமாக உலகவாழ்வின் துன்பங்களில் இருந்து ஆன்மா விடுதலை பெற்றுப் பேரின்பநிலையைப் பெறத் தாம் கண்டும், கேட்டும் அனுபவித்தும், உணர்ந்த அனுபவ நிலைகளை நூலாக்கி வைத்தனர். அவற்றில் ஆன்ம நலனைப் பற்றிப் பேச எழுந்த நூல்கள் ஞான சாத்திரங்கள் என்று பெயர் பெற்றன. வேதங்களை அடியொற்றி எழுந்த இத்தகைய ஆன்மவிளக்க நூல்கள் "வேதாந்த சாத்திரங்கள்" எனப்பட்டன.

சைவ ஆகமங்களில் கூறப்பட்டுள்ள நெறியில் ஆன்ம நலனைச் சிந்தித்து, அது வீடுபேறு அடைவதற்கு வழிகண்ட நூல்கள் சைவசித்தாந்த சாத்திரங்கள் எனப்பெற்றன. இவ்வாறு எழுந்த வேதாந்த, சித்தாந்த நூல்கள் ஏராளமாகும். அவை அனைத்தையும் படித்து, உணர்ந்து, பேறுபெறுதல் என்பது இயலாது. எனவே இவற்றுள் பதினான்கு நூல்களைத் தொகுத்து அன்பர்கள் படித்துப் பயனடைய வகைசெய்துள்ளனர்.

நமது ஆன்மாவிற்கும் வாழ்விற்கும் உரிய மேலான நோக்கமும் குறிக்கோளும் என்ன? என்ற தலையான கேள்விக்குக் கிடைத்த பதில் நான்கைப் பேசுவதால் இச்சாத்திரங்களைப் பதினான்கு என்ற எண்ணிக்கையில் தொகுத்தனர் என்பர். எனவே சிவமஞ்சரியின் இந்தப் பதினான்காவது மலர் ஞான சாத்திரங்களைப் பற்றியதாக மலர்கின்றது.

இம்மலரில் சைவசித்தாந்த சாத்திர நூல்களின் பெயர்கள், அதனை ஆக்கியோர் வரலாறு ஆகியவற்றைக் காணலாம்.

மேலும் தமிழில் அமைந்த வேதாந்த சாத்திரங்களையும், அதனை இயற்றிய சில ஆசிரியர்களின் வரலாறுகளையும் காணலாம். இந்த இரண்டு வகையான நூற்களுடன். இவற்றை விளக்க எழுந்த தசகாரிய நூல்கள், கட்டளை நூல்கள் ஆகியவற்றைப் பற்றியும் சுருக்கமாகக் காணலாம்.

இம்மலரில் சித்தாந்த, வேதாந்த, சாத்திர நூல்களின் கருத்துக்கள் விவரித்துக் கூறப்படவில்லை. நூல்களின் அமைப்பு, வரலாறுகள் அதனை இயற்றிய ஆசிரியர்களின் வரலாறுகள் ஆகியனவே தொகுத்தளிக்கப்படுகின்றன என்பதையும் கூறிக் கொள்கின்றோம்.

-- சிவசுந்தரி

சாத்திரங்கள் - சிறு விளக்கம்

சாத்திரம் என்பதற்கு ஒரு கருத்தைச் சீடன் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில், வகைப் படுத்திச் சுற்றிவளைக்காமல், எளிதில் விளங்கும் வண்ணம் உலகக்கருத்துகளுக்கு ஒப்பத் தெளிவு படுத்திக் கூறுவது என்பது பொருள். சாத்து என்பது நிறைவான இன்பம் பயத்தல்; திரம் - வழி ; நிறைவான இன்பத்தைப் பெறும் வழியைக் கூறுவது எதுவோ அதுவே சாத்திரமாகும். இவ்வகையில் அறவியலைத் தெளிவுறுத்தல் தருமசாத்திரம் என்றும் பொருளியலைத் தெளிவாக உரைப்பது அர்த்த சாத்திரம் என்றும், இன்பவழியை உரைப்பது, காமசாத்திரம் என்றும், யோகநெறிகளைக் கூறுவது யோகசாத்திரம் என்றும், பஞ்சபட்சிகளைக் கொண்டு காலத்தை அறிதல் பஞ்சபட்சி சாத்திரம் என்றும்; குதிரைகளைப் பற்றி அறிவதற்கு அசுவசாத்திரம் என்றும் பலவகையான பெயர்களில் அறிவுநூல்கள் வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. இக்காலத்தில் நுண்கலைப் (டெக்னிகல்) புத்தகங்கள் என்று கூறுவதுபோன்று அந்நாளில் ஒவ்வொரு துறையிலும் நுணுக்கமாக ஆராயப்பட்டு எழுதப்பட்ட நூல்களே சாத்திரங்கள் எனப்பட்டன. சாத்திரங்களில் வல்லவர் சாத்தன், சாத்தியர் எனப்பட்டனர். சீத்தலை சாத்தன், ஒக்கூர் மாசாத்தியார் எனவரும் சங்ககாலப் பெயர்கள் இங்கு நினைவு கூறத்தக்கதாகும். பாசண்ட சாத்தன் எனும் கடவுள் தொண்ணூற்றாறு சமய சாத்திர, தருக்க கோவையில் தேர்ச்சி பெற்றிருந்தான் என்று கூறப் படுகின்றது. இவன் 'பண்டு பழமறைச் சாத்தன்' என்றும் அழைக்கப்பெற்றான். இவனுக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் கோயில் இருந்ததாகக் கூறுவர். வடமொழியில் சாத்திரங்களில் வல்லவர் களைச் சாஸ்திரிகள் என்று அழைக்கின்றனர்.



சைவசித்தாந்த சாத்திரங்கள் - அறிமுகம்

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்தி ருபா உண்மை பிரகாசம் - வந்தஅருட்
பண்பு வினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்பம் உற்று.

- (சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் வரிசைப்படுத்தும் பழம் பாடல்)

சிவபெருமானைத் தம் முழுமுதல் தலைவனாகக் கொண்ட மாபெரும் சமயம் சைவமாகும். இந்த சைவ சமயம் தனது சித்தத்தினால் தெளிந்து அதன் முடிந்த முடிவை, முடிவாகக் கூறுவதே சைவ சித்தாந்தமாகும்.

இந்நூல்கள் பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருளை விளக்கிப், பசுவாகிய உயிர்கள், பாசங்களைக் களைந்து, பதியாகிய சிவபெருமானை அடைவ தற்குரிய வழிகளை விரிவாகக் கூறுகின்றன.

இவை உயிருக்கு மெய்யான வழியைக் கண்டறிந்து, காட்டுவதால் மெய்கண்ட சாத்திரங்கள் என்றழைக்கப்படுகின்றன என்பர்.

காலங்காலமாக மெய்கண்ட சாத்திரங்கள் ஆன்றோர்கள் மத்தியில் சிறப்பாகப் போற்றப் பட்டாலும், குருவருளும், இறையருளும் பெற்ற திருவெண்ணை நல்லூர் மெய்கண்ட தேவ நாயனார் **"சிவஞான போதமாக"** தமிழ் மொழியில் அதனை வெளிப்படுத்திய பின்னரே பரம்பரை பரம்பரையாக அந்த ஞானக் கொடி படர்ந்து செழித்து வருகின்றது.

மெய்கண்ட தேவருக்கு முன்னாலும் பல சாத்திர நூல்கள் வழக்கத்தில் இருந்தன. மெய்கண்ட தேவருக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த வாக்ச முனிவர் என்பவர் ஞானாமிருதம் என்ற நூலை இயற்றினார். திருவியலூர் உய்யவந்தாரின் திருவுந்தியாரும், திருக்கடவூர் உய்யவந்தாரின் திருக்களிற்றுப்படியாரும், மெய்கண்டதேவருக்கு முந்தியவை. இவையே இப்போதுள்ள சித்தாந்த நூல்களில் மிகத்தொன்மையானவை. காலத்தால் முற்பட்ட தேவாரம், திருவாசகம், முதலிய நூல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பரவலாகக் கையாளப் பட்டுள்ளன என்றாலும் தத்துவரீதியாக சுருக்கி நெறிப்படுத்தப்பட்ட முறையில் சைவ சித்தாந்த சாத்திரத்தை முதலில் அருளிய பெருமை மெய்கண்ட தேவரையே சாரும்.

மெய்கண்ட தேவரால் சித்தாந்தக்குரு மரபு துவக்கி வைக்கப்பெற்றதால் ஆன்ம விளக்க நெறியைப் போதிக்கும் நூல்கள் அவர் பெயரால் மெய்கண்ட சாத்திரங்கள் என அழைக்கப்பட்டதென்பாரும் உண்டு. இவ்வகையில் முன்னாசிரியர்களாலும் மெய்கண்டதேவராலும், அவர் வழிவந்தவர்களாலும் இயற்றப்பட்டுத் தொகுக்கப் பெற்ற நூல்கள் "சைவசித்தாந்த சாத்திரங்கள்" என்றழைக்கப் படுகின்றன. இவை,

1. திருஉந்தியார்	8. திருவருட்பயன்
2. திருக்களிற்றுப்படியார்	9. வினாவெண்பா
3. சிவஞானபோதம்	10. போற்றிப் பஃறொடை
4. சிவஞான சித்தியார்	11. கொடிக்கவி
5. இருபா இருபஃது	12. நெஞ்சுவிடு தூது
6. உண்மைவிளக்கம்	13. உண்மை நெறி விளக்கம்
7. சிவப்பிரகாசம்	14. சங்கற்ப நிராகரணம்

என்ற பதினான்காகும்.

இவற்றில் திருஉந்தியாரும், திருக்களிற்றுப் படியாரும், சிவஞானபோதம் தோன்றுவதற்கு முன்பே இயற்றப்பட்டதாகும். சிவஞானபோதம் மெய்கண்ட தேவரால் அருளப்பெற்றதாகும்.

மெய்கண்ட தேவரின் குல குருவாக இருந்து, பின்னாளில் மெய்கண்டதேவருக்குச் சீடரான சகலாகம பண்டிதர் என்னும் அருள்நந்தி சிவாசாரியாரால், சிவஞானசித்தியார், இருபா இருபஃது ஆகிய இரு நூற்களும் அருளப்பெற்றன.

திருவதிகை மனவாசகம் கடந்தார் என்பவரால் உண்மைவிளக்கம் என்ற நூல் அருளப்பெற்றது. இவை ஆறுபோக, எஞ்சிய எட்டு நூல்களும் உமாபதி சிவாசாரியாரால் அருளிச் செய்யப்பட்டன. இவை எட்டையும் சேர்த்து **"சித்தாந்த அட்டகம்"** என்பர்.

இந்த நூல்களின் அமைப்பையும், அதன் திரண்ட கருத்தையும், அந்நூல்களுக்கு அமைந்த உரை நூல்களின் பெயரையும் காணலாம்.

1. திரு உந்தியார்

இந்நூல் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரால் அருளப்பெற்றதாகும்.

உந்தீ பறத்தல் என்பது பெண்கள் ஆடும் ஒருவகை ஆட்டம் என்பர். இதன் அமைப்பு ஒரு பெண் முதல் இரண்டு அடிகளில் ஒரு கேள்வியைக் கேட்க, அதற்கு விடையாக மற்றொரு பெண் மூன்றாவது அடியைக் கூறுவது போல அமைகின்றது.

இதில் "உந்தீபற" என்ற சொல் அடிகளை இட்டு நிரப்புகின்றது. அது செய்யுளில் உள்ள சொல்லோடு பொருட்தொடர்பு உடையதாக இல்லா விட்டாலும் செய்யுளுக்கு வனப்பு தருவதாக அமைகின்றது. பிற தொடர்கள் தம்முள் இணைந்து சிறந்த பொருளைத் தருகின்றன. இந்நூலில் 45 கலித்தாழிசைகள் உள்ளன.

2. திருக்களிற்றுப்படியார்

மேலே சொன்ன திருவுந்தியாரை இயற்றிய திருவியலூர் உய்ய வந்த தேவநாயனாரின் மாணவர் ஆளுடைய தேவநாயனார் ஆவார். அவருடைய மாணவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். இந்த உய்யவந்ததேவர் இயற்றியதே திருக்களிற்றுப் படியாராகும். இது மேலேசொன்ன திருஉந்தியாருக்கு பாக்களால் எழுதப்பெற்ற உரைநூல் போலவே அமைந்துள்ளது. இது வெண்பாயாப்பில் 100 பாடல் களைக் கொண்டது.

இந்த இரு நூல்களின் திரண்ட கருத்தாவது.

1. உருவமற்றவனாகிய இறைவன் அருள் காரணமாகக் குருவடிவாக வந்து ஆட்கொண்டு என்னை அவனாகவே ஆக்கினான்.

2. குருவின் திருவாக்கே எல்லா ஐயங்களையும் போக்க வல்லது. ஒருவன் தானே படித்துப் பெற்றுள்ள நூலறிவால் பயன் ஏதும் விளைவதில்லை.

3. குருவானவர் மக்களில் ஒருவரானாலும் சீடனின் பிறவி நோயைப் போக்கவல்லவர்.

4. ஒருவர் தொடர்ந்து ஐந்தெழுத்தை ஓதி வந்தால், அவர் தமது உள்ளே மறைந்து கிடைக்கும் திருவருளை அறிந்து அதன் மூலம், தன்னையும் இறைவனையும் காணலாம்.

5. ஞானம் பெற்றவர்கள் தத்துவங்களில் இருந்து விலகி, ஆணவத்தில் ஆட்படாமலிருக் கின்றார்கள். இந்த நிலையில் உயிர் தன்னிலை கெடாது இறைவனோடு சேர்ந்து இன்பத்தை அனுபவிக் கின்றது. இரவும் பகலும் இல்லாத பரந்த வெளியில் உயிர் உலகத்தோடு தொடர்பின்றி அட்டமூர்த்தி யாகிய இறைவனோடு ஒட்டி நிற்கின்றது.

மேலும், இந்நூலில் நாயன்மார்கள் பலருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்களை எடுத்துக்கூறி சைவ சித்தாந்த நெறிப்படி அவற்றிற்கான விளக்கமும் தரப்பட்டுள்ளது. அடியவர்கள் சாதாரணமக்களைப் போலவே வாழ்ந்தாலும் அவர்களுடைய செயல்கள் யாவும் இறைவனுடைய செயல்களாகவே கொள்ளப் படல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3. சிவஞானபோதம்

மெய்கண்டதேவர் அருளிய தலையாய நூல் **"சிவஞானபோதம்"** ஆகும். இது மொத்தம் 12 சூத்திரங்களை உடையது. இந்நூல் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதல்பகுதியான 6 சூத்திரங்கள் கொண்டது பொது அதிகாரம் என்று அழைக்கப்படுகின்றது.

இரண்டாவது பகுதியான ஆறுசூத்திரங்கள் "உண்மை அதிகாரம்" என்று பெயர் பெறுகின்றது. இந்த பன்னிரெண்டு சூத்திரங்களும் நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயலிலும் மூன்று சூத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. நான்கு இயல்களும் முறையே பிரமாண இயல், இலக்கண இயல், சாதனஇயல், பயன் இயல் என்று பெயர் பெறுகின்றன.

இந்நூலில் 39 அதிகரணங்கள் இடம் பெற்றுள்ளன. அதிகரணம் என்பதற்கு ஒரு தலைப்பின் கீழ் தொகுத்துக் கூறியவை என்பது பொருள். இந்த அதிகரணங்கள் பட்டியலிடப்பட்டு **"சூர்ணிக்கொத்து"** என்று பெயரில் வெளியிடப் பட்டுள்ளன. இதனைத் திருவெண்ணெண நல்லூர் பொல்லாப் பிள்ளையார் அருளிச் செய்தார் என்பர்.

இந்த ஞான நூலுக்கு மெய்கண்டாரே வார்த்திகம் என்ற உரைநூலையும் எழுதியுள்ளார். இதில் 81 உதாரண வெண்பாக்களையும் இணைத் துள்ளார். மேலும், இந்நூலுக்குப் "பாண்டிப்பெருமாள்" என்பவர் இயற்றிய **பாண்டிப் பெருமாள் விருத்தி** யுரை என்ற உரைநூல் உள்ளது. இதுவே மிகப்பழமை யான உரைநூலாகும். ஸ்ரீமத் மாதவச் சிவஞானமுனிவர்

இந்நூலுக்குச் சிற்றுரை, பேருரை என்ற இரண்டு உரைகளை எழுதியுள்ளார். பேருரை, சிவஞான பாடியம், அல்லது 'திராவிட மாபாடியம்' எனப்படும். சிவாக்கிர யோகிகள் சிவாக்கிரபாஷ்யம் என்ற உரையை வடமொழியில் எழுதியுள்ளார். இவர்களை அடியொற்றி ஏராளமானவர்கள் விரிவான விளக்கங் களைச் சிவஞான போதத்திற்கு எழுதியுள்ளனர். •

★ தட்சணாமூர்த்தியின் கரத்தில் இருப்பதும், சிவபெருமான் மானுடவடிவம் தாங்கித் திருப்பெருந் துறையில் மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்ய வந்தபோது கையில் ஏந்தி நின்றதும் சிவஞான போதமே ஆகும்.

★ சிவஞான போதம் வடமொழியில் இருந்த நூல் என்றும் அது ரௌரவ ஆகமத்தின் ஒரு பகுதி என்றும் கூறுவர். ஆனால் இக்கருத்து ஏற்புடையதல்ல என்று ஒரு வாதம் உண்டு. முன்னாளில் தமிழில் இருந்த சிறந்த நூல்களை வடமொழியில் மொழி பெயர்த்து வைப்பதுண்டு. அவ்வகையில் சிவஞான போதமும் வடமொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆனால் பின்நாளில் வந்தவர்கள் சிவஞான போதம் வடமொழியிலிருந்து வந்தது என்ற கருத்தை பரப்பிவிட்டனர். இதனையே பேரறிஞர்கள் உள்ளிட்ட பலரும் தொடர்ந்து எழுதியும், பேசியும் வருகின்றனர்.சிவஞானபோதம் தமிழில் மலர்ந்த நூலே என்பதற்குப் பலரும் பல்வகையில் விளக்கம் அளித்துள்ளனர். இதற்கு மறைமலையடிகள் சிறந்த காரணங்களைக் கூறிச் சிவஞானபோதம் தமிழில் மலர்ந்த முதல்நூலே என்று நிறுவியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

சிவஞான போதத்தின் திரண்ட கருத்து

முதல் இயலான பிரமாண இயல் பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருளின் இயல்பைக் கூறுகிறது. இதன் திரண்டகருத்து அவன், அவள், அது என்று பிரித்துக் கூறப்படக் கூடியது. உலகமாகும். எனவே இது பல பொருள்களின் சேர்க்கையால் உண்டாகியுள்ளது. தோன்றுதல், நிலைபெற்றுதல், முடிவடைதல் என்ற மூன்று நிலைகளுக்கும் உட்பட்டுள்ளது.

உலகம் தோன்றி, நிலைபெற்று, அழிவதற்குக் காரணம் உயிர்கள் அதனைப் பற்றியுள்ள ஆணவத்தி லிருந்து விடுபடுவதற்கேயாகும். முதல்வன் (இறைவன்) உயிர்களில் கலந்து அவையாகவும், தனித்தும், அந்த உயிர்களுக்கு உயிராய் இருந்து, அறிவதனால் உடனாகியும் இருக்கின்றான். உயிர்கள் இருவினைகளின் காரணமாக இறந்து, பிறக்கின்றன. இறைவனோடு பிரி-வின்றி விளங்கும் சக்தி அந்தவினையை இயக்குகின்றது.

உடல் மாயையால் ஆகியது. உயிர் உடம் பிலுள்ள (மெய், கண், வாய், மூக்கு, செவி முதலான) ஐம் பொறிகள், அதனால் உணரப்படும் புலன்கள் ஆகிய வற்றிலிருந்து வேறாகியது. தூக்கத்தில் உணவு உட்கொள் ளுதல் செயல் புரிதல் இல்லாமையால் உடல்வேறு உயிர்வேறு என்பது பெறப்படும். உணர்த்தினால் உணர்ந்து கொள்ளும் தன்மையுடையது உயிர். ஆதலால் உணர்த்துபவனாகிய இறைவனிடமிருந்து வேறுபட்ட தாக உள்ளது.

இரண்டாவது இயல் உயிர்களின் இலக்கணத்தை (தன்மையை)க் கூறுகின்றது.

உயிரானது அகக் கருவிகள் ஆகிய மனம், புத்தி, அகங்காரம், ஆகியவற்றில் ஒன்றன்று. அரசருக்கு மந்திரி, சேனாதிபதிகள் அமைந்திருப்பது போல உயிருக்கு அவை துணையாக இருக்கின்றன. உயிரை ஆணவமலம் எப்போதும் கூடியிருப்பதால் உயிர் தானே அறிவதில்லை. அக்கருவிகளோடு கூடி அது ஐந்து நிலைகளை (அவஸ்தைகளை) அடைகின்றது.

உயிர்கள் பலவேறு (அவத்தை) நிலைகளை அடையும். மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஐம்பொறிகளும் உயிர் செயல்படுத்துவதால் செயல்படுகின்றன. என்றாலும் அவை தம்மையும் தம்மைச் செலுத்தும் உயிரையும் அறியமாட்டாது. அதுபோலவே உயிர் தன்னையும் அறிவதில்லை தன் அளவிற்கு விளக்கம் தந்து அறியவைக்கும் திருவருட் சக்தியையும் உணர்வதில்லை. காந்தத்தின் முன் வைத்த இரும்பு கவரப்படுவது போல உயிர் இறைவன் முன்பு செயல்படுகிறது. ஆனாலும் இறைவன் மாற்றம் பெறுவதில்லை.

இறைவன் அறிவுக்கு எட்டியவன் என்றால் அவன் நிலையில்லாத பொருளாவான். எவ்வகையிலும் அறியப்படாதவன் என்றால் அவன் இல்லாத பொருளாகிவிடுவான். அவன் உயிர் அறிவால் அறியமுடியாதவன். ஆனால் பதி அறிவால் அறியக் கூடியவன் அதனாலேயே அவனைச் சிவசத்து என்று அழைக்கின்றனர். (தொடர்ச்சி அடுத்த பக்கம்)

4. சி ஞான சித்தியார்

பதினான்கு சாத்திரங்களுள் நான்காவதாக வருவது சிவஞான சித்தியாராகும். இதன் ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியார் ஆவார்.

இது பரபக்கம்-சுபக்கம் என்ற இரண்டு பகுதிகளை உடையது. முன் பகுதியான பரபக்கம், உலகாயதம், நால்வகைப் பௌத்தம், இருவகைச் சமணம், இரண்டு மதங்களான மீமாம்சம், ஏகான்மவாதத்தின் முப்பிரிவுகள், சாங்கியம், வைணவம் ஆக பதினான்குவகையான சமயக் கொள்கைகளை மறுத்து அவை எப்படித் தமது கொள்கை விளக்கத்தில் பொருத்தமற்றுள்ளன என்பதையும் விளக்குகின்றது. இப்பகுதி 301 விருத்தங்களால் ஆனது. இரண்டாம் பகுதியான சுபக்கம் சைவ சித்தாந்தக் கொள்கைகளை விளக்கி

(முன்பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது இயல் உயிரின் சிறப்பியல்பை விளக்குகின்றது. சிவசத்தின் முன்பு எல்லாபொருளும் பாழ். ஆதலால் அது பாசத்தை அறியாது. அதை அனுபவிக்காது. அசத்தாகிய உலகம் தனக்கென அறிவின்மையால் எதையும் அறியாது அனுபவிக்காது.

உயிர் சத்தாகவும் அதே சமயம் அசத்தாகவும் இருப்பதால் இரண்டையும் அறியும் அனுபவிக்கும்.

பொறி புலங்களுக்கிடையே நீண்டகாலம் வாழ்ந்து விட்டதனால் உயிர் தன்னுடைய உண்மையான இயல்பை அறிவதில்லை. இறைவன் குருவடிவம் தாங்கி வந்து உயிருக்கு அதன் உண்மை நிலையை உணர்த்துகின்றான். வேடர்களிடையே வளர்ந்த அரசகுமாரன் தான் யார் என்பதை அறிந்து கொண்டால் அந்தக் கூட்டத்தைவிட்டு விலகி அரசகுடும்பத்தினை அடைந்து விடுவது போன்று, உயிர் தன்னை அறியும் போது இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும். தன் நிலையினை உணர்ந்து அவனுடைய திருவடிகளை அடையும். பாச ஞானத்தால் அறியப்படாத இறைவனைப் பதிஞானத்தால் உயிர் அறிகின்றது. அப்படிப்பட்ட உயிர்க்கு உலகம் கனவாகக் கழிகிறது. இறைவன் வெளிப்படுகின்றான். அவனைத் தொடர்ந்து துய்ப்பதற் காக உயிர் திருவைந்தெழுத்தை ஓதுகின்றது.

இந்நூலின் நான்காம் பகுதியாகிய பயனியல் ஆன்மிக நெறியின் பயனை எடுத்துக் கூறுகின்றது.

இறைவனை உணர்ந்து அவனுடன் ஒன்றி நிற்கும் உயிர், இறைவன் வேறு தான்வேறு என்றில்லாமல் அவன் திருவடிவாகவே நிற்கின்றது. அதனாலேயே அதற்கு ஆணவம், மாயை, வினை ஆகிய மூன்றும் இல்லாமல் ஒழிகின்றன. பொருள்களைக் காண்பதற்கு உயிர், கண்ணுக்கு உதவுகிறது. கண்ணிற்குக் காட்டித் தானும் காணுகின்ற உயிர்போல இறைவன் பொருள்களை அறிய உயிர்களுக்கு உதவித் தானும் அறிகின்றான். இந்த உதவியால் உயிர் இறைவனிடம் குறையா அன்பு பூண்டு அதனால் அவன் திருவடியாகிய அனுபவத்தைப் பெறும்.

இதில் இறுதியான பன்னிரண்டாவது சூத்திரம் ஜீவன் முக்தர்களின் இயல்பைச் சொல்கின்றது. அதன்படி குறையாத அன்பினைக் கொண்டு இறைவனை அடையும் உயிர். (அவனை அடைவதற்குத் தடையாக வுள்ள மும்மலங்களை; ஞானம் எனும் நீரால் கழுவி) **இறைவனை மறவாத அடியார்களோடு உடன் உறைந்து, சிவவேடத்தையும் சிவாலயங்களையும் சிவபெருமானின் வடிவமாகவே கொண்டு வழிபட வேண்டும் என்பதாகும்.**

மேற்சொன்னவை சூத்திரங்களின் பொழிப்புரை யாக அமைந்துள்ளன. சிவஞானபோதத்தின் முடிந்த முடிவு என்ன என்பதை சுவாமி நாத தேசிகரின் தசகாரியச் செய்யுள் சுருக்கமாகச் கூறுகின்றது அதன்படி:-

1. சங்கால காரணமாகிய அரனே முழுதற் கடவுள் 2. உயிர்களிடத்தில் கடவுள் அத்துவிதமாய் கலந்திருக் கின்றார். 3. எண்ணில்லாத உயிர்கள், அநாதி காலம் தொட்டே உள்ளன. 4. உயிர்கள் கேவல அவத்தை (தனித்த நிலை) சகலாவத்தை சுத்தாவத்தை என்ற மூன்று அவத்தைகளை அடையும். 5. உயிர்களுக்குத் தான் செயல்படுதல் இன்மையால் கடவுளால் செயல்படுகிறது. 6. அழியும் தன்மையை உடைய உலகிற்கு வேறாய் அழியாத நிலையை உடையவன் இறைவன். 7. உயிர் எதைச் சாந்திருக்கின்றதோ அதன் வண்ணமாகவே செயல்படுகிறது. 8. உயிர்கள் தமது அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தினை அடைய வேண்டும். 9. ஆன்மாவைத் தெளிவிக்க ஆன்ம ஞானம் பெறவேண்டும். 10. பாசத்தை அறுக்கும் வழியை உணரவேண்டும். 11. பாசத்தினின்று நீங்கிய உயிர்கள் இறைவனை அடைய வேண்டும். 12. எப்பொழுதும் உயிருக்கு உதவியாளனாக இருக்கும் இறைவனை, பாசநீக்கமும் சிவப்பேறும் பெற உயிர்கள் துதிக்க வேண்டும். சிவனடியார்களையும் குருவையும் சிவாலயங்களையும் சிவபெருமானாகவே வணங்க வேண்டும். ✡

அதனைப் போற்றுகின்றது. இது 328 திருவிருத்தங்களைக் கொண்டதாகும். இந்த நூலின் திரண்ட கருத்து:-

1 .சிவன் ஆறு சமயங்களின் தலைவன், வேதங்களுக்கும், ஆகமங்களுக்கும் அப்பாற் பட்டவன். அறிவின் ஊற்றாக இருப்பவன். தாயும் தந்தையுமாய் எங்கும் நிறைந்திருப்பவன்.

2. நாம் எந்த தெய்வத்தைவழிபட்டாலும் அவன் அங்கு நாம் வணங்கும் அந்தத் தெய்வத்தின் வடிவமாகத் தோன்றி அருள்பாலிப்பவன். சிவன் பிறப்பு, இறப்பு இல்லாதவன்.

3. பலவேறு வழிகளில் அலைந்து திரிந்து தவங்களை இயற்றி, வேதம், புராணங்களை ஓதி, உபநிடதப்பொருள்களை உணர்ந்து, பல படிகளைக் கடந்தே ஒருவன் சித்தாந்தமென்றும் உச்சியை அடையமுடியும், அங்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலியவற்றை கடைபிடித்துச் சிவநெறியை அடைவான். எல்லா சமயங்களும் பதமுக்தியைப் பற்றிப் பேசுகின்றன. என்றாலும் சைவசித்தாந்தம் மட்டுமே உண்மையான பரமுக்தியைப் பற்றிப் பேசுகின்றது. இதுவே உண்மையான சமயமாகும்.

★ **சிவனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை.**
சித்தியாருக்கு மிஞ்சிய சாத்திரமும் இல்லை

என்ற பழமொழி சைவ அன்பர்களிடையே வழங்குகின்றது. இதனால் இந்நூல் எவ்வளவு சிறப்புடையது என்பது தெரியவரும்.

★ சிவஞான சித்தியார் என்பதற்குச் சைவ ஆகமங்களில் உள்ள பலவேறு ஞானபாதக் கருத்துக்களை ஆராய்ந்து உண்மையை நிறுவுதல் என்பது பொருள். இதனைத் தாயுமானவர் உண்மை சாதித்தல் என்று கூறுவார்.

★ **சிவஞான சித்தியாருக்கான உரை நூல்கள்**

முதல் பகுதியான சுபக்கத்திற்கு 1. ஞானப் பிரகாச சுவாமி உரை 2. வெள்ளியம்பலத்தம்பிரான் சுவாமிகள் உரை 3. நிரம்ப அழகிய தேசிகர் உரை 4. மறைஞான தேசிகர் உரை 5. சிவாக்கிரயோகிகள் உரை 6. சிவஞான சுவாமிகள் உரை என ஆறு உரைகள் உள்ளன. மேற்சொன்ன ஆறு உரைகளையும் சேர்த்து அறுவர் உரை என்றழைப்பர். இந்த உரைகளை விளக்கிச் சுப்பிரமணியதேசிகர் ஒரு உரையைச் செய்துள்ளார். மேலும் டி. முத்தையாப் பிள்ளை, தூத்துக்குடி வ. சிவகுருநாதப்பிள்ளை, டாக்டர் வ.ஆ. தேவசேனாதிபதி (ஆங்கிலம்) ஆகியோர் எழுதிய உரைகளும் உள்ளன.

5. இருபா இருபஃது

இதுவும் அருணந்தி சிவாசாரியாரால் பாடப்பெற்றதாகும். இருபது செய்யுட்களை கொண்ட இந்நூலில்; ஒற்றைப்படை எண்ணுள்ள பாடல்கள் வெண்பாவிலும் இரட்டைப்படை எண்ணுள்ள பாடல்கள் ஆசிரியப்பாவிலும் அந்தாதித் தொடையலாக அமைந்துள்ளன.

இதில் ஆசிரியர் தமது குருவான, மெய்கண்ட தேவரைச் சிவபெருமானாகவே போற்றிப் பாடியுள்ளார். குருவே, குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்றுமாய் விளங்குதலை விளக்குதல் இந்நூலின் நுட்பமாகும்.

இந்நூலில் மும்மலங்களான ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் ஆகியன விளக்கமாகப் பேசப் படுகின்றன. ஆணவமலத்தின் எட்டு குணங்களும், மாயாமலத்தின் ஏழு தன்மைகளும் கன்ம மலத்தின் ஆறு இயல்புகளும் விளக்கப்பட்டுள்ளன.

1. மேலும் இறைவன் உயிரோடு பிரிவற இருந்தால் அந்த உயிரை எவ்வாறு ஆணவம் பற்றும்?

2. உயிர் இறைவனைப் பற்றி நிற்கும் போது ஆணவம் அங்கு இல்லாமல் போகுமோ?

3. குரு உபதேசம் செய்யும் போது இறைவன் எங்கே இருக்கின்றான்? எவ்வாறு இருக்கின்றான் உயிரினின்று தனித்தா? அல்லது ஒன்றாகவா?

4. மலங்கள் அறிவற்றவை என்றால் அவை எப்படி உயிரைக் கட்டும்? உயிர் தானே கட்டுப்படாது. இறைவனோ கட்டுப்படாதவன். மலம் உயிரின் இயல்பானது. அதனை அழிக்கமுடியாது அப்படி யென்றால் உயிர்களுக்கு எப்படி மும்மலக் கட்டு உண்டாகியது? எவ்வாறு மலக்கட்டினை நீக்க முடியும்? என்பனபோன்ற பலவேறு வினாக்கள் எழுப் பப்பட்டு அதற்கு விடை காணப்பட்டுள்ளது. மொத்த த்தில் சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடு களான பசு, பதி, பாசம் எனும் முப்பொருள்களின் இயல்பையும் அது எவ்வாறு ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டுள்ளது என்பதையும் இந்நூல்

தெளிவுபட விளக்குகின்றது.

திருவாவடுதுறையில் ஐந்தாம் பட்டமாக விளங்கிய ஸ்ரீ வேலப்ப தேசிகரிடம் உபதேசம் பெற்ற நமசிவாயத்தம்பிரானும், சீர்காழித் தத்துவராயரும் இதற்கு உரை எழுதியுள்ளனர்.

6. உண்மை விளக்கம்

பதினான்கு சாத்திரங்களில் ஆறாவதாகப் போற்றப்படும் உண்மை விளக்கத்தை இயற்றியவர் திருவதிகை மனவாசகங்கடந்தார் ஆவார். இவர் மெய்கண்டாரின் சீடராவார். சிறந்த சீடன் ஒருவன். ஞானகுருவிடம் வினவுவது போலவும் குரு அதற்கு ஏற்ற விடையைச் சொல்வது போலவும், இந்நூல் அமைந்துள்ளது. 53 வெண்பாக்களால் ஆகியது.

இதில் ஏழு வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன அவை, ஆறாறு தத்துவம் ஏது? ஆணவமலம் ஏது?, வினையாவது எது? ஆன்மாவின் வடிவம் எது?, கடவுளின் வடிவம் எது? திருநடனம் ஆவது எது? ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் உண்மை எது? ஆகியவாகும்.

இதற்கு விடையாகத் திருவைந்தெழுத்தே வேதம், ஆகமம், புராணம் ஆகும். அதுவே இறைவனின் தாண்டவம், அதுவே தத்துவம் கடந்த முக்தி, இறைவனின் திருவடியே நமக்கு முக்தி. அது மாயையை விலக்கி, வினைகளைச் சுட்டு ஆணவத்தின் செயலை ஒழித்து ஆன்மாவை ஆனந்த வாரிதியில் அழுத்துகின்றது. இறைவனின் நடனம் ஐந்தொழிலை நிகழ்த்துகின்றது. அதுவே ஐந்தெழுத்தாகத் திகழ்கின்றது. என்று விரிவான வகையில் விடைகள் தரப்பட்டுள்ளன.

அஞ்செழுத்துண்மை, நடராசரின் வடிவாக ஐந்தெழுத்து அமைந்திருத்தல், அத்வைத முத்தி, முத்தியில் அமைந்துள்ள மூன்று முதற்பொருள் குரு, லிங்க, சங்கம வழிபாடு ஆகியன விரிவாகப் போற்றப்பட்டுள்ளன. இந்த நூலுக்கு இரண்டு உரைகள் உள்ளன. இவற்றின் உரையாசிரியர்களின் பெயர்கள் தெரியவில்லை.

7. சிவப்பிரகாசம்

இது முதல் எட்டு நூல்களும் ஸ்ரீ உமாபதி சிவாசாரியாரால் இயற்றப்பட்டவையாகும். சிவப் பிரகாசநூல் பொது, உண்மை என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது இதில் ஒவ்வொன்றிலும் 50 பாடல் வீதம் மொத்தம் 100 பாடல்கள் உள்ளன.

இதில் பொதுப்பகுதி என்பது உயிரானது உடம்பொடு கூடிய நிலையில் பெறும் அனுபவத்தையும், உண்மைப்பகுதி என்பது முத்திநிலையையும் விளக்குகின்றன. உயிரின் இயல்பு, ஐந்து அவத்தைகள், உயிரின் உண்மை, ஆகியன விளக்கப்படுகின்றன. ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, ஆன்ம லாபம் ஆகிய மூன்று தலைப்புகளில் தசகாரியங்கள் நன்கு விளக்கப்படுகின்றன.

பதினான்கு நூல்களில் இதில் ஒன்றில் தான் ஆசிரியர் **"சைவசித்தாந்தம்"** என்ற சொல்லைப் பயன்படுத்தி தான் அதனை விளக்கப் போவதாக் கூறுகின்றார்.

மேலும், இந்நூலில் பிறசமயத்தினர் கூறும் குறைகளைப் பட்டியலிட்டு அதற்கு விடை தருவது போலவே நூலையமைத்துள்ளார்.

இதற்கு உரையாகப் புன்கூர் சிவப்பிரகாசர் என்பவர் "சிவப்பிரகாசக் கட்டளை" என்ற நூலை இயற்றியுள்ளார்.

சிவப்பிரகாசத்தின் கருத்துரைகளைச் சூத்திரங்களின் வடிவில் காழி பழுதை கட்டிச் சிற்றம்பல நாடிகள் என்பவர் **சிவப்பிரகாசக் கருத்துரைச் சூத்திரம்** என்ற நூலாக இயற்றியுள்ளார்.

இந்நூலுக்கு உரை எழுதியோர்-முறையே

1. இலக்கணம் சிதம்பரநாதர் 2. மதுரை சிவப்பிரகாசர் 3. சிந்தனை உரைகாரர் 4. இலங்கை மு. திருவிளங்கம் 5. கா. சுப்பிரமணியப் பிள்ளை 6. சீனிவாசாசாரியார் 7. மதுரை ஞானப்பிரகாசர் 8. திருமாமலை அடிகள் ஆகியோராவர்.

8. திருவருட் பயன்

ஒரு அதிகாரத்திற்குப் பத்து குறள்கள் வீதம் கொண்ட பத்து அதிகாரங்களினால் ஆனது இந்நூல், இப்பத்து அதிகாரங்களும் முறையே 1. பதிமுதுநிலை, 2. உயிரவைநிலை, 3. இருள்மலநிலை, 4. அருளது நிலை, 5. அருள்உருநிலை, 6. அறியும்நிலை, 7. உயிர் விளக்கம், 8. இன்புறுநிலை, 9. அஞ்செழுத்தருள் நிலை 10. அணைந்தோர் தன்மை என்று பெயர் பெறுகின்றன.

இதன் கருத்து, உயிர்கள் செய்யும் வினை

களுக்கேற்ப, அவற்றிற்கு இன்ப துன்ப அனுபவங் களைத் திருவருள் ஊட்டுகின்றது. இதன் நோக்கம் அந்த உயிர்கள் பாசத்திலிருந்து நீங்கிப் பதியை அடைவதேயாகும்.

சிவப்பிரகாசத்தில் சுருக்கமாகக் கூறப்பட்ட திருவருள், திருவைந்தெழுத்து ஆகியவற்றின் விளக்கங்களைத் திருவருட்பயன் சிறப்பாகக் கூறுகின்றது.

இதில் பதியாகிய சிவபெருமானின் தன்மை, உயிரின் தன்மை, அதனைப் பற்றியுள்ள மலங்களின் விளக்கம், அது பெறும் அருள், அருளை அறியும் நிலை, உயிர் பற்றிய விளக்கம் ஆகியவை படிப் படியாக விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலுக்கு உரை செய்தோர் முறையே

1. வேலப்ப பண்டாரம் 2. நிரம்ப அழகியார் (பதிப்பு க. வெள்ளைவாரணன்) 3. நல்ல சிவதேவர் (சிந்தனை உரை) 4. கா. சுப்பிரமணியப் பிள்ளை 5. தே. ஆ. சீனிவாசாசாரியர் 6. கு. சுந்தர மூர்த்தி 7. எஸ். சிவபாதசுந்தரம் 8. க. வச்சிரவேல் முதலியார் 9. வே. மாணிக்க வாசகம் பிள்ளை 10. எம். நல்லசாமிப்பிள்ளை (ஆங்கில உரை) 11. டாக்டர் ஜி.யு. போப் (இவர் திருவாசக மொழி பெயர்ப்புடன் இணைத்து வெளியிட்டுள்ளார்). 12. ஏ.வி. ரங்கநாதன் (ஹிந்தி மொழி பெயர்ப்பு) ஆகியோராவர்.

9. வினா வெண்பா

இந்நூலில் பதின்மூன்று வெண்பாக்கள் உள்ளன. சைவ சித்தாந்தத்திலுள்ள சிக்கலான பகுதி களும், முரண்பாடுகளும் கேள்விகளாகக் கேட்கப் பட்டு அதற்குரிய விடைகளும் விளக்கமாகத் தரப் பட்டுள்ளன. இதற்குப் பாசத்தை வினாவி அதை அறியக்கூறிய வெண்பா நூல் என்று பெயர்.

இதற்கு, நமசிவாயதம்பிரான் உரை ஒன்று உண்டு அதனை விளக்கி 1. கா. சுப்பிரமணியப்பிள்ளை 2. தே. ஆ. சீனிவாசாசாரியார் ஆகியோர்உரை எழுதி யுள்ளனர். 3. ஜே.எம். நல்லுசாமிப்பிள்ளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

10. போற்றிப் பஃறொடை

இது (இரண்டுவரிகளில் அமைந்த) 95 கண்ணிகளையும், ஒரு வெண்பாவையும் கொண்டது போற்றி + பல் + தொடை என்று இந்த தலைப்புச் சொல்லைப் பிரித்துப் பொருள் காண்பர்.

ஆன்மாக்கள், பாசத்தால் கட்டுண்டு போவ தற்கு முன் இருந்த நிலையையும், கட்டுண்டு துன்புற்று சுழலும் நிலையையும் குருவருளால் திருவருள் பெற்று உய்வதையும், முதல் நூலான சிவஞான போதமும் அதன் வழிநூலான சிவஞான சித்தியாரும், புடை நூலான சிவப்பிரகாசமும், எவ்வாறு விளக்குகின்றன என்பதை இந்நூலில் விவரித்துக் காட்டியுள்ளார்.

இந்நூலில் தமது குருபிரானான மறைஞான சம்பந்தரைச் சிவபெருமானின் வடிவமாகவே ஏற்றுக் கொண்டு அவரைப் போற்றிப் பாராட்டியுள்ளார்.

இந்நூல் இறைவனின் அருள், உலகத்தின் தோற்றம், தத்துவங்கள், மோட்சம் ஆகியவற்றை விரிவாகப் பேசுகின்றது.

இந்நூலுக்கான பழைய உரை ஒன்று உள்ள தென்பர். அது பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை.

11. கொடிக்கவி

இந்நூல் கட்டளைக் கலித்துறையில் ஒன்றும், வெண்பாவில் மூன்றும் ஆக நான்கு செய்யுள்களைக் கொண்டதாக அமைகின்றது.

இந்நூலுக்கான பழையஉரை உள்ளது. சைவ சித்தாந்த அன்பர்கள் விழாக்களைத் தொடங்கும் போது இடபக்கொடியேற்றி இந்தச் செய்யுட்களை ஓதுதல் மரபு. இதில் அமைந்துள்ள நான்காவது பாடலில் ஐந்தெழுத்தின் வடிவமும் வலியும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன. இதற்குக் காஞ்சி திரு. சிவ. சதாசிவம் அவர்கள் விரிவான தெளிவுரையை எழுதியுள்ளார்.

12. நெஞ்சுவிடு தூது

இந்நூல் உமாபதி சிவாசாரியார் தமது குருவிடம் தமது நெஞ்சத்தைத் தூதாக அனுப்புவது போன்று பாடப்பெற்றது.

இதில் ஆசிரியர் தமது ஆசிரியப்பிரானைச் சிவபெருமா னாகவே எண்ணி அவருக்குத் தசாங்கம் உரைக்கின்றார். இதனுள் அவர் தமது நெஞ்சுக்குச் சொல்வது போல் பல அறிவுரைகளை நமக்குச் சொல்கின்றார்.

13. உண்மை நெறி விளக்கம்

இதில் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி சிவரூபம், சிவ தரிசனம், சிவபோகம், சிவபோகம், ஆகிய ஞானப்பாதையின் பத்து படிகளும் அவற்றின் இயல்புகளும் விளக்கப்பட்டுள்ளன. இவற்றின் விளக்கம் வருமாறு :-

1. **தத்துவரூபம்** : 36 தத்துவங்களில் இருந்தும், உலகில் இருந்தும், தான் வேறுபட்டது என்பதை உயிரானது உணர்தல்.

2. **தத்துவதரிசனம்** : தன்னையும் இந்த உலகத்தையும் பிரித்து இனங்காணும் அறிவு.

3. **தத்துவசுத்தி** : தத்துவங்களின் தொடர்பிலிருந்து உயிர் விடுபட்டுத் தூய்மை பெறுதல், இது இறைவன் துணையோடு அவன் அருளால் நடக்கும்.

4. **ஆன்மரூபம்**: உயிர் ஆணவத்தை வென்று, தான் இறைவனின் திருவருளால் அதனை வென்றோம் என்பதை உணர்ந்திருத்தல்.

5. **ஆன்மதரிசனம்**: யான் என்பவை அற நிற்றல்.

6. **ஆன்ம சுத்தி** : உயிர் தன் செயலையெல்லாம் சிவன் செயலுடன் இணைத்தல்.

7. **சிவரூபம்**: பிறப்பு இறப்பு முதலிய எல்லாம் இறைவனின் அருளால்தான் நிகழ்கிறது என்பதை உணர்த்தல்

8. **சிவதரிசனம்** : உயிர் சிவனில் தோய்ந்து தனது தனித்தன்மையை விடுதல்

9. **சிவயோகம்**: சிவனருளில் நிலைபெற்றிருத்தல்.

10. **சிவபோகம்**: பேரின்பமடைதல். இதற்கு ஒரிரு உரைகள் கிடைத்துள்ளன. சீர்காழித் தத்துவநாதரின் உரை சிந்தனை உரை எனப்படும்.

14. சங்கற்ப நிராகரணம்

இந்நூல் 20 பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி காப்பாகவும் இரண்டாம் பகுதி பாயிரமாகவும் 18 பகுதிகள் நூலாகவும் அமைகின்றன. இதில் மாயாவாதம் முதலில் சிறப்புடன் பேசப்பட்டு, அதன் சிறப்புக்கள்யாவும் ஐக்கியவாத சமயத்தின் கொள்கைகளால் மறுக்கப்படுகின்றன. பின்னர் இந்த ஐக்கியவாத மதத்தின் கோட்பாடுகள், பாடாணவாதத் தால் மறுக்கப்படுகின்றன. பாடாண வாதத்தின் சிறப்பு பேசப்பட்டு, அது பேதவாதசமயத்தால் மறுக்கப்பட்டு ஒதுக்கப்படுகின்றது. அப்படி உயர்த்தப்பட்ட பேதவாத சமயத்தைச் சிவசமவாதத்தாலும் அதில் சிறப்புடன் சொன்னவற்றைச் சங்கிராந்தவாதத்தாலும் மறுத்து, அது அதனினும் சிறந்ததாகக் காட்டப்படுகின்றது. பின்னர். சங்கிராந்தவாதம், ஈசுவர அவிகாரவாதத்தால் மறுக்கப்பட்டு, நிமித்தகாரண பரிணாம வாதத்தின் சிறப்புப் பேசப்படுகின்றது. பின்னர் அதுவும் சைவ வாதத்தால் மறுக்கப்பட்டு, இறுதியில் சைவசிந்தாந்த நெறியின் மேன்மை விளக்கப்படுகின்றது.

இப்படி ஒன்றினைச் சிறப்பித்துக்கூறி அதனை மற்றோர் நூலால் கண்டித்துத் தொடர்சங்கிலிபோல வாதவிவாதங்களை அமைத்திருக்கின்ற முறை வேறெந்த நூலிலும் காணமுடியாததாகும். இது இவரின் தனிப்பெரும் அறிவாற்றலுக்குச் சான்றாக அமைகின்றது. இந்நூலுக்கு இரண்டு பழைய உரைகள் உள்ளன. இவற்றில் ஞானப்பிரகாச தேசிகர் உரையே பதிப்பிக்கப்பட்டுள்ளது

பதினான்கு சமயங்கள்

வேதாந்த, நூல்களும் ஶ்சைவ சித்தாந்த நூல்களும் பதினான்கு என்ற எண்ணிக்கையில் தொகுக்கப்பட்டது போலவே அந்நாளில் சிறப்புடன் போற்றப்பட்டிருந்த மதங்களில் பதினான்கு மதங்களின் கருத்துக்களை விளக்கி அவை எப்படி சைவ சித்தாந்தத்தினின்று மாறுபாடுடையது என்றும் விளக்கப்பட்டது. அந்தப் பதினான்கு மதங்கள். 1. உலோகாயதம் (நால்வகைப் பௌத்தமான) 2. மாத்தியமிகம் 3. யோகசாரம் 4. சௌத்திராந்திகம் 5. வைபாஷிகம் (இருவகைச் சமணமான) 6. ஆருகதம் 7. நிகண்டாவாதம் (இருவகை மீமாம்சமான) 8. பட்டாரின் பூர்வ மீமாம்சை 9. பிரபாகரரின் மதம் (ஏகான்மவாதத்தின் முப்பிரிவுகளான) 10. மாயவாதம் 11. பாஸ்கரீயவாதம் 12. சுத்தப்பிரம்மவாதம் 13. சாங்கியம் 14. வைணவம் (பாஞ்சராத்திரியம்) என்பனவாகும். மேலும் இம்மதங்கள் தமக்குள்ளேயே பலபிரிவுகளைக் கொண்டிருந்தன. அவற்றைச் சமயபேத விளக்கம் முதலான நூல்களில் விரிவாகக் காணலாம்.

சைவ சித்தாந்த சாத்திரங்களில் நான்காவதாகிய சிவஞான சித்தியாரின் பரபக்கம் என்ற பகுதி இந்தப் பதினான்கு வகையான சமயக் கொள்கைகளையும் மறுத்துத் தனது சைவசித்தாந்தக் கொள்கைகளை நிலைநாட்டுவது இங்கு, குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டார சாத்திரங்கள்

சைவசிந்தாந்த சாத்திர நூல்களின் கருத்துக்களை விளக்கிப் பல வழிநூற்கள் வெளியாயின. இவற்றில் குறிப்பிடத்தக்கவை பண்டார சாத்திரங்கள் ஆகும். இவைகளும் பதினான்கு என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன.

மெய்கண்ட தேவரின் சந்தான மரபில் தோன்றிய சமயக் குருமார்களால் தோற்றுவிக்கப் பெற்ற திருவாவடுதுறை ஆதீனமும், தருமையாதீனமும், சைவசிந்தாந்தத்தைச் சிறப்பாகப் போற்றிக் காத்துவருகின்றன.

இந்த இரண்டு மடாலயங்களின் குருமரபில் தோன்றிய தவசீலர்களாலும் முனிவர்களாலும் அருளப்பெற்ற இரண்டு வகையான பண்டாரசாத்திரங்கள் வழக்கத்தில் உள்ளன. இனி, இவற்றைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

திருஆவடுதுறை ஆதீனத்தில் பயின்று வரும் பண்டார சாத்திர நூல்கள்

1. அம்பலவாணதேசிகர் தசகாரியம்
2. தட்சணாமூர்த்தி தேசிகர் தசகாரியம்
3. சுவாமிநாத தேசிகர் தசகாரியம்
4. சன்மார்க்க சித்தியார்
5. சிவாச்சிரமத் தெளிவு
6. சிந்தாந்த பஃறொடை
7. உபதேசப்பஃறொடை
8. பஞ்சாக்கரப் பஃறொடை
9. சித்தாந்த சிகாமணி
10. உபாய நிட்டை வெண்பா
11. நிட்டை விளக்கம்
12. உபதேச வெண்பா
13. அதிசயமாலை
14. நமச்சிவாயமாலை

என்பனவாகும். (மேலும் விளக்கத்தை சிவமஞ்சரி மூன்றாம் மலர் பக்கம் 79 ல் காண்க).

தருமையாதீன்த்தில் பயின்று வரும் பண்டார சாத்திரங்கள்

திருத்தருமபுர ஆதீனத்தின் குரு முதல்வரான ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரியாரால் எட்டு நூல்கள் அருளப்பெற்றன. இவை குருஞானசம்பந்தர் சித்தாந்த அட்டகம் என்று பெயர் பெறும். இவற்றுடன் மேலும் ஆறு நூல்களைச் சேர்த்து தருமையாதீனத்தில் பண்டார சாத்திரங்களாகப் பயிலப்பட்டு வந்துள்ளது. ஸ்ரீகுருஞானசம்பந்தர் சித்தாந்த அட்டகம் என்பது

1. சிவபோக சாரம், 2. சொக்கநாத வெண்பா, 3. முத்தி நிச்சயம், 4. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் 5. சோடசகலாபிரசாத சட்டகம், 6. சொக்கநாத கலித்துறை, 7. பண்டாரக் கலித்துறை என்கிற ஞான பிரகாச மாலை 8. நவரத்தினமாலை ஆகிய எட்டு நூல்களின் தொகுப்பாகும். மற்ற ஆறு நூல்கள் இப்போது வழக்கில் இல்லை என அறியப்படுகிறது.

அட்டவணை நூல்கள்

தத்துவங்களில் ஆர்வம் மிக்கு இருந்தும், அவற்றை எளிதாகப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்கு ஓரளவு புரியும் வண்ணம் விளக்க எழுந்த தத்துவ நூல்கள் அட்டவணை நூல்கள் எனப் பெயர் பெற்றன.

எடுத்துக்காட்டாக திருவாவடுதுறை ஆதீனத்தின் 3வது மடாதிபதியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் தம்மிடம் பணியாளராக இருந்த பூப்பிள்ளை என்பவர் சைவசித்தாந்தத்தை எளிதாகப் புரிந்துகொள்ள ஒரு நூல் இயற்றிக் கொடுத்தார். இது பூப்பிள்ளை அட்டவணை என்றும் உயிரட்டவணை என்றும் அழைக்கப்படுகின்றது. இந்நூலில் மும்மலங்கள், பரமசிவன், தனு, கரண, புவன போகங்கள் முதலியன எளிய முறையில் விளக்கப்பட்டுள்ளன. இது 1949 ஆம் ஆண்டில் மகாவித்வான் ஸ்ரீ த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பெற்றுத் திருமடத்தின் 22வது வெளியீடாக வந்துள்ளது. மற்ற நூற்களின் அளவுக்கு அட்டவணை நூற்கள் வெளியாகவில்லை.

கோயிலூர் வேதாந்த பரம்பரையும், ஆதீனமும்

வேதாந்த ஞானப்பயிரைத் தமிழ்மொழி வாயிலாகச் செழிக்கவைக்கும் திருக்கோயிலூர் ஆதீனம், கோவிலூர் ஆண்டவர் என்று அழைக்கப் படும் **ஸ்ரீமுத்துராமலிங்க தேசிகர்** என்னும் ஞானாசிரியரால் தோற்றுவிக்கப்பட்டதாகும். இவர் தனது பதிமூன்றாவது வயதில் நாகப்பட்டினம் வட்டத்தில் சிக்கலை அடுத்த பொருள் வைத்த சேரியில் இருந்த உகந்த (லிங்க) குருசுவாமிகள் என்ற ஞானாசிரியரை அடைந்து ஞான உபதேசம் பெற்றார். தொடர்ந்து அவரிடம் மூன்றாண்டுகள் தங்கி குருமுகமாக ஞானநூல்களைப் படித்து ஞானானு பூதிச் செல்வரானார்.

அவர், தனது பதினாறவது வயதில் காரைக்குடியை அடுத்துள்ள திருக்கோயிலூருக்கு வந்து தங்கியிருந்தார். அங்கு கோயில் கொண்டி ருக்கும் கொற்றவாளீசுவரரின் தேவியான நெல்லை நாயகி அவருக்குக் காட்சியளித்து அருள் வழங்கினாள். அங்கிருந்தபடியே அவர் வேதாந்த தத்துவ நூல்களை விளக்கி உபதேசமளிக்கத் தொடங்கினார். அவருடைய தத்துவஞான விளக்கங்களினால் கவரப்பெற்ற பல அடியவர்கள் இங்கு வந்து இவருக்குச் சீடர்களாயினர். நாளுக்கு நாள் சீடர்களின் தொகை அதிகரித்தது. ஜாதி, இன, வேறுபாடற்ற அடியார் குழாம் உணவுக்கும், உடைக்கும், இருக்கைக்கும் அலைந்து திரியாமல் ஓரிடத்தில் தங்கி அமைதியாகத் தத்துவ விசாரம் செய்யவும் ஜபம், தபம், தியானம் முதலான ஆத்மசாதனைகள் செய்து வரவும், திருமடம் ஒன்று அமைக்கத் திருவுளம் கொண்டார். நெல்லைநாயகி காட்சி தந்து அதற்கு அருளாசி தந்தாள்.

ஸ்ரீ முத்துராமலிங்கதேசிகர் கோயிலூரில் திருமடத்தைத் தோற்றுவித்து அதன் ஞானபீடத்தில் அமர்ந்தார். இதுவே தமிழில் வேதாந்தபாடங்களை நெறிப்படுத்திப் போதிக்க அமைக்கப்பெற்ற முதல் பல்கலைக்கழகம் என்றால் மிகையாகாது. இங்குப் பயின்றவர்கள் தங்களுக்கு விருப்பமான இடங்களுக் குச் சென்று அங்கு திருமடம் அமைத்து மேலும் பல வேதாந்த மடங்களைத் தோற்றுவித்தனர்.

முன்னாளில் வடமொழி தெரிந்தவர்களே வேதாந்தம் பயிலமுடியும் என்றிருந்த நிலையை மாற்றித் தமிழில் வேதாந்தக் கருத்துகளை நெறிப்படுத்தி அதன் உண்மையை அறியமுடியும் என்ற நிலையை உருவாக்கியதால் கோயிலூர் மடம் சமய வரலாற்றில் தனியிடம் பெறுகின்றது.

(ஸ்ரீமுத்துராமலிங்க தேசிகராகிய) கோயிலூர் ஆண்டவருக்குப் பிறகு பெரிய துறவு ஸ்ரீஆண்டவர் என்கின்ற ஸ்ரீஅருணாசலதேசிகர் பீடாதிபதியானார். அவரைத் தொடர்ந்து மூன்றாவதாக கருணாநிதி சுவாமிகள் மடாதிபதியானார். நான்காவதாக ஸ்ரீ இராமசாமி தேசிகரும், ஐந்தாவதாகத் திருக்களர் ஆண்டவரும் பீடமேறினர். இவர்காலத்தில் கோயிலூரில் பல்வேறு பெருந்திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கன்னடமாநிலத்திலுள்ள சிருங்ககிரியில் உள்ள சாரதா அம்மன் கோயிலை இன்றைய மதிப்பில் 15 லட்சரூபாய் செலவில் கருங்கல் திருப்பணியாகச் செய்த பெருமை இவரையே சாரும். இவரை "ராஜரிஷி" என்று அழைத்தனர். இவருக்குப் பிறகு ஆறாம்பட்டத்தில் ஸ்ரீஅண்ணாமலை தேசிகரும், ஏழாம்பட்டத்தில் ஸ்ரீமகாதேவ ஞானதேசிகரும், எட்டாம்பட்டத்தில் ஸ்ரீசோமசுந்தர ஞானதேசிகரும், ஒன்பதாம்பட்டத்தில் ஸ்ரீஇராமநாத ஞானதேசிகரும் பத்தாம்பட்டத்தில் ஸ்ரீராமநாத ஞானதேசிகரும் பதினோறாம் பட்டத்தில் ஸ்ரீகாசி விசுவநாததேசிகரும் அருளாட்சி செய்துள்ளனர். இந்நாளில் பன்னிரண்டாம் பட்டத்து மடாதிபதியாக **ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்பசுவாமிகள்** கொலுவீற்றிருக் கின்றார். இவர்களுடைய காலத்தில் வேதாந்த நூல்கள், திருமுறைகள் முதலியன புதியமுறையில் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய குடமுழுக்கு கள் பலவும் செய்யப்பட்டு ஆதீனம் புதிய பொலிவு பெறுகின்றது.

வேதாந்த மடங்களில் மிகவும் பெரியது திருக்கோயிலூர் மடமேயாகும். இதனையொட்டி நெல்லைநாயகி உடனாய கொற்றவாளீசுவரர் ஆலயம், பெரிய தெப்பக்குளம் ஆகியன உள்ளன. செட்டி நாட்டுக் கலைஞர்களின் உன்னத கலைப்படைப்பாகக் கோயிலூர் மடாலயமும் கொற்றவாளீசுவரர் ஆலயமும் அதன் ஒவ்வொரு அங்கமும் திகழ்கின்றன.

வேதாந்த நூல்கள்

முன்னாளில் தென்னகத்தில் வேதங்களைப் பயின்றவர்கள் அதிகஅளவு இருந்தனர். அவர்களில் ஒரு பகுதியினர் வேதத்தின் வழிநூலான உபநிடதங் களையும் அதன் சாரமான வேதாந்தத்தையும் பயின்று மேன்மைபெற்றிருந்தனர். வேதாந்த நூல்கள் பெரும்பாலும் வடமொழியில் இயற்றப்பட்டு இருந்ததால் அவை வடமொழியிலேயே பயிற்று விக்கப்பட்டன. இவைகளைப் பயில வடமொழி அறிவு இன்றியமையாததாயிற்று. எனவே இந்நூல் களைப் பயில்பவர்கள் குறைவாகவே இருந்தனர்.

பிராமணர்களே அதிக அளவில் அத்வைத சித்தாந்த நூல்களைப் பயின்று பாடசாலைகளை அமைத்து அவற்றைப் போதித்து வந்தனர். பிராமணரல்லாதார்கள் வேதங்களைப் பயின்று பாடசாலைகளை அமைக்கும் வழக்கம் இல்லை, என்றாலும் பின்னாளில் பிராமணர் அல்லாத வேதாந்த அறிஞர்கள் தமிழகத்தில் பலர் தோன்றினர். அவர்கள் வேதங்களையும் அதன் அங்கங்களையும் பயின்று அதன் பிழிவாக உள்ள வேதாந்தக் கருத்துக்களைத் தமிழ்மொழியில் சிறந்த செய்யுள் நடையில் நூலாக இயற்றினர். மேலும் பல வடமொழி, கன்னட, வேதாந்த நூல்களையும் மொழிபெயர்த்தனர். அதனையொட்டி வேதாந்த மடாலயங்களும் தோன்றலாயின. இவ் வகையில் முதலில் தனிச்சிறப்புடன் தோன்றிய வேதாந்த மடம் கோயிலூர்த் திருமடமாகும்.

வேதாந்தம் என்பது பரந்த கடலைப்போன்றது. சிறந்த தத்துவ, தர்க்க அமைப்புகளைக் கொண்டது. அது சம்பந்தமான எல்லா நூல்களையும் பயின்று அதன் முடிவை அறிவது இயலாதவொன்று. எனவே குறிப்பிடத்தக்க 14 வேதாந்த நூல்களைத் தேர்ந் தெடுத்து அவற்றை மாணவர்களுக்குப் பயிற்று வித்தனர். இவ்வகையில் கோயிலூர் மடத்தில் 14 வேதாந்த சாத்திரங்கள் பயிலப்பட்டு வந்தன. அதையொட்டி தமிழகத்தில் பிற இடங்களில் இருந்த வேதாந்த மடாலயங்களிலும் இந்நூல்களே போதிக்கப் படலாயிற்று.



• ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர் •

பதினான்கு வேதாந்த சாத்திரங்களாவன :-

1. நாநா ஜீவ வாதக்கட்டளை.
2. கீதாசாரத் தாலாட்டு.
3. சசிவன்ன போதம்.
4. மகாராஜா துறவு.
5. வைராக்கிய சதகம்.
6. வைராக்கிய தீபம்.
7. இலட்சணா விருத்தி.
8. வேதாந்த சூடாமணி.
9. கைவல்ய நவனீதம்.
10. விவேக சூடாமணி.
11. அஞ்ஞவதைப் பரணி.
12. பஞ்சதசீ.
13. கீதைத்திரயம்.
14. ஞானவாசிட்டம். என்பனவாகும்.

இதில் 13வதாக உள்ள கீதைத்திரயம் என்பது 3 நூல்களின் தொகுப்பாகும். எனவே இந்த நூல்களை பதினாறு என்று சொல்வதும் மரபு. பின்னாளில் இதனையொட்டி வேதாந்த நூல்களைப் பதினாறு என்ற எண்ணிக்கையளவில் வகைப்படுத்திக்கூறும் வழக்கமும் வந்தது.

இவைகளைத் தவிர, தோத்திர வடிவமாகச் சொல்லப்பட்ட வேதாந்த நூல்கள் பலவாகும்.

இவற்றில் குறிப்பிடத்தக்கவை ஸ்ரீமத் தாயுமானவ சுவாமிகள் அருளிச் செய்த நூல்களாகும். இனி இந்தப் பதினான்கு வேதாந்த நூல்களின் அமைப்பைக் காணலாம்.

1. நாநா ஜீவ வாதக்கட்டளை

வேதாந்தப் பாட வரிசையில் முதல் நூலாகத்திகழும் இந்நூல் ஸ்ரீசேஷாத்திரி சிவனார் என்பவரால் இயற்றப்பட்டதாகும். இந்நூல் நான்கு வேதத்துள் மூன்றாவதாக உள்ள சாமவேதத்தின் ஞானபாதக் கருத்தை விவரித்துக் கூறும் சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப்பட்டுள்ள "தத்துவமசி" என்ற மகாவாக்கியத்தின் விரிந்த பொருளாக அமைகிறது. இந்நூல் உலக உற்பத்திற்குரிய பலவகையான தத்துவங்களை விரிவாகக் கூறுவதாகும். இது உரை நடையில் அமைந்துள்ளது.

2. கீதாசாரத் தாலாட்டு

இந்நூல் திருவேங்கடநாதர் அருளிச் செய்த தாகும். கீதையின் சாரம் எளிய தமிழில் தாலாட்டுப் பாடல் அமைப்பில் பாடப்பட்டுள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன. காப்புச்செய்யுள் ஐவகைப் பொருளும், நான்கு கரணங்களும், மூன்றுவகை குணங்களும் இரண்டு வினைகளும் ஒன்றித் திகைத்து நிற்க பொய்யான மாய இருள் அகல ஞான சூரியனாக அவதரித்த வெண்சங்கேந்திய கண்ணனைக் கருத்துள் வைப்பாம் என்று தொடங்குகிறது.

இறுதிப்பாடல் ஆதிமூலபரம்பொருளான திருமால் அர்ச்சுனனுக்கு ஆதிமறைகளின் பொருள்ள உணர்த்தியதை இப்பொழுது கூறினோம். இதை விரும்பிக் கற்றுக் கேட்பவர்கள் உலகில் சிறப்புற வாழ்ந்து முத்தி பெறுவர் என்று பலன் கூறுகிறது.

இடையில் உள்ள பாடல்கள்யாவும் தாலாட்டு பாடல் அமைப்பில் உள்ளன.

3. சசிவண்ண போதம்

இது ஸ்ரீதத்துவராய சுவாமிகளால் இயற்றப் பெற்ற மோகவதைப் பரணி என்ற நூலின் ஒரு பகுதியாகும். கடவுள் துதியாக 2 பாடலும் நூலாக 110 பாடல்களும் உள்ளன. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மண், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு வடிவாக இருக்கின்ற பரம்பொருளுக்கு வணக்கம் செய்து இந்நூல் தொடங்குகின்றது.

வடமொழியில் அமைந்த சூதசங்கிதை முத்தி காண்டத்தின் ஏழாம் அத்தியாயத்தில் சசிவர்ணன் என்பவனுடைய கதை பரமேசுவரனால் திருமாலுக்குக் கூறப்பட்டுள்ளது. இதில், குருசேவை மகிமை, பக்தி, முதலியன சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. சசிவர்ணன் அடைந்த ஞானப்பேரறிவைக் கூறுவதால் சசிவர்ண போதம் எனப்பெயர் பெற்றது. இதற்குத் திருப்பூவணம் வேதாந்தமடம் ஸ்ரீகாசிகானந்த சுவாமிகளால், பதார்த்த பாஸ்கரன், என்ற உரைநூல் வரையப் பெற்றுள்ளது. மேலும் இதற்குப் பல உரை நூல்கள் உள்ளன. விருத்தாசலப் புராணத்திலும் சசிவண்ணன் கதை ஒரு சருக்கமாகக் கூறப்பட்டுள்ளது இங்கு எண்ணத் தக்கதாகும்.

4. மஹாராஜா துறவு

இந்நூல் விருத்தாச்சலத்தில் எழுந்தருளி யிருந்த குமாரதேவ சுவாமிகளால் அருளப்பெற்ற தாகும். இது ஒரு நெடுங்கதைபோல அமைந்துள்ளது. விருத்தாசலத்தில் கோயில் கொண்டுள்ள பெரியநாயகி அம்பிகையே குமாரதேவரின் நாவில் வீற்றிருந்து இதனை அருளிச்செய்தாள் என்பர். இதில் பாயிரமாக ஒன்பது பாடல்களும் நூலாக 116 பாடல்களும் ஆக 125 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கோவை, பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்கசாமி சமாதி நிலையத்தில், இந்நூலில் அமைந்துள்ள சிறப்புப் பாயிரத்தின் முதற்பாடல் தினமும் வழிபாட்டின் போது பாடப்படுகின்றது.

5. வைராக்கிய சதகம்

இந்நூல் மேற்சொன்ன குமாரதேவரின் குருபிரானான பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகளால் இயற்றப்பெற்றதாகும். இதன் முதற்பகுதி சாத்திர வடிவாகவும், பிற்பகுதி தோத்திரவடிவாகவும் உள்ளது. பின்பகுதியான 50 பாடல்களும் தத்துவக் கருத்துகளுடன் தில்லைநடராஜப் பெருமானைப் போற்றிவணங்குவதாக அமைந்துள்ளது.

6. வைராக்கிய தீபம்

இதுவும் பேரூர் ஸ்ரீமத்சாந்தலிங்க சுவாமி களால் இயற்றப்பட்டதாகும். பாயிரம் உட்பட 101 செய்யுள்களைக் கொண்டதாகும்.

7. இலக்ஷணாவிருத்தி

இது ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளால் வடமொழியில் இயற்றப்பட்டதாகும். இதற்கு பிரஹ்ம

நாமாவளி என்றும் பெயர் வழங்குகின்றது. இதில் பரம்பொருளுக்கு உரிய 108 நாமங்கள் சொல்லப்பட்டு அதன் பொருளை விவரிப்பதுபோல் பாடல்கள் அமைந்துள்ளன. இந்த நாமங்கள் எந்த ஒரு கடவுளின் தன்மையையும் பெயரையும் குறிக்காமல் அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாக விளங்கும் பிரம்மத்தையே விளக்கி நிற்கின்றது. பிரம்மத்தின் (லட்சணத்தை) விரிவாக விளக்கிக் கூறுவதால் "லட்சணா விருத்தி" எனப்பெற்றது. இதில் பாயிரம் உள்பட 115 செய்யுள்கள் உள்ளன. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஸ்ரீகருணாநிதி என்னும் சிதம்பரஞானதேசிகராவார். தமிழ்மொழி பெயர்ப்பில் பாயிரமாக 6 பாடல்களும் முதல்பகுதியாகிய நித்யாசன யுக்தி என்னும் பகுதியில் 72 பாடல்களும் இரண்டாம் பகுதியான சமாதி யுக்தியில் 36 பாடல் களும் வேண்டுகோளாக ஒரு பாடலும் ஆக 115 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன.

8. வேதாந்த சூடாமணி

இதன் மூலம் கன்னடமொழியில் ஸ்ரீநிஜகுண யோகீசுவரரால் இயற்றப்பட்ட விவேக சிந்தாமணி எனும் நூலாகும். இந்நூலின் வேதாந்த பரிச்சேதம் எனும் பகுதி நல்லாற்றூர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்று வேதாந்த சூடாமணி என்று பெயரிடப்பட்டுள்ளது. இது பாயிரம் உட்பட 184 செய்யுட்களைக் கொண்டதாகும்.

9. கைவல்ய நவனீதம்

தமிழில் அமைந்த வேதாந்த நூல்களில் தலையானது கைவல்ய நவனீதமேயாகும். வியாச மகரிஷி ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் உள்ள இணைப்பை விளக்கியும், உபநிஷதங்களைப் பயில்வோருக்கு உண்டாகும் ஐயங்களை நீக்கும் பொருட்டும், உபநிஷதங்களின் சாரமாக 555 சூத்திரங்கள் அடங்கிய ஒரு நூலை இயற்றினார். அந்த நூலே "பிரம்ம சூத்திரம்" என்பதாகும். இந்நூலுக்கு நீலகண்டர், ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர் முதலிய அனேகர் உரையெழுதியுள்ளனர். வடமொழியில் அமைந்த இந்த உரைநூல்களுக்குப் பாஷ்யம் என்பது பெயர். இந்த "பிரம்ம சூத்திரத்தினை நன்னிலம் ஸ்ரீ தாண்டவராயசுவாமிகள் "தமிழில் மொழிப்பெயர்த்து "கைவல்ய நவனீதம்" என்று பெயரிட்டார். இதில் 288 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நூல், தத்துவ விளக்கப்படலம், சந்தேகம் தெளிபடலம், என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியில் 101 பாடல்களும் பின்பகுதியில் 180 பாடல்களும் பாயிரமாக ஏழு பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

இந்த நூலுக்குப் பலர் உரையெழுதியுள்ளார் என்றாலும் ஸ்ரீ கோவிலூர் பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் இயற்றிய "தத்துவார்த்த தீபம்" என்ற உரை நூலே சிறந்ததாகப் போற்றப்படுகின்றது.

10. விவேக சூடாமணி

இது ஆதிசங்கரபகவத்பாதரால் இயற்றப்பட்ட தாகும். இதனைத் தமிழில் பலரும் மொழிபெயர்த்து ள்ளனர். என்றாலும் திருவிடைமருதூர் உலகநாத சுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்த நூலே கோயிலூர் மடத்தில் போதிக்கப்பட்டு வருகின்றது.

11. அஞ்ஞவதைப் பரணி

இது தத்துவராய சுவாமிகளின் அடங்கன் முறையில் இடம் பெற்றுள்ளதாகும். போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனுக்கே பரணிபாடுதல் மரபு, என்றாலும், சீடர்களின் அஞ் ஞானத்தை யானையாக உருவகித்து ஆயிரக்கணக் கான சீடர்களின் அஞ்ஞானமாகிய யானைகளை வென்றத் தனது குருபிரானின் மீது தத்துவராய சுவாமிகள் பரணி இலக்கியம் பாடியுள்ளார். இந்நூல் தத்துவக்கருத்தை உள்ளடக்கிய கற்பனைக்கதையாகப் படைக்கப்பெற்றுள்ளது. இடையிடையே வேதாந்தக் கருத்துக்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. அஞ்ஞானத்தை ஒரு அரசனாகவும் அகங்காரம் முதலியன அவனுக்குச் சேனைகளாகவும் அவர்களை ஞானம் என்கின்ற அரசன் அழிப்பதாகவும் புனைந்து பாடப்பட்டுள்ளது. இது 493 தாழிசைகளைக் கொண்டதாகும். இதன் பாட்டுடைத் தலைவர் இவருடைய ஆசிரியரான சொரூபானந்தர் ஆவார்.

12. பஞ்ச தசீ

இது ஸ்ரீவித்யாரண்ய சுவாமிகளால் இயற்றப் பட்டதாகும். இதில் 1. சித்திர தீபம் 2. திருப்தி தீபம் 3. கூடஸ்த தீபம் 4. தியான தீபம் 5. நாடக தீபம் 6. தத்துவ விவேகம் 7. பஞ்சபூத விவேகம் 8. பஞ்ச கோச விவேகம் 9. துவித விவேகம் 10. மகாவாக்கிய விவேகம் 11. யோகானந்தம் 12. ஆத்மானந்தம் 13. அத்

துவிதானந்தம் 14. வி[illegible]ானந்தம் 15. விஷயானந்தம் ஆகிய பதினைந்து தலைப்புகளில் ஞானம் பேசப்படுகின்றது. இதில் வேதாந்த விஷயத்தில் சீடனுக்குத் தோன்றும் சந்தேகங்கள் கேள்விகளாக கேட்கப்பட்டு அதற்குரிய பதில்கள் தரப்பட்டுள்ளன. இவ்வகையில் 605 சந்தேகங்கள் எழுப்பப்பட்டு அதற்குரிய விடைகள் காணப்பட்டுள்ளன. கோயிலூர் மடாலயத்தில் நித்தயானந்த சுவாமிகள் வீர. சுப்பையாசுவாமிகள் ஆகியோர் மொழிபெயர்த்த பஞ்சதசீ நூல் பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றது.

13அ. ஈசுவர கீதை

வேதாந்த பாடத்தின் வரிசையில் பதிமூன்றாவதாகத் திகழ்வது ஈசுவரகீதையாகும். இது பதினெண்புராணங்களில் இரண்டாவதாக விளங்கும் கூர்மபுராணத்தின் இடையில் அமைந்துள்ளது. இப்புராணம் நான்கு பகுதிகள் கொண்டது. இவை ப்ராஹ்மீ, பகவத், கௌரீ, வைஷ்ணவீ என்று பெயர் பெறுகின்றன. இவற்றில் முதலாவதான ப்ராஹ்மீ சம்ஹிதை பூர்வார்த்தம், உத்தரார்த்தம் என்ற இரண்டு பகுதிகளையும் 5567 சுலோகங்களையும் உடையதாகும். இதில் உத்தரரார்த்தத்தில் 11 அத்தியாயங்களைக் கொண்டதாக ஈசுவரக்கீதை விளங்குகின்றது. இதில் 495 சுலோகங்கள் இடம் பெற்றுள்ளன. இது ஈசுவரன் நாராயணனுக்கு உரைத்ததாக உள்ளது.

வடமொழியில் உள்ள இந்த நூலினை ஸ்ரீதத்துவராய சுவாமிகள் 338 செய்யுட்களால் தமிழில் பெயர்த்துள்ளார். ஸ்ரீதத்துவராய சுவாமிகள் இந்நூலுக்குச் 'சிவப்பிரகாசம்' என்ற பெயரினை வரைந்துள்ளார்கள். இதற்குப் பல உரை நூல்கள் வெளிவந்துள்ளன.

13ஆ. பிரம்மகீதை

ஈசுவரக்கீதையை மொழிபெயர்த்த தத்துவராய சுவாமிகளே இதனையும் மொழிபெயர்த்துள்ளார். வடமொழியில் உள்ள சூத சங்கிதை யக்ஞ வைபவ காண்டம் உபரி பாகத்தில் 12 அத்தியாயங்களில் பன்னிரண்டு உபநிடதங்களின் பொருளைக் கூறுவதாய் இது அமைந்துள்ளது. இதனைப் பன்னிரண்டு அத்தியாயங்களும் 547 பாடல்களும் கொண்டதாகத் தத்துவராய சுவாமிகள் பாடியுள்ளார். இதற்குத் தத்துவராயர் சூட்டியுள்ள பெயர் **"சொரூபானந்த சித்தி"** என்பதாகும்.

13இ. பகவத்கீதை (அ) ஹரிகீதை

இது மகாபாரதத்தின் இறுதிப்பகுதியில் உள்ள யுத்த பருவத்தில் உள்ளதாகும். இதனைப் பலரும் பல்வேறு மொழிகளில் பெயர்த்துள்ளனர். இது குருஷேத்திர யுத்தத்தின் ஆரம்பத்தில் போர்க்களத்தின் மத்தியில் மனம்கலங்கி நின்ற அர்ச்சுனனுக்குப் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உபதேசித்ததாகும். இது 18 பகுதிகளை உடையது. இவை மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இவை கர்மயோகம், பக்தி யோகம், ஞானயோகம் என்று வழங்கப்பெறும். இதனைப் பட்டனார் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

14. ஞான வாசிட்டம்

இது வசிட்டரால் ஸ்ரீராமபிரானுக்கு ஞானம் பெருகும் பொருட்டு உபதேசிக்கப்பெற்றதாகும். இது வடமொழியில் அமைந்த இராமாயணத்தில் ஒரு லட்சம் சுலோகங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது என்பர். காஷ்மீரதேசத்து ஸ்ரீஅபிநந்த பண்டிதர் என்பர் இதனைச் சுருக்கி 6000 சுலோகத்தில் **"லகுயோக வாசிட்டம்'** என்ற நூலாக்கினார். இந்த ஆறாயிரம் சுலோகங்களையும் தமிழில் ஆறுபகுதிகளும், முப்பத்தேழு கதைகளும் கொண்ட 2055 பல்வகை விருத்தப் பாடல்களால் **வீரை ஆளவந்தார்** முனிவர் என்பவர் மொழி பெயர்த்துள்ளார்.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு நூலுக்குக் கோவிலூர் மடாலயம் ஸ்ரீ துறவாண்டவரின் மாணவராகிய ஸ்ரீநித்யானந்த சுவாமீகள் **"சம்சாரதாரணி"** என்ற பேருரையை மொழிபெயர்த்து இணைத்துள்ளனர். இந்த உரையுடன் ஸ்ரீவாசிஷ்ட சந்திரிகை, ஸ்ரீவாசிஷ்டதாத்பரியப் பிரகாசம் முதலியவற்றுடன் இணைந்த **ஸ்ரீவீரசேகரம்** எனும் உரையை வீரசேகர ஸ்ரீசுப்பையதேசிக சுவாமிகள் தொகுத்துள்ளார். இதுவே இப்பொழுதுள்ளவற்றுள் மிகப்பெரிய பதிப்பாகும். இது சென்னை வேப்பேரி ஆனந்தாசிரமத்தின் வெளியீடாக 1928 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. ★

வாசிட்ட சமாப்தி : வேதாந்த சாத்திரங்கள் பதினான்கையும் நன்கு படித்துக் கற்றுத் தேர்ந்தபின் சீடர்கள் குருவுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து பாத காணிக்கை செலுத்துவர். வேதாந்தபாடங்களில் உச்சநிலையில் இருப்பது ஞானவாசிட்டம் ஆதலால் இந்நிகழ்ச்சி வாசிஷ்ட சமாப்தி என்று அழைக்கப்படுகின்றது. கோயிலூரில் வேதாந்தப்பாடங்களைப் பயில்பவர்கள் பயிற்சியின் முடிவில் இந்த வாசிட்ட சமாப்தியைச் சிறப்பாகச் செய்து குருவுக்குக் காணிக்கை செலுத்துவர்.

சித்தாந்த, வேதாந்த நூல்களை அடியொற்றி அவற்றின் கருத்துக்களை விளக்கப் பலவகையான நூல்கள் எழுந்தன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை பண்டாரசாத்திரங்கள், தசகாரிய நூல்கள், கட்டளை நூல்கள், அட்டவணை நூல்கள் என்பனவாகும். இவற்றில் பண்டாரசாத்திரங்கள் அட்டவணை நூல்கள் பற்றிய செய்திகளை பக்கம் 427-ல் காண்க. மற்ற நூல்களைத் தொடர்ந்து இங்கு காணலாம்.

தசகாரிய நூல்கள்

சைவசித்தாந்த நூல்களில் அதிகம் பேசப்பட்டுள்ளது "தசகாரியம்" ஆகும். தசகாரியம் என்பது ஆன்மாவானது, பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து முத்திப்பேற்றை அடைவதற்கு முன்புள்ள பத்து நிலைகளைக் குறிப்பதாகும். இவை **தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவபோகம், சிவயோகம்** என்பனவாகும். (பார்க்க விளக்கம் பக்கம். 426)

இவற்றைச் சைவசித்தாந்த சாத்திரங்களில் பதிமூன்றாவதான உண்மை நெறிவிளக்கம் விவரித்துக் கூறுகின்றது. மேலும் திருவாவடுதுறைச் சந்தானத்துப் பண்டாரசாத்திர நூல்களான அம்பலவாணர் தசகாரியம், தட்சணாமூர்த்தி தேசிகர் தசகாரியம் சுவாமிநாத தேசிகர் தசகாரியம் என்ற நூல்களும் தசகாரியத்தைச் சிறப்பாக விளக்குகின்றன. இவற்றைத் தொடர்ந்து தசகாரிய அகவல் என்ற நூலும் எழுந்துள்ளது. தருமையாதீன குருமுதல்வரான ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகளும் தமது சித்தாந்த அட்டகத்தில் திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் என்ற நூலை அருளியுள்ளார்கள்.

இப்படி சைவசித்தாந்திகள் தசகாரியங்களை விளக்கியதைப் போலவே வேதாந்திகளும் தசகாரியங்களை விளக்கியுள்ளனர். இவர்கள் கூறும் தசகாரியம் மாறுபாடு உடையதாகும்.

இவை **1. மாயாரூபம், 2. மாயாதரிசனம், 3. மாயாசுத்தி, 4. ஜீவரூபம், 5. ஜீவதரிசனம், 6. ஜீவசுத்தி, 7. பிரம்ம ரூபம், 8. பிரம்ம தரிசனம், 9. தேககைவல்யம், 10. விதேககைவல்யம்** என்பனவாகும்.

இவற்றின் விளக்கத்தை வேதாந்த நூல்களில் பரவலாகக் காணலாம். ஸ்ரீமத் குமாரதேவஸ்வாமிகள் வேதாந்த தசகாரியக்கட்டளை என்ற நூலைச் இயற்றியுள்ளார்.

களந்தை ஞானப்பிரகாசதேசிகர் என்பவர் தசகாரியம் என்ற நூலை இயற்றியுள்ளார். தசகாரிய நூல்கள் பல இருந்தாலும் அளவால் பெரிய நூல் இதுவேயாகும்.

கட்டளை நூல்கள்

ஆதியில் எழுந்த சித்தாந்த நூல்களும், வேதாந்த நூல்களும் தத்துவ ஆய்வுக் கண்ணோட்டத்துடன் உரிய தர்க்க விவாதங்களுடன் சீடர்களுக்குத் தாம் உணர்ந்த ஆன்மஞானத்தைப் போதித்தன. முதலில் சமயக்குருமார்கள் தங்களின் சமயக் கருத்துக்களை மட்டுமே தத்துவங்களாகக் கூறினர். ஆனால் நாட்செல்லச் செல்லப் பிற சமயத் தத்துவங்களையும் விளக்கி அந்தத்தத்துவங்களை விட தமது தத்துவங்கள் எந்த வகையில் சிறந்துள்ளன என்று கூறும் முறை உருவாயிற்று. தத்துவமேடைகளில் பலசமயத்தவரும் கூடித் தமது கருத்துக்கு வலிமை சேர்க்க விவாதித்தனர்.

இதனால் ஒரு சமயத்தைச் சார்ந்தவருக்குத் தமது சமய தத்துவக் கொள்கை விளக்கத்துடன் மற்றைய சமயங்களின் தத்துவங்களையும் பயில வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சைவ சித்தாந்த சாத்திரத்தில் பதிநான்காவதாக விளங்கும் சங்கற்ப நிராகரண நூலில், மாயாவாதம், ஐக்கியவாதசமயம், பாஷாணவாதம், முதலிய மதங்கள் பற்றிப் பேசப்பட்டு அவற்றை மறுத்து, இறுதியில் சைவசித்தாந்தமே உயர்ந்தது என்று விளக்கி காட்டியிருப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

இது போன்றே பல ஜைன, பௌத்த நூல்களும் முதலில் பிற சமய தத்துவங்களை விளக்கி அவை எவ்வாறு தமது கொள்கைகளைவிடப் பின் தங்கியுள்ளன என்று விவரிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இப்படிப் பல சமயங்களின் தத்துவங்களை அறிந்து கொள்ள மாணவருக்கு இந்தத் தத்துவ

நூல்களில் உள்ள குறியீட்டுக்கலைச் சொற்களை (Technical Terms) விளக்கமாக அறியவேண்டியது அவசியமாயிற்று. எடுத்துக்காட்டாக முப்பொருள் (பசு, பதி, பாசம்) தொண்ணூற்றாறு தத்துவங்கள், தனு, கரண, புவன, போகங்கள் போன்ற சொற்களின் பொருளை அறியவேண்டியது அவசியமாயிற்று. இவற்றை விளக்க எழுந்த நூல்களே கட்டளை நூல்கள் என்று பெயர் பெற்றன. இவையாவும் உரைநடை நூல்களேயாகும். 'கட்டளை' என்பதற்கு முறைப் படுத்தல் அல்லது நெறிநிற்றல் என்பது பொருள்.

இவ்வகையில் பல நூல்கள் எழுந்தாலும் ஆன்றோர்கள் சிறப்புமிக்க பதினான்கு கட்டளை நூல்களை வகைப்படுத்தி அளித்துள்ளனர். இவை சித்தாந்த நூல்களின் அடிப்படையை விளக்கும் ஐந்து நூல்களும், வேதாந்த நூல்களின் அடிப்படையை விளக்கும் ஒன்பது நூல்களுமாகும். இவற்றில்

வேதாந்தக் கட்டளை நூல்கள்

1. நாநாஜீவவாதக்கட்டளை,
2. ஞானக்கட்டளை,
3. தத்துவாமிர்தக்கட்டளை,
4. வேதாந்த தத்துவக்கட்டளை,
5. வேதாந்த தசாஅவத்தைக் கட்டளை, சுருக்கம் (குமாரதேவர்),
6. வேதாந்ததசகாரியக்கட்டளை (குமார தேவர்),
7. உபதேச சித்தாந்தக் கட்டளை,
8. உபதேச உண்மைக் கட்டளை,
9. பிரம்மோபதேசக்கட்டளை,

சித்தாந்தக் கட்டளை நூல்கள்

10. சிவப்பிரகாசக் கட்டளை
11. திருவாலவாய் கட்டளை
12. சித்தாந்தக் கட்டளை
13. சித்தாந்த சாதனைக் கட்டளை
14. சித்தாந்த தசகாரிய கட்டளை என்பனவாகும்.

இவ்வ தவிர துகளறுபோதக்கட்டளை, ஞானமிர்தக்கட்டளை, சுத்த சிவப்பிரகாசக் கட்டளை போன்ற நூல்களும் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளன.

மேற்சொன்ன கட்டளை நூல்கள் பதினான்கில் 9, 13, 14 ஆகிய மூன்று நூற்களை நீக்கி விட்டு, ஜீவோற்பத்தி சிந்தாமணி, சித்தாந்த கட்டளை நூன்முகம், சித்தாந்த தத்துவ லட்சணம் என்பன வற்றைச் சேர்த்துக் கட்டளைக்கொத்து என்ற பெயரில் சென்னை ரிப்பன் பிரஸ்ஸில் அச்சிட்டு 1914ஆம் ஆண்டளவில் வெளியிடப்பட்டுள்ளது. இனி குறிப்பிடத்தக்க சில கட்டளை நூல்களைக் காணலாம்.

ஞானாமிர்தக் கட்டளை: மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றுவதற்கு முன்பாகவே எழுந்த நூலான ஞானாமிர்தம் என்ற நூலினைப் படித்து அறிந்துகொள்ள முன்னோடியாக அமைந்த நூல் இதுவாகும். இது பதி இலக்கணம், பாச இலக்கணம், பசு இலக்கணம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இதில் சிருஷ்டி வரலாறு, நால்வகை வாக்கு, வித்யாதத்துவம், ஞானேந்திரியம், கன் மேந்திரியம், பஞ்சபூதம் முதலானவை சிறப்பாக விளக்கப்படுகின்றன.

துகளறு போதக்கட்டளை: சிற்றம்பல நாடிகள் அருளிச்செய்த துகளறுபோதம் என்ற சைவசித்தாந்த சாத்திர நூலைப் படிப்பவர்க்குத் துணை செய்ய எழுந்த நூல் இதுவாகும். இதில் பரமேசுவரன், ஆன்மா, ஆணவமலம், புண்ணிய பாவம், தனுகரண புவனபோகம், மகாமாயை இவற்றின் உண்மைகளைப் படிப்படியாக வினவிக் கொண்டே போய் பஞ்சபூதப் பழிப்பு, பொறி யறவுணர்தல், அந்தக்கரணசுத்தி என்று தொடங்கி ஞானமார்க்கம் வரை இனிய எளிய உரைநடையில் விளக்கப்பட்டுள்ளது.


சுத்த சிவப்பிரகாசக்கட்டளை: இதனுள் தத்துவங்களின் விரிவு, சுத்தமாயையிலிருந்து தோன்றும் 36 நிலைகள் அனுபவத்தை அறிதல், முடிந்த பரமுத்திநிலை ஆகியன விளக்கப் பட்டுள்ளன. சிவப்பிரகாசக் கட்டளை என்ற ஒரு நூல் முன்பே இருப்பதால் அதனின்று பிரித்துக்காட்ட சுத்த சிவப்பிரகாசக்கட்டளை என்று பெயரிடப்பட்டது. இதை இயற்றியவர், கயிலாயபரம்பரையில் வந்த ஞானதேசிகர்பால் பாடங்கேட்ட, திருவாவடுதுறை ஆதீனத்துப் பெரியவர் ஒருவர் ஆவார்.

சித்தாந்தப் பிரகாசிகை: கட்டளை நூல் என்று பெயர் பெறாவிட்டாலும் கட்டளை நூல் வரிசையில் தலையானது. ஸ்ரீமத் மாதவச் சிவஞானசுவாமிகள் வடமொழியினின்று மொழி பெயர்த்தருளிய சித்தாந்தப் பிரகாசிகையாகும். சைவ சித்தாந்த சாத்திரங்களைப் படிப்பவர்கள் முதலில்

கற்கவேண்டியது இந்த நூலையேயாகும். இது வடமொழியில் சர்வாத்ம சம்பு சிவாசாரியார் என்பவரால் செய்யப்பட்டதாகும். இதில் சைவ சித்தாந்த நூலில் பேசப்படும் தத்துவங்கள், அவற்றின் தோற்றம், அத்துவாக்களின் விவரம், தீக்ஷையின் வேறுபாடுகள், சாத்திரங்களின் வகைகள் அவற்றின் பொருள் சிவாகமச் சிறப்பு முதலான பல செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இதனை விளக்கிச் சித்தாந்த படம் என்ற ஒரு படம் வரையப்பட்டுள்ளது.

சிற்றம்பல நாடிக்கட்டளை: இதுவே காலத்தால் முந்திய கட்டளை நூலாகும். தலைசிறந்த அமைப்பை உடையது.

சைவ சித்தாந்த பரம்பரையின் மூலாசாரியர்களான
சந்தானக் குரவர்கள்



மெய்கண்டசிவம் | அருணந்திசிவம் | மறைஞானசம்பந்தசிவம் | உமாபதிசிவம்

சிவஞான போதமருள் திருவெண்ணெய் மெய்கண்டார் திருத்தாள் போற்றி!
சிவஞான சித்தியருள் திருத்துறையூர் அருணந்தி சிவன் தாள் போற்றி!
தவஞானநிறை கடந்தை மறைஞானசம்பந்தர் சரணம் போற்றி!
நவஞான நூல் முறைகள் நவில்தில்லை உமாபதியார் நற்றாள் போற்றி!

சைவசமய நெறியில் குருவிற்கு எண்ணற்ற மாணவர்கள் இருந்தாலும் அவற்றில் தலையான நான்கு பேரை முதன்மைப்படுத்திச் சொல்வது மரபு. இவ்வகையில் சிவபெருமானுக்குச் சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் என்ற நான்கு மாணவர்கள் உள்ளனர். மேலும் சிவபெருமான் யுகம்தோறும் நான்கு பேர்களுக்கு அரும்பொருளாகிய ஞானத்தை உபதேசிப்பார் என்று சிவபுராணம் கூறுகின்றது. (இவற்றைப் பின்வரும் மலரில் காணலாம்)

இப்படி, ஒரு குருவுக்கு நான்கு சீடர்களை முதன்மைபடுத்திச் சொல்வது போலவே சமய நெறியாளர்கள் தங்களுக்குத் தலைவர்களாக நான்கு பேர்களைக் கூறுவது ஒரு மரபு.

இவர்கள் சமயக் குரவர்கள் என்று அழைக்கப் படுகின்றனர். சைவத்தின் மேலான நிலையை உணர்த்தி அதனைப் புதுமைப் பொலிவுடன் நிலை நிறுத்தியவர்கள் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர், ஆகிய நான்குபேர்கள் ஆவர்.

இவர்களைச் "சமயக்குரவர்கள்" என்று அழைப்பர்.

இது போன்றே, சைவ சிந்தாந்த சாத்திரங்களைப் பூவுலகிற்குப் பயன்படும் வகையில் வகுத்துரைத்தவர்கள், சந்தானக் குரவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இந்த சந்தானக்குரவர்களும் அகச்சந்தானக் குரவர்கள், புறச்சந்தானக் குரவர்கள், என்று இருவகைப்படுவர். சிவபெருமான் திருவாய் மலர்ந்து அருளிய மெய்ஞானத்தை முதலில் நந்தி தேவர் கேட்டார். அவர் அதனைச் சனகர் முதலான நால்வர்களுக்கு அருளினார். அவர்களுள் சனற் குமாரர், சத்தியஞானதரிசினிகள் என்பவருக்கு அதனை விளக்கினார். அவர் பரஞ்சோதி முனிவர் என்பவருக்கு எடுத்துக் கூறினார். பரஞ்சோதி முனிவரே சைவசித்தாந்த ஆதி குருபிரானான மெய்கண்ட தேவருக்குச் சித்தாந்தத் தெளிவை உரைத்தருளினர். மெய்கண்ட தேவரிடமிருந்தே பூவுலகில் சைவ சித்தாந்த சாத்திரம் முறையாக வழி வழியாக அருளப்பட்டு வருகின்றது. இவ்வகையில் நந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசிகள், பரஞ்சோதி முனிவர் ஆகிய நால்வரும் பூவுலகிற்கு வராமல் வானுலகில் இருந்தே வழிவழியாக ஞான பரம்பரையைப் போற்றி வந்தவர்கள் ஆவார். எனவே இவர்கள் **அகச்சந்தானக்குரவர்கள்** என்று அழைக்கப்பட்டனர்.

மெய்கண்ட தேவநாயனார் தாம் பெற்ற ஞானத்தை அருள்நந்தி சிவாசாரியாருக்கு உப தேசிக்க, அவர் மறைஞானசம்பந்தருக்கு உபதேசித்தார். மறைஞானசம்பந்தர் தாம் பெற்ற உப தேசத்தைப் (பேரின்ப நெறியை) உமாபதி சிவாசாரியார்க்கு அருளிச்செய்தார். இவர்கள் நால்வரும் பூவுலகில் சைவசித்தாந்தத்தினை உரைத்த முதன்மை குரு மார்கள் ஆதலின் **புறச்சந்தானக்குரவர்கள்** என்று பெயர் பெற்றனர்.

தஞ்சை, மதுரை, நெல்லை மாவட்டங்களில் சைவசித்தாந்திகள் வாழும் பகுதியில் உள்ள சிவாலயங்களில் இந்தப் புறச்சந்தானக்குரவர்களின் திருவுருவங்கள் எழுந்தருளி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக திருஆவடுதுறை ஆதீனத்து கோமுத்தீஸ்வரர் ஆலயம், திருத்தருமபுர ஆதீனத்து ஞானபுரீஸ்வரர்கோயில், திருக்கடவூர் அமிர்த கடேசுவரர் கோயில் முதலிய இடங்களில் சிறப்பாக அமைந்த சந்தானக்குரவர்களின் திருவடிவங்களை காண்கிறோம்.

தொடர்ந்து, சைவ சித்தாந்தக்குரவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தைக் காணலாம்.

மெய்கண்டதேவர்

சைவ சித்தாந்தத்தை முறைப்படுத்தி நூலாகச் செய்து, உலகில் சிவஞானக்கொடியானது செழிக்க வகைசெய்த பெருமகன் மெய்கண்டதேவரேயாவார். அவருக்கு முன்பே நெடுங்காலமாகச் சைவசித்தாந்தம் போதிக்கப் பெற்று வந்தாலும் தமிழ் மறையான திருமுறைகளில் அது ஆங்காங்கு குறிப்பாக விவரித்துக் கூறப்பட்டிருந்தாலும் அதற்கு நூல் வடிவம் கொடுத்து அதற்கெனச் சந்தான பரம்பரையைத் தோற்றுவித்து அது செழித்து நிலைபெற்று ஓங்கி வளரச் செய்த பெருமை மெய்கண்ட தேவரையே சாரும். ஆதலால் அனைத்துச் சைவசித்தாந்த மடாலயங்களும் மெய் கண்ட தேவரையே தங்கள் மூலகுருவாகக் கொள்ளுகின்றன.

(மெய்கண்ட தேவரின் வரலாறு மூன்றாவது மலரில் விரிவாகக் கூறப்பட்டதென்றாலும் இங்கு மீண்டும் குறிக்கப்படுகின்றது)

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பெண்ணா கடத்தில் அச்சுதகளப்பாளர் என்ற சிற்றரசர் வாழ்ந்துவந்தார். அவருக்கு நெடுநாள் குழந்தைப் பேறு வாய்க்கவில்லை. ஆதலால் திருத்துறையூரில் இருந்த சகலாகம பண்டிதர் என்ற தனது குலகுருவை வணங்கித் தனக்குக் குழந்தைப்பேறு கிடைக்க வகைசெய்யுமாறு வேண்டினார்.

அந்தக் குலகுருவானவர் தேவாரத்தில் கயிறு சார்த்திப் பார்க்கப் "பேயடையாது பிரிவெய்தும்" என்ற திருவெண்காட்டுப்பதிகம் வந்தது. அவர் அச்சுதகளப்பாளரிடம் திருவெண்காட்டுக்குச் சென்று முக்குளநீராடிச் சிவபெருமானை வழிபடும்படிக் கூறினார். அச்சுதகளப்பாளரும் அவருடைய மனைவியாரும் குலகுருவின் ஆணைப்படியே திருவெண்காடுசென்று முக்குளநீராடிப் பெருமானை வழிபட்டுவந்தனர். ஒருநாள் அவருடைய கனவில்

சிவபெருமான் தோன்றி அன்பனே.. உனக்கு இப்பிறவியில் பிள்ளைப்பேறு உண்டாக விதியில் லையே! என்று கூறினார். களப்பாளர், பெருமானைத் தொழுது "எம்வினை யாதாயினும் ஆகுக". ஆனால் "எனது மொழியெல்லாம் சிவபெருமான் உரைத்த மொழியே" என்று கூறிய ஞானசம்பந்தப்பெருமான், பேயடையாது பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள வரம்தருவார் என்று பாடிய பாடல் உண்மையின்றிப் போகுமே அதற்கு நான் காரணமாகி விட்டேனே என்பதற்காக வருந்துகின்றேன்" என்றார்.

அவருடைய குருபக்தியையும் திருமுறை பக்தியையும் கண்ட சிவபெருமான் ·அவருக்குப் பிள்ளைபேற்றை அருளினார்.

சிலநாள் அங்கிருந்து வழிபாடுகள் செய்த பின் அச்சுதகளப்பாளரும் அவருடைய மனைவியும் பெண்ணாடகம் திரும்பினர். அவர்களுக்கு அழகிய ஆண்குழந்தை பிறந்தது. அதற்குச் "சுவேதவனப் பெருமாள்" என்று பெயரிட்டுச் சிறப்புடன் வளர்த்து வந்தனர். அச்சுதகளப்பாளர் அப்பொழுது நடைபெற்ற ஒருபோரில் உயிர் துறந்தார். சிலநாளில் அவருடைய மனைவியாரும் சிவநிழல் பெற்றார். எனவே குழந்தையின் தாய்மாமனான திருவெண்ணை நல்லூர் காங்கேய பூபதி அக்குழந்தையை அழைத்துக் கொண்டு திருவெண்ணை நல்லூருக்கு வந்துவிட்டார்.

அதற்கு இரண்டு வயதாகும்போது அது வீதி யில் மண்ணால் லிங்கமும் ஆலயமும் அமைத்து விளையாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது சிவ ஞான முனிவர் வான்வழியே சென்று கொண்டிருந்தார். அவர்சென்ற தேவவிமானத்தின் நிழல் கீழே விளை யாடிக் கொண்டிருந்த சுவேதவனப் பெருமாள் மீது விழுந்ததால் அது நகராமல் நின்றது.

ஃ ஃ ஃ

ஒருமுறை நந்தியம்பெருமாள் சிவபெருமா னிடம், தாங்கள் அருளிய ஆகமங்களில் பலமுடிவுகள் சொல்லப்பட்டுள்ளன. ஆதலின் ஆகமங்கள் கூறும் உண்மைப்பொருளை விளக்கியருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதன்படியே சிவபெருமான் சிவாகமங்களின் தெளிவைச் சிவஞானபோதம் என்ற நூலாக்கி அதனை நந்திக்கு அருளிச்செய்தார்.

நந்திதேவர் அந்நூலைச் சனகாதியர் நால்வருக்கு உபதேசிக்க, அவர்களில் சனற்குமாரர் சத்திய ஞானதரிசினிகளுக்கு உபதேசித்தார். அவர் தாம் பெற்ற ஞானத்தைப் பரஞ்சோதி மாமுனிவருக்கு அருள்செய்தார். அந்த பரஞ்சோதி முனிவர் உலகில் ஆன்மாக்கள் சிறந்து விளங்கிச் சிவஞானம் பெற்று முக்தி பெற ஏதுவாக உலகிற்கு அருள நினைத் திருந்தார். அவர் ஒருநாள் கயிலைமலையில் இருந்து அகத்தியரைக் காணப் பொதிகைமலைக்கு வான் வழியே சென்று கொண்டிருந்தார்.

ஃ ஃ ஃ

அப்பொழுதுதான் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சுவேதவனப் பெருமாளின்மீது அவர்சென்ற விமானத்தின் நிழல்பட்டதால் அதுநின்றது. அவர் கீழே இறங்கி வந்து குழந்தையின் தோற்றப்பொலிவையும், இறைத்தன்மையயையும் அறிந்து அதற்குத் தாம்பெற்ற சிவஞானத்தை உபதேசித்தார். பிறகு தனது குருவின் பெயரான தத்துவ ஞானதரிசினிகள் என்ற பெயரைத் தமிழ்ப்படுத்தி மெய்கண்டார் என்று தீக்ஷைப் பெயராக அவருக்குச் சூட்டி விட்டுத் தன்வழியே சென்றார்.

பரஞ்சோதி மாமுனிவரிடம் ஞான உபதேசம் பெற்றருளிய சுவேதவனப்பெருமாள் அதுமுதல் மெய்கண்ட தேவரானார். அவர் திருவெண்ணை நல்லூர் பொல்லாப்பிள்ளையார் சந்நிதியில் வீற்றிருந்து தான் பெற்ற ஞானத்தைச் சிந்தித்துச் சிந்தித்து நெறிப்படுத்தினார். அவருக்கு எழுந்த ஐயங்களை அக்கோயிலில் வீற்றிருந்த பொல்லாப் பிள்ளையார் போக்கினார் என்பர். பின்னர் மெய்கண்டதேவர் தான் பெற்றுத் தெளிந்த நல் ஞானத்தைச் சிவஞானபோதம் என்ற நூலாக ஆக்கி அருளினார். பின்னர் அதற்கு வார்த்திகம் என்ற பொழிப்புரையை எழுதினார்.

இவருடைய ஞானத்தெளிவினால் கவரப் பட்டு, பலர் இவருக்குச் சீடராயினர். இதனால் இவர் புகழ் எங்கும் பரவியது.

இவருடைய குலகுருவான சகலாகம பண்டிதர் தன்னுடைய ஆலோசனையின் பெயரால் பிறந்த அச்சுதகளப்பாளரின் மகன் தன்னிடம் ஞானஉப தேசம் பெற வருவான் என்று எதிர்பார்த்திருந்தார்.

ஆனால் அவர் கேள்விப்பட்ட வரையில் அவரே குருவாகிவிட்டது தெரிந்தது. எனவே தமது சீடர்களைத் திருவெண்ணைநல்லூருக்கு அனுப்பி விவரமறிந்து வரும்படிக் கூறினார்.

அதன்படியே மெய்கண்டாரிடம் சென்ற பண்டிதரின் சீடர்கள் அவருக்குச் சீடர்களாகி விட்டனர். பலமுறை புதிது புதிதாகச் சீடர்களை அனுப்பியும் அவர்கள் ஒருவரும் திரும்பிவாராமை கண்டு பண்டிதரே திருவெண்ணைநல்லூருக்கு வந்து மெய்கண்டார் இருக்கும் இடத்தை அடைந்தார். அந்த நேரத்தில் மெய்கண்டதேவர் தன் சீடர்களுக்கு ஆணவமலத்தின் சொரூபத்தை விளக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது உள்ளே சென்ற பண்டிதர் ஆணவத்தின் சொரூபம் என்ன என்றார். மெய்கண்டதேவர் ஆணவத்தின் வடிவம் நீரே என்றார். பிறகு தனது அருட்பார்வையை அவர்மீது செலுத்தினார். பண்டிதரின் மனத்தில் மெய்கண்ட தேவரின் மௌன தீக்ஷையால் சிவஞானம் உண்டாயிற்று. அவரும் மெய்கண்டதேவருக்கு மாணவனாகி விட்டார்.

சிவஞானத்தை உபதேசித்து வந்த மெய்கண்டதேவர் தனதுமாமனுக்குப் பிறகு அப்பகுதியை ஆண்டு வந்தார் என்று கூறுவர்.

பலகாலம் சிவஞானம் தழைக்கச்செய்து அனேக அன்பர்களுக்கு உபதேசம் செய்து மேன்மைப் படுத்திய மெய்கண்டதேவர் ஒரு ஐப்பசிச் சுவாதிநாளில் திருவெண்ணைநல்லூரில் சிவபரி பூரணம் எய்தியருளினார்.

ஃ ஃ ஃ

★ விழுப்புரத்தை அடுத்துள்ள திருவெண்ணைநல்லூர்ப் பேருந்து நிலையத்திற்கு அருகில் மெய்கண்டதேவரின் சமாதி நிலையம் அமைந்துள்ளது. அங்கு அழகிய ஆலயம் அமைக்கப்பெற்று மெய்கண்டதேவரின் திருஉருவம் நிறுவப்பெற்று நாட்பூசைகள், மாதவிழாக்கள், குருபூசைவிழா முதலியன சிறப்புற நடைபெற்று வருகின்றன. திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் மடாலயம் அமைக்கபட்டு தம்பிரான் ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். அவர்கள் பொறுப்பில் ஆலயமும் நந்தவனமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

★ திருவெண்காட்டில் சூரியதீர்த்தத்தின் வடக்குக்கரையில் மேற்கு நோக்கியவாறு மெய்கண்டதேவர் திருவுருவமும் பொல்லாப் பிள்ளையார் திரு உருவமும் அமைந்த சிறுசந்நிதி அமைந்துள்ளது.

★ திருத்தருமையாதீனத்துப் பூசை மண்டபத்தின் சுவர்களில் பெரிய அழகிய வண்ண ஓவியங்களாக மெய்கண்டதேவரின் வாழ்க்கை வரலாறு பல நிகழ்ச்சிகளாக வரையப்பட்டுள்ளன. இவை புகைப்படங்களாக எடுக்கப்பெற்று சில நூற்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

அருள் நந்தி சிவாசாரியார்

இவர் நடுநாட்டில் திருவதிகைக்கு அருகில் உள்ள துறையூர் என்ற சிவத்தலத்தில் ஆதிசைவ அந்தணகுலத்தில் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் என்னவென்று தெரியவில்லை. இவர் இளம் வயதிலேயே சிவாகமங்களை ஓதியுணர்ந்து சகல ஆகமங்களிலும் வல்லவராக விளங்கினார். அதனால் இவருக்குச் **"சகலாகம பண்டிதர்"** என்பது பெயராயிற்று. காலப்போக்கில் இயற்பெயர் மறைந்து இப்பெயரே நிலைத்துவிட்டது.

இவருடைய பரம்பரையினர் வழிவழியாக நடுநாட்டில் வாழ்ந்து வரும் வேளாளமரபினர்க்குக் குலகுருவாகத் திகழ்ந்தவர்களாவர். அதன்படி இவரும் அவர்களுக்குக் குலகுருவானார். தன்னுடைய சீடர்களின் பக்குவத்திற்கேற்ப அபரஞான பரஞானங்களை அளிக்கும் சிவதீக்ஷைகளை அளித்து வந்தார். இவர், தான் செல்லுமிடத்திற் கெல்லாம் இரண்டு வண்டி நிறைய ஆகம சம்பந்தமான நூல்களை எடுத்துச் செல்வது வழக்கம். தமது சீடர்களுக்கு எழும் சந்தேகங்களை நூலைக்காட்டி விளக்குவதுடன் அவர்களையும் நன்கு படிக்கச் செய்தார். இவ்வாறு நடமாடும் நூலகத்தைத் தன்னுடன் வைத்திருந்ததை வேறு எந்த ஆசாரியர்களின் வரலாற்றிலும் காண முடியவில்லை.

இவ்வகையில் சிறப்புடன் இவர் விளங்கிய காலத்தில் இவருடைய சீடராக இருந்த அச்சுதகளப்பாளருக்குப் பிள்ளைப்பேறு இன்மையால் இவரை அணுகித் தமக்குப் புத்திரப்பேறு உண்டாக வழிகாட்டுமாறு வேண்டினார். இவரும் தேவாரத்தில் கயிறு சார்த்திப் பார்த்து அவர்களைத் திருவெண்

காட்டிற்குச் சென்று முக்குளத்தில் நீராடி வழிபடச் செய்தார். அதன் பயனாகத் தோன்றியவரே சைவசித்தாந்த மரபின் முதல் ஆசாரியரான மெய்கண்ட தேவநாயனார் ஆவார்.

பின்னாளில் மெய்கண்டதேவர் பரஞ்சோதி முனிவர்பால் ஞானமும் தீட்சையும் பெற்றுக் குருநிலையெய்திய பிறகு, இவர் அவரைச் சந்தித்து அவரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்டார்.

அவரிடம் சிவதீக்ஷையும் அருள்நந்தி சிவாசாரியர் என்ற தீட்சா நாமத்தையும் பெற்றார். தமது குருவான மெய்கண்டதேவர் பன்னிரண்டு சூத்திரங்களில் அமைத்த சிவஞானபோதம் என்ற நூலை விரித்துப் பரபக்கம் சுபக்கம் என்ற இரண்டு பெரும் பாகங்களைக் கொண்ட **சிவஞான சித்தியார்** என்ற பெயரில் ஓர் நூலை இயற்றினார். அதைத் தொடர்ந்து **இருபாவிருபஃது** என்ற நூலையும் இயற்றினார். இவை இரண்டும் சைவசித்தாந்த சாத்திர நூல் வரிசையில் இடம் பெற்றுள்ளனவாகும்.

பலகாலம் சிவஞானத் தத்துவ நெறியைப் பரப்பிய அருணந்தி சிவாசாரியார் ஒரு புரட்டாசிமாதப் பூரநாளில் திருத்துறையூரில் சிவகதி அடைந்தார்.

★ இவருடைய சமாதி திருத்துறையூரில் சிஷ்ட குருநாதசுவாமி ஆலயத்திற்கு நேர் எதிரில் அமைந்துள்ளது. இங்கு சிவலிங்கம் அமைக்கப் பெற்று வழிபடப்பட்டு வருகின்றது. ஆலயத்தைச் சுற்றி நந்தவனம் அமைந்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் தினப் பூசையும் குருபூசை விழாவும் நடைபெறுகின்றன.

மறைஞான சம்பந்தர்

இவர் பெண்ணாடகத்தில் சாமவேத அந்தணர் மரபில் பராசரகோத்திரத்தில் தோன்றியவர்.

நான்குவேதம், இருபத்தெட்டு மூலாகமம் இருநூற்றேழு உபாகம், ஆறுசாத்திரம் ஆகியவற்றை ஐயமற ஓதி உணர்ந்தவர். இவருடைய இயற்பெயர் திருஞானசம்பந்தராக இருக்கலாம் என்பர். இவர் மறைகளை நன்கு ஓதி உணர்ந்திருந்ததால் மறை ஞான சம்பந்தர் என்று அழைக்கப்பட்டார் என்பர்.

இவர் திருத்துறையூருக்குச் சென்று அருணந்தி சிவாசாரியாரை வணங்கி அவருடைய சீடரானார். அவர் இவருக்குச் சிவஞான உபதேச தீட்சையைச் செய்து தமது சீடராக ஏற்றுக் கொண்டார். பலகாலம் அவருடன் தங்கியிருந்த பின் பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு சிதம்பரத்தை அடைந்தார். அங்கு சபாபதியை வணங்கிக்கொண்டு பலகாலம் சித்தாந்த நெறியைப் பரப்பினார். தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியரைச் சீடராக ஏற்று அவருக்குச் சிவஞான உபதேசத்தை அளித்தார்.

பின்னர், சிதம்பரத்திற்கு அருகிலுள்ள திருக்களாஞ்சேரி எனுமிடத்தில் எழுந்தருளியிருந்து சில காலத்திற்குப் பிறகு ஒரு ஆவணி மாத உத்திர நாளில் சிவபெருமானுடைய அடிசேர் முத்தியாகிய பரமுக்தியை அடைந்தார்.

இவர் அடியவர்களுக்குச் சிவஞானத்தை உபதேசித்து வந்ததைத் தவிர நூல் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. ★ இவர் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவார்.

சிதம்பரத்திற்கு வடகிழக்கில் உள்ள பகுதியில் மறைஞான சம்பந்தர் சமாதி உள்ளது. இதனையொட்டி இடிந்த நிலையில் மடமும், பிரம்மதீர்த்தம் என்றவாவியும் உள்ளன. இதற்கு அருகிலேயே திருக்களாஞ் செடியுடைய மகாதேவர் கோயில் என்ற சிவன் கோயிலும் உள்ளது. மறைஞான சம்பந்தரின் குருமூர்த்தி ஆலயம் 1997ல் திருவாவடுதுறை ஆதீனத்தால் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்கு நிகழ்த்தப்பட்டுள்ளது.

உமாபதி சிவாசாரியார்

இவர் பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராவார். தில்லைப் பெருமானை மெய்தீண்டிப் பூசிக்கும் தீட்சிதர்களின் மரபில் உதித்தவர்.

ஒரு சமயம் இவர் தில்லைநடராசப் பெரு

★ மறைஞான சம்பந்தர் நூல் ஒன்றும் செய்யவில்லையென்றே இதுவரை பேசியும் எழுதியும் வந்துள்ளனர். தமிழ் இலக்கிய வரலாற்றில் மு. அருணாசலம் அவர்கள். பண்டைப் பிரமாண நூல்களில் ஒன்றான சதமணிக் கோவையை இயற்றியவர். மறைஞான சம்பந்தரே என்றுக் குறித்துள்ளார். சதமணிக் கோவை சித்தாந்த ஞானபோதம் என்ற பெயரால் வழங்கி வந்துள்ளது.

மானின் உச்சிகாலப் பூசையை முடித்துக் கொண்டு அந்நாளைய மரபுப்படி பல்லக்கில் ஏறித் தமது இல்லத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். முன்னே, பணியாளர்கள் தீவட்டிகளையும் விருதுகளையும் ஏந்தியவாறு சென்றனர்.

அங்கு கூட்டத்தில் நின்று கொண்டிருந்த மறை ஞானசம்பந்தர் இவருடைய காதில்படும்படி "பட்ட கட்டையில் பகற் குருடு போகுது பாரீர்" என்றார். அதைக்கேட்ட தீட்சதரின் மனதில் ஒளி உண்டாயிற்று. தமக்கேற்ற குரு இவரே என்று எண்ணிப் பல்லக்கிலிருந்து இறங்கி அவரை வணங்கினார். அதன்பிறகு மறைஞான சம்பந்தர் செல்லுமிடங்களுக் கெல்லாம் தொடர்ந்து சென்றார்.

ஒரு சமயம் மறைஞானசம்பந்தர் தில்லையில் செங்குந்தர் (நெசவாளர்கள்) வாழும் பகுதிக்குச் சென்று அவர்கள் பாவினை முருக்கேற்ற வைத்திருந்த கஞ்சியினைக் கரத்தில் வாங்கிக் குடித்தார். அது வழிந்து அவருடைய முழங்கை வழியே ஓடியது. அப்படி வழிந்த கஞ்சியினைத் தீட்சதர் கையேற்றுப் பருகினார். அதன் பிறகு அவருடைய தன்மையை உணர்ந்து மறைஞானசம்பந்தர் தான் அருண்நந்தி சிவாசாரியரிடம் உபதேசமுறையில் பெற்ற சிவஞானச் செல்வத்தை உபதேசித்தார். அவருக்கு உமாபதி சிவாசாரியார் என்ற தீட்சா நாமத்தை வழங்கினார். இதைக்கேட்ட தீட்சிதர்கள் உமாபதி சிவனாரைத் தமது கூட்டத்தினின்று விலக்கித் தில்லைப் பெருமானைப் பூசிக்க விடாது தடுத்துவிட்டனர்.

உமாபதி சிவாசாரியார் அந்நாளிலிருந்த மன்னவனிடம் தில்லை நகருக்கு அருகிலிருந்த ஓரிடத்தைப் பெற்று அதற்குக் கொற்றவன் குடி என்று பெயரிட்டு அங்கு மடம் அமைத்துத் தங்கினார். அங்குத் தம்மை நாடிவரும் பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு ஞான உபதேசம் செய்து வந்தார். இவர் தமது வாழ்வில் எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தினார். (அவற்றில் சிலவற்றைப் பெட்டிச் செய்தியில் காண்க)

சைவசித்தாந்த சாத்திரமான பதினான்கு நூல்களில் எட்டுநூல்கள் இவர் செய்ததாகும். அவை சித்தாந்த அட்டகம் என்று பெயர் பெறுகின்றன.

மேலும், இவர் 1. சதரத்ன சங்கிரகம் 2. குஞ்சிதாங்கிரிஸ்தவம் 3. நடராஜத்வனி மந்திர ஸ்தவம் 4. யந்திரவிதான தீபிகை 5. வாயு சங்கிதை விருத்தி 6. ஸ்ரீருத்திரவிருத்தி 7. பௌஷ்கராகம விருத்தி என்ற வடமொழி நூற்களை இயற்றியுள்ளார். தமிழில் கோயிற் புராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிகக்கோவை, திருப்பதிக்கோவை, திருத்தொண்டர் புராணசாரம், திருமுறைகண்ட புராணம், சிவஸ்தல சிவநாம சத்தி நாமக்கலி வெண்பா தேவார அருள்முறைத்திரட்டு, ஞானசார சாத்திர பஞ்சகம் (அ) ஞானசரிதை ஆகிய நூற்களையும் இயற்றியுள்ளார்.

இவரது வரலாற்றைச் சிதம்பரசாரம், சிவானந்த தீட்சதரின் ராஜேந்திரபுர மகாத்மியம், சுவாமிநாத தீட்சதரின் சந்தானாசாரிய புராணம் ஆகியவற்றில் காணலாம்.

ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியர் செய்த அற்புதங்கள்

*ஒருசமயம் பெற்றான் சாம்பன் என்பவன் தில்லையில் வாழ்ந்து வந்தான். அவன் சிறந்த சிவபக்தி கொண்டவன் தனது அன்றாடப் பணியாகத் தில்லைப் பெருங்கோயிலுக்கு விறகு கொண்டு வந்து தரும் பணியை மேற்கொண்டு தொடர்ந்து அப்பணியைச் சிறப்புடன் ஆற்றி வந்தான். ஒரு சமயம் அவனுடைய தீவிர பக்தியை உலகினருக்கு உணர்த்த விரும்பிச் சிவபெருமான் அவனுக்கு சிவதீட்சை அளிக்கும்படி உமாபதி சிவாசாரியாருக்குச் சீட்டுக்கவியொன்றைப் பாடி அவனை அடையும்படி செய்தார். பிறகு அவனு டைய கனவில் தோன்றித் தனது சீட்டை உமாபதி சிவத் திடம் அளித்து அருள்பெறும்படி அனுப்பினார்.

அதன்படியே உமாபதி சிவனாரைத் தேடிவந்த பெற்றான் சாம்பனால் அவரைத் தரிசித்துச் சீட்டை அளித்துச் செய்தியை கூறமுடியவில்லை. எனவே தான் தில்லைக் கோயிலுக்குச் செய்து வந்த விறகு தரும்பணியைத் தொடர்ந்து மடத்திற்குச் செய்து வந்தான். நாட்கள் பல நகர்ந்தன. ஒருநாள் மழை யின்காரணமாக விறகு கொண்டு வந்து தர இயல வில்லை. இதனால் மடத்தின் மடைபள்ளியில் தாமத மாகவே அமுது தயாரித்தனர். உமாபதியார் பணியா ளர்களிடம் இன்று ஏன் காலதாமதம் என்று கேட்டார். பணியாளர்கள் மடைபள்ளிக்கு விறகு கொண்டுவந்து தரும் பெற்றான் சாம்பனைப்பற்றிக் கூறி அவன் இன்று விறகு கொண்டு வந்து தராததால் வேறு ஏற்பாடு செய்து அமுது தயாரிக்கவேண்டியதாயிற்று அதனால் காலதாமதமாயிற்று என்றனர். மறுநாள்

விறகு கொண்டுவரும் அன்பர் வந்ததும் என்னிடம் தெரிவியுங்கள் என்று சொல்லி விட்டு உமாபதிசிவம் தனது பணிகளுக்குச் சென்றார்.

மறுநாள் பெற்றான் சாம்பன் இரண்டு நாட் களுக்குரிய விறகையும் சுமந்து கொண்டு திரு மடத் திற்கு வந்தார்.

அவரைப் பணியாளர்கள் உமாபதியாரிடம் கொண்டுசென்றனர். அவர் உமாபதியாரைப் பணிந்து சிற்றம்பலவன் தந்த சீட்டை அவரிடம் கொடுத்தார். அதைக் கண்ட உமாபதியார் மகிழ்ந்து அவருக்குச் சத்யோநிர்வாண தீட்சையளித்து "முத்திசேர்க" என்றார். அவர் ஒளிவடிவமாகி விண்ணில் கலந்து மறைந்தார்.

உண்மையை உணராத சாம்பனின் மனைவி யும் சுற்றத்தினரும் அரசரிடம் சென்று மடத்திற்கு ஒருநாள் விறகு தராததால் சாம்பனை உமாபதியாரும், அவருடைய சீடர்களும் சேர்ந்து , தீயிட்டுக் கொளுத்தி விட்டதாகப் புகார் செய்தனர்.

அரசன் உமாபதியாரின் பக்குவத்தை உணர்ந்திருந்தாலும் பொதுமக்கள் தந்தக் குற்றச் சாட்டை விசாரிக்க வேண்டியது கடமையாதலால் அனைவரையும் அழைத்துக் கொண்டு உமாபதியா ரின் திருமடத்திற்கு வந்தான்.

உமாபதியாரிடம் சாம்பனுடைய உறவினர்கள் அளித்த குற்றச்சாட்டைக் கூறி அதன் உண்மையை விளக்கும்படிக் கூறினான். உமாபதியார்தான் அவ னுக்கு தீக்ஷை அளித்ததையும் அதனால் அவன் மோட்சமடைந்ததையும் கூறினார். அப்போது அங்குக் கூடியிருந்தவர்கள், நீங்கள் சொல்வது உண்மை யானால் எங்களில் யாராவது ஒருவருக்கு முத்தியளியுங்கள் என்றனர். அவர் அங்கு கூடியுள்ளவர்களை ஒருமுறை பார்த்தார். அவர்களில் யாருமே மோட்சம் செல்லத் தகுதியுடையவர்களாக இல்லை. அங்கு அவர் உடையவரைப் பூசிக்கும் அபிஷேகத் தண்ணீர் பாய்ந்து வளர்ந்த ஒரு முள்ளிச்செடி இருந்தது. அதற்கு மோட்சம் செல்லத் தகுதியிருந்தது. அதற்கு அவர் நிர்வாண தீட்சையளித்து முத்தி பெறுக என்றார். யாவரும் காண அம்முள்ளிச்செடி ஒளியுடல்பெற்று விண்ணில் சென்று மறைந்தது. அதைக்கண்டு அனைவரும் வியந்து உமாபதியாரைப் பலவாறு போற்றிப் புகழ்ந்தனர்.

❒ உமாபதியார் தில்லையினின்று வெளி யேறிக் கொற்றவன் குடியில் திருமடாலயமமைத்துத் தங்கியிருந்த போது, அவருடைய பூசை முறை வந்தது. அவரைப் பூசை செய்யத் தில்லை மூவாயிரவர்கள் அனுமதிக்கவில்லை. அதனால், அவர் திருமடத்திலேயே இருந்தார். அன்று பூசையை ஏற்றுக் கொண்ட தீட்சதர், தில்லைச் சிற்றம்பலத்தில் சென்று பார்க்கையில் பூஜாபெட்டகத்தில் உடையவரைக் காணவில்லை. அனைவரையும் அழைத்து அதைக் கூறினார்.

❒ ஒரு சமயம் மார்கழித்திருவிழாவினை யொட்டித் தில்லைச் சிற்றம்பலம்பலவனுக்குக் கொடியேற்றம் நடைபெற்றது. தீட்சதர்கள் உமாபதியாரை விலக்கி வைத்திருந்ததால் அவர் அதற்கு வரவில்லை. அன்று கொடியேற்றப் பலவாறு முயன்றும் கொடி மரத்தில் கொடி ஏறவில்லை அனைவரும் வருந்தினர். அப்பொழுது உமாபதியார் வந்தால் கொடியேறும்., என்ற வானொலி எழுந்தது. அனைவரும் உரிய மரியாதைகளுடன் கொற்றவன் குடிக்கு வந்து உமாபதி யாரைக் கோவிலுக்கு அழைத்தனர். உமாபதியார் தில்லையம்பலத்தின் முன்னின்று கொடிக் கவியைப் பாடினார். யாரும் ஏற்றாமலே கொடியானது தானே கொடிமரத்தில் ஏறியது.

அப்பொழுது **"யாம் உமாபதியின் பெட்ட கத்தில் இருக்கின்றோம்"** என்ற வானொலி எழுந்தது. அனைவரும் கூடிக் கொற்றவன் குடிக்குச் சென்று பார்க்கையில் உமாபதியாரின் பூஜாபெட்டகத்தில் உடையவர் இருக்கக்கண்டு அதிசயித்தனர். அன்று அங்கேயே உடையவர் பூசை நடைபெற்றது.

சந்தானாசாரியார் திருநட்சத்திரங்கள்

அன்பர்கள் சந்தானக்குரவர்கள் சிவனோடு இரண்டறக் கலந்த நாட்களை அவர்களுடைய திருநட்சத்திரங்களாகக் கொண்டாடி வருகின்றனர். இதனைக் குறிக்கும் பாடல் வருமாறு:-

சித்திரை அத்தம் உமாபதி யாவணித் திங்கடணி
லுத்திரஞ் சீர்க்கொண் மறைஞான சம்பந்தர்ரோது கன்னிக்
சுத்தமெய்ப் பூர அருணந்தி யைப்பசிச் சோதிதண்ணில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினாரே.

இதன் பொருள் : சித்திரை மாத அஸ்த நட்சத் திரத்தில் உமாபதி சிவனாரும், ஆவணி மாத உத்திரத்தில் மறைஞானசம்பந்தரும், புரட்டாசி மாத பூர நட்சத்திரத்தில் அருள் நந்தி சிவாசாரியாரும், ஐப்பசி மாத சுவாதி நாளில் மெய்கண்டதேவரும், சிவகதியை அடைந்தார்கள்.

வேதாந்தத் தமிழ் நூலாசிரியர்கள் வரலாறு

வேதாந்த நூல்களைத் தமிழில் இயற்றிய ஆசிரியர்கள் பலர் இருந்தாலும் அவர்களில் குறிப்பிடத்தக்க வர்கள் 1. நன்னிலம் தாண்டவேசுர சுவாமிகள் 2. தத்துவராயசுவாமிகள் 3. சாந்தலிங்க சுவாமிகள் 4. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் 5. குமாரதேவர் ஆகிய ஐவராவர்.

தமிழில் வேதாந்த நூல்களுக்குக் வித்திட்டவர் தத்துவராயசுவாமிகள் என்றால் மிகையாகாது. இவர் இயற்றிய வேதாந்த தத்துவ நூல்களும் அதிகமாகும். நன்னிலம் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவனீதம் வேதாந்த உலகில் தனிச்சிறப்புமிக்கதாகும். இதற்கு ஒப்பான நூல் வேதாந்த உலகில் எதுவுமில்லை என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். சாந்தலிங்க சுவாமிகளும் அவருடைய சீடர் குமாரதேவரும் துறைமங்கலம் சிவப்பிரகாசதேசிகரும் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்களாவர். இனித் தொடர்ந்து இந்த வேதாந்த நூலாசிரியர்களின் வரலாற்றைக் காணலாம்.

நன்னிலம் தாண்டவராய சுவாமிகள்

கைவல்ய நவனீதத்தை இயற்றிய ஸ்ரீதாண்டவேசுவர சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிய செய்திகள் ஏதும் தெளிவாகத் தெரியவில்லை. இவர் பல இடங்களில் பயணம் செய்து இறுதியில், தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலத்தில் இருந்த நாராயணதேசிகசுவாமிகளை அடைந்து அவருடைய சீடரானார். இவர்கள் இருவரும் வடநாடுகளைச் சுற்றிப் பயணம் செய்து, நர்மதைக்கரையில் இருந்து பாண லிங்கங்களைக் கொண்டு வந்து நன்னிலத்தில் அவற் றிற்கு ஆலயம் அமைத்தனர். அந்த லிங்கங்களுக்கு ஏகநாயகன் என்ற பெயரைச் சூட்டினர். அவற்றை அவர்களும் அவர்களுடைய சீடர்களும் சிறப்பாகப் பூசனை புரிந்து வந்தனர். இவர் தன்னுடைய கை வல்ய நவனீதத்தில் பல இடங்களில் பரம்பொருளான இந்த ஏகநாயகனைச் சிறப்புடன் போற்றுவதைக் காணலாம். இவர்கள் ஏராளமான சீடர்களுக்கு வேதாந்த ஞானத்தைப் போதித்து வந்தனர். பின்னர் நாராணதேசிகர் கலியுகாதி வருஷம் 4351 ஆம் ஆண்டில் (ஆங்கிலம் கி.பி. 1449) வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் விதேக முக்தி அடைந்தார்கள். அவர்களுக்குப் பின்னர் ஸ்ரீதாண்டவேசுவரச் சுவாமிகள் கலியுகாதி வருஷம் 5436ஆம் ஆண்டில் (ஆங்கிலம் கி.பி. 1534) ஜயவருஷம் வைகாசிமாதம் விசாக நட்சத்திரத்தில் விதேக முக்தியடைந்தார்.

இவர்கள் அமைத்துப் பூசைசெய்து வந்த ஏகநாயகன் என்று அழைக்கப்பெற்ற சிவலிங்கங்களின் அடியிலேயே அவர்களின் சமாதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களுடைய குருபூசை விழாக்கள் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. இந்நாளில் இக்கோயில் ஸ்ரீநாராயண தாண்டவேஸ்வர சுவாமி ஆலயம் என்று அழைக்கப் படுகின்றது.

ஸ்ரீதத்துவராய சுவாமிகள்

தத்துவராய சுவாமிகள் 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் தத்துவப் பேரறிஞர். தமிழில் தோன்றிய வேதாந்த நூல்களின் மரபுக்கு மூலகாரணர் இவரேயாவார்.

இவர் சோழ நாட்டிலுள்ள வீரை நகரில் வைதீகச் சைவப்பிராமண குலத்தில் பிறந்தவர். இளமையில் சேந்தமங்கலத்தில் இருந்த தனது மாமன் சொரூபானந்தருடன் சேர்ந்து தத்துவ விசாரணையில் ஈடுபட்டார். இருவரும் சிறந்த சிவபக்தர்கள். இருவரும் உரிய குருவைத்தேடி பலகாலம் அலைந்தனர். அவர்களுக்கு ஏற்ற குரு கிடைக்கவில்லை.

இறுதியில் தத்துவராயர் வடநாட்டிற்குச் சென்று உரிய குருவைத் தேடுவது என்றும், சொரூபானந்தனர் தென்னாட்டிற்குச் சென்று குருவைத் தேடுவது என்றும், யாருக்கு முதலில் தகுந்த ஆசிரியர் கிடைக்கின்றாரோ, அவர் தன் குருவிடம் உரிய ஞானத்தைப் பெற்றுக் கொண்ட பின் மற்றவரை சீடராக ஏற்று அதனை வழங்க வேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

அதன்படியே தத்துவராயர் வடநாட்டிற்கும், சொரூபானந்தர் தென்னாட்டிற்கும் பயணமானார்கள்.

தெற்கு நோக்கிச் சென்ற சொரூபானந்தர் திருவரங்கம், திருவானைக்கா முதலிய தலங்களைக் கடந்துத் திருப்பைஞ்ஞீலி என்ற தலத்தை அடுத்துள்ள கோவர்த்தம் என்ற ஊரினை அடைந்தார். அவருக்குப் பல நல்ல சகுனங்கள் உண்டாயின. அதனால் இப்பகுதியில் தமக்கு நல்ல குருநாதன் கிடைப்பான் என்பதை உணர்ந்தார். அதனையொட்டிப் பலரையும் விசாரித்தார்.

அப்போது சிலர், "இவ்வூரின் வெளிப்புறத்தில் நாணற்புதர் ஒன்று உள்ளது. அதனுள் ஒரு சுவாமிகள் இருக்கின்றார். அவர் மாலை நேரங்களில் மட்டுமே வெளியே வருவார்" என்று கூறினார்கள்.

சொரூபானந்தர் அன்று மாலை வேளையில் அங்குக் காத்திருந்து அந்த சுவாமிகள் வெளி வரும்போது அவர் காலில் வீழ்ந்து அடியேனுக்கு ஞான உபதேசம் செய்து பிறவிக் கடலிலிருந்து கரையேற்ற வேண்டும் என்று வேண்டினார்.

சுவாமிகள், "அவரைத் தூக்கி, "அப்பனே இன்றளவும் உமக்காகவே இங்கு நான் காத்திருந்தேன் என்று சொல்லி, அவருக்குத் தான் பெற்ற ஞான உபதேசத்தை விளக்கிக் கூறி அருளினார். அந்த அளவில் காந்தத்தைக் கண்ட இரும்பு கவரப்படுவது போல் சொரூபானந்தர் கவரப்பட்டு மனம் ஒடுங்கி சகஜ நிஷ்டை கூடினார்.

நாணற்காட்டில் இருந்து சொரூபானந்தரை ஆட்கொண்ட சுவாமிகளின் பெயர் சிவப்பிரகாசர் என்பதாகும். இவர் திருவாரூரில் சைவசிந்தாந்த மரபில் தோன்றியவராவார்.

இது இப்படியிருக்க, வடநாடு சென்ற தத்துவராயர் உரிய குருவைத்தேடிப் பலகாலும் அலைந்துப் பயனின்றித் திரும்பத் தென்னாட்டிற்கு வந்தார். சொரூபானந்தரைத் தேடி கோவர்த்தம் வந்து சேர்ந்தார். அவரை வணங்கி உபதேசம் பெற்றுச் சீடனாகி நிஷ்டையில் கூடி அமர்ந்தார்.

தனது சீடரான தத்துவராயர் தமிழில் கவிபாடும் ஆற்றல் மிக்கவர். இவரைக் கொண்டு உலக நன்மைக்காகப் பல சாத்திர நூல்களை இயற்றலாம் என்று எண்ணியிருந்த சொரூபானந்தர். அவர் நிஷ்டை கூடித் தவத்தில் லயித்திருப்பதைக் கண்டு, எப்படி இவரை நூல் எழுதவைக்கலாம் என்று யோசித்தார்.

ஒரு சமயம், அமாவாசையன்று, "எண்ணை தேய்த்துக் கொள்ள வேண்டும். எண்ணை எடுத்துவா" என்று வேலைக்காரனிடம் கூறினார். அப்பொழுது அருகில் இருந்த தத்துவராயர் "இன்று அமாவாசையாயிற்றே" என்று சொல்லத் தொடங்கி அம் என்ற ஒலியோடு நிறுத்திவிட்டார். அதனைக் கேட்ட சொரூபானந்தர், "விதியைக் கடந்த நமக்கா நீ விதி கற்பிக்க வருகிறாய் என் எதிரிலே நில்லாதே ஓடிப்போ" என்றார்.

அதைக் கேட்டு அஞ்சிய தத்துவராயர் குருவைப் பிரிந்து எப்படி வாழ்வேன் என்று அழுதவாறு பின்னோக்கியே நடந்து சென்றார். அவருடைய துன்பமயமான மனநிலையிலும் குருவின் பெருமைகளை விவரித்துப் பிரபந்தங்களைப் பாடியவாறே பின்னே நடந்து சென்றார். இவ்வகையில் பலநூறு பாடல்களைப் பாடினார். அவை இப்பொழுது தத்துவராய சுவாமிகள் பாடுதுறை என்று அழைக்கப்பெறுகின்றன. அவற்றை உடன் நின்ற மாணாக்கர் உடனுக்குடன் எழுதிச் சொரூபானந்தரிடம் சேர்த்தனர். அதைக்கண்டு அவர் உள்ளூர மகிழ்ந்தாலும் அதனை வெளிக்காட்டாது, "கூந்தல் உடையவள் வாரிமுடிகிறாள், வாய் உடையவன் பாடி அனுப்புகின்றான்" என்று அசட்டையாகச் சொல்வது போல் சொல்லி அனுப்பினார்.

இதைக்கேட்ட தத்துவராயர் வருந்திக் கடலில் வீழ்ந்து இறந்துபோக முடிவு செய்தார். பாடுதுறை என்ற நூலைப்பாடிய வண்ணம் கடலில் இறங்கி விட்டார். அதனை அறிந்த சொரூபானந்தர் "அந்த குருவுக்கு வீங்கியை இங்கே வரச் சொல்லுங்கள்" என்று ஆணையிட்டார். அதன்படியே சீடர்கள் தத்துவராயரைச் சொரூபானந்தர் முன்பு அழைத்து வந்து விடுத்தனர்.

அப்போது கோபம் கொண்டவரைப்போல சொரூபானந்தர், "அன்பனே இதுவரை நீ பாடிய நூல் உனக்கே உபயோகமாகும் : உலகத்திற்குப் பயன்படாது என்று சொல்லிவிட்டு ஏவலர்களை உணவு பரிமாறச் சொல்லி உண்ணத் தொடங்கினார். அவருடைய குறிப்பை உணர்ந்த தத்துவராயர் தாம் முன்புபாடிய "மோகவதைப் பரணி" நூலின் நடுப்பக்கமாக உள்ள சசிவன்னபோதம் என்ற வேதாந்தசாத்திரத்தைப் புதிய நூலாகப் பாடினார்.

அதைக்கண்டு சொரூபானந்தர் மகிழ்ந்தார்.

குருவின் உள்ளக்கிடக்கையை உணர்ந்து கொண்ட தத்துவராயர் மேலும் பல வேதாந்த ஞானசாத்திர நூல்களை இயற்றியருளினார்.

ஒரு சமயம் தென்னாட்டு யாத்திரைக்கு வந்த ஆராத்தியர்களும், வித்வான்களும் சொரூபானந்தரைத் தரிசிக்க வந்தனர். அப்பொழுது அவர்கள் அங்கு வீற்றிருந்த தத்துவராயரை வணங்கி, ஐயா போர்முகத்து ஆயிரம் யானைகளை வென்ற மாவீரன் மீது பாடுவதன்றோ? பரணியின் இலக்கணம். அப்படியிருக்க நீர் வீரத்தையும், போர்க்களத்தையும் கனவிலும் கேட்டறியாத உமதுகுருவின் மீது பரணிப் பிரபந்தத்தை எப்படிப் பாடினீர்? என்று கேட்டனர்.

அதற்கு, தத்துவராயர் என்னுடைய குரு நாதர் சீடர்களுடைய அகங்காரமாகிய யானைகளைக் கொல்லுதலால் அவர்மீது பரணி பாடினோம் என்றார். அவர்கள் இந்த விளக்கத்தை ஏற்கவில்லை. நீங்கள் சொன்னபடி ஒரு சீடனின் அஞ்ஞானத்தை நீக்கவே அதிகநாள் பிடிக்குமே அப்படியிருக்க ஏககாலத்தில் எப்படி ஆயிரம் சீடர்களின் அகங்காரத்தை நீக்கமுடியும் என்று கேட்டனர். அவர்களுக்கு இதனை பதிலாகச் சொல்லாமல், செயலால் விளக்க விரும்பி, தான் உடனே சமாதி கூடினார்.

இதனால் கேள்வி கேட்ட பண்டிதர்கள் சொரூபானந்த சுவாமியின் சந்நிதானத்தில் இரவு பகல் உணர்வின்றிச் சமாதி நிலையை அடைந்தனர். மூன்று நாட்கள் கடந்தன. நான்காம்நாள் தத்துவராயர் கண்விழித்தார். அதனால் பண்டிதர்களுக்கும் சமாதிநிலை நீங்கி உணர்வு வந்தது.

அவர்கள் தத்துவராயரின் திருவடிகளில் அடியற்ற மரம்போல வீழ்ந்தனர். நாங்கள் அறியாமையால் பிழை சொன்னோம். தங்கள் குருநாதர் ஆயிரம் அல்ல, பதினாயிரமல்ல லட்சம் சீடர்களின் அறியாமையை நொடியில் நீக்க வல்லவர் என்பதை உணர்ந்தோம் என்று சொல்லி விடை பெற்றுச் சென்றனர். பின்னர் பலகாலம் வாழ்ந்த தத்துவராயர் பல வேதாந்த நூல்களை இயற்றினார்.

ஒரு சமயம் சொரூபானந்தர், தான் விதேக முக்தியை அடையும் காலம் நெருங்கியதை உணர்ந்து கால்போன வழியே நடந்தார். தத்துவராயரும் அவரைப் பின் தொடர்ந்தார். அவர்கள் கடற்கரையை அடைந்தனர். கடல் அலைகள் மீது சொரூபானந்தர் வேகமாக நடந்துசென்றார். தத்துவராயரால் அப்படிச் செல்ல முடியவில்லை அதனால் கரையிலேயே நின்றுக் கதறியழுதார்.

பின்னர் மனம்தேறிப் பல தலங்களையும் அடைந்து வழிபட்டார். திருவண்ணாமலைக்கும் - விருத்தாசலத்திற்கும் இடையில் ஒரு இடத்தில் சொரூபானந்தர் அவருக்குக் காட்சியளித்தார். தத்துவராயர் அவருக்கு வேண்டிய உத்திரகிரியைகளைச் செய்து முடித்தார். பிறகு சிதம்பரத்திற்கு அருகேயுள்ள திரு எரும்பூர் எனும் ஊரில் தங்கியிருந்தார். அங்கேயே ஒரு **ஆடிமாதம் சனிக்கிழமை சதயநட்சத்திரத்தில் பிரதமை திதியில் விதேககைவல்யமானார்.**

★ தத்துவராய சுவாமிகள் ஆலயம் நல்ல கருங்கல் பணியாகக் கட்டப்பட்டுள்ளது. மூலத்தானத்தில் சமாதியின்மீது சிவலிங்கம் அமைக்க பட்டுள்ளது. கோயிலூர் மடாலய ஆட்சியின் கீழ் பூசைகள் சிறப்புடன் செய்யப்படுகின்றன. குரு பூசை விழா சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

★ சொரூபானந்தர் திருநெல்வேலிக்கு வடக்கே உள்ள சேந்தமங்கலத்தில் ஆற்றங்கரையோரம் சமாதி கொண்டார் என்றும் அது இந்நாளில் சிற்றம்பல முடையார் கோயில் என வழங்குகிறது என்பாரும் உண்டு. சமாதியான நாள் வைகாசி மாதம் வியாழக்கிழமை கேட்டையும் ஏகாதசியும் கூடிய நாளாகும்.

தத்துவராயர் செய்த நூல்கள்

1. **சிவப்பிரகாச வெண்பா** - இது 43 வெண்பாக்களால் தமது ஞானாசாரியரான சிவப் பிரகாசரைத் துதிப்பதாகும்.

2. **தத்துவாமிர்தம்** - இது ஐந்து பத்ததி என்ற பகுதிகளை உடையது 137 விருத்தப்பாடல்களால் ஆனது. இந்நூலை விளக்கிப் பின்னாளில் வேதாந்தத்தத்துவாமிர்தக் கட்டளை என்ற வசன நூலும் எழுந்துள்ளது.

3. **அடங்கன் முறை** - இதில் 18 சிறுநூல்கள் உள்ளன. இவை 1. திருத்தாலாட்டு 2. பிள்ளைத் திருநாமம் 3. வெண்பா அந்தாதி 4. கலித்துறை

அந்தாதி 5. சின்னப்பூ அந்தாதி 6. தசாங்கம் 7. இரட்டைமணிமாலை 8. மும்மணிக்கோவை 9. நான்மணி மாலை 10. கலிப்பா 11. ஞான வினோதன் கலம்பகம் 12. உலா 13. சிலேடையுலா 14.நெஞ்சுவிடு தூது 15. கலிமடல் 16. அஞ்ஞ வதைப்பரணி 17. மோக வதைப் பரணி 18. அமிர்தசாரம் என்பனவாகும். (இதில் இடம் பெற்றுள்ள பாடல்களின் ண்ணிக்கை 3561 ஆகும்.

4. பாடுதுறை : தத்துவராயர் தமது குருவைப் பிரிந்து சென்று மீண்டும் வந்து அவரை வணங்கிய துவரை பாடிய பாடல்களின் தொகுப் பாகும். இந்நூல் 138 தலைப்புகளில் 1140 பாடல்கள் உள்ளன.

5. பெருந்திரட்டு : இது ஒரு தொகுப்பு நூலாகும். இதில் 2821 பாடல்கள் உள்ளன. இதனைச் சிவப்பிரகாசப் பெருந்திரட்டு என்றும் அழைப்பர். இவற்றில் தேவாரத்திருமுறை, திவ்யப் பிரபந்தங்களில் உள்ள பாடல்களும் ஞானமிர்தம் முதலிய வைசித்தாந்த நூற்பாடல்களும் சேர்த்தே தொகுக்கப்பட்டுள்ளன.மேலும் இவர் **சிவானந்த மாலை, ஈசுவர கீதை, பிரம்மகீதை, சசிவன்ன போதம்,** ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் வரலாறு

வேதாந்தப் பாடநூல் வரிசையில் இடம் பெற்றுள்ள வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம் ஆகிய நூல்களை அருளியவர் ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் ஆவார்.

இவர் ஏறத்தாழ முன்னூறைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வீரசைவ குலத்தில் தொண்டை நாட்டில் அவதரித்தவர் என்று கூறுகின்றனர். இவர் இளம் வயதிலேயே ஞானம் கைவரப்பெற்றுப் பல புண்ணியத்தலங்களுக்குப் பயணம் மேற்கொண்டார்.

பலதலங்களையும் தரிசித்துத் திருவண்ணாமலையை அடைந்து, அண்ணாமலையாரைத் தரிசித்துச் சிலகாலம் அங்கே தங்கியிருந்தார். அப்பொழுது திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த துறையூர் சிவப்பிரகாசசுவாமிகளைக் கண்டு வணங்கினார். அவரிடம் பற்றுக்கொண்டு அவருடைய திருக்கூட்டத்தில் பணி செய்து வந்தார்.

இவருடைய ஞானபக்குவத்தை உணர்ந்த



● ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் ●

சிவப்பிரகாசசுவாமிகள் இவரை அழைத்துத தனது ஞானஉபதேசத்தை அருளினார். சிலகாலம் தன்னுடன் வைத்திருந்து பிறகு, "அன்பனே நீ விரும்புமிடம் சென்று அங்கே தங்கிப் பக்குவமுடையோர்க்கு ஞானஉபதேசம் செய்க என்று அருள்புரிந்து விடைகொடுத்தார்.

அதன்படியே சாந்தலிங்கசுவாமிகள் மேலைச் சிதம்பரம் என்னும் கோவைப் பேரூரை அடைந்து அங்குக் காஞ்சியாற்றின் கரையில் தவம்புரிந்து வந்தார். அங்கிருந்த அன்பர்கள் இவருடைய நற்குணங்களையும் அன்பையும் உணர்ந்து ஒரு திருமடம் அமைத்து அதில் அமர்த்தி உபசரித்தனர்.

இவர் தமது மடத்தில் நிட்டை கூடியிருக்கும்போது சிவபெருமான் இடபவாகனத்தில் தேவியுடன் தோன்றி இவருக்குக் காட்சிகொடுத்தார். இதனைச் சுவாமிகள் தமது பலபாடல்களில் குறித்துள்ளார். இவருடைய உபாசனா மூர்த்தம் நடராசப் பெருமானாகும். இவர் இயற்றிய வைராக்கிய சதகத்தின் பின்பகுதி நடராச வணக்கமாகவே இருப்பது இங்கு எண்ணத்தக்கதாகும்.

ஒரு சமயம் சுவாமிகள் பாண்டிச்சேரியை அடுத்த பொம்மையபாளைத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவஞானபாலையதேசிகரைக் காண ஆவலுற்றுப் பயணமானார். வழியில் தனது குரு பிரானான துறையூர்ச் சிவப்பிரகாசர் விதேக முக்தி அடைந்ததைக் கேள்வியுற்று பட்டீச்சரம் சென்று அங்குள்ள அவருடைய சமாதியைத் தரிசித்து தமது பயணத்தைத் தொடாந்தார்.

வழியில் நல்லாற்றூரில் தங்கியிருந்தபோது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளைச் சந்தித்தார். இருவரும் பொம்மையபாளையம் சென்று சிவஞான பாலையசுவாமிகளைத் தரிசித்தார்கள்.

அந்நாளில் சிவஞானபாலையசுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகளிடம், "உமது தங்கையைச் சாந்தலிங்க சுவாமிகளுக்குத் திருமணம் செய்து வை, அது தகுதியானது" என்று கூறினார். அதன்படியே சிவப்பிரகாச சுவாமிகளின் தங்கையாகிய ஞானாம் பிகைக்கும் சாந்தலிங்கசுவாமிகளுக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் கோவைப்பேரூர் சென்று இல்லறம் ஆற்றியவாறே ஞானவாழ்வை நடத்தி வந்தனர்.

ஒரு சமயம் சுவாமிகள் மாணவர்களுக்கு அதிதீவிர வைராக்கியத்தைப் பாடம் சொல்லி கொண்டிருந்தார். அப்பொழுது சிலர் மனதில், "தாம் இல்லறத்தில் இருந்து கொண்டே வைராக்கியத்தை யும் பரம விருத்தியையும் இவர் கூறுவது பொருத்த மானதில்லையே" என்று எண்ணினர்.

இதை உணர்ந்த சுவாமிகள் ஞானம் பிகையை அருகே அழைத்துத் தனது மடிமீது அமர்த்திக் கொண்டு பாடத்தைத் தொடர்ந்தார். அங்கு இருந்த அனைவருக்கும் அவர்கள் பரமேசுவரனும் கௌரி யுமாகவே காட்சியளித்தனர். அதைக்கண்டு அஞ்சிய அவர்கள் தம் எண்ணப் பிழைக்கு அஞ்சி வருந்தி அடிகளுக்கு முன்னிலும் அன்பராயினர்.

சுவாமிகள், கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் ஆகிய நான்கு நூல்களை இயற்றி அருளினார்.

பின்னர் ஒருநாள் தம் துணைவியாரான ஞானாம்பிகைக்கு விடைகொடுத்து அவருடைய சகோதரரிடத்திற்கு அனுப்பிவிட்டுத் துறவு மேற் கொண்டு பிட்சை செய்து தீவிர விரதம் அனுட்டிக் கலானார்.

இவருக்குச் சீடர்கள் ஏராளமானவர்கள் ஆனார்கள். கொங்குநாட்டில் சைவம் தீவிரமாகப் பரவியதற்கும் சைவநெறி தழைத்தோங்கி சிறுதெய் வத்திற்கான உயிர்ப் பலிகள் குறைந்ததற்கும் இவரு டைய அருள்நெறியே காரணமாகும். நீண்ட காலம் செம்மைசேர் நெறி பரப்பிய சாந்தலிங்க சுவாமிகள் ஒரு மாசிமாத மகநட்சத்திரத்தில் விதேக கைவல்ய மானார்.

இவருடைய சீடர்களில் குறிப்பிடத்தக்கவர் விருத்தாசலம் குமாரதேவர் ஆவர். அவருடைய சீடரே திருப்போரூர் சிதம்பரசுவாமிகளாவார்.

சாந்தலிங்க சுவாமிகள் மடம் காலவெள்ளத் தில் மறைந்தது. அதனை மீண்டும் புதுக்கிப் பெரிய அளவில் விரிவுபடுத்தியுள்ளனர். அம்மடத்தில் சாந்தலிங்க சுவாமிகளின் அதிட்டானம் அமைந் துள்ளது. அங்கு முறைப்படி இருவேளையும் பூசை கள் நடைபெறுகின்றன. மாசி மக நட்சத்திரத்தில் பெருவிழா கொண்டாடப் படுகின்றது. பெருமை மிக்க பேரூர் மடாலயத்தில் இந்நாளில் **ஸ்ரீமத் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் மடாதிபதியாகவும் ஸ்ரீமத் மருதாசல அடிகளார் இளவரசு பட்டத்திலும்** அமர்ந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின் றனர்.

ஸ்ரீமத்குமாரதேவர்

குமாரதேவர் கன்னடதேசத்தில் சிற்றரசராக அரசுசெலுத்திய வீரசைவர், பின்னர் அரசபோகத்தை வெறுத்துப் பல இடங்களுக்குத் தலயாத்திரை மேற்கொண்டார். இறுதியில் பேரூர் சாந்தலிங்க சுவாமிகளின் பெருமைகளைக் கேள்வியுற்று அவருடைய மடத்தை அடைந்து அவரிடம் தன்னைச் சீடராக ஏற்கும்படி வேண்டி நின்றார். அவர் இவருடைய பக்தியைச் சோதிக்க விரும்பித் தமது மடத்து மாடுகளுக்குப் புல்லறுத்துப் போடும்படிப் பணித்தார். குருவின் சொல்லினைத் தலைமேற் கொண்டு குமாரதேவர் அப்பணியைச் செய்து வந்தார். பின்னர் சுவாமிகள் இவருடைய பக்குவ நிலையை அறிந்து இவருக்கு ஞானஉபதேசம்

செய்தார். இவரைச் சிலகாலம் தம்மிடம் வைத்திருந்த பின்னர் விருத்தாசலம் சென்று தங்கும்படி ஆணை யிட்டார். அப்படி அவர் விருத்தாசலத்திற்கு வரும் போது வழியில் சின்ன சேலத்திற்கு அருகில் இறை வனே தண்ணீர்ப்பந்தல் வைத்து இவரை உபச ரித்தான் என்பர். பின்னர் இவர் விருத்தாசலம் வந்து அங்கு மணிமுத்தாற்றின் கரைமேல் இருந்த ஒரு அரசமரத்தின் கீழ் வீற்றிருந்தார்.

அந்நாளில் அந்த மரத்தில் நெடுநாளாக குடியிருந்த ஜடாமுனிக்கு மோட்சமளித்தும், ஒரு வீட்டில் பிட்சைக்கு சென்றபோது அவர்கள் சமைத்த மீனைப்போட அதனை உயிர்பெறச் செய்து குளத்தில் ஓட விட்டும், ஒரு குஷ்டரோகியின் நோயை நீக்கி அவனுடைய உடலைப்பொன்போல பிரகாசிக்கச் செய்தும் பலவாறு அற்புதங்களை நிகழ்த்தினார்.

ஒரு சமயம் இவர் திருவாரூர் தேர்த்திரு விழாவிற்குச் சென்றபொழுது இரண்டு சைவர்கள் வீரசைவத்தை இகழ்ந்து கூறத் தேரை வழியிலேயே நிற்கும்படி பணித்தார். அவர் சொல்லியபடி தேர் நின்று விட்டது. என்ன செய்தும் தேர் நகராமையால் அப்போதிருந்த அரசன் அதன் காரணத்தைப் பலரையும் விசாரித்து, இறுதியில் குமாரதேவரைக் கண்டு வணங்கினான். மன்னனும், சைவர்களும் வீரசைவத்தை இகழ்ந்ததற்காக மன்னிக்க வேண் டினர். குமாரதேவர் அந்த ரதத்தைச் "செல்க" என்று கூறியதும் அத்தேர் யாரும் இழுக்காமல் தானே புறப்பட்டுச் சென்று தனது நிலையை அடைந்தது. இதனால் அவருடைய புகழ் எங்கும் பரவியது.

இவர் விருத்தாசலத்தில் நெடுநாட்களாக குழந்தைப்பேறு இல்லாத ஒரு அன்பனுக்கு அருள் செய்ய அவனுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அப்பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித்தர மதுரை யிலிருந்து சிதம்பரம் பிள்ளை என்பவர் வந்திருந்தார். அவரைக் குமாரதேவர் தமது சீடராக்கிக் கொண்டார். (அவரே பின்னாளில் திருப்போரூரில் ஞானசெங் கோலோச்சிய ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளாவார்)

இப்படி பலகாலம் சென்ற பின் ஒரு நாள் விருத்தாசலத்தில் எழுந்தருளியுள்ள பெரிய நாயகி அம்பிகை குமாரதேவரிடம், "அன்பனே! நீ ஞானசாத்திரங்களை இயற்றுவாய்" என்றாள்.



அதைக்கேட்ட குமாரதேவர் நான் எவ்வாறு பாடுவேன்? என்று கேட்டார். அம்பிகை நாமே உன்நாவில் நின்று பாடுவோம் என்று கூறிப் பதினாறு நூல்களைப் பாடினாள் என்பர். இவை சோடச மகா சாத்திரங்கள் என்று அழைக்கப் பெறுகின்றன.

ஒரு புரட்டாசி மாத வளர்பிறைச் சதுர்த் தசியில் குமாரதேவர் பரிபூரணம் எய்தினர். அவருடைய சீடர் ரெட்டி-சிதம்பரசுவாமிகள் விருத்தாசலத்தில் குமாரதேவர் பெயரால் திருமடா லயத்தினை அமைத்தார். அந்த மரபு தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

இவர் இயற்றிய பதினாறு நூல்கள் :-

1. மகாராஜா துறவு 2. சுத்தசாதகம், 3. விஞ் ஞானசாரம், 4. அத்துவிதஉண்மை, 5. பிரமானு பூதிவிளக்கம், 6. ஞானஅம்மானை 7. வேதாந்த தசா அவத்தைக்கட்டளை, 8. வேதாந்த தசகாரியக் கட்டளை, 9. சகஜநிஷ்டை, 10. உபதேச சித்தாந்தக் கட்டளை, 11. பிரம்மசித்தி அகவல், 12. சிவதரிசன அகவல், 13. ஆகமநெறி அகவல், 14. வேதாந்த நெறி அகவல், 15. பிரம்மானுபவ அகவல், 16. சிவசமவாத அகவல் என்பனவாகும்.

இவற்றில் முதலாவதான மகாராஜாதுறவு வேதாந்த சாத்திர நூல் தொகுப்பிலும் 7, 8, 10, ஆகிய வேதாந்ததசாவத்தைக் கட்டளை, வேதாந்த தசகாரியக்கட்டளை, உபதேச சித்தாந்தக் கட்டளை ஆகியன வேதாந்தக்கட்டளை நூல்கள் வரிசை யிலும் இடம்பெற்றுள்ளன.

இவர் இயற்றிய நூல்களின் தொகுப்பைக் குமாரதேவர் சாஸ்திரக் கோவை என்ற பெயரில் 1908-ஆம் ஆண்டில் மனோன்மணி! விலாச சென்டிரல் புக் டெப்போவால் வெளியிடப்பட்டுள்ளது.



வேதமும் மெய்கண்டார் செய்த தமிழும்

வேதம் பசு அதன் பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழதனில் உள்ளுறு நெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்.

இதன் கருத்து : வேதம் பசுவாகும். அதனின்று பெறப்பட்ட பால் ஆகமம். நால்வரால் அருளப்பெற்ற தேவாரமும், திருவாசகமும் அந்தப்பாலில் உள்ள நெய்யாகும். அந்த நெய்யின் சுவையாகத் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர் செய்த சிவஞானபோதம் திகழ்கிறது என்பதாகும்.

இதன் மூலம் வேதத்தின் மையக்கருத்தின் திரட்சியே ஆகமம் என்பதும் அந்த ஆகமத்தின் நுண்பொருள் விளக்கமே நால்வர்செய்த நற்றமிழ் என்பதும் அதன் உள்ளுறை பொருளாக இருப்பதே சைவசித்தாந்த விளக்க நூலாகிய சிவஞானபோதம் என்பதுமாகிய கருத்து பெறப்படுகிறது.

வேதாந்த - சித்தாந்த - யோகாந்த - சமரசநிலை

திருமந்திரத்தில் "சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும் என்று திருமூலர் கூறிய வேதாந்த சித்தாந்த சமரச தத்துவ நெறியே சுமார் 5000 ஆண்டுகட்குமுன் நிலவிய பொதுக்கருத்தாகும். ஆகம வழியின்படி ஒழுகி ஆன்மயாத்திரைப் பயன் பெறுவது "சித்தாந்தம்' எனவும், வேத நியதியின்படி ஒழுகி அப்பயன் பெறுவது "வேதாந்தம்" எனவும் கொள்ளப்பட்டது. மேலும் ஆகமங்கள் அறிஞர்களால் சித்தாந்தம் என்றும் 'வேதசாரம்' என்றும் அழைக்கப்பட்டன.


திருமூலர் **வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் ஓதும் பொதுவும் சிறப்பும்** என்றும் **நாதன் உரையவை நாடில் இரண்டந்தம் பேதம் அவை என்பார் பெரியோர்க்கு அபேதமே** என்றும் கூறுவது உணரத்தக்கது. இதன் பொருள் வேதமும் , ஆகமும், இறைவன் அருளிய மெய் நூலாகும். இதில் வேதம் பொது என்றும், ஆகமம் சிறப்பென்றும் அறியப்படும். சிவபெருமான் அருளிய இந்த இரண்டு முடிந்த முடிவுகளும் வெவ்வேறு தன்மை உடையன என்பார் சிலர். பெரியோர்களுக்கு அவை இரண்டும் ஒன்றே" என்பதாகும்.

பின்னாளில், சிவபோகத்தமிழ்தலே (சிவமாதலே) வேதாந்த முடிபு எனஸ்ரீகண்டரும், ஆன்மாவும், பரமான்மாவும் பேதமற்றவை என்பது வேதாந்த முடிவு என ஸ்ரீ சங்கரரும், பரமான்மா ஆன்மாவின் உயிராய்நிற்கும் என ஸ்ரீ இராமானுஜரும், பரமன்மாவுக்கு ஆன்மா வேறாய் அடிமை பூண்டு நிற்கும்" என ஸ்ரீ மத்வரும் வேதாந்த சூத்திரங்கட்குக் கண்ட விருத்தியுரைகள் காரணமாக வேதாந்த, சித்தாந்த வேறுபாட்டுக் கொள்கைகள் வளர்ந்தன.

இடைக்காலத்தில் சித்தர்கள் சக்தி வழிபாட்டினை வலியுறுத்தி யோகாந்தம் எனும் கொள்கையின் மூலம் வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் இடையே சமரச நிலையைக் காண முயன்றனர். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தாயுமானவரும், 19ஆம் நூற்றாண்டில் இராமலிங்க அடிகளாரும், 20ஆம் நூற்றாண்டில் காந்திஅடிகளும் ஆற்றிய தொண்டின் விளைவாக, எல்லாசமயங்களும் கூறும் இறைவன் ஒருவனே, அவனே பரம்பொருள் எனக்கொள்ளும் **"சர்வசமய சன்மார்க்க் கொள்கை"** இப்போது வலிமை பெற்று வருகின்றது.

(திருவாவடுதுறை ஆதீனப் புலவர் சைவ சித்தாந்த ரத்தினம் காஞ்சி சிவ. சதாசிவம் அவர்களின் உரையிலிருந்து)

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற்றார்களே. — திருமந்திரம்.



ஸ்ரீதியாகராஜர்

உலகினைத் தனது செங்கோலால் நல்வழி நடத்தும் பெருமையை உடையவன் அரசன். அந்த அரசன் எவ்வழியோ அவ்வழியே அவனுடைய குடிமக்களும் செல்கின்றனர். அதனால் அரசனை வைத்தே அவனது குடிமக்களின் மாண்பும், பெருமையும் சிறந்தோங்குகின்றன.

அத்தகைய சிறப்பினைப் பெற்ற பூமண்டல சக்கரவர்த்திகளான மாமன்னர்களுக்கும், விண்ணாட்டை ஆளுகின்ற இந்திரர்களுக்கும், மேலான பெருந்தலைவனாக ராஜராஜ, ராஜாதிராஜனாக இருப்பவன் சிவபெருமான். அவன் தனது குடிமக்களான மண்ணுலகத்திலுள்ள மக்களுக்குப் பூமண்டலத்திலுள்ள சுகங்களையெல்லாம் தந்து, வானாளும் தேவர்களுக்கு வான்மண்டல சுகத்தையும் தந்து மகிழ்விக்கின்றான். தான் மட்டும் யாவற்றையும் துறந்து தியாகசீலனாக தனது தேவியுடன் ஆரூரில் இனிதமர்ந்து செங்கோல் செலுத்துகின்றான். அவனுடைய அந்த ராஜ கம்பீரமான கோலாகலத் திருவடிவமே தியாகராஜ வடிவமாகும்.

ஆன்றோர்கள் பொதுவாகச் சிவ பெருமானை விருப்பும் வெறுப்புமற்ற யோகியாக, வெண்பொடி பூசி, அஞ்சத்தக்க சுடலையில் ஆடிமகிழும் பித்தனாகப், போர்க்குணம் மிக்க மகாவீரனாக, சதாகாலம் தவத்தில் மூழ்கியிருப்பவனாகவே கண்டு போற்றி மகிழ்ந்துள்ளனர்.

ஆனால், அதற்கு நேர்மாறாகச் சிவபெருமானை அமைதியான போர்வீரனாய், வீரகட்கம் தரித்தவனாய், ஆடல் பாடல்களில் மகிழ்ந்திருப்பவனாய், தூயநல்ல நறுமணத்தை விரும்பி அணிபவனாய், இன்சுவைமிக்கப் பெருத்த நிவேதனங்களை விரும்புபவனாய், எல்லையற்ற சுகத்தில் லயித்திருப்பவனாய், மண்ணுலகத்தினை விரும்பி உறைபவனாய், மன்னர்களுக்கெல்லாம் மாமன்னனாய் இருப்பதாகக் கண்டு தரிசித்து, அந்த அரிய தெய்வீகக் காட்சியினை மற்றவர்களும் கண்டு மகிழ வேண்டுமென்று சித்தர்களும் ஆன்றோர்களும் யோகியர்களும் தமது அருட்காட்சியால் கண்டு அமைத்ததே இந்தத் தியாகராஜ வழிபாடாகும்.

தியாகேசப்பெருமானைச் சுற்றி இருப்பதெல்லாம், மண்ணுலகிலும் விண்ணுலகிலும் உள்ள சுகத்தின் குறியீடுகளான ஆடல், பாடல், தென்றல் வரும் வாசல், வசந்தம் முதலியனவாகும். ஆனால், அவனோ அவற்றைத் தமது மக்கள் நலம் பெற்று வாழத் தியாகம் செய்து விட்டு கொண்டி தேவியோடு தவயோகராஜனாக விளங்குகின்றான். அதனால் அவனைத் தியாகராஜன் என்று அழைக்கின்றோம்.

அவன் இன்பத்தின் நிறைவான சூழலில் இருந்தாலும் அதற்கு மாறுபாடான யோக நிலையில் நிற்பதால் அவனுக்குத் தியாகவிநோதன் என்பதும் பெயராயிற்று.

சைவநல்லுலகில் இரண்டு நிலையில் இறைவன் அரசனாகத் திகழ்கின்றான். ஒன்று ஆடலில் மகிழ்ந்து இடையறாது அதிரவீசியாடி ஆனந்தத்தாண்டவம் புரியும் நடராஜகோலம். இன்னொன்று அமைதியாக அமர்ந்தவாறு இருந்து இருந்தாடும் கூத்தினை நிகழ்த்தும் தியாகராஜத் திருக்கோலம்.

இம்மலரில் இறைவனின் தெய்வீக ராஜகம்பீரம் மிக்க, தியாகராஜ வழிபாட்டின் மேன்மையையும், சிவபெருமானான தியாகராஜர் பூமிக்கு வந்த வரலாற்றையும் அவருடைய பெருமைகளையும் காணலாம்.

தியாகராஜர் பூவுலகில் கோயில் கொண்ட கதை

பூலோக கயிலாயமான திருவாரூரில் ராஜாதிராஜனாகத் தியாகேசப்பெருமான் கோயில் கொண்ட வரலாற்றைப் பல்வேறு புராணங்கள் பலவிதமாகக் கூறி மகிழ்கின்றன. அப்படிக் கூறப்படும் வரலாற்றில் மூன்றினை இங்குக் காணலாம்.

I

(தியாகராஜரான சோமாஸ்கந்தர் திருவாரூரில் கோயில் கொண்ட வரலாற்றின் முதற்பகுதி சிவமஞ்சரியின் 13-வது மலரான சோமாஸ்கந்தரில் (பக்கம் 387-ல்) விளக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது சுருக்கமாக மீண்டும் ஒருமுறை இங்குக் கூறப்படுகின்றது.)

ஒரு சமயம் திருமால் ஒரு புத்திரனை வேண்டிக் கடுந்தவம் இயற்றினார். மழைக் காலங்களில் நீரிடைநின்றும், கோடைகாலங்களில் நெருப்பிடை நின்றும், பெருந்தவம் புரிந்தார். அவருடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான், உமாதேவியோடும், குமாரனோடும் கூடி அவருக்குக் காட்சியளித்தார்.

அப்பொழுது, திருமால் சிவபெருமானைப் பலமுறைப் பணிந்து வணங்கினார். அருகில் இருந்த உமையவளை வணங்க மறந்துவிட்டார். சிவபெருமான் அவர் விரும்பியபடியே ஒரு மகன் பிறக்க அவருக்கு வரம் அளித்தார்.

உமாதேவியார் திருமால் தன்னை அலட்சியம் செய்ததாகக் கோபித்துத் திருமாலை நோக்கி, "தமையனே சிவன் அளித்த வரத்தால் உமக்குப் பிறக்கும் குழந்தை அவராலேயே அழிவான்," என்று சாபமிட்டாள். இதனால் திருமால் மிகவும் வருந்தி உமையவளின் சாபத்தை நீக்கவேண்டி மீண்டும் தவம் செய்ய எண்ணினார். மூவரும் தமக்குக் காட்சி கொடுத்த கோலத்தை மனதில் எண்ணினார். தேவதச்சனான விசுவகர்மனைக் கொண்டு அந்தக் கோலத்தினை விவரித்துக்கூறி அதுபோன்று ஒரு திருவடிவினைச் செய்து தரும்படி ஆணையிட்டார். அதன்படியே அவன் ஒரு திருஉருவினைச் செய்தளித்தான். அதற்கு அவர் ஓர் ஆலயம் அமைத்து வழிபாடு செய்யத் தொடங்கினார்.

அந்த வடிவமே ★ சோமாஸ்கந்தர் என்னும் தியாகராஜர் வடிவமாகும். அவருடைய இந்தப் பூசையினால் மகிழ்ந்த மூவரும் முன்போலவே அவர் முன்பு தோன்றினர்.


திருமால் அந்த மூவரையும் போற்றி மிகச் சிறப்புடன் உமையவளைத் தனியாகப் போற்றினார். அவளிடம் தன் மகனுக்கு அவள் தந்த சாபத்தைப் போக்கியருளும்படி வேண்டினார். அதனால் மகிழ்ந்த தேவி, "தமையனே எனது சாபம் பலித்தே தீரும். சிவபெருமானின் கோபத்தால் அவன் அழிவான் என்றாலும் மீண்டும் நானே அவனை உயிர்ப்பித்துத் தருவேன். அவன் உடலின்றி அநங்கனாய், எமது சேனைத் தலைவனாகத் திகழ்வான். உலகம் காதலின் தெய்வமாகக் கொண்டாடும் சிறப்பைப் பெறுவான்" என்று கூறினாள். பிறகு மூவரும் திருமாலுக்குப் பலவரங்களைத் தந்துவிட்டு அந்த திருவுருவத் திலேயே ஒன்றிக்கலந்தனர்.

பின்னர் திருமால் அந்தத் திருவடிவத்தைப் பாற்கடலுக்கு எடுத்துச் சென்று தனது மார்பில் வைத்து யோகநிலையில் பூசித்துக் கொண்டிருந்தார். அவருடைய மார்பில் எழுந்தருளியிருந்த பெருமான் (திருமால்) மூச்சுவிடுவதால் உண்டான அசைவாலும், பாற்கடலில் எழுந்த அலைகளின் அசைவாலும் இடையறாது ஆடிக் கொண்டிருந்தார்.

ஒருசமயம் வாற்கலி என்ற அசுரன் தோன்றித் தேவர்களுக்குக் கடுந்துன்பம் அளித்தான். அவனுக்கு அஞ்சிய இந்திரனும், தேவர்களும் பிரம்மதேவனைச் சரணடைந்தனர். பிரமன் அவர்களைத் திருமாலின் இருப்பிடமான பாற்கடலுக்கு அழைத்துச் சென்று திருமாலிடம் புகலடையச் செய்தார்.

அப்பொழுது திருமால் தனது மார்பில் வைத்துப் பூசித்துக் கொண்டிருக்கும் தியாகேசப் பெருமானை இந்திரனிடம் அளித்து, "இவ்வடிவை இந்திரலோகத்தில் வைத்துப் பூசித்து வருவாய். இந்தச் சிவபூசையின் பயனால் உனக்கு உண்டான துன்பங்கள் தொலைந்து, இன்பம் உண்டாகும்" என்றார். அவன் அந்த வடிவினைப் பெற்றுக் கொண்டு இந்திரலோகத்தை அடைந்தான்.

இந்திரலோகத்தில் அந்த வடிவத்தைப் பெரிய



★ சோமாஸ்கந்தர் - ஸ : உமாஸ்கந்தர் (உமையுடனும் ஸ்கந்தனுடனும் கூடியிருப்பவர்)

கோயிலில் எழுந்தருள வைத்துத் தேவர் குழாத்துடன் சிறப்புடன் வழிபட்டு வந்தான். அதனால் தொல்லைகள் நீங்கின. தேவர்கள் அனைவரும் மகிழ்வுடன் இன்பத்தைப் பெற்றனர்.

தேவர்கள் அந்த தியாகராஜர் வடிவத்தைக் காமதேனுவின் பாலால் அபிஷேகித்து, கற்பக பாரிஜாத மலர்களைச் சூட்டிப் பலவகையான உபசாரங்களைச் செய்து சிறப்பாகப் போற்றி வழிபட்டுவந்தனர். இந்திரன் அவருடைய பூசையில் மகிழ்ந்து ஒன்றியிருந்தான்.

காலங்கள் மாறின. மீண்டும் வலன் என்ற அசுரன் தோன்றினான். அவன் படைதிரட்டிக் கொண்டு இந்திரன் மீது போர் தொடுத்தான். அந்த அசுரனுக்கு அஞ்சிய இந்திரன் மீண்டும் திருமாலைச் சரணடைந்தான்.

திருமால் இந்திரனிடம்', "அன்பனே அவன் மானுடரால் மட்டுமே அழியவேண்டும் என்ற வரத்தைப் பெற்றுள்ளான். எனவே நீ பூவுலகில் சோழமண்டலத்தை ஆண்டுவரும் மன்னனான முசுகுந்தன் என்ற மகாசிவபக்தனின் உதவியைப் பெறுவாய். அவனால் மட்டுமே இந்த வலாசுரனை வெல்லமுடியும் என்று கூறினார்.

அதன்படியே இந்திரன், முசுகுந்தசோழனின் துணைகொண்டு வலனை வென்றான்.

அந்த வெற்றிவிழாவைச் சிறப்புடன் கொண்டாடினான். தனது வெற்றிக்குத் துணைநின்ற முசுகுந்தனுக்குப் பலசிறப்புகளைச் செய்து தேவேந்திர உலகத்தில் தங்கச் செய்து தேவலோகத்தைச் சுற்றிக் காட்டினான்.

அவர்கள் பல இடங்களைப் பார்த்த பின்பு தியாகராசர் கொலுவீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்தனர். முசுகுந்தன் மிக்க மகிழ்ச்சி அடைந்து அப்பெருமானை வணங்கி நின்றான். தியாகராஜப் பெருமான் இந்திரன் அறியாதவாறு முசுகுந்தனிடம் (அவனுக்கு மட்டும் கேட்குமாறு) தாம் பூவுலகத்தில் எழுந்தருள விரும்புவதாகவும், தம்மை இந்திரனிடம் கேட்டுப் பெற்று சோழமண்டலத்தில் பிரதிஷ்டை செய்யுமாறும் கூறினார். இதனால் அதிசயமடைந்து முசுகுந்தன் தியாகேசப்பெருமானை முன்னிலும் பணிந்து வணங்கி விடைபெற்றான்.

இந்திரனும்! முசுகுந்தனும் தேவலோகத்தை முற்றும் பார்த்துவிட்டு இந்திரசபையை அடைந்தனர். இந்திரன், முசுகுந்தனுக்குப் பல பரிசுகளை வழங்கினான். பின்னர் அவனிடம், "அன்பனே, நீ வேண்டிய வரத்தைக்கேள், அதனை மகிழ்வுடன் உனக்குத் தருகிறேன்" என்று கூறினான்.

முசுகுந்தன், "தேவேந்திரனே"! எம்மிடத்தில் எல்லா செல்வங்களும் நிரம்பியுள்ளன. எமக்கு வேண்டியது எதுவுமில்லை. ஆனாலும் நீ வணங்கி வரும் தியாகராஜப் பெருமானை நாம் பூவுலகம் கொண்டு சென்று பூசிக்க விரும்புகின்றோம் அந்த வரமே நாம் விரும்புவது. அந்த வரத்தை எமக்கு அளிப்பாய்," என்றான்.

இந்திரனுக்குத் தியாகராஜரைப் பிரிய மனமில்லை. எனவே அவனிடம் "மன்னனே, இது திருமாலால் எமது துன்பம் நீங்கும் பொருட்டு எனக்கு அளிக்கப்பெற்றது. ஆதலால் அவருடைய அனுமதியைப் பெற்ற பிறகே இதனை நாம் உமக்குத் தரமுடியும்" என்றான்.

அதன்படியே இருவரும் பாற்கடலுக்குச் சென்று திருமாலை வணங்கி தத்தம் விருப்பத்தைக் கூறினர். திருமால் தனதுயோக சக்தியால் அங்கு நடந்ததை அறிந்தார். அவர் சிவபெருமான் பூவுலகம் சென்று திருவாரூரில் திருக்கோயில் கொள்ள விரும்புவதையும், தனதுவிருப்பத்தை நேரில் கூறினால் நீண்ட நாளாகத் தன்னைப் பூசித்து வரும் இந்திரன் துன்பமடைவான். ஆதலால் அந்த விருப்பத்தை முசுகுந்தனின் வரத்தின் மூலம் செயல்படுத்த உள்ளதையும் அறிந்தார். இந்திரனிடம், "தேவர் தலைவனே, உதவி செய்தவர்களுக்கு அவர்கள் கேட்ட வரத்தை அளிப்பதே முறையாகும். எனவே, நீ தியாகேசப்பெருமானை அவரிடம் கொடுத்துவிடு. நீ விரும்பிய போது பூவுலகம் சென்று பெருமானை வழிபடு" என்றார்.

திருமாலிடம் விடைபெற்றுக் கொண்டு இருவரும் மீண்டும் இந்திரலோகத்தை அடைந்தனர். இந்திரன் அன்றிரவு முசுகுந்தனை ஒய்வெடுத்துக் கொள்ளும்படி கூறினான். பின்னர் தேவதச்சனான விசுவகர்மனைக் கொண்டு தன்னிடமிருந்த தியாகராஜரைப் போலவே மேலும் ஆறு உருவங்களைச் செய்யச் சொன்னான். முதன்மை

மூர்த்தியுடன் அந்த ஆறு மூர்த்திகளும் பார்ப்பதற்கு ஒன்றுபோலவே இருந்தன. இவற்றுள் எந்தவிதமான வேறுபாடுகளும் தெரியவில்லை. அவற்றை அவன் ஒரே பீடத்தில் எழுந்தருளி வைத்தான்.

மறுநாள் சபைக்கு வந்த முசுகுந்தனை, இந்திரன் முன்னிலும் அன்பனாகித் தக்கவாறு உபசரித்தான். "தேவர் தொழு மன்றமான" தியாகராஜர் சபைக்கு அழைத்துச் சென்று, "நண்பனே, இங்கு ஏழு தியாகராஜ மூர்த்தங்கள் உள்ளன. இதில் நீ எதை விரும்புகிறாயோ அதை எடுத்துக் கொள்," என்றான்.

முசுகுந்தன்! அங்குள்ள ஏழு மூர்த்திகளையும் கண்டு திகைத்து ஒவ்வொரு மூர்த்தியிடமும் சென்று வணங்கினான். ஆனால் திருமால் வழிபட்ட மூர்த்தியிடம் சென்று வணங்கியபோது தம்மைக் கேட்டுப்பெறும்படி ஒலி எழுந்தது. அதுவே திருமால்வழிபட்ட மூர்த்தியென்று அவன் அறிந்து கொண்டான். இந்திரனிடம் அதனையே வேண்டிப் பெற்றான்.

பின்னர் இந்திரன், பூவுலகத்தில் சிவபெருமான் கோயில் கொள்ள விரும்புதலை ஒருவாறு உணர்ந்து அந்த மூர்த்தியுடன் மற்ற ஆறு மூர்த்திகளையும் அவனிடமே கொடுத்துப் பெரும் பரிசுகளையும் நல்கி அவனுக்கு விடை கொடுத்தான்.

முசுகுந்தன், ஏழு மூர்த்திகளையும் ஒரு பெரிய தேரில் வைத்துத் திருவாரூருக்குக் கொண்டு வந்து விழா நடத்தி மகிழ்ந்தான். பிறகு மூலமூர்த்திக்குத் திருவாரூரில் ஆலயம் அமைத்து அதில் அவரை எழுந்தருளி வைத்தான். மற்ற ஆறு மூர்த்திகளைப் பலகாலும் பூசித்த பின்னர்த் திருக்கோளிலி (திருக்குவளை), திருக்காறாயில் (திருக்காரவாசல்), திருமறைக்காடு. (வேதாரண்யம்). திருவாய்மூர், திருநள்ளாறு, நாகைப்பட்டினம் என்ற ஆறு தலங்களில் வைத்து ஆலயம் அமைத்தான்.

இப்படி முசுகுந்தனால் பூவுலகம் வந்த தியாகேசப்பெருமான் அன்று முதல் பல்வேறு திருவிளையாடல்களைப் புரிந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

இந்த வரலாறே சற்றுக் கூட்டியும் குறைத்தும் பல புராணங்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றைக் கமலாலயச் சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணத்தில் உள்ள சோமாஸ்கந்த சுருக்கம், கந்தபுராணம், திருவாரூர் சிறப்பு ஆகிய நூல்களில் காணலாம்.

II

இனித் தியாகேசர் பூமிக்கு வந்ததைக் கூறும் இரண்டாவது வரலாற்றைக் காணலாம். இதில் பெருமான், தானே விரும்பி வந்து பூவுலகில் குடியேறியதாகக் கூறப்பட்டுள்ளது. இது **"தியாகராஜலீலை"** என்னும் நூலில் உள்ளதாகும்.

ஒரு சமயம் பரமேசுவரன் தேவதச்சனான விசுவகர் மனை அழைத்துத், "தாம் பூவுலகில் நிலையாகத் தங்கியிருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்க விரும்புகின்றோம். அதற்கு உரிய இடம், இயற்கை எழில் சூழ்ந்ததும் எண்ணற்றத் திருக்குளங்கள் நிறைந்தும், நாம் வான்மீகர் என்ற பெயரில் சோழநாட்டில் எழுந்தருளியிருப்பதுமான திருவாரூர் ஆகும். அங்கு நாம் இருந்து அருள்பாலிக்கத்தக்க ஒரு பெரிய கோயிலை அமைப்பாய்" என்றார்.

அதன்படியே அவன் பெரிய மூங்கில் காடாக இருந்த இடத்தைச் சீர்திருத்திப் புதிய நகரமாக மாற்றி அமைத்தான். அதன் நடுவே பல துணைத் தேவர்களுக்குரிய சிற்றாலயங்களுடன் சிவபெருமானுக்கெனப் பெரிய ஆலயம் ஒன்றை அமைத்தான். மாட மாளிகைகள் கூட கோபுரங்களுடன் கூடியதாக எல்லையற்ற அழகுடன் அந்த நகரம் விளங்கியது.

அந்த நகரத்தில் அமைந்த இந்தப் புதிய ஆலயத்தில் இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கப் போகின்றார். என்ற செய்தி எங்கும் பரவியது. எனவே முனிவர்களும், தேவர்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும், மனிதர்களும் அங்குத் திரளாகக் கூடினர். தேவர்கள் பொற்கலசங்களையும், இரத்தின கலசங்களையும் ஏந்தியவாறு இறைவனை வரவேற்கக் காத்திருந்தனர். மனிதர்கள் வெள்ளாடை அணிந்து நெற்பொரிகளைப் பாதையில் தூவினர்.

கோபுரவாயில்களிலும், கோட்டை வாயில்களிலும் நெருப்பைப்போல் ஒளிவீசும் இரத்தினங்களைத் தோரணங்களாகக் கட்டினர். வழிநெடுக சந்தனக்குழம்பைத் தெளித்துப் பூமாலைகளால் நகரையும் ஆலயத்தையும் அலங்கரித்தனர். வேதம் வல்லோர் வேதங்களை ஓதி மங்கல வாழ்த்துக்களைப் பாடினர். அரம்பை, திலோத்தமை முதலிய தேவமாதர்கள் ஆடல்களால் பரவசப்படுத்தினர். தேவதுந்துபி முழங்கியது. அனேக

வாத்தியங்கள் பத்து திசைகளிலும் இனிமையாக ஒலித்தன.

வருஷ ஆரம்பமாகிய வசந்த காலப் பௌர்ணமியில் குரு சந்திரயோகம் சேர்ந்த கடக லக்னத்தில் பெருமான் அந்தத் தேவாலயத்தின் நடுவே வசிட்டபாகம் என்ற வேதமேடையில் தியாகராஜ ராகவும் அதன் அருகில் லிங்கவடிவாகவும் தோன்றினார்.

அந்த நிகழ்ச்சியைக் கண்டு தேவர்கள் பூமாரிப் பொழிந்தனர். அகஸ்தியர் முதலான முனிவர்கள் அனைவருங்கூடிச் சிவபெருமானுக்குப் புனித தீர்த்தங்களைக் கொண்டு நீராட்டி மங்கலவாழ்த்துக்களைப்பாடி, சிவாகமப்படி பூசைகள் செய்தனர். பெருமான் அவர்களது பூசனைக்கு மகிழ்ந்து அவர்கள் முன்பு தோன்றி அவர்களுக்கு வேண்டிய வரங்களைத் தந்து அருள்பாலித்தார். அன்று முதல் தியாகேசப்பெருமான் பூலோகக் கைலாயமான திருவாரூரில் வீற்றிருந்து அருள் பாலித்து வருகின்றார்.

III

மூன்றாவதாகச் சொல்லப்படும் "தியாகராஜர் பூமிக்கு வந்த வரலாறு" சாக்த தந்திரங்களில் உள்ளதாகும். இனி அதனைக் காணலாம்.

ஒரு சமயம் குருக்ஷேத்திரத்தில் தேவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி ஒரு பெரிய யாகத்தை இடைவிடாது செய்வதென்று தீர்மானித்தனர். பெரிய வேள்விச்சாலையை அமைத்து யாகத்தைத் தொடங்கினர். யாகத்தின் நடுவே, தமக்கு ஏற்பட்டக் களைப்பினால் பலர் சடங்குகளைத் தொடர முடியாமல் சோர்ந்து வீழ்ந்தனர். திருமால் மட்டுமே யாகத்தைத் தொடர்ந்து செய்தார். யாகத்தின் முதல்வெளிப்பாடாக யாகத்தீயினின்று ஒரு வலிமை பொருந்திய வில்லும் (தனுசு) தெய்வீக அஸ்திர, சஸ்திரங்களும் (அம்புகளும்) தோன்றின. அதனை ஏந்தி அவர் கம்பீரமாக நின்றார். தன்னைவிட தவம், யோகம், வலிமை ஆகியவற்றில் சிறந்தவர் எவருமில்லை என்ற அகங்காரம் அவர்மனதில் தலைதூக்கியது. தேவர்களோடு போரிட்டு இவர்களை வெல்வேன். இதுவே இப்பொழுது நான் செய்யத்தக்கது என்று எண்ணி, வில்லை வளைத்துத் தேவர்கள் மீது பாணங்களைத் தொடுத்தார். அவருடைய ஆற்றலுக்கும் யாகத்தில் தோன்றிய தனுசுவுக்கும் அஞ்சிய தேவர்கள் பல இடங்களுக்கும் ஓடி, இறுதியில் "பராசக்திபுரமான" திருவாரூரில் அடைக்கலம் புகுந்தனர்.

விடாது அவர்களைத் தொடர்ந்து வந்து திருவாரூரின் எல்லைக்குள் புகுந்த திருமாலின் உடலில் மாறுதல் உண்டாயிற்று. அவருக்கு அளவற்ற சோர்வும், களைப்பும் உண்டாயின. தனது வில்லைக் கீழே ஊன்றி அதன்மீது தலையை வைத்தவாறு அவர் ஓய்வெடுத்தார். அப்படியே உறங்கியும் விட்டார்.

இது தான் தக்க சமயமென்று தேவர்கள் கரையான்களாக உருவெடுத்து அவருடைய வில்லின் நாணினை அரித்தனர். இதனால் நாண் அறுந்து வில் நிமிர்ந்தது. அந்த வேகத்தில் திருமாலின் சிரத்தைத் துண்டித்துக் கீழே வீழ்த்தியது.

இதைக்கண்டு பிரமனும் தேவர்களும் அஞ்சி நடுங்கினர். என்ன செய்வது என்று அறியாமல், திருமாலை உயிர்ப்பிக்கச் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யத்தொடங்கினர். கரையானாக அவர்கள் கட்டிய புற்றிலிருந்து சிவலிங்கத் திருமேனியாக சிவபெருமான் வெளிப்பட்டு அவர்களுக்குக் காட்சியளித்தார்.

அவர்கள் பலமுறை சிவபெருமானை வணங்கி நடந்ததைக் கூறினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, "தேவர்களே! திருமால் முறைப்படி யாகத்தை முடித்திருந்தால் இன்னும் அனேக சிறந்த பொருட்களைப் பெற்றிருக்கலாம். திருமாலின் அவசரத்தால் யாகமும் பாதியில் நின்று விட்டது. குறைபட்ட யாகம் உங்களுக்குத் தீமையைத் தரும். திருமாலின் உடலில் அவருடைய தலையைப் பொருத்துங்கள். அவர் மீண்டும் உயிர் பெறுவார். அவரைக்கொண்டு விட்ட இடத்திலிருந்து யாகத்தை இங்கேயே தொடர்ந்து முடியுங்கள் என்றார்.

அதன்படி பிரமன் திருமாலின் உடலில் அவருடைய தலையைப் பொருத்த திருமால் உயிர் பெற்று எழுந்தார். தேவர்கள் அனைவரும் திருவாரூரில் மிகப்பெரிய யாகசாலையை அமைத்தனர். திருமாலை யாகத்தின் யஜமானாக அமர்த்தி அந்த வேள்வியைத் தொடர்ந்து செய்து முடித்தனர்.

சிறந்த முறையில் செய்த அந்த யாகத்தின் முடிவில் பலவிதமான பொருள்களுடன் சிவபெருமானின் திருமேனியும் தோன்றியது. அந்த திருமேனிக்கே தியாகசிந்தாமணி, தேவர்சிந்தாமணி என்று பெயர். அதனிடமிருந்து சிவபெருமான், உமாதேவியார் குமரப் பெருமான் ஆகிய மூவரும் தோன்றி அவர்களுக்கு அருள்பாலித்தனர்.

திருவாரூரில் தேவர்கள் யாகம் செய்து பெருஞ்செல்வங்களைப் பெற்றதால் அதற்குத் தேவயாகபுரம் என்பது பெயராயிற்று. புராணங்களில் திருவாரூருக்குத் "தேவயாகபுரம்" என்ற பெயரே காணப்படுகின்றது.

திருமால் தியாகராஜர் திருமேனியைப் பாற்கடலுக்கு எடுத்துச்சென்று பூசித்தார். பிறகு அதனை இந்திரனுக்கு கொடுத்தார். பலகாலும் பூசித்த அவன் சிவபெருமானின் ஆணையின்படிப் பூமண்டலத்தில் சிறந்த இடத்தில் அந்தத் திருமேனியை அமைக்க விரும்பினான். ஆகவே ஒரு துலாகோலில் உலகிலுள்ள தலங்கள் எல்லா வற்றையும் ஒருபக்கம் வைத்தும் திருவாரூரை ஒரு பக்கம் வைத்து நிறுத்ப்பார்த்தான். அப்போது திருவாரூரே மகிமைகளில் கனமிக்கதாக இருந்தது. எனவே (முன்பு புற்றிடத்தில் தங்களுக்குப் பெருமான் காட்சியளித்த இடத்திலேயே தனி ஆலயம் அமைத்து அங்குத் தியாகராஜரை எழுந்தருள வைத்தான். அன்றுமுதல் தேவர்கள் இங்குவந்து பெருமானை வழிபட்டு மகிழ்கின்றனர்.

இந்த வரலாறு சாக்த நூல்களில் மட்டுமே காணப்படுகின்றது. திருவாரூர் ஆலயத்தில் சந்திரசேகரர் எழுந்தருளியுள்ள சந்நிதியின் முகமண்டபத்தின் நாடக சட்டத்தில் தொடர் புடைப்புச்சிற்பமாக இந்த வரலாறு செதுக்கப் பட்டுள்ளது. தேவர்கள் கூடிநிற்றல் திருமால் யாகம் செய்தல் வில்லின் மீது தலையை ஊன்றித் தூங்குதல், அவருடைய தலையைப் பிரமன் உடலில் பொருத்துதல், மீண்டும் திருமால் யாகம் செய்தல், அதிலிருந்து தியாகராஜர் வெளிப்படுதல், திருமால் தியாகராஜரை வணங்குதல், இந்திரனுக்குத் தியாகராஜரை அளித்தல், இந்திரன் துலாக் கோயில் தலங்களை நிறுத்தல், திருவாரூரில் தியாகராஜரைப் பூங்கோயிலில் எழுந்தருள வைத்தல் ஆகியன செதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பங்களில் தியாகராஜர் சோமாஸ்கந்த வடிவமாகவே காட்சியளிக்கின்றார். இத்தொடரின் இறுதியில் சிறுகோயில்களில் வன்மீகநாத லிங்கமும், தியாகராஜரும் அடுத்தடுத்து அமைந்துள்ளது கண்டு மகிழத்தக்கதாகும். வடக்கு கோபுரத்திலும் இக்கதை தொடர்பான சுதைச்சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

மற்ற கதைகளை நோக்க இக்கதையோ, இது தொடர்பான சிற்ப, ஓவிய வடிவங்களோ அதிகமாக வழக்கத்தில் இல்லையென்றே கூறலாம்.

✱✱✱

இவ்வாறாகத் தியாகேசர் பூமிக்கு வந்த வரலாறுகள் பலவும் பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவையாவற்றிலும் மையக்கருத்துதாக விளங்குவது தியாகேசர் தாமே விரும்பி, பூவுலகிற்கு வந்து கோயில் கொண்டருளி அன்பர்களுக்கு அருள் பாலிக்கின்றார் என்பதேயாகும்.

இதனைப் பின்வந்த நூல்களும்,


மாயவன் மார்பம் என்னும்
மரகதமாம் மணிப் பூங்கோயில்
ஆயிரங்கட் கோமான் மேயதோர்
செம்பொற்கோயில் வெறுத்து
தூய ஆரூரில் வந்த தூயன் .... என்றும்

தேவராத்துள் திருநாவுக்கரசு நாயனாரால்

அயிராவணம் ஏறாது ஆனேறு ஏறி
அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே என் அம்மானே

என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானின் சிந்தையில் நிறைந்து அவர் விரும்பி உறையும் இடமாக இருப்பதால் செல்வத் திருவாரூர் பூலோக கயிலாயமாக சைவ அன்பர்களால் போற்றப்பட்டு வருகின்றது.



திருமால் தியாகராஜரைப் பூசித்தல் தகட்டு சிற்பம்-திருவாரூர்.

"பூங்கோயிலான" தியாகராஜரின் திருக்கோயில்

இந்நாளில் தியாகராஜப்பெருமான் எழுந்தருளியுள்ள சந்நிதி திருவாரூர் புற்றிடங் கொண்ட நாதர் கோயிலின் ஒரு அங்கமாக இருந்தாலும் அது சிறப்புமிக்க தனிக்கோயிலாகவே போற்றப்படத் தக்கதாகும். இது திருவாரூர்ப் பூங்கோயில் என்றுச் சிறப்பாக அழைக்கப்படுகின்றது. இது பூங்கோயில் என்று சிறப்பிக்கப்பட்டதால் கருவறையாகிய புற்றிடங்கொண்டநாதர் எழுந்தருளிய திருக்கோயில் திருமூலட்டானம் என்றுத் தனிப்பெயரால் அழைக்கப் பட்டது.

திருவாரூர் தியாகேசப் பெருமான் பூக்களை விரும்பி அணிகின்றார். அவருக்குரிய பெயர்கள் பலவும் செங்கழுநீர் தாமத்தார், செவ்வந்தித் தோடழகர், பிச்சியழகர் என்று பூக்களோடு தொடர்புடையதாகவே விளங்குகின்றன.

தேவர்கள் இப்பெருமானைப் போற்றி அந்தர்யாமியாக கற்பக மலர்களால் பூமழைபொழிந்து போற்றுகின்றனர் என்றுப் புராணங்கள் குறிக்கின்றன.

முசுகுந்தார்ச்சனையில் செவ்வந்தி, மல்லிகை, சண்பகம், இருவாட்சி முல்லை, மாதவி, செங்கழுநீர்பூக்கள், கருங்குவளைப் பூக்கள் முதலியவற்றைப் பெருமான் விரும்புவதாகக் குறித்துள்ளதும் இங்கு எண்ணத்தக்கதாகும். மேலும் இந்நூலில் ரம்பை என்ற தேவப்பெண் தியாகராஜருக்குப் பூசையின்போது பூக்களைத்தூவிப் புஷ்பாஞ்சலி செய்வதாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது முகுந்தார்ச்சனை செய்யும் போது பெரிய அளவில் பூப்பந்தல் அமைத்து கூடை, கூடையாகப் பூக்களைக் கொண்டு அர்ச்சிக்கின்றனர்.

இவர் திருமாலின் இருதய கமலமாகிய ஆலயத்தில் எழுந்தருளி இருந்ததாலும் இந்த ஆலயம் கமலாலயம் என அழைக்கப்பட்ட தென்பர்.

ஞானசம்பந்தப்பெருமான், ஆரூர் எம் பெருமானை மலர்தூவி வழிபடவேண்டுமென்பதைக் குறித்து, "ஆரூரை பத்திமலர்தூவ முத்தியாகுமே" என்றும்; "அணி ஆரூர் நன்பொன்மலர்தூவ இன்பமாகுமே" என்றும்; "ஆருரைக் கண்டு மலர்தூவ விண்டு வினைபோமே" என்றும்; "ஆரூர் வாசமலர் தூவ நேசமாகுமே" என்றும்; "ஆரூர் செய்யமலர் தூவ வையம் உமதாமே," என்றும் பாடியருள்கின்றார்.

தியாகராஜரின் சந்நிதிச் சுவரில் அமைந்துள்ள மூன்றாம் குலோத்துங்கசோழ மன்னனின் கல்வெட்டு ஒன்று இக்கோயிலைப் பூங்கோயில் என்றே குறிக்கின்றது.

திருமாலின் வடிவமே ஆரூர் பூங்கோயில்

திருமாலின் வடிவமாக விளங்குவது திருவாரூர் தியாகராஜர் சந்நிதியாகும். திருமாலின் சிரமாக கருவறையும் கழுத்தாக உள்வாயிலும், மார்பாக அர்த்த மண்டபமும் வயிறு, திருவடிகளாக மகாமண்டபமும் விளங்குகின்றன. எனவே முன்பு பாற்கடலில் திருமாலின் மார்பில் இருந்ததை நினைவு கூறும் வகையில் இங்குப் பெருமானை மூலத்தானத்தில் இல்லாமல் உள்மண்டபத்திலேயே எழுந்தருளச் செய்துள்ளனர். இந்த அமைப்பை ஒட்டியே பிற தியாகராஜஸ்தலங்களிலும் தியாகராஜர் கருவறையுள் இராமல் உள்மண்டபத்திலேயே எழுந்தருளியுள்ளார். கருவறை வெற்றிடமாக ரகசியஸ்தானமாக விடப்பட்டுள்ளது என்பர். இந்தக் கருவறைக்கு ஸ்ரீவாசம் லட்சுமிவாசம், இரகசியத்தானம் என்பன பெயர்களாகும்.

பூங்கோயில் பரிவார மூர்த்திகள்

விஷ்ணு வடிவான பூங்கோயிலுக்குரிய விநாயகர் மூலதார கணபதியாவார். இவர் மகா மண்டபத்துத் தூணில் எழுந்தருளியுள்ளார். தியாகேசர் சந்நிதிக்கு நேர்எதிரில் அவரைத் தொழுத வண்ணமாக சுந்தரமூர்த்திகள் உலோகத் திரு மேனியாக பட்டாடை தரித்து சுகமான போகயோக நிலையில் எழுந்தருளியுள்ளார். அவருக்கு இடப்புறம் பரவை நாச்சியாரும் வலப்புறம் அவருடைய தோழரான சேரமான் பெருமாள் எழுந்தருளி யுள்ளனர். புண்ணிய காலங்களில் நடைபெறும் தியாகராஜர் விழாக்களில் அவருடன் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் எழுந்தருளுகின்றார். தியாகராஜருக்கு எதிரில் திருநந்திதேவர் நின்ற வண்ணமாக காட்சி யளிக்கிறார். கருவறைக் கோட்டங்களில் தென்முகக்கடவுள், திருமால், பிரமன் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

தியாகராஜரின் திருமேனி - ஐஐந்தின் அப்புறத்தான்

தியாகராஜரின் திருவடிவம் எல்லையற்ற சிறப்புகளை உடையதாகும். இந்தத் திருமேனி இரகசியமாகப் போற்றப்படுகின்றது. இத்திருமேனியில் தியாகராஜரின் முகமும், அருகிலுள்ள தேவியாகிய கொண்டியின் முகமும் மட்டுமே தெரியும்படி விட்டு மற்ற அங்கங்களை. தியாக வண்ணம் எனப்படும் ஒருவகைத் துணியைச் சுவாமியின் மீது சுற்றிச் சுற்றி அணிவித்து அலங்கரித்துள்ளனர்.

இந்த வடிவத்தை (சிவபெருமானும் உமையும் வீற்றிருக்க இடையில் கந்தன் எழுந்தருளியிருக்கும்) சோமாஸ்கந்தரின் வடிவம் என்பர். முசுகுந்தார்ச்சனை இப்பெருமானை சோமாஸ்கந்தரின் பல்வேறு பெயர்களான அம்பிகாசுக சம்யுக்தன், சோமாஸ்கந்த ஸ்வரூபன், உமா குமார சகிதன், ஸ்ரீ சோமாஸ்கந்த வீதி விடங்க சாம்ப பரமேசுவரன் போன்ற பல பெயர்களால் குறிக்கின்றது.

அப்பர் தமது தேவாரத்தில் தியாகராஜரை **"ஐஐஞ்சின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே"** என்றுக் குறித்துப்பாடியுள்ளார். இதற்குப் பொருள் வரைந்தவர்கள் பின்வருமாறு கூறியுள்ளனர்.

சிவபெருமானுக்கு மகேசுவவடிவங்களாக இருபத்தைந்து திருவடிவங்கள் உள்ளன. அவை சதாசிவனின் ஐந்து முகங்களில் இருந்து ஒரு முகத்திற்கு ஐந்து வீதம் ஐந்து முகத்திலிருந்து இருபத்தைந்தாக வெளிப்பட்டன. இவ்வகையில் சதாசிவனின் ஈசானம் என்ற முகத்திலிருந்து தோன்றிய ஐந்து வடிவங்களில் முதலாவதாகத் திகழ்வது சோமாஸ்கந்தர் வடிவமாகும். ஆனால், அப்பர் பெருமான் தியாகராஜரை ஐஐந்தின் அப்புறத்தான் என்று, குறிப்பதால் அவருடைய திருமேனி இந்த ஐஐந்தில் ஒன்றான சோமாஸ்கந்தர் வடிவைக் குறிக்காது அதனையும் தாண்டிய நிலையில் பெருமான் உருவம் கொண்டு அருள்பாலிப்பதைக் குறிக்கும் என்பர்.

ஆயினும் புராணங்கள் தியாகராஜரின் திருமேனியைச் சிறப்புபெற்ற "சோமாஸ்கந்தர்" வடிவமென்றே குறிக்கின்றன. இது புராணத்தில்,

"தேசு பயில் நாரயணன் பால் இனிது பெற்று
செஞ்சுடர் வேற்குமரனோடும் தேவியோடும்
வாசன் பூசனை புரிந்த தேவ சிந்தாமணியே"

என்றுக் குறிப்பிடப்பட்டிருப்பது எண்ணத்தக்கதாகும்.

தியாகராஜரின் திருப்பெயர்கள்

திருவாரூர்ப் பெருமானுக்குத் தியாகராஜர் என்ற பெயர் வடமொழி வழக்கில் நெடுங்காலமாகப் பயிலப்பட்டு வந்தாலும், தேவாரமும், கல்வெட்டுகளும் ஆரூர்ப்பெருமானை வீதி விடங்கன் என்ற பெயராலேயே அழைத்து மகிழ்கின்றன. விடங்கர் என்ற சொல் இங்கு அழகன் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. வீதி விடங்கன் என்பதற்குத் திருவீதிகளிலே பவனிவரும் அழகன் என்று பொருள் கூறுவர்.

தேவாரம் ஆரூர்ப் பெருமானைப் "பவனி விடங்கர்" என்றும், "விடங்கராய் வீதிபோந்தார்" என்றும் குறித்து மகிழ்கின்றது. மேலும் இவருக்கு, இவருடைய ஆடை அலங்காரங்களினாலும் பவனியினாலும் பல்வேறு பெயர்கள் வழங்குகின்றன. அவற்றில் சிலவற்றை இங்குக் காணலாம்.

1. அசைந்தாடும் பெருமான்
2. அடிக்காயிரம் பொன்அளிப்பவர்
3. இரத்தின சிம்மாசனாதிபதி
4. கருணாகரத் தொண்டைமான்
5. கனகமணித் தியாகர்
6. தியாக விநோதர்
7. மணித்தண்டில் அசைந்தாடும் பெருமான்
8. செவ்வந்தித் தோடழகர்
9. செம்பொற் சிம்மாசனாதிபதி
10. இருந்தாடழகர்
11. கம்பிக்காதழகர்
12. வசந்த வைபோகத் தியாகர்
13. தேவசிந்தாமணி
14. முன்னிலும் மும்மடங்கு பின்னழகர்
15. தியாக சிந்தாமணி
16. அந்திக் காப்பழகர்
17. தியாகப் பெருமாள்
18. செம்பொன் தியாகர்
19. கிண்கிணிக் காலழகர்
20. தேவரகண்டன்

இது போன்று இவருக்கு அறுபதுக்கும் மேற்பட்ட பெயர்களும் அவற்றின் வழிவந்த பெயர்களும் இவரைச் சிறப்பிக்கின்றன.

தியாகராஜரின் சிறப்புகள்

ராஜாதிராஜனான தியாகேசப்பெருமானைச் சூழ்ந்திருக்கும் பொருள்களெல்லாம் அவருடைய தொடர்பினால் தனிச்சிறப்பைப் பெறுகின்றன. இவற்றின் சிறப்பையும் தனித்தன்மையையும் இக்கட்டுரையின் தொகுப்பு விளக்குகின்றது.

பூங்கோயில்

இது தியாகேசப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயம் (இதன் விரிவைப் பூங்கோயிலான தியாகரா ஜர் திருக்கோயில் என்ற தலைப்பில் காண்க பக்.456)

சிம்மாசனம்

பூங்கோயிலிலுள்ள முத்து விதானத்தின் கீழ் தியாகராஜர் எழுந்தருளியுள்ள பீடமாக விளங்குவது சிம்மாசனம் ஆகும். இதனைப் பலவகையான பெயர்களால் பலவேறு நூல்கள் குறிக்கின்றன. இது பதினாறு சிங்கங்களால் தாங்கப்படுவ தால் சிம்மாசனம் என்றழைக்கப்படுகிறது. இதனை ரத்தினசிம்மாசனம், மந்திரசிம்மாசனம், ஸ்ரீபீடம், பஞ்சப்பிரம்ம சிம்மாசனம் என்றும் அழைக்கின்றனர். மேலும் "துவாதசசாந்த மந்திரசிம்மாசனம் என்றும் அழைக்கப்படும். சந்தன மரத்தால் செய்யப்பட்ட இதன்மீது தங்கத்தகடுகளால் கவசமிட்டு அதில் கலைநயம்மிக்க நகாசு வேலை செய்யப்பட்டுள்ளது.

மலர்மழை

பூசைகளின்பொழுது தேவர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்த தேவ துந்துபிகளை முழக்கிக் கற்பகமரத்தின் பூக்களை மழைபோலப் பொழிவர். இதற்கு மலர்மழை அல்லது புஷ்பவிருஷ்டி என்று பெயர். இந்நாளில் புஷ்ப விருஷ்டியை நினைவு கூறும் வகையில் புஷ்பப் பந்தல் அமைக்கப் பெறுகின்றது. பூக்களைச் சொரிந்து பூசிப்பதும் உண்டு. இது தேவர்களிடமிருந்து பெருமான் இங்கு வந்ததற்கான சின்னமாகும். இப்பொழுதும் தியாகராஜர் பவனிவரும் போது அன்பர்கள் பூக்களை மழைபோல வழிநெடுகத் தூவுகின்றனர்.

புஷ்பாஞ்சலி

பூக்களைக் கைநிறைய எடுத்துச் சுத்த நிருத்தம் எனும் நாட்டியத்தை நிகழ்த்தி அதன் முடிவில் பெருமான் மீது பூக்களைத் தூவி அஞ்சலித்தல் புஷ்பாஞ்சலி எனப்படும். ஆடல் மகளான ரம்பை தினமும் பூஜையில் பெருமானுக்குப் புஷ்பாஞ்சலி செய்வதாகக் கூறுவர். முசுகுந்த அர்ச்சனை இதனை "ரம்பா புஷ்பாஞ்சலிப் ப்ரீதாய நம:" என்று குறிப்பிடுகின்றது. முன்னாளில் பதியிலார் எனப்படும் உருத்திர கணிகையர் இந்தப் புஷ்பாஞ்சலியைச் செய்வது வழக்கமாக இருந்தது என்பர்.

வெண்கவரிகள்

கவரிமானின் முடியினால் செய்யப்பெற்ற வெண்சாமரங்கள் அரசபோகத்தின் சின்னம். எனவே தேவாதிதேவ ராஜதிராஜனான பெருமானுக்கு வெண்கவரிகள் கொண்டு வீசுவது வழக்கம். இப்பொழுதும் மாலைநேரப் பூசையின் போதும், பவனி வரும் போதும் வெண்கவரிகள் வீசப்படுகின்றன.

வீரகட்கம்

பெருமானின் முன்பாக சாய்வாக வைக்கப் பெற்றுள்ள இரண்டு கத்திகளே வீரகட்கம் என்று அழைக்கப்படுகின்றன. இது பெருமானின் வீர ஆற்றலைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. முன்னாளில் பெருமான் பவனி வரும் போது இதனை ஏந்தி முன்னே செல்வர். இதற்கு வாள்வலம் செய்தல் என்பது பெயர். இன்னாளில் இவ்வழக்கம் இல்லை என்றாலும் தியாகராஜர் தேருக்கு எழுந்தருள்வதற்கு முன்பு நல்லவேளையில் இந்த வீர வெண்டயம் என்ற கத்திகள் பூசிக்கப் பெற்று வலம் வரச் செய்யப் பெற்று தேரில் அமைந்துள்ள பீடத்தில் வைக்கப் படுகின்றன. பெருமான் திருவாரூரில் அரசனாக வீற்றிருந்து ஆட்சிபுரிந்ததை இது குறிக்கிறதென்பர்.

தியாக பரிவட்டம்

தியாகராஜப் பெருமானுக்கு அணிவிக்கப் பெறும் நீண்ட துணியே தியாகபரிவட்டம் எனப்படும். இத்தகைய பதினெட்டுப் பரிவட்டங்களைக் கொண்டு பெருமானுக்கு உள் அலங்காரம் நடைபெறுகின்றது. அதன்மீது பட்டுத் துணிகளை அணிவித்து அதன்மீது நகைகள் அணிவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் புதிய பரிவட்டங்களை அணிவிப்பதே மரபு. உடுத்துக் களைந்த பரிவட்டங்கள்

அன்பர்களுக்குப் பிரசாதமாக அளிக்கப்படுகின்றன. இது வெள்ளை வேட்டியின் கரைகளில் ஐந்து கோடுகளைக் கொண்டது. பத்துமுழம் கொண்ட வெள்ளை வேட்டியில் கருநீலமும், காவிநிறமும் அடுத்தடுத்து அரை அங்குல, அகலத்தில் கரையாக ஐந்து வரிகள் இடப்பட்டுள்ளன. இதில் தியாகேசா என்ற பெயரை எழுதிவைப்பதும் உண்டு. இது தியாக வண்ணம் எனவும் அழைக்கப்படுகின்றது.

❁ இலிங்கப்பட்டு

தியாகராஜர் சிம்மாசனத்தின் மையப்பகுதியில் அமர்ந்துள்ளார். அவருக்கு இடப்புறம் கொண்டிதேவி அமர்ந்துள்ளாள். வலப்புறம் நீலநிறபட்டுத் துணியில் சரிகையால் ஒரு லிங்கவடிவம் பொறிக்கப்பட்டு அணிவிக்கப்படுகின்றது. இந்த லிங்கம் பூமிதத்துவ லிங்கமாகும். சிறப்பு நாட்களில் மட்டுமே இது அணிவிக்கப்படும்.

❁ குசுமப்பட்டும், மான்தோலும்

பெருமானுக்குச் செம்பட்டாலாகிய ஆடைகள் அணிவிக்கப்பட்டு வந்தன. இவை குசுமப்பட்டு என்று அழைக்கப்பெற்றன. மென்மையான மான்தோலால் ஆன ஆடைகளும் குளிர்காலத்தில் அணிவிக்கப் பட்டன. இப்பொழுது இவற்றைப் பற்றிய விவரம் தெரியவில்லை.

❁ கிருஷ்ணகந்தம் (தியாகவிநோதம்)

பெருமானுக்கு மாலையிலும் காலையிலும் அணிவிக்கப்பெறும் கருஞ்சாந்தே "கிருஷ்ணகந்தம்" எனப்படும். இது பதினெட்டு மூலிகைகள், சந்தனக்கட்டை, தூயநெய் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படுவதாகும். இதனைப் பெருமானின் செவ்வந்தித் தோடுகளில்பூசி அதனை அணிவிப்பது டன், மாலைநேரப் பூசையில் அன்பர்களுக்கு அளிக்கும் விபூதியிலும் கலந்து தருகின்றனர். இதனைத் தியாகவிநோதம் என்றும் அழைப்பர். இது தினமும் அணிவிக்கப்பெற்றாலும் தேரில் ஏற்று வதற்கு முன்னாள் மாலையில் சிறப்புடன் பூசை செய்து அணிவிக்கின்றனர். இது வழிவழியாக முதலியார் இனத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினரால் தயாரித்து அளிக்கப்பட்டு வருகின்றது. இதற்குச் "திருச்சாந்து" என்றும் இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளை, திருச்சாந்துக் கட்டளை என்றும் அழைக்கப்பெறுகின்றது.

❁ பச்சைகற்பூரம்

பிற ஆலயங்களில் பெருமான் தேருக்குச் செல்வதற்கு முன்னாளில் கிருஷ்ண கந்தம் எனப்படும் கருஞ்சாந்து அணிவிக்கப்படும். அதற்குப்பதிலாக இங்குப் பெருமானுக்குப் பச்சைகற்பூரம் சார்த்தப்பட்டு அது தனிவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

❁ நறுந்திலகம்

தியாகேசருக்குக் குங்குமம், செந்தூரம் போன்றவற்றை இடுவதில்லை. சந்தனத்தில் மீது குங்குமப் பூவையும் பச்சைக் கற்பூரத்தையும் சேர்த்து இழைத்தால் வரும் சிவப்பு நிறத்திரவியத்தையே திலகமாக இடுகின்றனர்.

❁ தலைச்சீரா

இது இறைவனின் திருமுடியை அலங்கரிக்கும் ஒருவகை அணி வகையாகும். இது உயர்ந்த ஜாதிக் கற்கள் இழைத்துச் செய்யப்பெற்ற சதுரவடிவமான அணிகலனாகும். இதற்குச் சூடாமணி என்பது பெயராகும். இது "சூளாமணி சேர் முடியான் தன்னை" என்று அப்பரடிகள் ஆரூர்ப்பதிகத்தில் குறிக்கப் பட்டுள்ளது.

❁ கங்கை வெண்பிறை

பெருமானின் திருமுடியின் மீதுள்ள தலைச்சீராவின் இருபுறமும் பிறைச் சந்திரனைப் போன்ற இரண்டு அமைப்புகள் உள்ளன. இதிலொன்று கங்கை, மற்றது வெண்பிறை ஆகும்.

❁ செவ்வந்தித்தோடு

மேற்சொன்ன பிறைகளையொட்டி திருமுடி யின் இருபுறமும் பூவால் தொடுத்து அமைக்கப்பெற்ற இரண்டு வட்டங்கள் உள்ளன. இது செவ்வந்திப் பூக்கள் கிடைக்கும் காலத்தில் அவற்றாலும், கிடைக்காத காலங்களில் மல்லிகை சண்பகம் இவற்றாலும், பன்னீர்இலைகளாலும் கட்டி அணிவிக்கப் பெறும். இவை ஜவ்வந்தித் தோடுகள் என்று அழைக்கப்பெறும். இதில் கிருஷ்ண கந்தத்தைப் பூசி பெருமானுக்கு அணிவிக்கின்றனர். இதனால் இவருக்குச் செவ்வந்தித் தோடழகர் என்பது பெயராயிற்று.

❁ திருப்பணி

இது பெருமானுக்கு அணிவிக்கப்படும் மாலையாகும். பன்னீர் புஷ்பங்கள் அல்லது பன்னீர் இலைகளால் தொடுக்கப்படுகின்றது. அபிஷேக

காலங்களில் சுவாமி, அம்பிகை, குமரன் ஆகிய மூவரின் கிரீடத்திலும் இந்தப் பன்னீர் இலைகளால் கட்டப்பட்ட பணி எனும் மாலைகள் சுற்றப் பட்டிருப்பதைக் காணலாம். சந்தன அபிஷேகத்தின் போது தூபத்தால் வாசனை யூட்டப்பட்ட பன்னீர்புஷ்பங்கள் இலைகளாலான மாலைகள் அணிவிக்கப்படுகின்றன. செவ்வந்தித் தோட்டையும் இந்தப் பணிமாலையையும் சேர்த்து "பணிமாலைத் தோடு" என்ற பொதுப்பெயரால் அழைக்கின்றனர்.

❁ சிரமாலை

தியாகராஜரின் மார்பில் திகழும் கல்லிழைத்த பதக்கங்களுக்கு இருபுறமும் கரைபோட்டது போன்று தலைமாலைச்சரம் ஒன்று திகழ்கின்றது. இது பிரம்மனின் சிரங்களைக் கோர்த்தமைத்த மாலை யாகும். உலகினைப் படைக்கும் தொழிலையுடைய பிரம்மாவின் ஆயுள்முடிந்து அவன் மறையும் போது அவனுடைய சிரத்தைப் பறித்து பெருமான் தனது மாலையில் அணிந்து கொள்வார். இப்படி கோடானுகோடி ஆண்டுகளில் படைத்து அளித்து மாண்டுபோன பிரமர்களை நினைவு கூறும் வகையில் அமைந்ததே இந்த மாலையாகும். இதனால் தியாகராஜர் ஆதியும் அந்தமும் இல்லாத பெருமான் என்பதை உணரமுடிகின்றது. பெருமான் இந்த மாலையினைச் சூடியுள்ள செய்தி தேவாரத்தில், "தலையுருவச் சிரமாலை சூடினான் காண்" என்று அப்பர் பெருமானால் குறிக்கப்பெற்றுள்ளது.

❁ ஆழிவளைக் கையான்

கால்களில் வீரக்கழல் அணிவதுபோல கையில் அணியப்பெறும் மோதிரங்களுக்கும் காப்புக்கும் + ஆழிகள் என்பது பெயர். இதனால் பெருமானுக்கு **ஆழிவளைக்கையான்** என்பது பெயராயிற்று. தேவாரம் இதனை "ஆழிவளைக் கையானும் ஆரூர் அமர்ந்த அம்மானே" என்று கூறுகின்றது.

❁ அர்ச்சனை

தியாகராஜருக்கு முகுந்தனாகிய திருமால் செய்த ஆயிரம் நாமங்கொண்ட முகுந்தார்ச்சனை, இந்திரன் செய்து மகிழ்ந்த இந்திர சகஸ்ரநாம அர்ச்சனை, முசுகுந்தன் செய்து வழிபட்ட முசுகுந் தார்ச்சனை ஆகிய மூன்றும் சிறப்பாக உள்ளன. (இவற்றின் விரிவைத் தனிக்கட்டுரையில் காண்க)

❁ செங்கழுநீர்ப்பூக்கள்

சிவபெருமானுக்குரியவை செங்கழுநீர் பூக்களாகும். இது வடமொழியல் கல்ஹார புஷ்பம் எனப்படும். பல ஊர்களில் இறைவனுக்கு செங்கழுநீர் பூச்சூட்டுதலுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்தியதைக் கல்வெட்டுகள் குறித்தாலும் நடைமுறையில் இன்றுவரை செங்கழுநீர்பூக்களையும் இலைகளையும் பூசைக்குப் பயன்படுத்துவது திருவாரூர் தியாகேசர் வழிபாட்டில் மட்டுமேயாகும். இதற்காக ஐந்து வேலி பரப்புள்ள ஒரு ஓடை விடப்பட்டுள்ளது. இதற்குச் செங்கழுநீர் ஓடை என்பது பெயர். செங்கழுநீர்ப் பூக்கள் கிடைக்காத காலங்களில் அதன் இலைகளைக் கொண்டாவது தினமும் பூசை நடைபெறுகின்றது.

❁ அந்திக்காப்பு

தியாகராஜருக்கு உரிய வழிபாட்டில் சிறந்தது மாலைக்கால வழிபாடு ஆகும். இதுவே அந்திக்காப்பு என்று அழைக்கப்படும். தேவேந்திரனே தினமும் மாலையில் இந்தப் பூசையைச் செய்வதாக ஐதீகம். முன்னாளில் இங்குப் பூசிக்கும் அர்ச்சகர்கள் தலையில் கிரீடம், தோளில் நீண்ட அங்கி ஆகியவற்றை அணிந்து பூசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இப்பூசையின் போது கவரிகள் வீசுவர். ஆலவட்டம் வீசுவதும் உண்டு. இதில் பதினாறு வகையான வாத்தியங்களை முழக்குவது வழக்கமாகும். அதிலும் சுத்தமத்தளத்தைச் சிறப்பாக வாசிக்கின்றனர்.

இந்தப் பூசையின் போது அலங்காரங்களும் உபசாரங்களும் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. இதனால் பெருமானுக்கு "அந்திக்காப்பழகர்" என்பது சிறப்புப் பெயராயிற்று. இந்நாளில் சுத்தமத்தளமும், திருச்சின்னமும் மட்டுமே வாசிக்கப்படுகின்றன. அருச்சகர்கள், யோகபட்டம் என்ற வகையில் மேல் துண்டை பூணூல் போல அணிந்து பூசிக்கின்றனர்.

❁ திருச்சாலகம்

தியாகராஜர் எழுந்தருளியுள்ள இடத்தின் தென்புறமும், வடபுறமும் எதிர் எதிராக இரண்டு ஜன்னல்கள் உள்ளன. இவை தென்றல் தவழ்ந்து வர உதவுவதாகும். இது திருச்சாலகம், திருச் சாரளம் எனப்படும். முன்னாளில் தெற்கு ஜன்னலின் புறமிருந்து உருத்திர கணிகையர் பாடுவார்கள் என்றும், வடக்கு ஜன்னல் அருகிலிருந்து அந்தப் பாடலைப் புல்லாங்குழலில் வாசிப்பார்கள் என்றும் கூறுகின்றனர்.

❀ தேவாச்சிரயம்

தியாகராஜரைதப் பூசிக்க வரும் தேவர்கள் தங்கள் முறை வரும் வரை தங்கியிருக்கும் இடம். இது தேவ+ஆச்சிரியம் எனப்படும். ஆச்சிரயம், என்றால் விரும்பியிருக்கும் இடம், தேவர்கள் விரும்பி இருப்பதால் இப்பெயர் பெற்றது. இதுவே இந்நாளில் ஆயிரங்கால் மண்டபமாகத் திகழ்கிறது. இது பெருமான் வசந்த காலத்தில் தங்கிப் பூசனையைப் பெறும் இடம். பக்தர் காட்சிக்கு எழுந்தருள்வதற்கு முன்பு அவருக்கு இங்குப் பெரிய அளவில் அபிஷேகம் செய்கின்றனர்.

தேவாச்சிரய மண்டபத்தை வணங்கிய பின்னரே கோயிலுக்குள் சென்று பெருமானை வணங்கும் வழக்கம் இருந்தது. இதனை,

'கற்பகவாச மாலைத் தேவாசிரயன்
தொழுது இறைஞ்சி மூலட்டானம் சூழ
திருமாளிகை வாயில் புக்கார்'

என்று வரும் பெரியபுராணத் தொடரால் அறியலாம். தேவர்கள் மட்டுமின்றி பூவுலகில் வாழ்ந்து வந்த சிவனடியார்களும் அங்குக் கூடியிருந்தனர். இவர்களைத் தொழுது வணங்காமல் சென்ற சுந்தரமூர்த்திகளை விறண்மிண்ட நாயனார் கோபித்தார். அதனை அறிந்த தியாகேசர் சுந்தர மூர்த்திகளை, "தில்லைவாழ்அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கி திருத்தொண்டத் தொகையைப் பாடும்படி பணித்தார். இதன்மூலம் தான் தொண்டர்க்குத் தொண்டனாக இருப்பதைத் தியாகேசர் உணர்த்துகிறார். இந்த மண்டபத்தின் பெயரால் திருவாரூருக்கே "தேவாச்சிரியபுரம்" என்பதும் பெயராயிற்று.

ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு 49-வது கேயமாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்துத் திருவாரூர் உடையார் வீதி விடங்கதேவர் தேவாசிரியனில் எழுந்தருளியிருந்து புக்கத்துறை வல்லவத் தலைக்கோலியை ஆட்டங் கண்டருளா நிற்க....." என்பன போன்ற பல கல்வெட்டுகளின் மூலம் தேவாசிரிய மண்பத்தில் தியாகராஜர் வீற்றிருந்து நடனமும், நாடகமும் கண்டு இசையும் கேட்டு மகிழ்ந்ததை அறிய முடிகிறது.

❀ தக்கார்க்குத்தக்கான்

இது தியாகராஜரின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும் இதன் பொருள் தகுதி உடையவர்களுக்கு தக்கவாறு உதவுபவன் என்பதாகும். ஆயிரங்கால் மண்டபத்திலுள்ள பல தூண்களில் இப்பெயர் பொறிக்கப்பட்டுள்ள தென்பர்.

❀ திருமருந்து

தியாகேசப் பெருமான் வீதிகளில் பவனிவந்து தமது இருப்பிடத்திற்கு எழுந்தருளியதும், வீதிகளில் ஆடிய அசதி நீங்க அவருக்கு மருந்து ஒன்று நிவேதிக்கப்பெற்று, ஸ்ரீபாதம் தாங்கிகளுக்கு அளிக்கப்படுகின்றது. இது சுக்கு, மிளகு, திப்பிலி, வெல்லம் ஆகியவற்றைக் கலந்து தயாரிக்கப் பட்டதாகும். இது போன்று தவனப்புளி, அம்பாரப்புளி என்ற மருந்துகளும் அளிப்பர் என்று கூறுகின்றனர்.

❀ வசந்த விழா

தியாகராஜருக்குச் செய்யப்படும் விழாக்களில் முதன்மைபெற்றது வசந்த விழாவேயாகும். திருமாலின் தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவருக்கு அருளிய மகனே வசந்தன் எனப்படும் மன்மதன். அவன் தியாகராஜரைப் போற்றி வழிபட்டதே வசந்த விழாவாகும். இதனால் இவருக்கு வசந்த வைபோகத் தியாகராஜர் என்பது பெயராயிற்று. இரதியும் (மன்மதனாகிய) வசந்தனும், அவன் தம்பியாகிய சாமனும் இந்நாளில் இங்கு வழிபடுகின்றனர் என்பர்.

முன்பு பெருமானின் மீது அகங்காரத்தால் மலர்பாணம் தொடுத்த மன்மதன், அவருடைய நெற்றிக் கண்ணால் வெந்து மாண்டான். அதனால் துன்புற்ற அவனுடைய மனைவியான ரதிதேவி தன்னுடைய மாமனாரான திருமால் முன்பு சோமாஸ்கந்தரான தியாகராஜரைப் பூசித்ததைப் போலத் தானும் பெருமாளைப் பூசித்தாள். அவளுடைய அன்பான வழிபாட்டிற்கு இரங்கிய தியாகராஜப் பெருமான் அவளுக்குக் காட்சியளித்தார். அப்பொழுது ரதிதேவி முன்னைய தவறு நேராதிருக்கும் பொருட்டு முதலில் பார்வதிதேவியை வணங்கி, பின்பு குமரனையும், பெருமானையும் பணிந்து போற்றினாள். அப்பொழுது தேவி தான் முன் சொன்னதை நினைந்து மன்மதனை உயிர்ப்பித்து எழுப்பி ரதியின் கண்களுக்கு மட்டுமே தெரியும்படி அருள்பாலித்தாள். ரதியும், மன்மதனும் மகிழ்ந்து பெருமானுக்குப் பெருந்திருவிழாவைச் செய்து

மகிழ்ந்தனர். அதுவே அவன் பெயரால் வசந்தன்விழா என்று அழைக்கப்பெறுகின்றது. பெருமானுக்கு உரிய விழாக்களில் வசந்தவிழாவே தலை சிறந்ததாகும்.

இது பங்குனி மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் கொண்டாடப்படுவதாகும். இந்நாளில் ஆரூர் ஆலயத்தின் எட்டு திக்குகளிலும் கொடியேற்றித் திருவிழாக் கொண்டாடுகின்றனர்.

❁ அபிஷேகம்

தேவலோகத்தில் தியாகராஜப் பெருமானுக்குத் தேவர்கள் பூசை செய்ததன் நினைவாக ஓராண்டில் எட்டு நாட்களில் மட்டுமே அபிஷேகம் செய்யப் படுகின்றது. மற்றைய தினப்படி அபிஷேகங்கள் யாவும் விடங்கர் எனப்படும் மரகத லிங்கத்திற்கே செய்யப்படுகின்றன.

தியாகராஜப் பெருமானுக்கு 1. சித்திரை முதல் தேதி, 2. ஆடிமாத அயனம், 3. ஐப்பசி விஷு, 4. தை முதல் தேதி, 5. மார்கழி திருவாதிரை, 6. பங்குனி உத்திரம் ஆகிய ஆறு நாட்களில் ஆண்டுதோறும் அபிஷேகம் நடைபெறுகின்றது. விழாக்கள் நடைபெறும் காலத்தில் தேரில் இருந்து இறங்கியதும் அன்றிரவு நடைபெறும் பிராயசித்த அபிஷேகமும், பக்தர் காட்சிக்கு முன்பு பகலில் நடைபெறும் மகா அபிஷேகமும் ஆக இரண்டு அபிஷேகங்கள் சிறப்புடன் செய்யப்படுகின்றன. இவை தவிர கிரகண புண்ணிய காலங்களிலும் அபிஷேகம் நடைபெறு கின்றன. இவ்வையாவும் கோயில் திட்டப்படியே நடத்தப்படு கின்றன. பால், தயிர், பஞ்சாமிருதம், தேன், இளநீர், கருப்பஞ்சாறு, 108 சங்குத்தீர்த்தம், வலம்புரிச்சங்குத் தீர்த்தம், காண்டா மிருகத்தின் கொம்பில் நிறைக்கப் பட்ட நீர், பூர்ண கும்ப நீர், சந்தனம் ஆகியவற்றால் வேதமந்திரங்களை ஓதி அபிஷேகம் செய்யப்படுகின்றது. அபிஷேகத்திற் குரிய நீரில் ஏலம், இலவங்கம், விளாமிச்சைவேர் ஆகியன கலக்கப்படுகின்றன. அபிஷேக காலங் களிலும் துணியால் பெருமான், அம்பிகை, குமரன் ஆகியோரின் திருமேனிகள் மூடப்படுகின்றன. தலையிலுள்ள கிரீடம் தெரியாதவாறு பன்னீர் இலைகளால் தொடுத்த இண்டை அணிவிக்கப்படு கின்றது. அதன்மீதே அபிஷேகம் செய்யப்படு கின்றது. அன்பர்களுக்கு இறை வன், இறைவி, குமரன் ஆகிய மூவரின் முகம் மட்டுமே தெரிகின்றது.

❁ பாததரிசனம்

தியாகராஜரின் திருமேனியழகைக் காண முடியாவிட்டாலும் அவருடைய திருவடியின் அழகைக் கண்டு களிக்கலாம். பங்குனி உத்திர நாளிலும், மார்கழித் திருவாதிரை நாளிலும் பெருமானின் திருவடிகளைப் பக்தர்கள் கண்டு மகிழ வகை செய்துள்ளனர். இந்நாளில் பெருமானின் வலது பாதத்தையும் தேவியின் இடது பாதத்தையும் காணலாம். பெருமானின் பாதத்தை ஒரு நாகம் தாங்குவது போலவும் அம்பிகையின் பாதத்தை ஒரு தாமரை தாங்குவது போலவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நாளில் மட்டும் இடையிலுள்ள சுந்தரரை நன்கு காணமுடிகின்றது. அவருக்குத் தங்கக் கவசம் அணிவித்து இரத்தின மாலைகளைச் சூட்டுகின்றனர். இதனை உருத்திரபாத தரிசனம் என்பர்.

மார்கழி திருவாதிரையில் சிவபெருமானின் இடது பாத தரிசனத்தைச் சிதம்பரத்தில் கண்டு மகிழ்ந்த பதஞ்சலி, வியாக்ர பாதர் எனும் முனிவர்கள் இங்கு வந்து பங்குனி உத்திரத்தில் பெருமானின் வலது பாதத்தைக் காணும் பேறு பெற்றனர் என்பர். அந்த நினைவாகவே பெருமானின் திருவடியைக் காட்டும் நிகழ்ச்சி அமைகின்றது என்பர்.

முன்நாளில் திருவிளமர் எனும் தலத்திலிருந்து பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர்களின் உலாத்திரு மேனிகளைப் பாததரிசனம் காணத் திருவாரூர் தியாகராஜர் சந்நிதிக்கு எடுத்து வந்து பூசிப்பது வழக்கமாக இருந்தது.

❁ முன்னிலும் மும்மடங்கு பின்னழகு

பெருமானின் பின்னழகு சிறப்புமிக்கதாகும். இதற்குத் தங்கக்கவசம், பொருத்தியுள்ளனர், அழகாகப் பின்னிய சடை உள்ளது. மணிகள் இழைத்த இந்தச் சடை பெண்ணுக்கு உரியது போல் உள்ளது. இந்த சடையழகு கண்டு மகிழத்தக்கது. இது திருமேனியில் இயல்பாக இருப்பதில்லை, அலங்காரத்தால் செய்யப் பட்டுள்ளது. இதனால் முன்னிலும் மும்மடங்கு பின்னழகர் என்பது இவருக்குப் பெயராயிற்று.

❁ கிண்கிணிக் கால் அழகர்

பெருமானின் பாதங்களில் கிண்கிணிகள் அணிவிக்கப் பெற்றுள்ளன. எனவே அவர் கிண் கிணிக்காலழகர் என்று அழைக்கப்படுகின்றார். இந்தத் திருவடியை, அப்பர் பெருமான் "ஆடவரக்

கிண்கிணிக்கால் அன்னானோர் சேடனை" என்று பாடியுள்ளார்.

❁ திருநாமம்

பெருமானுக்கு எண்ணில்லாத பெயர்கள் இருந்தாலும்"தியாகேசன்" எனும் ஐந்தெழுத்தினாலான பெயரே பெரிதும் சிறந்ததாகும். அது அழைப்பாக வரும் போது "தியாகேசா" என்றுக் கூறப்படும். நான்கு வேதப் பொருளாகவும் அதன் பயனாகவும் இருப்பவன் பெருமான் என்பதையே இந்த நான் கெழுத்துக்கள் குறிக்கிறதென்பர் தியாகேசனின் ஸ்ரீபாதம் தாங்கிகள் அஜபா நடனம் ஆடும் போது "தியாகேசா, தியாகேசா" என்றே பெருத்த குரலில் கூவியபடி ஆடுகின்றனர். ஆனால் பண்டைநாளில், "ஆரூரா! ஆரூரா!" என்று அழைப்பதே வழக்கமாக இருந்தது என்பர். அப்பரடிகளும் பல இடங்களில், "ஆரூரா! ஆரூரா!" என்றே பாடியுள்ளார்.

சில இடங்களில் 'ஆரூரா' தியாகேசா' என்று இரண்டு திருப்பெயர்களையும் இணைத்து வழங்குவதையும் காண்கின்றோம். திருவாசகத்தில் மணிவாசகப்பெருமான் சிவபெருமானுக்குரிய தசாங்கத்தில் அவருக்குரிய பெயராக "ஆரூரன்" என்ற பெயரையே குறிக்கின்றார்.

❁ மாணிக்கத்தண்டு

தியாகராஜப் பெருமானின் அஜபா நடனத்தை நிகழ்த்த உதவும் வகையில் அமைந்ததே மாணிக்கத் தண்டாகும். பெருமான் எழுந்தருளியுள்ள அகன்ற சிங்காதனமாகிய பீடத்தின் இரண்டு புறமும் கல் மூங்கிலாலான நீண்ட வாரைகளை வைத்து அவற்றினை முன்னும் பின்னும் புதிய நீண்ட துணியைப் பின்னி அதில் வெள்ளிகவசமிட்ட மணித்தண்டை இணைக்கின்றனர். இது மாணிக்கத் தண்டு எனவும் பிள்ளைத் தண்டு எனவும் அழைக்கப் பெறும். மூங்கில் வாரைகளில் திண்டுகளை வைத்து சிம்மாசனத்தை வைப்பதைத் தவிர இருக்கிக் கயிற்றால் கட்டும் வழக்கமில்லை. இந்த மணித்தண்டால் வாரைகளை இறுக்குவதன் மூலமே அதனை ஸ்ரீபாதம் தாங்கிகள் இறுக்கமாகப் பற்றுகின்றனர். இந்தத் மணித்தண்டே அஜபா நடனம் நிகழ்த்தத் துணைபுரிகின்றது.

❁ விடங்கர்

தியாகராஜருக்கு தினந்தோரும் செய்ய வேண்டிய அபிஷேகங்களை அவருடைய சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க மூர்த்திக்கே செய்கின்றனர். இந்த லிங்கத்திற்கு "விடங்கர்" என்பது பெயராகும். இது மரகதக் கல்லால் ஆனதாகும். (இது முழுதும் மரகதக்கல்லால் ஆனதன்று பாணப்பகுதி மட்டும் உயர்ந்த ஜாதி மரகதக்கல்லால் ஆனது. இந்த மரகதக்கல்லான பாணம் சுத்தமான வெள்ளியால் சதுரவடிவமாகச் செய்யப்பெற்ற ஆவுடையாரின் மீது நிலைப்படுத்தப் பட்டுள்ளது. இந்த விடங்கர்லிங்கம் வெள்ளிப் பேழையுள் பாதுகாப்பாக வைக்கப் பெற்றுள்ளது. காலை சந்தி, இரண்டாம் காலம் மாலைக்காலம் ஆகிய மூன்று வேளைகளில் இதற்கு அபிஷேகம் செய்து பூசிக்கப்படுகின்றது.

❁ நின்ற இடபம்

பொதுவாகச் சிவபெருமானின் சந்நிதியில் இடபதேவர் அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றார். ஆனால் இங்கு இடபதேவர் நின்றவாறு செப்புத் திருமேனியாகக் காட்சியளிக்கின்றார். இதனால் இவருக்கு நின்ற இடபம் என்பதே பெயராயிற்று.

❁ பதியம்பாடுதல்

இக்கோயிலில் திருமுறைகளை இரண்டுபேர் பாடுகின்றனர். ஒருவர் பாடுவார் என்றும் மற்றவர் அலரிப்பாடுவார் என்றும் அழைக்கப்படுகிறார். மற்ற ஆலயங்களில் திருமுறைகளை ஓதத்தொடங்குமுன் திருச்சிற்றம்பலம் என்று சொல்லுதல் மரபு. ஆனால் இங்கு "ஆரூரா, தியாகேசா" என்றே சொல்லுகின்றனர். இது சிதம்பரத்திற்கும் முன்பே தோன்றிய மூத்ததிருத்தலம் என்பதால் இவ்வாறு கூறுகின்றனர்.

❁ திரு மந்திரம்


தியாகராஜர் சந்நிதியில் வழங்கப்படும் திருநீற்றிற்கு "திருமந்திரம்" என்று பெயர். இதில் பணிமாலைத் தோட்டில் சாத்தப்படும் திருச்சாந்தைக் கலந்து அளிக்கின்றனர்.

வேதவேள்வியில் விளைந்தமூர்த்தங்கள்

சாக்த நூல்கள் திருமால் செய்த யாகத் தீயினின்று தியாகராஜரின் திருமேனி வெளிப்பட்டதென்று கூறும். இதுபோன்றே தில்லையில் பிரமன் செய்த வேள்வியினின்று இரத்தினசபாபதி எனும் நடராஜர் தோன்றியதாகக் கூறுவர். எனவே இரண்டும் வேதமயமான திருமேனிகள் என்று கூறுகின்றனர்.

ஆயிரம் பெயருடைய அருட் தியாகேசன்

ஆயிரம் என்ற சொல் ஆயிரம் என்ற எண்ணைக் குறிப்பதுடன் "எண்ணிலாதது" என்ற பொருளையும் தருகின்றது. தியாகராஜப் பெருமானுக்கு எண்ணிலாத பெயர்கள் உள்ளன என்பதனை அப்பரடிகள், "எண்ணரிய திருநாமம் உடையான் தன்னை" என்று தேவாரத்தில் குறிக்கின்றார். அப்படி எண்ணில்லாத பெயர்களையுடைய தியாகேசனை அவர் "ஆயிரம் பேருடையான்" என்றும் குறிப்பார். இதனை அவரது



ஆயிரம் தாமரைபோலும் ஆயிரம் சேவடியானும்
ஆயிரம் பொன் வரை போலும் ஆயிரம் தோளுடையானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீண்டுமுடியானும்
ஆயிரம் பேர் உகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே

என்ற பாடலால் அறியலாம். இப்படி ஆயிரம் பேர் உகந்த அம்மன் என்றுக் குறிப்பதால் அவர் காலத்தில் தியாகேசருக்கு ஆயிரம் பெயர்களைச் சொல்லிச் செய்யப்படும் அருச்சனை வழக்கத்தில் இருந்ததைச் சிறப்பாக உணரமுடிகின்றது.

மேலும், அடிகள்,

ஆயிரம் திங்கள் மொய்த்த அலைகடல் அமுதம் வாங்கி
ஆயிரம் அசுரர் வாழும் அணிமதில் மூன்றும் வேவ
ஆயிரம் தோளும் அட்டித்து ஆடிய அசைவு தீர
ஆயிரம் அடியும் வைத்த அடிகள் ஆரூரரே

என்று அவனுடைய பராக்கிரமத்தையும் ஆயிரமாகவே பாடி மகிழ்வதும் எண்ணத்தக்கதாகும்.

மேலும் "அன்றாகில் ஆயிரம் பேரார்போலும்" என்று பாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தியாகேசரின் ஆயிரம்பெயர்களைச் சொல்லி தமிழில் அர்ச்சிக்கப் பெற்ற விவரம் தெரியவில்லை என்றாலும் தியாகராஜருக்கு உரிய மூன்று ஆயிரப் பெயர்களான சகஸ்ரநாம அர்ச்சனைகள் வடமொழியில் அமைந்துள்ளன. இவை முறையே முகுந்தார்ச்சனை, முசுகுந்தார்ச்சனை, இந்திரார்ச்சனை என்பனவாகும். தினமும் மாலையில் நடைபெறும் பூசையில் செய்யப்படும் அர்ச்சனைக்கு இந்திரார்ச்சனை என்று பெயர். இதன் பூஜா திட்டங்கள் சாதாரணமானவையாகும். இந்திரனும் இந்திராணியும், தேவர்குழாத்துடன் வழிபட்டதை முசுகுந்தார்ச்சனையும் குறிப்பிடுகின்றது. இந்நாளில் இந்த அர்ச்சார்ச்சனைப் பற்றிய செய்திகளை அறிய முடியவில்லை.

சிறப்பு நாட்களில் செய்யப்படுவது முசுகுந்தார்ச்சனை எனப்படும் சகஸ்ரநாம அர்ச்சனையாகும். (இதற்கு இந்நாளில் ஏறத்தாழ ரூ 4,000 செலவாகும்) இந்த அர்ச்சனையின் போது அவருடைய சந்நிதியிலும் மகாமண்டபத்திலும் மலர்ப்பந்தல் அமைக்கப்படுகின்றன. ஐந்துவகையான மலர்களைக் கொண்டு கூடை கூடையாக அர்ச்சிக்கப் படுகின்றது.

ஒரு கலம் அதாவது 50 கிலோ, அரிசியைக் கொண்டு தயிர்சாதம், வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, சம்பாசாதம் ஆகிய ஐந்துவகை நிவேதனம் செய்யப்படுகின்றது. மேலும் வடை, தேன்குழல், அதிரசம், ஆகியனவும் படைக்கப்படுகின்றன. இதில் முசுகுந்தன் தியாகராசரைப் போற்றித் துதித்த சகஸ்ரநாம மந்திரங்களால் அழகாக அடுக்கடுக்காகப் பூக்களால் அர்ச்சிக்கப்படுகின்றது. முசுகுந்தனால் சிறப்புடன் செய்யப் பெற்ற வழிபாட்டு முறையில் நடைபெறுவதால் இது அவன் பெயரால் முசுகுந்தார்ச்சனை என்று அழைக்கப்படுகின்றது.

மூன்றாவதாக விளங்குவது முகுந்தார்ச்சனை என்பதாகும். முகுந்தன் என்பது திருமாலின் பெயராகும்.

திருமால் தியாகராசப் பெருமானைத் தனது மார்பில் வைத்து ஆயிரம் பெயர்களைக் கூறி அர்ச்சித்து வழிபட்டார் என்பர். அவர் சொல்லிப்போற்றிய அந்த ஆயிரம் நாமங்கள் அவர் பெயரால் முகுந்த சகஸ்ர நாமார்ச்சனை எனப்படும். இதற்கு முசுகுந்தார்ச்சனையைப் போல் இரண்டு மடங்கு செலவாகிறது.

முசுகுந்தார்ச்சனையே நடைமுறையில் அதிக அளவு அன்பர்களால் செய்விக்கப்பெறுகின்றது. அன்பர்கள் பணம் செலுத்தி அவர்கள் விரும்பும் நாளில் இந்த அர்ச்சனையைச் செய்து மகிழலாம்.

முசுகுந்தார்ச்சனை

முசுகுந்தார்ச்சனையில் நெடுங்காலமாகச் சொல்லப்பட்டுவரும் சகஸ்ரநாமாவளி 1959ஆம் ஆண்டில் நூலாக அச்சிடப்பட்டுள்ளது. இதில் தியாகராஜரின் சிறப்புகள் பலவாறு பேசப் பட்டுள்ளன. இது ஒன்றே திருவாரூர் தியாகராஜரின் பெருமைகளை விரிவாகக் கூறுகிற நூல் என்றால் மிகையாகாது.

இதனுள் தியாகராஜர் சோமாஸ்கந்தராக விளங்குவதை, அம்பிகா குக சம்யுக்தன் (38) சோமாஸ்கந்த சொருபன் (19) அம்பிகா ஸ்கந்த சுந்தரன், உமாஸ்கந்த முகாலோகினி ஸ்கந்தோ உமா நந்தன விக்கிரகன் உமாகுமார சகிதன் (579) ஸ்ரீ சோமாஸ்கந்த வீதி விடங்க ஸாம்ப பரமேசுவரன் என்றுக் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தியாகராஜப் பெருமானுடைய ஆலயம் பூங்கோயில் எனப்பட்டதன் விளக்கம் சகஸ்ரநாமாவில் விளக்கம் பெறுகின்றது. பெருமான் செவ்வந்தித் தோடழகர், மல்லிகை, சண்பகம், இருவாட்சி, முல்லை, மாதவி, செங்கழுநீர் பூக்கள், கருங்குவளைப் பூக்கள் முதலியவற்றை விரும்புவர். அரம்பை எனும் தேவப் பெண்ணால் செய்யப்படும் மலர் வழிபாட்டில் (புஷ்பாஞ்சலி) விருப்பமுள்ளவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பெருமானுக்கு உரிய சிறப்புகளான வீரகட்கம், எனப்படும் இரண்டு கத்திகள், அவருடைய இரத்தினசிம்மாசனம், தியாக விநோதம் என்கின்ற வாசனைத் திரவியாமாகிய கிருஷ்ண கந்தம், தென்பக்கத்தில் தென்றல் தவழ்ந்து வர அமைக்கப்பெற்றுள்ள பலகணி, சுத்தமத்தளம் பாரிநாயனம், பஞ்சமுகவாத்தியம் முதலியனவும் சிறப்புடன் குறிக்கப்படுகின்றன. இவர் ஆடும் நாட்டியத்தில் பிரம்மா தாளம் போடுவதும், விஷ்ணு மத்தளம் வாசிப்பதும், எண்ணற்ற கணங்கள் புல்லாங்குழல், வீணை முதலான அனேக இசைக்கருவிகள் இசைப்பதும் குறிக்கப்பட்டுள்ளன. தேவப் பெண்களான அப்சரஸ் பெண்கள் நீண்டகாம்பினை உடைய சாமரங்களை வீசுவதும், தேவர்கள் மலர்மழை பொழிவதும், கந்தர்வர்கள் கானமழை பொழிவதும் குறிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகத் தியாகராஜர் பவனி வரும் ஆழித்தேரானது பூமிவடிவாகவும், ஓயாது இயங்கிக் கொண்டிருப்பதாகவும், 64 கலைகளால் நிரம்பிய தாகவும் இருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், அவருடைய அஜபா நடனம், ஆறாதாரத்தின் நிலைமை, மந்திரமூர்த்தமாக விளங்குதல் முதலியனவும் குறிக்கப்பட்டுள்ளன.

லலிதா சகஸ்ரநாமத்திற்கும் இதற்கும் பல இடங்களில் உள்ள நெருக்கமான தொடர்பையும் காணமுடிகின்றது. இவருடைய இருதய பாகத்தில் ஸ்ரீ வித்யா மந்திரம் அமைக்கப்பட்டுள்ளதென்று கூறப்பட்டுள்ளதும், இவர் அமர்ந்து[illegible]ம் ஸ்ரீபீடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் எண்ணத் தக்கதாகும். இவற்றின் சிறப்புகள் சொல்லச் சொல்லப் பெரியதாக விரியும் என்பதால் இந்த அளவில் நிறைவு செய்யப்படுகின்றன.

ஒப்பற்ற தியாகராஜரின் பெருமைகளை விளக்கும் சிறப்புமிக்க நூலாக இந்த அர்ச்சனை நூல் விளங்குகின்றது. திருவாரூரையும் தியாகேசரை யும் நினைந்து, பிட்சாண்டார் கோயிலில் பண்ணையாராக வாழ்ந்த திரு. கோ. ராஜகோபாலப் பிள்ளை அவர்களின் விருப்பத்திற்கிணங்க இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தியாகராஜரிடமிருந்து சுந்தரமூர்த்தி சுவாமி களைப் பிரிக்கமுடியாது. எனவே முசுகுந்தார்ச்சனை முடிந்ததும் பக்தார்ச்சனையாகச் சுந்தரமூர்த்தி களுக்கும் அர்ச்சனை செய்ய வேண்டும். ஆதலால் அவருக்குரிய அஷ்டோத்திர சதநாமஅர்ச்சனையும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தியாகேசரின் கணங்கள்

தியாகராஜப் பெருமான் ராஜாதிராஜர் எனவே அவர் தனியாக வீதிகளில் எழுந்தருள்வதில்லை. அவரோடு உடன் வரும் எட்டு கணங்கள் இருந்தனர். அவர்கள் பெருமான் வீதிகளில் பவனிவந்தபோது உடன் சூழ்ந்து வந்தனர். இது தேவாரத்துள்

"ஏறேற்ற மாவேறி எண்கணமும் பின் தொடரச் செல்வார்" என்றும்

"கழல் வலங்கொண்டு நீங்காக் கணங்கள்" என்றும் குறிக்கப்பட்டுள்ளன. இந்த எண் கணங்கள் "யார்? யார்? என்பதை அப்பரடிகளின் மற்றோர் பாடல் விளக்குகின்றது. அது

அருமணித் தடம் பூண்முலை
அரம்பையரோடு அருளிப்பாடியார்
உரிமையில் தொழுதெழுவார்
உருத்திரப் பல்கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர்
சைவர் பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும்
திருவாரூர் அம்மானே என்பதாகும்.

இதில் முதலாவதாக சொல்லப்பட்டுள்ள அரம்பையர்கள் வானுலக மடந்தைகளாவர். அவர்கள் பெருமானைப் பிரிய மனமின்றி பூவுலகில் பதியிலார் மரபில் தோன்றித் தியாகேசனையே பதியாக அடைந்தார்கள் என்பர். எனவே, வானுலகத்தோடு தொடர்புடைய அவர்களை நீக்கிவிட்டு மற்றவர்களைக் கணங்களாக்க கொள்ளவேண்டும்.

இப்படி அமையும் எட்டு கணங்கள் 1. அருளிப்பாடியார், 2. உரிமையில் தொழுது எழுவார், 3. உருத்திரப்பல்கணத்தார், 4. விரிந்த சடைகளை யுடைய மகாவிரதிகள், 5. வேதம் வல்ல அந்தணர்கள், 6. சைவர்கள், 7. பாசுபதர்கள், 8. கபாலிகர்கள், ஆகியோர் ஆவர். இவர்கள் எண்மரும் அடிப்படை யில் பலவகையான கொள்கைகளைத் தமது வழிபாட்டில் கொண்டிருந்தாலும், பொதுவில் தியாகேசனை வழிபட்டு அவருடைய கணங்களாக விளங்கியதுடன் அவருடைய வீதியுலாக்களில் அவருடன் இணைந்தே பவனி வந்ததை உணர முடிகின்றது. ஏழாம் நூற்றாண்டில் நடைபெற்ற ஆதிரைநாளில் இந்த எண்மரும் பெருமானுடன் பவனிவந்ததை அப்பரடிகள் அப்படியே சொல்லோவியமாகப் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

தேவர் தொழு நாயகன்

தியாகராஜப் பெருமான் தேவலோகத் திலிருந்து பூமண்டலத்தினை விரும்பி வந்து ஆரூரில் கோயில் கொண்டவராவார். அப்படிப் பெருமான் இங்கு வந்து விட்டாலும் தேவர்களால் அவரைப் பூசிக்காமல் இருக்க முடியவில்லை. எனவே தினமும் மாலைக்காலத்தில் இங்கு வந்து வழிபாடு செய்து மகிழ்கின்றனர்.

இதனால் இவருக்குத் தேவர்கள் நாயகன் என்பது பெயராயிற்று. தேவர்கள் இப்பெருமானை ஓயாது பூசனை புரிந்து போற்றுவதை அப்பர் பெருமான்

நறப்படு பூ மலர் தூபந் தீப நல்ல
நறுஞ் சாந்தம் கொண்டேத்தி நாளும் வானோர்,
சிறப்போடு பூசிக்கும் திருவாரூர் என்றும்
முழுதுலகில் வானவர்கள் முற்றும் கூடி
முடியால் உறவணங்கி முற்றும் பற்றி
அழுது திருவடிக்கே பூசை செய்ய
இருக்கின்றான் ஊர்போலும் ஆரூர்தானே

என்றும்

"அமரர்கள் தம்பெருமான்"

என்றும்

இந்திரத்தை இனிதாக ஈந்தார்
போலும் இமையவர்கள்
வந்திரஞ்சும் இறைவர் போலும்

என்றும் பலவாறு குறிக்கின்றார்.

மேலும், இவருக்குத், "தேவநாயகன்" தேவரகண்டப் பெருமாள் முதலான பெயர்களும் வழங்குகின்றன. இவையாவும் தியாகேசப் பெருமானை ஓயாது தேவர்கள் பணிந்து மகிழ்வதைக் குறிக்கும் அருள் மொழிகளாகும்.

தியாகேசனின் பணியாளர்கள்

சோழமன்னர்கள் காலத்தில் தியாகராஜரின் வழிபாடு பன்மடங்கு சிறப்பெய்தியது. இந்நாளில் பூசைக்கும் வேண்டிய பணிகளுக்கும் உரியவர்கள் சிறப்புடன் போற்றப்பட்டனர். அண்மைக்காலம் வரை இந்த மரபினர் கோயிற்பணிகளைச் சிறப்புடன் செய்து வந்துள்ளதை அறியமுடிகிறது. அவர்களின் சிறப்பையும் பணிகளையும் இனிக் காணலாம்.

தியாகேசனின் சிறப்புப்பணியாளர்களில் தலைமையானவர் நயனார்கள் என்று அழைக்கப் பெற்றனர். இவர்களே தியாகராஜரின் திருமேனியைத் தீண்டிப் பூசிக்கும் வழிவழி உரிமையுடையவர்கள் ஆவர். இவர்கள் துருவாச முனிவரின் நெற்றிக் கண்ணாகிய நயனத்தில் தோன்றியதால் நயனார்கள் என்று அழைக்கப்பெற்றனர் என்பர். இவர்கள் தியாகராஜர், கமலாம்பிகை, நீலோற்பலாம்பிகை, புற்றிடங் கொண்டனர் ஆகிய சந்நிதிகளை மட்டும் பூசிக்கின்றனர். இவர்களே "உரிமையில் தொழு தெழுவார்" என்று தேவாரத்தில் குறிக்கப் பெற்றவர்களாவர்.

இவர்களையடுத்து பரமராயர்கள் உள்ளனர் இவர்களே சுற்றுக்கோயில்களைப் பூசிக்கின்றனர். இவர்களில் ஒரு பிரிவினர் பொற்பண்டாரிகள் என்று அழைக்கப்பெற்றுக் கருவூலங்களைப் பாதுகாத்து வந்துள்ளனர்.

விழுப்பிரமர்கள் தியாகராஜரின் அஜபா நடனத்தை நடத்தும் ஸ்ரீபாதந் தாங்கிகள் ஆவர். இந்த விழுப்பிரமர்கள் "விழிப்பெருமாள் கூட்டம்" என்றும் சிறப்புடன் அழைக்கப்பெற்றனர்.

மகாசைவர் எனப்படும் சிவப்பிராமணர்கள் தியாகராஜரின் பூஜைக்கு வேண்டி அனைத்தையும் சேகரம் செய்து பூஜைக்கு உதவுதல், வேதங்களை ஓதுதல் ஆகிய பணிகளைச் செய்து வந்தவர்கள் கட்டியம் கூறுதல், முதலியனவும் இவர்களின் பணியே ஆகும்.

மானந்தியார் எனப்படும் பணியாளர்கள் கோயிலின் முழுப் பொறுப்பு அதிகாரிகள் ஆவார். கோயிற்பணியாளர் அனைவருக்கும், தங்கள் கோயிற்பணியை முட்டின்றி செய்ய வகை செய்பவர்கள். நீண்டகாலம் கோயில் சாவிகள் இவர்கள் பொறுப்பில்தான் இருந்து வந்துள்ளது.

"கழல் கண்டார்" என்பவர்கள் தியாக ராஜரைப் பவனிவரச் செய்யும் போது பெரிய கழல் வடிவான கல்லவடங்கள் இசைப்பவர்கள் இதனைத் தேவாரத்தாலும் அறியலாம். (தனிக்கட்டுரை காண்க)

மேலும், தேவாரம் ஓதுவார்கள், பாடல்களைப் பாடும், பாடுவார்கள் அதனை விவரித்துப் பாடும் அலரிப்பாடுவார்கள் போன்ற பல பணியாளர்கள் இருந்தனர். பாடுவார்கள் அரையர் என்றும் அழைக்கப்பட்டனர்.

இவர்களில் விழுப்பரையர்கள் என்பவர்கள் இருந்தனர். யானைமீது ஏறி முரசங்களை முழக்கி பெருமான் வீதியுலா வருவதைக் குறிப்பதனால் இவர்கள் "யானை ஏறுவார்" என்றும் அழைக்கப் பட்டனர்.

இதனைத் தேவாரத்துள் அப்பர் பெருமான்

முரசதிர்ந்து ஆனைமுன்ஓடி
முன்பணிந்து அமரர்ஏத்த

என்றுக் குறிப்பிடுகின்றார்.

மேலும், வானுலகப் பெண்களான அரம்பையர்களின் வழிவந்த பதியிலார் எனும் பணிப்பெண்கள் இருந்தனர். இவர்கள் கோயிலைத் திறத்தல், மூடுதல், சுத்தநிருத்தம் புரிதல், மாலை புனைதல், ஆடல்புரிதல் முதலான அனேகப் பணிகளைச் செய்தனர். இவர்களில் பெரிய முறைக்காரி, சின்ன முறைக்காரி, சாமரம் விசுபவர்கள் விசிறி, வீசுபவர், என்ற பிரிவுகள் இருந்தன. இவர்களுடன் நட்டு எனப்படும் நட்டுவாங்கம் செய்வர்களும் முட்டு எனப்படும் மிருதங்கம் வாசிப்பவர்களும் இருந்தனர். மேலும் கொடுகொட்டி என்ற வாத்தியம் வாசிப்பவர்களும் இருந்தனர்.

ஆடல் மகளிரில் சிவ குடும்பம், பார்வதி (கொண்டி) குடும்பம் என்ற பிரிவுகள் இருந்தன. இவர்கள் தியாகேசர் குறவஞ்சி நாடகத்தை நடத்தினர். இவர்கள் பட்டுச்சட்டை, கச்சு, முதலியவற்றைத் தரித்து பணிசெய்வதை இவ்வாலய ஓவியங்களில் காணலாம்.

பாரசைவர்கள் என்பவர்கள் பெருமானுக்கே உரிய பஞ்சமுக வாத்தியங்களை இசைத்தனர்.

மேலும் நடைபாவாடை விரிப்பவர்கள், வெள்ளைப்பட்டு விரிப்பவர்கள், செம்பட்டு விரிப்பவர்கள், சும்மாயிருப்போன் என்ற பல வகையான பணியாளர்கள் இருந்ததையும் அறிய முடிகின்றது.

இவர்கள் அனைவரும் சிவதீட்சை பெற்றவர்களாகவும், சிறந்த சிவபக்தியுடையவர் களாகவும் திகழ்ந்தனர். காலப் போக்கில் நிகழ்ந்த அரசியல், மற்றும் கலாச்சார மாற்றங்களால், நயனார், பரமராயர், போன்ற சிலபிரிவினரே இக்கோயிலில் தொடர்ந்து இப்பொழுது பணியாற்றி வருகின்றனர். பெரும்பாலான பணியாளர்களைப் பற்றிய விவரங்களைக்கூட சரியாக அறியமுடியவில்லை.

தியாகேசர் சந்நிதியில் இசைக்கப்படும் இசைக்கருவிகள்

தியாகேசர் சந்நிதியில் எப்பொழுதும் ஆடலும், பாடலும் நிகழ்ந்த வண்ணமாகவே இருந்தது. எனவே இவை இரண்டிற்கும் அடிப்படையாக விளங்கிய பல்வேறு இசைக்கருவிகள் போற்றப்பட்டன.

தியாகராஜருக்கு நடக்கும் மாலைப்பூசையின்போது 16 வகையான இசைக்கருவிகள் இசைக்கப்பெற்றன என்று கூறுகின்றனர். இவற்றில் பலவற்றின் அமைப்பையோ, இயக்கும் முறையையோ இன்று நாம் அறியமுடியவில்லை. ஆனாலும் ஆயிரங்கால் மண்டபத்தில் வரையப் பெற்றுள்ள தஞ்சை மராட்டிய மன்னர்கால ஓவியங்களில் இந்தப் பதினெட்டு இசைக்கருவிகளின் உருவங்களும் உள்ளன என்பர்.

இந்த பதினெட்டு வாத்தியங்கள் முறையே

1. சுத்தமத்தளம்
2. கர்ணா
3. சங்கு
4. எக்காளம்
5. நகரா
6. நமுகி (நட்டுமுட்டு)
7. கிடுகிட்டி (கொடு கொட்டி)
8. புல்லாங்குழல்
9. தாரை
10. பாரிநாயனம்
11. பஞ்சமுக வாத்தியம்
12. தவண்டை
13. பேரிகை
14. பிரம்மதாளம்
15. வாங்கா
16. திருச்சின்னம்
17. தப்பட்டை
18. முகவீணை என்பனவாகும்.

இவற்றில் தாரையும் தப்பட்டையும் தேரின்போது மட்டுமே இசைக்கப்படும். மற்ற பதினாறு வாத்தியங்களும் தினசரி வழிபாட்டில் இருந்ததாகக் கூறுவர். இவை தவிர நாதஸ்வரம், கொம்பு முதலியனவும் வாசிக்கப்பெற்றன. இந்நாளில் சுத்தமத்தளம், கைத்தாளம், சங்கு போன்ற சில கருவிகளே இசைக்கப்படுகின்றன. குறிப்பாக சுத்தமத்தளம் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றது. மேற்குறித்த பதினெட்டு இசைக்கருவியில் மூன்று இசைக்கருவிகள் தனிச்சிறப்பு உடையவை. இவை பஞ்சமுகவாத்தியம், தவளசங்கம், பாரிநாயனம் என்பனவாகும். இனி இவற்றின் தனித்தன்மைகளைக் காணலாம்.

பஞ்சமுக வாத்தியம் (குடமுழா) பஞ்சானன முரசு

இதன் சுற்றளவு நான்கடி எட்டங்குலமாகும். உலோகத்தாலான பெரிய பானையின் அமைப்பில் மையத்தில் ஒன்றும் அதன் நான்கு புறத்திலும் நான்கும் ஆக ஐந்து முகங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்றில் பாம்பு சுற்றிய வடிவமும், ஒன்றில் ஸ்வஸ்திக அடையாளமும் ஒன்றில் தாமரைப்பூ அடையாளமும், ஒன்று அடையாளம் இல்லாததாகவும் உள்ளன. நடுவில் உள்ள முகம் பெரியதாக உள்ளது. இதன் முகங்களில் மான்தோல் கட்டப்பட்டுள்ளது. இதனை அடித்து இசைப்பவர்கள் பாரசைவர்கள். இது சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களினின்று அவராகவே தோன்றியது என்பர். இது ஆதிகாலத்தில் நந்தியம் பெருமானாலும் பின்னாளில் அவர் வழி வந்த பாரசைவர்களாலும் இயக்கப்படுகிறதென்பர். இந்த வாத்தியத்தைப் பற்றி "பஞ்சமுக வாத்திய லட்சணம்" என்ற வடமொழி நூல் விரிவாகக் கூறுகிறதென்பர். இந்நூலில் பாரசைவர்கள் உற்பத்தி, பஞ்சமுக வாத்திய உற்பத்தி, அவர்கள் மேற்கொள்ள வேண்டிய தீட்சைகள், வாசிக்கும் முறை வாசிப்பதால் உண்டாகும் பலன் ஆகியன விரிவாகப் பேசப்பட்டுள்ளதென்பர். பஞ்சமுக வாத்தியம் சிவபெருமானின் நிருத்தத் திற்காகவும் ஆடல் மகளிர் ஆடும் ஆடலுக்காகவும் தோற்றுவிக்கப்பட்டதாகவும் குறிக்கிறது. இந்த வாத்தியம் மாலை பூஜையான சாயரட்சையின் போது

தொடக்கத்தில் தொம், தாம், தொம், தாம், என்ற தாள இசையோடு சதுஸ்ரஜதி தாளத்துடன் இசைக்கப் படுகிறது. 35 விதமான தாளங்களை இதில் இசைக்கலாம் என்று கூறுகின்றனர்.

இந்நாளில் இது திருவாரூரிலும் திருத்துறைப் பூண்டியிலும் மட்டுமே உள்ளன. குடமுழா வாசிக்கக் கேட்டு இறைவன் மகிழ்வதாக தேவாரத்துள் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

பாரி நாயனம்

இது மற்ற நாயனங்களை விட அளவால் சற்று பெரியதாகும். இது வெள்ளி, தந்தம், கல் முதலியவற்றால் செய்யப்பட்டது என்பர். திருவாரூரில் தியாகேசர் சந்தியில் வாசிக்கப்பெற்று பாரி நாயனம் யானைத்தந்தத்தால் சிறந்த கலைவேலைப்பாட்டுடன் செய்யப்பட்டிருந்தது என்பர். இந்நாளில் இதனைக் காண முடியவில்லை. திருவையாற்றுக் கோயிலில் கல்லாலாகிய பாரிநாயனம் ஒன்று உள்ளதென்பர்.

தவள சங்கம்

வெண்மையான குற்றமற்ற சங்கிற்கு வெள்ளி அல்லது தங்கத்தால் பூண்கட்டி பூசையின்போது ஊதுவர். திருவாரூர் திருவாதிரை விழா பதிகத்தில்", நில வெண்சங்கமும் பறையும் ஆர்ப்ப" என்று வெணசங்கம் ஊதப்பட்டதையும் அப்பரடிகள் குறிக்கின்றார். சிறப்பு வழிபாட்டில் வெண்சங்கு சிறப்புடன் ஊதப்படுகிறது.

சுத்தமத்தளம்

சுத்தமத்தளம் என்ற இந்த இசைக்கருவி மற்ற மத்தளங்களை விட சற்று நீண்டதாக பருத்துக் காணப்படுகிறது. இதையும் பாரசைவர்களே வாசித்து வருகின்றனர். திருவந்திக்காப்பு தீப்பாராதனையில் இதனை வாசிக்கின்றனர். விழாவில் சந்திரசேகரர் ஆலயத்துள் வலம் வரும்போது எட்டு திசையிலும் திக்குப் பாலகர்களுக்கான ஸ்ரீபலி நடத்தப்பெறும். இவ்வகையில் இறைவன் ஈசான திசைக்கு வரும்போது முட்டுக்காரர் சத்தமத்தளத்தை தன் தலையின் மீது வைத்துக்கொண்டு இருகரங்களையும் உயர்த்திஅதனைவாசிப்பார். இப்படி இசைக்கப்படும் முறைக்குப் பூதநிருத்தம் என்றுபெயர். பூதகணங்கள் சந்திரசேகரர் முன்பு ஆடல்புரிவதாகவும் அதற்கென முட்டுக்காரர் சுத்தமத்தளத்தைத் தலைமேல் வைத்து வாசிப்பதாகவும் கூறுவர்.

கல்லவடங்கள்

★"கல்லவடம்" என்பது வீரர்கள் காலில் அணியும் வீரக் கழலாகும். இது ஓயாது சப்திப்பதாகும். தியாகராசர் திண்கிணி ஆடரவக் கழற்கால் அழகர். எனவே அவன் வீதிகளில் நடந்து வந்ததை உணர்த்தும் வகையில் பெரிய அளவில் செய்யப்பட்ட வீரக்கழலை அவர் உலாவரும்போது ஆட்டி மகிழ்ந்தனர் பெருமான் ஆயிரம் சேவடியான் என்றுக் குறிக்கப்பட்டதால் எண்ணிலாத வீரக்கழல்கள் ஒருசேர அசைக்கப்பெற்றன. இதனால் மழைபோன்ற பெரிய ஓசை எழுந்தது.

❁ இதனை அப்பரடிகள் நிற்கிலாப் "பலரும் இட்ட கல்ல வடங்கள் பரந் தொங்கும் கலவ" என்றும் ❑ கழல்வலம் கொண்டு நீங்கா கணங்கள் அக்கணங்கள் ஆற என்றும் குறிப்பிடுகின்றார். 'இந்நாளில் சிறுதெய்வங்கள் உலாவரும் போது வெண்கலத்தாலான சிலம்புகளைக் கையிலேந்தி ஓசைப்படுத்தி பூசாரிகள் ஆடிப்பாடி வருவது போன்றே திருவாரூரில் பெருமான் உலாவரும் கழல்களை இசைக்கும் வழக்கம் இருந்தது என்பர். இந்நாளில் திருவாரூரில் கல்லவடங்கள் எனப்படும் கழல்கள் இசைப்பது இல்லாவிட்டாலும் திருச்செங்காட்டங்குடியில் உத்திராபதியார் வலம்வரும்போது கல்ல வடங்களை இசைப்பதைக் கண்டும் அதன் இசையைக் கேட்டும் அன்பர்கள் மகிழலாம். இது பெருமான் ஒவ்வொரு அடியாக நகரும் போது கல் என்ற ஓசையைத் தருகிற ஐத்கத்தில் பெரிய கழலை, வலமும் இடமுமாக அசைக்கின்றனர். பெருமான் நடனமாடும் போது வேகமாக (மாவு சலிப்பது போல்) சுழற்றுகின்றனர். இது கலகலவென்ற ஓசையை எழுப்புகின்றது. பெருமான் திருவாரூரின் வீதிகளில் நடந்து மகிழ்ந்தபோது அவனுடைய காலில் இருந்த கல்லவடங்கள் ஓயாது ஒலித்தன. என்று இலக்கியங்கள் கூறும். திருவாரூரில் நடைபெற்ற விழாவில் கல்லவட்டங்களை ஏந்திய அடியவர்கள் பெருமானுடன் சென்றனர். பின்னாளில் இவர்கள் "கழல் கண்டார்" என்றுச் சிறப்பிக்கப்பெற்றனர். காலப் போக்கில் இம்முறை முழுவதுமாக இல்லாமல் போய்விட்டது.

★ கல்லவடம் என்பதற்கு ஒருவகைப்பறை என்றுப் பொருள் கண்டுள்ளனர். இங்கு மேற்கு வீரக்கழல் என்ற பொருள் கூறி அதற்கு விளக்கமும் அளிக்கப்படுகின்றது. ❁ ஓரிடத்து நில்லாது பலரும் ஒலித்த கல்லவடங்கள் மழை போன்று ஒலிக்க ❑ கழலை ஏந்திக்கொண்டு பெருமானை நீங்காது அவரோடு வலம் வரும் கணங்கள்.

முசுகுந்தன் கதை

தியாகேசப்பெருமானைத் தேவலோகத்திலிருந்து பூமண்டலத்திற்குக் கொண்டு வந்து திருஆரூர்ப் பூங்கோயிலில் நிலைபெறச் செய்தவன் சோழமன்னன் முசுகுந்தச் சக்கரவர்த்தியாவன். இவனுடைய வரலாறு கந்தபுராணத்திலும் பலவேறு நூல்களிலும் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன.

ஒரு சமயம் திருக்கயிலை மலையின் சாரலில், அமைந்திருந்த ஒரு சோலையில், வில்வமரத்தின் கீழ் சிவபெருமானும் உமாதேவியாரும் மகிழ்வுடன் வீற்றிருந்தனர். அவர்கள் வீற்றிருந்த அந்த வில்வமரத்தின் மேலே இருந்த ஒரு ஆண் குரங்கு மரத்தின் இலைகளைப் பறித்துப் பெருமான் மீதும் தேவியின்மீதும் ஓயாது போட்டுக்கொண்டேயிருந்தது. இதனால் உமாதேவியார் அக்குரங்கைக் கோபித்தாள். அப்போது பெருமான் இன்று சிவராத்திரி, தம்மையும் அறியமலேயே அக்குரங்கு நம்மை வில்வத்தால் பூசித்துள்ளது. எனவே அதற்கு அருள்வதே முறைமை. அதன்மீது சினங்கொள்ளாதே என்று உமாதேவியிடம் கூறிவிட்டு, அந்தக் குரங்கின் மீது அருள் நோக்கம் செய்தார். அதனால் அக்குரங்கிற்கு ஞானம் உண்டாயிற்று.

ஞானம் பெற்ற அந்தக் குரங்கு மரத்தினின்று கீழே இறங்கி வந்துப் பார்வதிபரமேசுவரரை வணங்கியது.

சிவபெருமான் அதனை நோக்கி, அன்பனே, இன்று நீ செய்த பூசையின் பயனால் உனக்குப் பூமண்டலத்தை ஆளும் வரம் தந்தோம், என்றார். அதைக்கேட்ட குரங்கு "ஐயனே அப்படி நான் அரசானகப் பிறக்கும் பொழுது எனக்குப் புண்ணியம் செய்த அந்தப் பூர்வஜென்ம தொடர்பு உண்டாகும் வண்ணம் முசுவின் (குரங்கு) முகமே அமையும் வரத்தையும், மாறாத சிவபக்தியையும் அருள வேண்டும் என்றது. அதன்படியே சிவபெருமான் அதற்கு அருள்புரிந்தார்.

அதன்பின்னர் அக்குரங்கு நெடுநாள் சிவபக்திபுரிந்து மகிழ்ந்தது. பின்னர் சோழ மண்டலத்தின் தலைநகரான கருவூரில் அரிச்சந்திரனின் வழிவந்த சோழமன்னர் குலத்தில் பிறந்து முசுகுந்தன் என்றுப் பெயர்பெற்று வளரலாயிற்று. இப்படிப் பிறந்த முசுகுந்தன் மன்னர்களுக்கு உரிய கலைகளைக் கற்றுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபீடத்தில் அமர்ந்து செங்கோல் செலுத்தினான்.

ஒருசமயம் இந்திரனுக்கு வலன் என்ற அசுரனால் துன்பம் நேரிட்டபோது முசுகுந்தன் அவனுக்குத் துணையாகச் சென்று போரில் வலனை வென்றடக்கி அழித்தான்.

அதனால் இந்திரன் மகிழ்ந்து வேண்டிய வரத்தைக் கேள் என்றபோது அவன் பூசித்துவந்த தியாகராஜரைக் காட்டி அதனை வேண்டினான் இந்திரன் அதனுடன் ஆறு தியாகராசரையும் சேர்த்து அவனிடம் அளித்துப் பூமண்டலத்திற்கு எடுத்துச் செல்க என விடை தந்தான்.

முசுகுந்தன் ஒரு பெரிய தேரில் அந்த ஏழு தியாகராஜ வடிவங்களையும் வைத்துப் பூமண்டலத்திற்குக் கொண்டுவந்து முதலில் நல்லூரில் வைத்து பூசித்துப் பிறகு திருவாரூரில் நிலைப்படுத்தினர். அதில் மூலத்தியாகராஜரை திருவாரூரில் வைத்துவிட்டு மற்றவற்றை திருக்காறாயில், திருமறைக்காடு, நாகை, திருக்கோளிலி, நள்ளாறு திருவாய்மூர் ஆகிய இடங்களில் நிலைப்படுத்தினான். அவன் திருவாரூர் தியாகராஜரைப் பலகாலம் வணங்கி மகிழ்ந்தான்.

இந்த வரலாறு முழுவதும் திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

மேலும் இவன் புத்திரப்பேற்றை வேண்டி திருவாவடுதுறையில் வழிபட்டபோது தியாகராஜப் பெருமான் அவனுக்குப் புத்திரனை அருளிச்செய்தார் என்றும் அதனால் திருவாடுதுறை பெருமான் புத்திரத்தியாகர் என்றும் அழைக்கப்படுகின்றார் மேலும் திருபைஞ்ஞீலி, நாகை ஆலங்குடி, வேதாரண்யம் முதலிய தலங்களின் புராணங்களிலும் இவனைப்பற்றிய குறிப்புகள் உள்ளன.

இவனுக்குத் தனி ஆலயமோ, திருஉருவமோ இல்லை, திருவாரூர், திருவாவடுதுறை முதலிய இடங்களில் இவனுடைய திருஉருவத்தை தூண்களில் சிற்பமாக அமைத்திருப்பதைக் காணலாம்.

மேலும், இவன் கந்தர்சஷ்டி விரதம் இருந்து

வீரவாகுத்தேவர் முதலான லட்சத்து ஒன்பதின்மரைத் துணைவர்களாகப் பெற்றான் என்று கந்தபுராணம் கூறுகின்றது. மேலும் முருகனின் தம்பியாகிய வீரபாகுத்தேவருக்குப் புஷ்பகந்தி என்ற பெண்ணிடம் தோன்றிய சித்திரவல்லி என்னும் பெண்ணை மணந்தான். முசுகுந்தனுக்கும் சித்திரவல்லிக்கும் அக்னிவர்மன் என்ற மகன் தோன்றினான். நெடுநாள் இல்லற இன்பத்தையும் தியாகராஜ வழிபாட்டையும் செய்த முசுகுந்தன் இறுதியில் அக்னிவர்மனுக்கு முடிசூட்டிவிட்டுத் தவம் செய்ய கயிலை மலையை அடைந்தான். அங்கு இனிய சூழலில் கடும் தவம் புரிந்து மானுடவடிவம் நீங்கி சிவனடிசேர்ந்து கணங்களின் தலைவனானான். முசுகுந்தனின் வழிவந்தவர்களில் ஒரு மரபினர் செங்குந்தர் என்றுப் புகழ் படைத்தனர். அவர்கள் தாம் வாழும் பலபகுதிகளில் சாரூபம் பெற்ற (மேற்கரங்களில் மான்மழு, கீழ்க்கரங்கள் அஞ்சலி செய்ய, குரங்கு முகத்துடனான முசுகுந்தனின் சிலையையும் புஷ்பவல்லியின் சிலையையும் நலவீரர்களுடன் வைத்து வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டனர். காஞ்சீபுரம் கச்சபேசுவரர் ஆலயத்தில் இத்தகைய வடிவத்தைக் காணலாம்.

பரமனடி தொழுத பாவையர் மாணிக்க நாச்சியார்

மாணிக்க நாச்சியார் என்பவர் திருவாரூரில் உள்ள தியாகராஜர் சந்நிதியில் சிவப்பணி புரிந்துவந்த பதியிலார் இனத்தைச் சேர்ந்தவராவார் இவர். பெருமானிடம் எல்லையில்லாத பக்தியுடையவர், திருவாரூர் பெருமானுக்குப் பணி செய்து கொண்டு, தம் குலமரபிற்கேற்ப சிவனடியாரை மகிழ்விக்கும் பணியையும் செய்து வந்தார். சிவனடியார்களான சங்கமர்களைச் சிவபெருமானாகவே எண்ணி அவர்களைப் போற்றிய பெருந்தகையாளர்.

சிவபெருமான் ஒரு சமயம் இவளுடைய சிவபக்தியை உலகிற்கு உணர்த்த எண்ணி ஒரு வயோதிக அந்தணனின் வடிவம்தாங்கி இவருடைய வீட்டிற்கு வந்தார். தான் அவளுடைய இல்லத்தில் தங்கி இன்புறவேண்டும் என்று கூறினார். பின்னர் பணத்திற்குப்பதிலாக உத்திராட்சங்ளை அளித்தார். அவளும் அதற்கு உடன்பட்டு அன்றிரவு அவரை இன்பமுடன் உபசரித்தாள்.

இரவு நகர்ந்தது மூன்றாம் ஜாமப்போழ்தில் சங்மர் இறந்தவர் போல ஆனார். அதைக்கண்ட மாணிக்கநாச்சியார் அடியவருக்கு இப்படி ஆயிற்றே என்று வருந்தினாள். அன்றிரவு ஒருநாள் தான் என்றாலும் இவர் விடியும் வரை என் கணவனாக ஏற்கப்பட்டவர். இவருக்கு நான் உடன்பட்டேன். இவர் இறந்ததால் நானும் உயிர்துறப்பதே பத்தினிப் பெண்ணின் கடமையை நிறைவேற்றுவதாகும். அதுவே நன்மைக்கு உரிய வழியாகும் என்றுத் தீர்மானித்தாள்.

பெரிய தீயை மூட்டினாள், அதில் சங்கமரின் உடலை மடிமீது ஏந்தியவாறு தீப்புகுந்தாள். தீ மூண்டெழுந்தது. அப்போது அவளுடைய சிவபக்தியை உலகுக்கு உணர்த்த விடைவாகனத்தில் தியாகேசர் காட்சியளித்தார். அனைவரும் அக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர். மாணிக்க நாச்சியார் சிவனடி சேர்ந்தாள்.

திருவாரூரில் மாணிக்க நாச்சியார் வாழ்ந்த மனையில் ஒரு சிவாலயம் கட்டப்பட்டுள்ளது. அது மாணிக்க நாச்சியார் கோயில் என்றே வழங்கப் படுகின்றது. வடக்கு வீதியில் மேற்கு நோக்கியவாறு அமைந்த இந்த ஆலயத்தில் சிவலிங்கமூர்த்தி மாணிக்கவல்லி எனும் அம்பிகை விநாயகர் சண்டீசர் ஆகிய மூர்த்திகள் அமைந்துள்ளனர்.

மாணிக்க நாச்சியாரின் வழிவந்தவர்களுக்குத் தியாகராஜர் ஆலயத்தில் சிறப்பு மரியாதைகள் தரப்பட்டன. தியாகராஜர் தேரில் அமர்த்தப்பட்டதும் மாணிக்க நாச்சியார் அர்ச்சனை எனும் அர்ச்சனை செய்து அவர் வழிவந்தவர்களுக்கு மரியாதைகள் செய்த பின்னரே வடம் பிடிப்பது வழக்க இருந்து வருகிறது.

ஐஐந்து: திருவாரூரில் உள்ள தியாகேசர் ஆலயம் கமலா ஆலயமான திருக்குளம் செங்கழுநீர் ஓடை ஆகிய ஒவ்வொன்றும் ஐந்து வேலி பரப்புடையது. இதனை அப்பரடிகள் அஞ்சனை வேலி ஆரூர் என்று பாடுகிறார்.

"ஆடலில் மகிழ் அழகர்"

சிவபெருமான் ஓயாது ஆனந்தத் தாண்டவம் புரிந்து அன்பர்களை மகிழ்விக்கின்றார். என்றாலும் அவரைத் தனது ஆடலால் மகிழ்விக்கும் பெரும்பேற்றை வானுலக ஆடல் மகளிரான அரம்பை. திலோத்தமை, மேனகை; ஊர்வசி முதலிய பெண்கள் பெற்றிருந்தனர்.

இவர்கள் முசுகுந்தன் பெருமானைப் பூமிக்கு கொண்டு வந்தபோது அவரைப் பிரிய மனமின்றி தாங்களும் பூவுலகில் பதியிலார் எனப்படும் உருத்திர கணிகையராகப் பிறந்து தியாகேசனையே பதியாகக் கொண்டனர். அவர்கள் ஆலயப் பணிகளை மேற்கொண்டு அவர்முன் ஆடியும் பாடியும் மகிழ்வெய்தினர்.

அவர்கள் வழி வநதவர்கள் "தேவரடியார்" எனப்பெற்றனர். இவர்கள் பெருமான் உலாவந்த போது அவருடன் விளக்குகள், பூரணக் கும்பங்கள் முதலான அஷ்டமங்கலங்களை ஏந்தி வலம் வந்தனர். இதனை அப்பரடிகள் பக்தர்களோடு பாவையர் சூழப் பலிப் பின்னே" என்றும், "வடிகொள் வேய்த்தோள் வான் அரமங்கையர் பின் செல்ல" என்றும் குறிக்கின்றார்.

இப்பெண்கள் தியாகேசர் முன்பு பலவிதமான கூத்துக்களை நிகழ்த்தினர். அந்நாளில் ஆடலில் வல்ல மகளிருக்குத் "தலைக்கோலி" என்ற பட்டம் வழங்கப் பெற்றது. அத்தகைய பலர் இக்கோயிலில் இருந்தனர். அவர்களில் முதன்மை பெற்றவர்களுக் குத் தலைமைதாங்கியபெண் நாயகத்தலைக்கோலி என்றழைக்கப்பட்டாள். தியாகராஜரின்சந்நிதி, பூங்கோயில் என்றுச் சிறப்பிக்கப் பெற்றதால் இங்குப் பணி புரிந்த ஆடல் மகளிரின் தலைவி "பூங்கோயில் நாயகத் தலைக்கோலி'' என்று சிறப்புடன் அழைக்கப்பட்டதை ஒரு கல்வெட்டால் அறிய முடிகின்றது.

ஆடல் மகளிர் இறைவனின் முன்பு தெய்வக் கதைகளையேயன்றி அரசர்களைப் பற்றிப் புணையப்பெற்ற நாடகங்களையும் நடத்தினர். இதனைத் திருவாரூரின் பலகல்வெட்டுகள் குறிக்கின்றன. பின்னாளில் "தியாகேசர் குறவஞ்சி" போன்ற நாடகங்களும் நடத்தப் பெற்றன. இவைகள் பதியிலார் மரபு பெண்களாலேயே நடத்தப்பெற்றன. தினமும் பூசையின் போது தியாகேசர் குறவஞ்சியில் வரும் "வாசலிது வாசல்" என்ற பாடல் பகுதி தென்றல் வாசலில் நின்று பதியிலாரால் பாடப்பட்டது என்று கூறுகின்றனர்.

மேலும் இப்பெண்கள் தினமும் நடைபெறும் பூசையின் போது தெற்கில் உள்ள தென்றல் வரும் வாசலில் நின்று வீணைமீட்டிப் பாடினர். இப்பாடல்களை அப்படியே வடக்கு ஜன்னலின் அருகில் இருந்தவர்கள் புல்லாங்குழலில் இசைத்தனர் என்பர். 1947ல் அரசாங்கம் கொண்டு வந்த சட்டத்தினால் பதியலார் எனப்படும் உருத்திர கணிகையரின் பணிகள் கோயில்களில் நிறுத்தப்பட்டு விட்டன. அதன்பிறகு திருவாரூர் ஆலயத்தில் ஆடலும் பாடலும் அறவே நின்று விட்டது.

சிதம்பரத்தில் "நாட்டிய அஞ்சலி" விழா நடப்பது போல திருவாரூரிலும் நாடக நாட்டிய விழாக்களை நடத்த அன்பர்கள் முன்வர வேண்டும்.

தியாகேசப்பெருமானின் "தசாங்கம்"

அரசர்களுக்கு உரிய பொருள்களாகத் திகழ்வது பத்து தலையான பொருள்களாகும். இவை அரச வாழ்வின் அங்கங்களாகும். எனவே இது தசாங்கம் எனப் பெற்றது. சிவபெருமானுக்குப் பொதுவான தசாங்கங்களை மாணிக்க வாசகர் திருவாசகத்தில் அருளியுள்ளார். திருவாரூர் தியாகராஜருக்கென்றே தனியான தசாங்கமும் உள்ளன. இனி இவற்றைக் காணலாம். தசாங்கம் என்பது 1. பெயர் 2. நாடு 3. ஊர் 4. ஆறு 5. மலை 6. படை 7. முரசு 8. மாலை 9. கொடி 10 புரவி என்பனவாகும். மாணிக்கவாசகரும் பெருமானுக்குத் தசாங்கள் கூறவந்தபோது அவனுடைய பெயர் ஆரூரன் என்றே குறிக்கின்றார். மேலும், செம்பெருமான், வெண்மலரான், பாற்கடலான், தேவர்பிரான் என்ற பெயர்களையும் சுட்டுகின்றார். இவையாவும் தியாகேசப்பெருமானுக்கே உரியனவாகும்.

1. பெயர் : ஆரூரன்
2. நாடு : அகளங்கநாடு
3. ஊர் : ஆரூர்
4. ஆறு : ஆனந்தம்
5. மலை : அருள்மலை
6. படை : வீரகட்கம்
7. பறை : பஞ்சமுக முரசு
8. மாலை : செங்கழுநீர்மாலை
9. கொடி : தியாகக்கொடி
10. குதிரை : வேதமாகிய குதிரை

ஆழித்தேர் வித்தகன்

இந்தியாவில் அனைத்து ஆலயங்களிலும் தேர்த்திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பெருந்திருவிழாவின் ஓர் அங்கமாகத் தேரில் இறைவன் திருஉருவை எழுந்தருளி வைத்து உலாவரச் செய்கின்றனர். எல்லாத் தலங்களிலும் தேரும் திருவிழாவும் இருந்தாலும் திருவாரூர்த் தேருக்குத் தெய்வீகச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் உண்டு. தேவாரத்துள் பேசப்பட்டுள்ள சிவபெருமானின் சிறப்புமிக்க தேர் இது ஒன்றேயாகும். இந்தத்தேர் ஆழித்தேர் என்றழைக்கப்படுகின்றது.

"திருவாரூர்த் தேர் அழகு" என்பது நெடுங் காலமாக வழங்கி வரும் பழமொழியாகும்.

அப்பர்பெருமான் "ஆழித்தேர் வித்தகனை" யான் கண்டது ஆரூரே என்றுப் பாடியருளுகின்றார்.

தியாகராஜருக்கே உரித்தான "முசுந்த சகஸ்ரநாம" அர்ச்சனையில் இந்தத் தேரும் இதன் அமைப்பும், இதில் தியாகராஜர் உவந்து உலாப்போவதும் சிறப்புடன் குறிக்கப்பெற்றுள்ளன. குறிப்பாக இந்த அர்ச்சனைப் பெருமானைத் தேரில் விருப்பமுள்ளவர் (ரதப்பிரியன்); பூமியாகிய தேரை உடையவர் (பூமிரதன்); 64 கலாரதன் (அறுபத்து நான்குகலைகளையே இரதமாகப்பெற்றவர்) எப்பொழுதும் ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் மேலான தேரில் அமர்ந்து வரும் மங்களகரமானவர் (சதாசக்ர சம்யுக்த ரதாரோகண சோபனன்) என்றுப் போற்றுகின்றது.

மேலும் இந்தத் தேரின் வடிவத்திற்குத் தத்துவ வடிவான இரண்டு விளக்கங்கள் உள்ளன. முதலாவது விளக்கம் இந்தத்தேரினைப் பிரபஞ்சத்தின் வடிவமாகக் கூறுகிறது. இரண்டாவது இந்தத் தேரினைப் பிண்டத்தின் வடிவமாகக் கூறுவது. இரண்டிலுமே இந்தத்தேரின் சக்கரங்கள் மையக் கட்டை, அச்சு, கடையாணிகள், அடித்தட்டு, தேர்க் கால்கள், மேல்தட்டு, விமானம் கலசம் குடை முதலிய ஒவ்வொன்றுக்கும் தத்துவ விளக்கம் சிறப்பாச உள்ளது. அதன் சுருக்கத்தை இங்கே காணலாம்.

1. பிரபஞ்ச வடிவமாகிய தேர்

உயிர், உயிரற்றவை, இடம் காலம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய பிரபஞ்சத்தின் வடிவமே இந்தத்தேராகும். இதன் கீழ்தட்டுகள் கீழே உள்ள ஏழு பாதாள லோகங்கள். மையப்பகுதி பூமண்டலம் மேலுள்ள விதானப்பகுதி மேல் உலகங்கள். இதன் ஆறு சக்கரங்களும் ஆறுபருவங்கள். இதனை இயக்குவோன் படைத்தல் தொழிலைச் செய்யும் இரண்யகர்ப்ரான பிரம்மதேவன். இதனுள் இருந்து சாட்சிப்பூதனாக, ஓயாது சுழலும் முதலும் முடிவுமற்ற காலத்தின் வழிநடத்துபவனே தியாகராஜன். இதனைச் செலுத்தும் குதிரைகள் வேதங்களும் அதன் குறிக்கோளான அறம், பொருள், இன்பம், வீடு, என்கிற நான்கு பொருள்களாகும்.

இதனை இழுக்க உதவும் ஆறுவடங்கள் சிக்ஷா, கல்பம், வியாகரணம், நிருத்தம் சந்தஸ், ஜோதிடம், எனும் ஆறு வேதத்தின் அங்கங்களாகும். இதன் மையத்தில் அமைந்த நான்கு வாயில்களும் வேதங்களில் சொல்லப்பட்டுள்ள நான்கு மகா வாக்கியங்களாகும்.

இதன் 64 கால்களும் 64 கலாதத்துவங்களாகும். தத்துவம் கடந்து சிவலோகத்தில் பதவிகளைக் கடந்து சிவனோடு ஒன்றுதலை கலசம் குறிக்கின்றது. அதன் மீது அமைந்துள்ள ஒற்றைக்குடை சிவனோடு இரண்டறக் கலந்து பரவெளியில் ஒன்றிவிட்ட நிலையைக் குறிப்பதாகும்.

2. சரீரமயமானத் தேர்

ஜீவனின் சரீரமே இந்தத்தேர், இதன் உட்சக்கரங்களான இரண்டும் சூரிய, சந்திரநாடிகளான இடைகலை, பிங்கலை நாடிகளைக் குறிக்கும். இவற்றை இணைக்கும் மையக்கட்டையே நாடிசக்கர மாகும். வெளிச் சக்கரத்தின் மையக்கட்டைகள் இரண்டும் சித்த அக்னிக் குண்டத்தின் சிவசக்தி அம்சங்கள்.

வெளி நான்கு சக்கரங்களும் மூலாதாரத்தின் நான்கு இதழ்கள், இந்த இதழ்கள் விரிவால் இடகலை பிங்கலை செயல்பட்டுக் குண்டலினி சக்தி எழும்புகின்றது. தேரின் அடிப்பகுதி ஆன்மதத்துவம், நடுப்பாகம் வித்தியாதத்துவம் மேல்பாகம் சிவதத்துவம் வித்யாதத்துவத்தில் 64 கலைகள் 64 கால்களாக உள்ளன.

அதன் மையத்தில் இருதயம் எனும் குகையாகிய தகராலயத்தில் யோகராஜனாகத் தியாகராஜன் வீற்றிருக்கின்றான். யோகவித்தையையும் தியாகராஜ ரகசியத்தையும் உணர்ந்தவன். மேலும் சிந்தனையை ஒடுக்கி, சிதாகாசத்தை அடைந்து சகஸ்ர தள தாமரையில் உறையும் பரசிவத்தோடு கலந்து பேரின்ப மடைகின்றான். ஆன்மா சிதாகாசத்தில் நிலைபெற்றிருப்பதைக் கலசமும் பரவெளியில் கலந்து விட்டதைக் குடையும் குறிக்கின்றன என்பர்.

இந்தத் தேரினைப் பிரம்மன் எனும் படைப்பவன் செலுத்துகின்றான் காலம் எனும் பாதையில் செல்லும் அந்த தேரின் நாற்பொருளைக் குறிக்கும் குதிரைகள் பூட்டப்பட்டுள்ளன.

ஆன்மா, உலக வாழ்க்கைக்கு ஆதாரமான நாற்பொருளையும் அறிந்து காலத்தின் முடிவற்ற ஓட்டத்தில் கலந்துவிடாமல் அதைவென்று யோகத்தினைப் பயின்று சிவயோக சாதனையை அடைந்து பரம்பொருளுடன் இரண்டறக்கலந்து ஒன்றி விடுதலைக் குறிப்பதே இந்தத்தேரின் உட்கருத்தாக அமைகின்றது.

கலையழகுமிக்க இந்தத் தேரின் அடிப்பகுதி மட்டும் நிரந்தரமாக அமைந்துள்ளது. மேல்பகுதியில் கால்களைநட்டு அதன்மீது மூங்கில் கழிகளால் மேலே கட்டி கோபுர வடிவை அமைக்கின்றனர்.

காலங்காலமாக சிறப்புடன் நடைபெற்று வந்த தேரோட்டம் 1945 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடையூறுகளால் சுமார் 25 ஆண்டுகள் நின்றுபோயிற்று. 1970 ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாகத் தேரோட்டம் நடைபெற்றது.

1945 ஆம் ஆண்டுவரை மரச்சக்கரங்கள் பொறுத்தப்பட்டிருந்தன. இவ்வகையில் தேரை இழுக்க சுமார் பன்னிரண்டாயிரம் பேர் தேவைப் பட்டனர். 1970ல் தேரின் சக்கரங்கள் மாற்றப்பட்டன. திருச்சி பெல் நிறுவனத்தின் துணை கொண்டு புதிய இரும்புச் சக்கரங்கள் பொறுத்தப்பட்டன. சக்கர வேகத்தைக் கட்டுப்படுத்த ஹைட்ராலிக் பிரேக் முதலியனவும் அமைத்து நவீனப்படுத்தப்பட்டது. இதனால் ஏறத்தாழ மூவாயிரம் பேர் தேரிழுக்க போதுமானதாயிற்று.

அலங்கரிக்கப்படாது சாதாரண நிலையில் தேரின் அடிப்பீடம் வரையிலான உயரம் 30 அடி,



ஆழித்தேர் - திருவாரூர்.

மேலே விதானம் கட்டி அலங்கரிக்கப்பட்ட பின் உயரம் 115 அடிகள். சக்கரத்தின் விட்டம் 9 அடிகள். இது போன்று ஆறு சக்கரங்கள் உள்ளன. தேரை இழுக்க 6 தேர் வடங்கள் தேவைப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் 400 அடி நீளமும், 20 அங்குல சுற்றளவும் உடையவை. இந்தத்தேர் 20 பட்டைகள் (பக்கங்கள்) கொண்டதாக அலங்கரிக்கப்படுகின்றது.

அலங்கரிக்கப் பெற்ற தேரின் எடை ஏறத்தாழ 400 டன்களாகும் இதன் முன்புறம் கட்டப்படும் 4 குதிரைகள் நெட்டி, மூங்கில் ஆகியவற்றால் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் நீளம் 30 அடியாகும்.

இந்தத் தேரின் வனப்பைக் கருத்திற்கொண்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைக்கப்பெற்ற வள்ளுவர் கோட்டத்தின் மையப்பகுதி இந்ததேரைப் போலவே அமைக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

ஸ்ரீ தியாகராஜ லீலை

சைவ அன்பர்கள் பலரும் திருவிளையாடற் புராணத்தை நன்கு அறிவார்கள் அதில் பெருமான் மதுரையில் நிகழ்த்திய அறுபத்துநான்கு திருவிளை யாடல்கள் தனிச்சிறப்புடன் பேசப்பட்டுள்ளன. மதுரையில் இந்தத் திருவிளையாடல்களை விழாக்களாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இதுபோன்று அமைந்த தியாகேசப்பெருமானின் திருவிளையாடல்களைத் தியாகராஜ லீலை என்பர். பெருமான் இங்கு முன்னூற்று அறுபத்து நான்கு லீலைகளை நிகழ்த்தி அருள்பாலித்துள்ளான்.

இவை ஸ்காந்தபுராணத்தில் நாகர கண்டத்துள் கமலாலய மஹாத்மியம் எனும் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றைப் புண்ணியபுர மகாத்மியம் என்ற நூலாக வடமொழியில் இயற்றி யுள்ளனர். அதன்மொழி பெயர்ப்பே இப்போதுள்ள தியாகராஜ லீலையாகும். சென்னைக் குகானந்த மண்டலியின் தலைவர் என். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் வெளியிட்டுள்ள கமலாலய க்ஷேத்திர தத்துவம் என்ற நூலில் இந்த முன்னூற்று அறுபது லீலைகளுக்கும் உரிய தத்துவவிளக்கம் கூறப் பட்டுள்ளன.,

இதனைத் தமிழில் பெருங்காவியமாகப் பாடவேண்டுமென்று திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் விரும்பினார்கள். அவர்களுக்கு முதல் பதிநான்கு லீலைகளே கிடைத்தன அவற்றைக்கொண்டே அவர் பெருங்காவியமாகப் திருவாரூர்ப் புராணத்தைப் பாடியுள்ளார். இதன் முதல் ஐம்பது லீலைகளுக்குத் தேவலீலைகள் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் வடமொழி மூலம் சரியாக எங்கும் கிடைக்கவில்லை என்றாலும் திருச்சியில் அந்நாளில் பிரபலமாயிருந்த வாணி விலாச அச்சக உரிமையாளர் குருபக்த சிகாமணி டிகே. பாலசுப்பிரமணிய ஐயரிடம் உரை நடையாக தமிழில் அமைந்த ஒரு மொழிபெயர்ப்பு நூல் இருந்தது. அதையறிந்த பிச்சாண்டார் கோயில் பண்ணையார் கோ. இராஜ கோபாலப்பிள்ளை அவர்கள் தமது சொந்த செலவில் 1952 ஆம் ஆண்டில் நான்கு பாகங்களாக இந்நூலை வெளியிட்டார். இதுவே இப்பொழுது முழுமையாகக் கிடைக்கும் தியாகராஜ லீலையாகும்.

இந்நூலில் தியாகேசர், ஆரூரில் கோயில் கொண்டது ரத்தாசுரன் காலகேயன் முதலான அசுரர்களை அழித்தது. உமாதேவியாருக்கு ஆபரண மளித்தது. அவளைத் திருமணம் செய்து கொண்டது முதலான லீலைகள் சிறப்புடன் கூறப்பெற்றுள்ளன.

முந்நாளில் திருவாரூரில் இந்த நூலில் கூறப்பட்டுள்ள பல லீலைகள் ஐதீக விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வந்தன என்றும் கூறுகின்றனர்.

தீபங்கள்

தியாகேசர் சந்நிதியில் மேல்வரிசையில் ஒன்பது விளக்குகள் உள்ளன. நவக்கிரகங்கள் இங்கு தீபவடிவில் இருந்து காலத்தின் நாயகனான பெருமானை வழிபட்டுக் கொண்டிருக்கின்றன என்பர்.

பெருமானின் முன்புறம் ஆறு அடுக்கு உள்ளதும் ஐந்து அடுக்கு உள்ளதுமான இரண்டு விளக்குகள் உள்ளன. இவை ஏகாதச ருத்திரர்களைக் குறிக்குமென்பர். மேலும் விருட்சதீபங்களும் பாவை விளக்குகளும் இங்கு உள்ளன.

அஜபா கல்பம்

இது அஜபா விதானம், அஜபா கல்பம், அஜபாகாயத்திரி விதானம், அஜபாவிதானம் என்ற ஏட்டுச் சுவடிகளில் உள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதப்பெற்றதாகும். இந்நூல் பிரம்மஸ்ரீ. அருட்கவி ந. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் பிட்சாண்டார் கோயில் இராஜ கோபாலப் பிள்ளை அவர்களின் வேண்டு கோளின்படி எழுதப்பெற்று 1949 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதில் குருத்தியானம், சிவசக்தி விமர்சனம் குண்டலினித்தியானம் அஜபை நியாசம்-பிராணயாமவிதி-பரமஹம்சத்தியானம் பூஜை-அறுதலத்தில் உள்ள தியானங்கள் முதலியன சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன. தியாகேசப் பெருமானின் திருநடனமாகிய அஜபா நடனத்தை மந்திரப்பூர்வமாக விளக்கி நடைமுறையில் பயில வேண்டிய வழியை விவரித்துக் கூறுகின்றது.

அஜபா நடனம்

தியாகேசர் திருமாலின் மார்பில் எழுந்தருளியிருந்தபோது அவருடைய யோகநிலையில் விட்ட மூச்சுக்காற்றால் எழுந்தும் தாழ்ந்தும் ஆடியவாறு இருந்தார். அதுமட்டுமன்றித் திருமால் பள்ளி கொண்டிருந்த பெரும்பாம்பான ஆதிசேடன் விட்ட நெடும் பெருமூச்சால் அவன் உடல் விரிந்தும், சுருங்கியும், அசைந்தது. அந்தப் பாம்பு அமைந்திருந்த பாற்கடலும் ஓயாது அலையெழுப்பியது. இப்படி, அலையால் எழுந்த ஆட்டம், ஆதிசேடன் மூச்சால் உண்டான ஆட்டம், திருமாலின் யோகப் பயிற்சியால் உண்டான மூச்சுக்காற்றால் உண்டான ஆட்டம் ஆகிய மூன்று ஆட்டங்களாலும் பெருமான் ஓயாது ஆடி மகிழ்ந்தார். பெருமான் அமர்ந்த கோலத்திருமேனியாகயிருந்தாலும் சூழ்நிலையால் ஓயாது ஆடியபடி இருந்ததால் "இருந்தாடும் அழகர்" என்று போற்றப்பட்டார். இப்படி தனது முயற்சியின்றி சூழ்நிலையின் இயல்பால் ஆடும் ஆட்டமே அஜபா நடனம் எனப்பட்டது.

இதனை நினைவுகூறும் வகையில் பெருமான் எழுந்தருளும் போது அஜபா நடனம் நிகழ்த்தப் படுகின்றது. இது பெருமான் அன்பர்களின் தோள்மீதில் இடமும் வலமுமாக அசைந்தாடி மேலும் கீழும் குதித்தாடுவதுபோல் அமைகின்றது. மேலும் கீழுமாக ஆட்டும் போது "தியாகேசனை தியாகேசா" என்று பெருங்குரல் எழுப்புகின்றனர்.

தியாகராசப்பெருமான் பூங்கோயிலில் இருந்து புறப்பட்டு வசந்த மண்டபத்திற்குச் செல்லுதல் அங்கிருந்து ஆழித்தேருக்கு எழுந்தருளுதல், அதிலிருந்து மீள மண்டபத்திற்கு எழுந்தருளுதல், பக்த காட்சிக்கு எழுந்தருளுதல் ஆகிய நேரங்களில் சிறப்புடன் இந்த அஜபா நடனம் நிகழ்த்தப் படுகின்றது. இதுவே அன்பர்கள் கண்டு களித்து மகிழத் தக்கதாகும். இதனை, **"இருந்தபடி அசைந்தாடி அகிலமும் ஆட்டும் தியாகர்"** என்ற பாடல்வரி குறிக்கின்றது.

அஜபா ரகசியம்

அஜபா என்பதற்கு ஜெபிக்கப்படாதது என்பது பொருள். உயிரின் ஆதாரமான நிலை மூச்சுக்காற்று உள்சென்றும் வெளியே வந்து கொண்டிருப்பதுமாகிய நிகழ்வே அஜபா எனப்பட்டது. இந்த மூச்சுக்காற்று உள்ளே செல்லும் போது சோகம் என்றும் வெளிவரும்போது ஹம்ஸ: என்று ஒலியுடனும் நடைபெறுகிறது.

இந்த இரண்டும் சேர்ந்து ★ "ஹம்ஸஸோஹம்" என்று வழங்கப்படுகின்றது. இதுவே ஹம்சமந்திரம் எனப்படும், தமிழில் அன்னமந்திரம் என்பர்.

உயிர் வாழ்வதற்கு மட்டுமே உள்ளும் வெளியுமாக சென்று கொண்டிருக்கும் இந்த மூச்சுக்காற்றை யோக சாதனையால் கட்டுப்படுத்தி. அதன் மூலம் குண்டலினி சக்தியை எழுப்பி மூலதாரத்தினைத் தொடர்ந்து உள்ள ஆறு ஆதாரங்களைக் கடந்து சகஸ்ரதளதாமரையில் உள்ள சந்திரகலா அமுதத்தைப் பெருகவைப்பதே யோகசித்தி எனப்படும். இதனை அடையும் யோகக்கலையை விளக்குவதே அஜபா ரகசியம் அல்லது அஜபா கல்பம் ஆகும்.

இந்த ரகசியம் யந்திரவடிவில் தியாகராஜரின் மார்பின் மீது குறிக்கப்பட்டுள்ளது. தியாகேசர் தனது மார்பகத்தில் ரகசியமான தனது மந்திரத்தைத் தாங்கியுள்ளார் என்பர். இதனை அப்பரடிகள் "மனத்துள்ளே மந்திரத்தை வைத்தார் போலும்" என்றுக் குறிக்கின்றார். மேலும், "மந்திரமும் மறைபொருளும் ஆனான்" தன்னை என்றும் குறிக்கின்றார்.

எனவே அவரது உடல் முழுவதுமாக மறைக்கப்பட்டுள்ளது. தவயோக சாதனையில் முயல்பவர்கள் தியாகேசன் சந்நிதியில் நிற்கும் போது பெருமானின் அருளால் அந்த ரகசியம் அவர்களுக்குத் தானகவே வெளிப்பட்டு விளங்கும் என்று கூறுவர்.

முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை இவருடைய மார்பில் ஸ்ரீ வித்யா மந்திரம் அமைக்கப் பட்டுள்ள தென்றும் இவர் எழுந்தருளியுள்ள பீடம் ஸ்ரீ பீடம் எனவும் குறிக்கின்றது. இந்த யோகரகசியத்தை உரியவர்கள் வழியாகக் கேட்டு அறிவதே முறையாகும். அஜபா மந்திரத்தின் அதிதேவதை சோமகுல நாயகி என்று அழைக்கப்படுகின்றாள். இவளுடைய திருமேனி மூலட்டானர் சந்நிதியுள் உள்ளது.

★ உள்ளே இழுக்கும்போது ஸோஹம் - ஸ: + அஹம் = ஸோஹம் - அதுவாக இருக்கிறேன்.
வெளியே விடும்போது = ஹம்ஸ: - ஹ + ஸ = ஹம்ஸ - இரண்டும் பீஜாக்ஷரங்கள்
ஹ - சூர்யபீஜம் = ஆகாசபீஜம் - ஸ - சந்திரபீஜம் = பராபீஜம்.

கொண்டி கொண்டி என்பதற்கு இணைப்பது என்பது பொருள், இறைவனின் ஆனந்த அருள் வெள்ளத்தை பக்தன் அடைந்தது இன்புறச் செய்பவர் பார்வதி, அவள் பக்தனையும் பகவானையும் இணைப்பவளாக விளங்கியதால் தியாகராஜரின் அருகில் வீற்றிருக்கும் தேவிக்குக் கொண்டி என்பது பெயராயிற்று. இதுவரை கொண்டி என்பதற்கு அடங்காதவள் என்று பொருளே காணப்பட்டுள்ளது. மேலும் கொண்டம் என்பதற்கு நீர் இறைக்கும் ஏற்றம் என்பதும் பொருள். இறைவனின் அருள் என்ற நீரை பக்தனின் மனமாகிய வயலில் பாய்ச்ச உதவுபவன் ஆதலின் கொண்டி எனவும் அழைக்கப்பெற்றாள். கொண்டி என்பதற்குப் புறஉலக நினைவுகள் கெட்டு உள்ளத்தில் கதவுகளை மூடி இறைவனுடன் ஒன்றி அந்த நினைவுகளில் லயித்திருப்பவள் என்பதும் பொருள்.

கொண்டிகுடும்பம் தியாகராசப் பெருமானின் பணியாளர்களில் ஒருவரான பதியிலார் குடும்பத்தில் கொண்டி குடும்பம் என்ற வகையினர் இருந்தனர். இந்த குடும்பத்தில் இருந்து கொண்டியாகப் பதவி ஏற்கும் பெண் பருவம் கடந்தவராகவும் அனைத்து சிவ தீட்சைகளையும் பெற்று விபூதி உருத்திராக்கம் தரித்தவர்களாகவும் விளங்கினர். வெள்ளுடை அணிந்து யோகியராகவே வாழ்ந்தனர். இவர்களே தியாகராஜர் சந்நிதியை திறப்பவர்களாகவும் மூடுபவர்களாகவும் இருந்தனர். இவர்களைக் கமலாம்பிகையாகவே எண்ணி வழிபட்ட சாக்தர்களும் உண்டு. கமலாம்பிகை மாலைநேர பூசையில் வெள்ளுடை அணிந்து வெண்பூக்களைச் சூடுதல் வழக்கம் இவர்களும் அதே உடையை அணிந்தனர், வெண்மை வைராக்கியத்தின் சின்னமாகும். இந்தக் குடும்பத்தில் வந்த பிற பெண்கள் தியாகேசர் குறவஞ்சி நாடகங்களில் பங்கு பெற்று நடித்தனர்.

1970 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள "தியாகேசர் குறவஞ்சி" நூலில் கொண்டி குடும்பத்தைச் சேர்ந்த கமலாம்பாலின் படமும் அவர்கள் குறத்தி வேடம் பூண்டபோது பரம்பரையாகப் பயன்படுத்தி வந்த குறக்கூடையின் படமும் வெளியிடப்பட்டுள்ளதையும் காண்கின்றோம்.

பக்த காட்சி இறைவனைப் பக்தன் வலம் வந்து வணங்குவதே முறையும் கடமையும் ஆகும். ஆனால் அந்த இறைவனோ அடியவர்க்கு அடியவனாகவே இருந்து அவர்களை வலம் வந்து அவர்களுக்கு அருள் செய்ய விரும்புகின்றான். அதனாலேயே பக்தனுக்காக தூது நடந்தான். அவன் பக்தானுபக்தனாகவே விளங்குகின்றான். இப்படிப் பெருமான் தொண்டனுக்குத் தொண்டனாக இருப்பதை உணர்த்த அமைந்ததே பக்த காட்சிவிழாவாம்.

அவன் தனது பரிசனங்களையும், அன்பர்களையும், உயர்ந்த மண்டபத்தில், அமர்த்தி தான் நடனமாடி அவர்களை மும்முறை வலம் வந்து காட்சி நல்குகின்றான். இப்படி தியாகேசன் வலம் வந்து அன்பர்களுக்கு அருளும் காட்சியே "பக்த காட்சி" எனப்படும். திருவாரூரில் பக்தர்கள் மண்டபத்தில் எழுந்தருளியிருக்க பெருமான் வசந்த மண்டபத்தில் இருந்து அசைந்தாடி வந்து பக்த காட்சி மண்டபத்தை மும்முறை வலம் வந்து தனது திருவோலக்க மண்டபமான பூங்கோயிலுக்குத் திரும்புகின்றார். இதுவே பக்த காட்சி எனப்படும் விழாவாகும்.

இந்நாளில் திருவாரூரில் ஆயிரங்கால் மண்டபத்திற்கு நேர் எதிரில் தெற்குக் கோபுர வாயிலை யொட்டி பக்த காட்சி மண்டபம் என்ற மண்டபம். அமைந்துள்ளது. நடனமாடியபடியே மும்முறை இதனை வலம் வந்து பெருமான் காட்சியளிக்கின்றார். இப்படிப் பெருமான் பக்தர்களுக்குக் காட்சியளிக்கும் போது சிறுபொன், வெள்ளி ஆகியவற்றாலான தகட்டுத் துண்டுகளையும் மலர்களையும் கலந்து பெருமான் மீது வீசுவர்.

பாகல் காயும் தூது வளையும் யோக நெறியில் நிற்கும் சாதகர்கள் பாகற்காய் பொறியலும் தூதுவளைக் கீரைமசியலும் உண்பது வழக்கம். இது உடலில் யோகசாதனைக்கு உரிய மாற்றத்தை உண்டாக்குவதுடன் உடற் சூட்டைத் தணித்து மயக்கங்களை நீக்கும் எனவே தவயோக ராஜனான விளங்கும் தியாகேசப் பெருமானுக்கு தூதுவளையையும், பாகற்காயையும், உச்சி கால வேளையில் நிவேதிக்கும் வழக்கம் இருந்தது. வெள்ளைப் பாகற்காயை நீளவாக்கில் வெட்டி நெய்யில் வதக்கி மிளகுத்தூள் உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நிவேதனம் செய்யப்பட்டு வந்ததாகக் கூறுகின்றனர். அன்பர்களின் வேண்டுதலின் பேரில் இந்நாளில் இவை நிவேதிக்கப்படுகின்றன. முன்னாளில் பெருந்திருவிழாவில் ஒரு நாளாக "பாகற்காய் மண்டபப் பிரவேசம்" என்ற நிகழ்ச்சி இருந்ததாகக் கூறுகின்றனர். "ஆடாது ஆடி பாகற்காய் பறிக்கும் தியாகேசர்" என்று ஒரு பாடல் இதனைக் குறிக்கின்றது.

"திருவீதி நடந்த செல்வன்"

சிவபெருமான் இடபவாகனத்தில் வலம் வந்து மகிழ்கின்றான். ஆனால் அவன் திருவாரூரில் தனது திருவடிதோய நடந்து செல்வதையே விரும்புகின்றான். அந்த விருப்பத்தாலேயே சுந்தரரின் வேண்டுதலையேற்று பரவையின் மனைக்குத் தூது செல்ல ஆட்பட்டான்.

அவன் சுந்தரருக்காகத்தான் வீதியிலே நடந்தான் என்பதில்லை. அதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய அப்பர், சம்பந்தர், திருவாக்கிலேயே அவன் வீதிகளில் நடந்து சென்றதாகப் பாடப்பட்டுள்ளது. இங்கு எண்ணத்தக்கதாகும். அப்பரடிகள் இதனை "அணியுடைய நெடுவீதி நடப்பார் போலும்" என்று குறிப்பிடுகின்றார்.

திருவாரூரின் தெருக்கள் இந்த சிறப்பால் செந்தாமரைப்பூ **திருவடிப் போது நாறிய வீதி** (திருவடியாகத் தாமரை மலர்களின் மகரந்தங்கள் சிந்தியதால் மணம் வீசும் வீதி) **சிலம்பார்க்க நடந்த வீதி** (சிலம்புகள் ஒலிக்கும்படி நடந்த வீதி) ஒவ்வொரு அடிவைத்தபோதும் அன்பர்களுக்கு ஆயிரம் பொன்களை வழங்கியதால் **அடிக்காயிரம் பொன் தந்த வீதி**. அவை சிந்தியதால் வீதிகளில், பொன்கள் பரவிக்கிடந்தன. எனவே அது **பொன் பரப்பின வீதி** எனப்பெற்றன. மேலும் புகழாபரணத் திருவீதி, அடிமுடி நேடியவீதி, என்ற பெயர்களிலும் வீதியிருந்ததையும் அறிகிறோம். பின்னாளில் தூது நடந்தவீதி என்ற வீதி இருந்திருக்கலாம் என்று கல்வெட்டாய்வாளர்கள் கூறுகின்றனர். இவற்றால் தியாகேசப்பெருமான் திருவாரூர்த் தொன்னகர் வீதிகளில் நடந்து மகிழ்ந்த செய்திப் புலனாகின்றது.

பரமனடி தொழுத பாவையர் அணுக்கியார் பரவைநங்கையார்...

பரவையார் என்றதும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவியாரே நமக்கு நினைவுக்கு வருகின்றார். இவருடைய மனைக்கே சுந்தரருக்காகப் பெருமான் தூதுசென்று இவரைச் சிறப்பித்தான். ஆனால் இப்பொழுது சொல்லப்படும் பரவை நங்கையார் சோழ பேரரசில் இராஜேந்திர சோழனிடம் அணுக்கியார் என்ற பணியில் இருந்தவளாவாள். இவள் எல்லையற்ற சிவபக்தியை உடையவள், இவளுடைய வரலாற்றைத் திருவாரூர் கோயிலில் அமைக்கப்பட்டுள்ள சோழர்கால கல்வெட்டுகளில் இருந்து அறிய முடிகிறது. அதன் சுருக்கத்தை இங்குக் காணலாம்.

சோழ மன்னர்களுக்குத் தியாகராஜப் பெருமானிடம் ஈடுபாடு இருந்தது போலவே அவர்களுடைய அரசியல் அதிகாரிகளுக்கும் பெருமானிடம் நிறைந்த ஈடுபாடும் பக்தியும் இருந்தது. இராஜேந்திர சோழ மன்னரின் அணுக்கியாக இருந்த பரவை நங்கை என்ற பெண்மணி தியாகராஜப் பெருமானிடம் எல்லையற்ற பக்தி கொண்டவளாக இருந்தாள். இவளே மண்கோயிலாக இருந்த தியாகேசர் கோயிலைக் கற்கோயிலாக திருத்திக் கட்டிப் பணிசெய்தாள். பெருமானுக்கு பொன்னாபரணங்களையும் தங்கம், வெள்ளி இவற்றால் செய்த பாத்திரங்களையும் ஏராளமாக அளித்தாள், பூசனைகளைப்பல சிறப்புடன் செய்து மகிழ்ந்தாள்.

இவள் அணுக்கியாக இருந்ததுடன் இராஜேந்திர சோழனின் உள்ளம் கவர்ந்த காதலியாகவும் விளங்கினாள். இவளைப் பெருமைப்படுத்த விரும்பிய ராஜேந்திரசோழன் இக்கோயிலில் நடைபெற்ற விழாவின் போது பெரிய தேரில் அவளைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டு திருவாரூர் வீதிகளில் வலம் வந்து அவளுடன் தியாகராசப் பெருமானைத் தொழுதான். அவர்கள் இருவரும் நின்று பெருமானைத் தொழுத இடத்தினை நினைவு கூறும் வகையில் இரண்டு பாவை விளக்குகள் அமைக்கப்பெற்றன. இவைகளுக்குச் சரியாமுலை நங்கைப்பாவை, பச்சைப்பாவை என்ற பெயர்கள் வழங்கின. பின்னாளில் இவள் திருவாரூர் ஆலயத்தில் இராஜேந்திர சோழன் பெயரால் "இராஜேந்திர சோழ மண்டபத்தையும் கட்டினாள்.

இவர்களுடைய காலத்திற்குப் பிறகு ராஜேந்திரனின் மகனான ராஜாதிராஜ சோழன் பட்டம் ஏறினான். இவன் தன் தந்தைக்கும் அவர்தம் காதலியுமாய் நின்ற பரவை நங்கையாருக்கும் திருவாரூர் ஆலயத்தில் கல்திருமேனிகளை அமைத்துப் பூஜைக்கு வேண்டிய நிபந்தங்களையும் ஏற்படுத்தினான். இந்த இருவரின் சிலையையும் இப்போது திருவாரூர் ஆலயத்தின் உட்கோயிலான ஆனந்தீஸ்வரம் என்ற சந்நிதியில் காண்கிறோம்.

இப்படி ஒரு அரசனும் அவனது வழித்தோன்றல்களும் மகாசிவபக்தையாக விளங்கிய ஒரு பெண்ணுக்குச் செய்த சிறப்புகளை வேறெந்த வரலாற்றிலும் காணமுடியவதில்லை.

தில்லை நடராஜரும் ஆரூர் தியாகேசரும் ஒரு ஒப்பீடு

சைவ சமயப் பேருலகின் இரண்டு ராஜாக்களான நடராசருக்கும், தியாகராசருக்கும் உள்ள ஒற்றுமைகளை இந்தக் கட்டுரை ஆய்கின்றது.

ஆதிரையான் : இருவரும் ஆதிரை நாளில் விழாக் காண்பவர்கள் திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரை விழாவின் சிறப்பை அப்பர்பெருமான் ஒருபதிகமாகவே பாடியிருக்கின்றார். தில்லை நடராஜர் திருவாதிரைக்கு முன்பு தேர் ஏறி வலம் வந்து அலங்கார அபிஷேகம் கண்டு சபைக்கு எழுந்தருள்கின்றார்.

தேர்ஊர்ந்த செல்வன் : இருவரும் தேரில் மட்டுமே வலம் வருபவர்கள். அப்படி வலம் வந்த பிறகு இருவருக்கும் பெரிய அளவில் சாந்தி அபிஷேகம் நடைபெறுகின்றது.

கூத்துஉகந்தான் : நடராஜரின் நடனம் ஆனந்ததாண்டவம் தியாகராஜரின் நடனம் அஜபா நடனம்

ஆறு அபிஷேகம் : இருவருக்கும் ஆண்டிற்கு ஆறு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. நித்திய பூசைகளான அபிஷேகங்கள், உடையவர் எனப்படும் ஸ்படிக, மரகத லிங்கங்களுக்கே நடைபெறுகின்றன.

ரகசியம் : தில்லைக் கூத்தரின் வலப்புறம் தனியாக சுவரில் திருவம்பலச் சக்கரம் அல்லது ஆகாசயந்திரம் அமைந்துள்ள தென்பர். அதுவே சிதம்பர ரகசியம் என்றுப் போற்றப்படுகின்றது. திருவாரூரில் பெருமானின் திருமேனியே ரகசியமாகப் போற்றப்படுகின்றது. இதுவே சோமகுல ரகசியம் எனப்படும்.

திருச்சாலகம் (ஜன்னல்) : சிதம்பரத்தில் 96 கண்களைக் கொண்ட வெள்ளியால் போர்த்தப் பெற்ற ஜன்னல் உள்ளது. தியாகராஜர் சந்நிதியில் திருச்சாலகம் என்னும் தென்றல் தவழ்ந்து வரும் ஜன்னல் உள்ளது.

செங்கழுநீர் தாமம் : இரண்டுபேரும் செங்கழுநீர் மாலைகளை விரும்பி அணிவதால் செங்கழுநீர் தாமத்தார் என்று சிறப்பிக்கின்றனர்.

பூங்கோயிலும் பொற்கோயிலும் : தியாகராஜர் கோயில் பூங்கோயில் என்றால் தில்லைக்கூத்தன் கோயில் பொற்கோயிலாக உள்ளது.

மண்ணாகி, விண்ணாகி...... : தில்லைப் பெருமான் ஆகாசவடிவானவர். திருஆரூர்ப் பெருமான் பூமி வடிவினர். இருவரும் மண்ணாகி விண்ணாகி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

பாததரிசனம் : இரண்டு இடங்களிலும் பதஞ்சலி வியாக்ரபாதர் தரிசித்துப் பாததரிசனம் கண்டுள்ளனர். சிதம்பரத்தில் அவர்கள் பெருமானின் அதிர வீசி ஆடத் தூக்கிய இடது பாத தரிசனத்தைக் கண்டு மகிழ்ந்து, மார்கழித் திருவாதிரை நாளில் பேறு பெற்றனர். பின்னர், திருவாரூர் வந்து இருந்தாடும் கூத்துகண்டு பங்குனி உத்திரநாளில் வலது பாத தரிசனத்தைப் பெற்றனர்.

ஆயிரக்கால் மண்டபம் : இரண்டு இடத்திலும் ஆயிரங்கால் மண்டபங்கள் உள்ளன. இவற்றில் பெருமான் வீற்றிருந்து அபிஷேகம் காண்கின்றார். சிதம்பரத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்து பெருமான் சிற்சபைக்கு எழுந்தருள்வதே தரிசனம் எனப்படும். அது போன்று திருவாரூரில் ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து பூங்கோயிலுக்கு எழுந்தருள்வதே பக்த காட்சியாகும்.

திருமூலட்டானம் : தில்லையிலும், திருவாரூரிலும் மூலலிங்கத்திற்கு மூலட்டானேசுவரர் என்றே பெயர்.

இருபெருந்தேவியர் : திருவாரூரில், கமலாம்பிகை, நீலோற் பலாம்பிகை என்ற இரண்டு அம்பிகையருக்குத் தனிக்கோயில் இருப்பது போலவே, தில்லையில் சிவகாமி மூலட்டானநாயகி என்ற இரண்டு அம்பிகை சந்நிதிகளைக் காணலாம்.

அடியெடுத்துக் கொடுத்தவர்கள் : இருவரும் அடியவர்களின் பெருமையைப் புகழ்ந்துபாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர் பெருமான் சுந்தரருக்கு 'தில்லைவாழ் அந்தணர்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். தில்லைநாயகர், பெரியபுராணம் பாட 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். திருவாரூர்ப் பெருமான் தில்லை என்ற முதலடியை கொடுத்துச் சிதம்பரத்தை நினைவுபடுத்துகின்றார். தில்லைக்கூத்தன் உலகம் என்று அடியெடுத்து மண்தத்துவமான திருவாரூரை நினைவுபடுத்துகின்றார்.

வசந்த உற்சவம்

தியாகராஜருக்கு உரிய விழாக்களில் தலையானது பங்குனி உத்திரத்தினை யொட்டி நடைபெறும் பெருந்திருவிழாவாகும். இது வசந்த காலத்தில் நடைபெறுவதால் வசந்த உற்சவம் என்றும் அழைக்கப்படுகின்றது. மாசி மாத அத்த நட்சத்திரத்தில் கொடியேற்றி இந்த விழா தொடங்குகின்றது. சுமார் 40 நாட்களுக்கும் மேலாக நடைபெறுகின்றது. இதன் நடுவில் பங்குனி மாத கார்த்திகை நட்சத்திரத்தில் ரதி மன்மதன் கொண்டாடி மகிழ்ந்த விழா நடைபெறுகின்றது.

இது வசந்தன் என்ற பெயரால் வசந்த விழா என்றே அழைக்கப்பெற்றது. இந்நாளில் ஆலயத்தின் எட்டுதிக்கிலும் கொடிகள் ஏற்றப்பட்டு விழா கொண்டாடப்படுகின்றது. (நடைமுறையில் இரண்டு கொடிமரங்களே உள்ளன. மற்ற ஆறையும் அமைக்க அன்பர்கள் முன் வரவேண்டும்)

இந்நாளில் வடைபருப்பு, பானகம், நீர்மோர், முதலியன நிவேதிகப்படுகின்றன. பெருமானுக்கு பனைஒலை விசிறியால் விசிறி அன்பர்களுக்கும் விசிறிகள் வழங்கப்படுகின்றன. இதற்குப் பானக பூசை என்பது பெயர்.

இதன் முதல் நாளில் விக்னேசுவரபூஜை, வாஸ்துசாந்தி முதலியன 2ஆம் நாள் மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், 3ஆம் நாள், துவஜாரோகணமும், தொடர்ந்து (ஆறு நாட்கள்) பிள்ளையார் முருகன் உற்சவம், அதனைத் தொடர்ந்து நால்வர், நந்தி ஆகியோர்க்கு முன்று நாள் பக்தோத்சவம், அடுத்து காலபைரவருக்கும் காட்சி கொடுத்த நாயகருக்கு முறையே ஒவ்வொரு நாள் உற்சவமும் நடைபெறுகின்றன.

பிறகு சந்திரசேகரருக்கு (தியாகராஜராக) பட்டம் கட்டும் உற்சவம் நடைபெறும் அதனையடுத்து சந்திரசேகரர் கேடயத்தில் ஐந்து நாளும், இந்திரவிமானத்தில் ஒரு நாளும் பூதவாகனத்தில் ஒரு நாளும், வெள்ளி யானை வாகனத்தில் ஒரு நாளும் வெள்ளி இடபவாகனத்தில் ஒரு நாளும் பவனிவருகின்றார்.

அதனையடுத்து ஒரு நல்ல வேளையில் வீரகண்டயம் எனும் வாள்கள் தேருக்குச் செல்கின்றன. அன்று இரவு கயிலாய வாகனத்தில் சந்திரசேகரர் பவனியும் இரவில் ஆழித்தேருக்கு சுவாமி எழுந்தருள்வதும் நடைபெறுகின்றன. இதுவரை சொல்லப்பட்ட விழாக்கள் குறித்த நாளில் குறித்தபடி நடைபெறும். இதற்கு மேல் நடைபெறும் விழாக்கள் தேர் ஓடி நிலைக்கு வந்த பிறகு செய்யவேண்டுமென்பதால் தேதிகள் பின்னரே அறிவிக்கப்படுகின்றன.

(பங்குனி உத்திரத்திற்குள் தேர் நிலைக்கு வராவிட்டால் தேரிலேயே பாததரிசனம் நடைபெறும்). தேர் உலா முடிந்த இரவில் பெருமாளை தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளிவைத்து பெரிய அளவில் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

அதன்பின் ஒரு நல்ல நாளில் பக்தர் காட்சி விழா நடைபெறும் அன்றிரவு தியாகராஜர் பூங்கோயிலுக்குத் திரும்பி வருகின்றார். (விழா நாட்கள் முழுவதும் பெருமான் ஆயிரக்கால் மண்டபத்திலேயே எழுந்தருளியிருப்பார்)

அதன் பிறகு மூன்று நாட்கள் கமலாலய தீர்த்தத்தில் தெப்பத்திருவிழா நடைபெறும். இப்படி மாசி அஸ்த நட்சத்திரத்தில் தொடங்கும் விழா சுமார் ஒன்றரை மாதங்கள் நடைபெறுகின்றன.


இப்படி மாசி அத்தம் தொடங்கி பங்குனி உத்திரம் முடிய உள்ள 27 நாட்களிலும் விழா சிறப்பாக நடைபெற வகை செய்தவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான நம்பி நந்தி அடியகளாவார். இதனை அப்பரடிகள்

பாரூர் பாரிப்ப அத்தம்
பங்குனிஉத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன்
அடித்தொண்டன் நம்பிநந்தி

என்று குறிக்கின்றார்.

முதலில் 27 நாட்கள் நடைபெற்ற இந்த விழா இப்பொழுது 40 நாட்களுக்கு நீண்டுள்ளது. இது 27 நாட்கள் நிகழக்காரணம் இருபத்தேழு நட்சத்திரங்களில் பிறந்தவர்களும் வழிபட்டுப் பேறு பெறுவதற்கேயாகும் என்பர்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!



சிவ மஞ்சரி

இது சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்